# உதயன்

30 /28

62

62 பக்கங்கள்

■ பதிப்பு: யாழ் ■ விலை: ரூபா 30

■ சுடர் 28 ■ கதிர் 132

■ வள்ளுவர் ஆண்டு 2044 ■ பங்குனி 25, ஞாயிறு 07.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com



**உதயன் 22**

■ குற்றச்செயல்கள் யாழில் குறைவு — பக். 5

■ மின்கம்பியில் சிக்கியது கிரேன் வாகனம், சாரதி காயங்களுடன் தப்பினார். — பக். 6

■ சட்ட விரோத மீன்பிடியை கைவிட்டனர் மீனவர்கள். — பக். 19

**சூரியகாந்தி 24**

■ ஒரு கொலை நால்வர் கைது அவர் யார்? — பக். 1

■ பஸ் படும் பாடும் படாத பாடும் — பக். 04

■ இன்ப் பிரச்சினையின் தலையும் வாலும் — பக். 16

■ நெருப்பாற்றில் நீந்துவோம். — பக். 23

வர்ணப் பக்கங்கள் 16


# ரிஷாத்துக்கு எதிராக மக்கள் கொந்தளிப்பு

## முள்ளியவளையில் நேற்று நாள் முழுவதும் போராட்டம்



முல்லைத்தீவு,ஏப்ரல் 7

மக்களுக்கான காணிப்பங்கீடு தொடர்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நேற்று முல்லைத்தீவில் போராட்டம் வெடித்தது. மக்கள் திரண்டு வந்து அமைச்சருக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் போராட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய அமைச்சர் ரிஷாத் பதியுதீன், தனது பரிவாரங்களையும் அழைத்துக்கொண்டு அங்கிருந்து பின்வாங்கிச் சென்றார்.

''காணியில்லாமல் 30 வருடங்களாக நாம் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கியுள்ள நிலையில், அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தனது ஆதரவாளர்களுக்குக் காணிகளை பகிர்ந்தளிக்க முயற்சிக்கின்றார்'' என ஆர்ப்பாட்டத்தில் திரண்டிருந்த மக்கள் குற்றஞ்சாட்டினர்.

பார்க்க பக்கம் 04

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை 'கிடுக்கிப்பிடி'

### ■ நேற்று முன்தினமும் 26 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம்,ஏப்.7

ஈழத் தமிழருக்கு ஆதரவாக ஒட்டுமொத்தத் தமிழகமும் கொந்தளித்து வரும் நிலையில், தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் 'பிடி' இறுகி வருகிறது.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து, தமிழக மீனவர்கள் 26 பேர் நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் 26 பேரும், நெடுந்தீவுக் கடல்

பார்க்க பக்கம் 04

# பொதுநலவாய மாநாடு வேண்டாம் இலங்கையில்

### ■ லண்டனில் தி.மு.க. வலியுறுத்தும்

சென்னை, ஏப். 7

இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படக் கூடாதென்பதை, லண்டனில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அமைச்சர்களின் மாநாட்டில் கலந்துகொள்ளும் தூதுவர்களிடம் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் வற்புறுத்துவர் என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

பார்க்க பக்கம் 04

# விபத்தில் தம்பதியர் காயம்: தப்பியது குழந்தை

தென்மராட்சி, ஏப்.7

சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தம்பதியர் காயமடைந்ததுடன் அவர்களின் குழந்தையும் தூக்கி வீசப்பட்டது. இருப்பினும் தெய்வாதீனமாகக் குழந்தை காயமின்றித் தப்பியது.

ஏ-9 பிரதான வீதியில் சாவகச்சேரி பெரிய அரசடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

தம்பதியர் சென்ற மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த கூலர் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த மிருசுவில் பகுதியைச் சேர்ந்த விக்ரர் ஜெயக்குமார் (வயது -34), அவரது மனைவி ஜெயக்குமார் ஸ்ரீதயாளினி (வயது-32) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

விபத்தின்போது இவர்களின் ஒரு வயதுக் குழந்தை தூக்கி வீசப்பட்டது. எனினும் குழந்தைக்குத் தெய்வாதீனமாக எந்தக் காயங்களும் ஏற்படவில்லை.

தம்பதியர் இருவரும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-5-9-ரி)

# தமிழீழ வீர வரலாற்றை பாட நூல்களில் சேருங்கள்

### ■ தமிழக மாணவர்கள் தீர்மானம்

சென்னை,ஏப்.7

தமிழீழ வீர வரலாற்றைத் தமிழக மாணவர்களின் பாட நூல்களில் சேர்க்க வேண்டும் என்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டக் கல்லூரிகளின் மாணவர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்துச் சட்டக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பின் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★இலங்கையில் இறுதிக் கட்டப் போரில் நடந்தது திட்டமிட்ட இனப்படுகொலை. இது குறித்து நம்பத் தகுந்த சர்வதேச விசாரணைகளை மேற்கொண்டு

பார்க்க பக்கம் 04

# இந்தியாவிலுள்ள 120 ஈழ அகதிகள் நடுக்கடலில் தத்தளித்தவேளை மீட்பு

### ■ ஆஸி. செல்ல முயன்றவேளை படகு பழுது

சென்னை,ஏப்.7

ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட இந்தியாவிலுள்ள ஈழ அகதிகள் 120 பேர் படகு பழுதடைந்தமையால் நடுக்கடலில் வைத்து மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட 120 பேரும் தமிழ்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் நெல்லை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள அகதிமுகாம்களில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் 120 பேர் 2 படகுகளில் ஆஸ்திரேலியா நோக்கி நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கோடிக்கரையிலிருந்து புறப்பட்டுள்ளனர்.

நாகப்பட்டினத்திலிருந்து 9 கடல் மைல் தூரத்தில் இவர்கள் சென்ற படகு ஒன்று

பார்க்க பக்கம் 04


## சிங்கர் தரும் சித்திரை புத்தாண்டு விசேட தள்ளுபடிகள்

நீங்கள் கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு கவர்ச்சிகரமான விலைக்கழிவுகள் மற்றும் மாதாந்த கொடுப்பனவு முறைகள்

- கோடை காலத்தை தணிப்பதற்கு Singer, Whirlpool, A.C களுக்கு 15% வரை விலைக்கழிவுகள் மற்றும் மாதாந்த கொடுப்பனவு முறைகள்
- Air Coolers மற்றும் மின்விசிறிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்
- குளிர்சாதன பெட்டிகளுக்கு விசேட விலைக்கழிவு மற்றும் வட்டி இன்றிய கொடுப்பனவு முறை
- தொலைக்காட்சி பெட்டிகளுக்கு 10 % வரை விலைக்கழிவு, வட்டி இன்றிய கொடுப்பனவு முறைகள்
- சலவை இயந்திரங்களுக்கு 4 வருட உத்தரவாதத்துடன் இலவச அன்பளிப்புப் பொருட்கள்
- 3000 ரூபாவிலிருந்து இரட்டை சிம் வசதியுள்ள HUAWEI கையடக்க தொலைபேசிகள்

மேலும் புத்தாண்டு காலத்தில் வெற்றி கொள்ள ரூபா 2 கோடி பணப்பரிசுகள்

1ம் பரிசு ரூபா 1 கோடி

10 பேருக்கு தலா 100,000 ரூபா பரிசுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலன்னாவையில் பதற்றமான நிலை

கொழும்பு,ஏப் 07

மீதொட்டுமுல்ல, கொலன்னாவ பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் 16 ஏக்கர் காணியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றுமாறு கோரி முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்தையடுத்தே இந்தப் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

மீதொட்டுமுல்ல குப்பை கொட்டும் பகுதியில் உள்ள வாசற்பகுதியில் பெருமளவிலான மக்கள் திரண்டுள்ளதுடன் இவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் குப்பைகள் கொட்டுவதை உடனடியாக நிறுத்துமாறுகூறி மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது அதிகாரிகளை வலியுறுத்தி வருகின்றனர்.

மீதொட்டுமுல்ல குப்பை கூளத்துக்கு எதிரான மக்கள் இயக்கம் என்ற அமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குப்பைகூளம் காரணமாக இப்பகுதியைச் சுற்றியுள்ள 8 கிராமங்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வருவதாக மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது. (த)

# மாணவர் தொகைக்கேற்ப மலசல கூடங்கள் அமைப்பு

தென்மராட்சி, ஏப்.07

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் தொகைக்கேற்ப மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் ஊட்டப் பாடசாலை அபிவிருத்தித் திட்ட ஆரம்பநாள் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் கூறினார்.

மாணவர்கள் பாடசாலைகளில் எந்தவொரு இடையூறுமின்றி கல்வியைத் தொடர வேண்டுமெனப் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர் தொகைக்கேற்ப மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கவுள்ளதால் இந்தத் திட்டத்தை விரைவில் நடைமுறைப் படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்-என்றார் அலென்ரின். (த-9)

# புத்தாண்டுப் போட்டியில் விபத்து போட்டியாளர்கள் மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.07

512 ஆவது படைப் பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்திய மரதன் ஓட்டப் போட்டியின் போது இடம் பெற்ற விபத்தில் போட்டியாளர்கள் மூவர் படுகாயமடைந்தனர்.

உரிய ஒழுங்கமைப்பின்றிப் போட்டிகள் நடத்தப்பட்டமையாலேயே தமது பிள்ளைகள் உயிராபத்தைச் சந்திக்க நேரிட்டதாக விபத்தில் காயமடைந்தவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

காலை மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்தப் போட்டிகள் உரிய ஒழுங்கமைப்பு இல்லாமல் நடத்தப்பட்டமையால் மரதன் போட்டியில் பங்குபற்றிய போட்டியாளர்கள் மூவர் விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்தனர்.

மரதன் ஓட்டப் போட்டி முடிவடைவதற்கு முன்னர் சைக்கிள் ஓட்டப் போட்டி ஆரம்பிக்கப்பட்டமையாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றிய இரு படையினரும் விபத்துக்குள்ளாகினர்.

இந்த விபத்தில் காயமடைந்த மரதன் ஓட்டப் போட்டியாளர்களான பண்டத்தரிப்பைச் சேர்ந்த நீகன் (வயது-27), நல்லூரைச் சேர்ந்த எஸ்.தனராஜ் (வயது -18), சாந்தையைச் சேர்ந்த துரைராஜா றாஜீவ் (வயது-31) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (த-14)

# தமிழக மக்களின் உணர்வுகளுக்கு காங்கிரஸ் உரிய மதிப்பளிக்கும்

## ராகுல் காந்தி கூறுகிறார்



புதுடில்லி,ஏப் 07

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழக மக்களின் உணர்வுகளைக் காங்கிரஸ் கட்சி முழுமையாகப் புரிந்து கொண்டிருப்பதாகக் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகக் கூறப்படும் கருத்துக்கள் தவறானவை என்று கூறியுள்ள அவர், தமிழக மக்களின் குறிப்பாக இளைஞர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சி செயல்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அமைச்சர் வாசனை நேற்று முன்தினம் சந்தித்த ராகுல் இதனைத் தெரிவித்ததாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்தும், அது தொடர்பாகத் தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்கள் குறித்தும் வாசனிடம் ராகுல் காந்தி கேட்டறிந்துள்ளார். மேலும், இந்த விவகாரம் குறித்து முழுமையான அறிக்கையை அளிக்குமாறு அவர், வாசனுக்கு உத்தரவிட்டுள்ளார். (த)

# நாணயங்கள் நகைகளுடன் ஜப்பான் பிரஜை கைது

கொழும்பு,ஏப் 07

ஒரு கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயத்தாள் என்பவற்றுடன் ஜப்பான் நாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகச் சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர், சுங்க அதிகாரி லெஸ்லி காமினி தெரிவித்தார்.

60 வயதான சந்தேக நபர் ஜப்பான் பிரஜை என்றும் மாணிக்கக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் 454 விமானத்தில் ஜப்பான் நெரிடா நகரத்துக்குச் செல்வதற்கு விமான நிலையத்துக்கு வந்திருந்த போதே கைது செய்யப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இவரிடம் இருந்து அமெரிக்க டொலர் 12 ஆயிரத்து 400 மற்றும் ஜப்பான் யென் 10 இலட்சத்து 90 ஆயிரம் பெறுமதியான நாணயத்தாள்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்த அந்த அதிகாரி இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் கூறினார். (த)

# ரூபா 35 மில்லியன் செலவில் விளையாட்டு உபகரணங்கள்

## விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய

தென்மராட்சி, ஏப்.07

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் இளைஞர் கழகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய இவ்வருடம் 35 மில்லியன் ரூபா செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வருடம் 250க்கு மேற்பட்ட இளைஞர் கழகங்களுக்கும் 100 க்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் கையளிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் யாழ்.மாவட்ட இளைஞர்கள் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் யாழ்.மாவட்ட வீர, வீராங்கனைகள் தேசிய மட்டத்தில் பதக்கங்களை பெற்றதுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி குழுநிலைப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றதாகவும் அவர் கூறினார். (த-9)

# பலமான தூதுவரை தேடுகிறது இந்தியா

## இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்காக

புதுடில்லி,ஏப் 07

இலங்கைக்கான அடுத்த தூதுவர் பதவிக்குப் பொருத்தமானவரை இந்திய வெளிவிவகார அமைச்சு தேடி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவராக உள்ள அசோக்கேகாந்தா அடுத்த மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சின் கிழக்காசியாவுக்கான செயலராக நியமிக்கப்படவுள்ளார்.

இந்தப் பதவியில் உள்ள சஞ்சய்சிங் இந்த மாத இறுதியுடன் ஓய்வுபெறவுள்ள நிலையில், இந்தப் பதவியில் அசோக்கேகாந்தறாவை நியமிப்பதற்கான பரிந்துரை, அமைச்சரவை நியமனக் குழுவின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இலங்கைக்கான புதிய தூதுவர் பதவிக்குப் பொருத்தமானவரைத் தேடும் பணியை 'சவுத் புளொக்' தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இலங்கைக்கான தூதுவர் பதவிக்கு நியமிக்கப்படக் கூடியவர்கள் என்று பலரது பெயர்கள் சவுத் புளொக்கில் அடிபடுகிறன.

தற்போது, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் விவகாரங்களைக் கையாளும் மேலதிக செயலராக உள்ள வை.கே.சிங் பொருத்தமான தெரிவாக இருப்பார் என்று கருதப்படுகிறது.

இலங்கைக்கான புதிய தூதுவர் பதவிக்குப் பொருத்தமானவரைத் தேடும் பணியை 'சவுத் புளொக்' தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

ஆனால், தற்போதுள்ள தூதுவரை விடவும் மூத்த இராஜதந்திரி ஒருவர் கொழும்புக்கு அனுப்பப்படலாம் என்ற பேச்சும் உள்ளது. அவ்வாறாயின், தற்போது பீஜிங்கில் உள்ள இந்தியத் தூதுவர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு நியமிக்கப்படலாம். அடுத்த வெளிவிவகாரச் செயலர் பதவிக்கான போட்டியில் முன்னணியில் உள்ளவர்களில் ஜெய்சங்கரும் ஒருவர். ஆனால், அவரை விடச் சேவையில் மூத்தவரான சுஜாதா சிங் இந்தப் போட்டியில் முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, சீனாவுக்கான தூதுவராக உள்ள எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்பட்டால், மலேசியாவுக்கான இந்தியத் தூதுவராக உள்ள விஜய் கோக்லே பீஜிங் அனுப்பப்படுவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

# இரு வீதிகள் புனரமைப்பு

தென்மராட்சி,ஏப் 07

சாவகச்சேரி நகர சபையினால் இந்த வருட வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிட்ட வீதி அபிவிருத்தி வேலைகளில் முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கமைய சாவகச்சேரி பொலிஸ் நிலைய வீதி, உதய சூரியன் வீதி ஆகிய இரு வீதிகளை சபை நிதி மூலம் புனரமைப்பதென முடிவு செய்யப்பட்டது. (ந-9)

# கருத்தரங்கு

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆங்கில பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார். (ந)

# பொதுக்கூட்டம்

இணுவில் மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்துக்கு பெற்றோர்களைக் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் அ.சதானந்தன் அறிவித்துள்ளார். (ந)

# சந்தேகநபர்களை விடுவித்ததில் அரசியல் தலையீடுகள் இல்லை

கொழும்பு,ஏப் 07

காவத்தை இரட்டைப் படுகொலை மற்றும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனுக்கு எதிரான வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சட்டத்துக்கு அமைவாகவே விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த விவகாரங்களில் எவ்விதமான அரசியல் தலையீடுகளும் இல்லை என்று சட்டமா அதிபர் பாலித்த பெர்ணன்டோ தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இந்த வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் நீதி மன்றத்தின் ஊடாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மிகமுக்கியமாக இவ்விரு வழக்குகளிலும் போதியளவான சாட்சிகளும் சான்றாதாரங்களும் இன்மையினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இந்த வழக்குகளில் குற்றச்சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் ஊடாக விடுவிக்கப்பட்டுள்ளனர். சந்தேகம் மற்றும் அனுமானத்தின் ஆதாரங்களைக் கொண்டே இவ்விரு வழக்குகளும் முன்னெடுக்கப்பட்டன. இந்த வழக்குகளின் சந்தேகநபர்களை விடுவிப்பதற்கு எவ்விதமான தனிப்பட்ட அரசியல் அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மரக்கறிகள் பழங்கள் தெற்குப் புத்தாண்டுச் சந்தையில்

வலி. வடக்கு, ஏப். 7

யாழ்ப்பாண மரக்கறிகள், பழ வகைகள் என்பன தென்னிலங்கையில் நடைபெறவுள்ள புத்தாண்டுச் சந்தைக்கு விசேடமாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

கொழும்பில் புத்தாண்டையொட்டி இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் புத்தாண்டுச் சந்தைக்கே இவை கொண்டு செல்லப்படுகின்றன.

குறிப்பாக இந்த புத்தாண்டுச் சந்தைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு செல்லப்படும் பொருள்களுக்கான பேக்குவரத்துச் செலவுகளை சமுர்த்தி அதிகார சபை ஏற்கிறது.

இதன் காரணமாக புத்தாண்டுச் சந்தையில் யாழ். மாவட்ட மரக்கறிகளான பீற்றூட், வெங்காயம், முள்ளங்கி பழவகைகளான வாழைப் பழம், திராட்சை என்பன இடம்பெறுகின்றன. (த-86)

## 5000 பாடசாலைகளின் அபிவிருத்தி ஆரம்ப நிகழ்வு

### நல்லூர் கோட்ட நிகழ்வு சென்.பெனடிக்ற்றில்



யாழ்ப்பாணம்,ஏப்.7

5 ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நல்லூர் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான அபிவிருத்திப் பணிகளின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நல்லூர் வடக்கு ஞானோதய வித்தியாலயம், கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலயம், யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் இந்த அபிவிருத்திப் பணிகளின் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், சென்.பெனடிக்ற் வித்தியாலயத்தில் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து ஏனைய பாடசாலைகளிலும் அபிவிருத்திக்கான ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன. (த-17)

# கடந்த போக வெங்காயத்தை களஞ்சியப்படுத்த வேண்டாம்

## விவசாயப் பணிப்பாளர் ஆலோசனை

*அச்சுவேலி, ஏப்.7*

*யாழ்.மாவட்ட விவசாயிகள் கடந்தகாலபோகத்தில் செய்கை பண்ணிய வெங்காயத்தை விதை வெங்காயத் தேவைக்கு களஞ்சியப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஸ்ரீபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.*

கடந்தகால போகத்தில் யாழ்.மாவட்டத்தில் வெங்காயச் செய்கை மேற்கொண்ட விவசாயிகளில் சிலரால் விதை வெங்காயத் தேவைக்குக் களஞ்சியப்படுத்திய வெங்காயம் அழுகிச் சேதமடைந்து வருகின்றது. இதனால் விவசாயிகள் மேலும் நட்டத்துக்கு உள்ளாகி வருவதோடு பலத்த ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் நிலவிய காலநிலை முரண்பாடும், காலம் தப்பிய மழை வெள்ளமும் வெங்காயப் பயிரில் பரவிய ''ஊதாப் புள்ளி'' நோய்த் தாக்கமும் வெங்காயச் செய்கையை பெருமளவில் பாதிப்படையச் செய்துள்ளன. இதனால் தான் வெங்காயப் பயிர்கள் சேதமடைந்தன. விளைச்சலும் குன்றியது.

விவசாயிகள் பயிர்ச் செய்கை ஆர்வ மேலீட்டினாலும் விதை வெங்காயத்துக்கு ஏற்படக்கூடிய தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு என்பனவற்றைக் கருத்தில் கொண்டும் விதை வெங்காயத்தைக் களஞ்சியப் படுத்தி வைத்துள்ளனர்.

களஞ்சியப்படுத்தி வைத்துள்ள வெங்காயம் அழுகல் தாக்கத்துக்கு உள்ளாகிச் சேதமடைந்து வருகின்றது. களஞ்சியத்தில் உள்ள வெங்காயம் குமிழ் அழுகல் தாக்கத்துக்கு உள்ளாகக் காரணம் வெங்காயப் பயிரில் தொற்றியிருந்த ''ஊதாப்புள்ளி'' நோய்க்கான பக்ரீரியா விதை வெங்காயத்தில் இருப்பதோடு அவை விருத்தியடைவதற்குரிய காலச் சூழலும் தான்.

எனவே விவசாயிகள் விதை வெங்காயத் தேவைக்கு வெங்காயத்தை களஞ்சியப் படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். குமிழ் அழுகலில் இருந்து தப்பி இருக்கும் வெங்காயத்தை நடுகை செய்தாலும் எதிர் காலத்தில் பயிரில் நோய்த் தாக்கம்ஏற்பட்டு வெங்காயப் பயிர் விரைவில் சேதமடைந்து விடும்- என்றார். (த-11)

## வரவு–செலவுத்திட்டம் தோற்கடிப்பு

# பிரதேச சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

வலி தென்மேற்கு,ஏப். 7

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதற்கு உடந்தையாக இருந்த உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சி தங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்குரிய காரணமிருப்பின் தங்கள் பதிலை 15 தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறும் அந்த உறுப்பினர்களைக் கோரியுள்ளது.

> பாதிப்புக்கள் குறித்தும் சம்பந்தப்பட்டவர்களால் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தவிசாளரினால் சபைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆதரவு வழங்காததனால் அது தோற்கடிக்கப்பட்டது.

வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டமை குறித்தும், இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் சம்பந்தப்பட்டவர்களால் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இது குறித்து ஆராய்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா ''ஒழுக்காற்று நடவடிக்கைக்கான அறிவித்தல்'' என்னும் தலைப்பில் வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கு உடந்தையாக இருந்த உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

கடிதம் கிடைத்து 15 தினங்களுக்குள் ஒழுக்காற்று நடவடிக்கை ஏன் எடுக்கக்கூடாது என்பதற்கான காரணங்கள் இருப்பின் அதனை அனுப்பி வைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (த-115)

## மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தார் இளம் குடும்பஸ்தர்

### முகமாலைப் பகுதியில் சம்பவம்

*பளை முகமாலைப் பகுதியில் வெடி பொருள்கள் அகற்றப்படாத பகுதிக்குள் சென்ற பளை செல்வபுரத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.*

*பளை செல்வபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ரகுவேந்தன் (வயது-33) என்பவரே மிதிவெடியில் சிக்கிக் காயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். மேய்ச்சலுக்குக் கட்டப்பட்டுக் காணாமல் போனமாட்டைத் தேடிச் சென்ற வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)*

## அவதானமாக இருங்கள்

வலி. வடக்கு, ஏப். 7

மல்லாகம் பகுதியில் உள்ள சுதேச வைத்தியர் ஒருவரின் செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட வைத்தியர் சுதேச வைத்தியத்தை மேற்கொள்வதற்கு பதிலாக ஆங்கில மருந்து வகைகளையும் ஊசி மருந்துகளையும் பொது மக்களுக்கு வழங்கி வருவதாகவும், இதனால் பொது மக்கள் பாதிப்படையக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஏற்கனவே குறிப்பிட்ட வைத்தியர் ஆங்கில மருந்து வகைகளை பயன்படுத்தியமை, காலம் கடந்த மருந்து வகைகளை வைத்திருந்தமை, உரிய மருந்துகளை அனுமதியின்றி கையாண்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக தண்டிக்கப்பட்டவர்.

இந்த நிலையில் தொடர்ந்தும் இத்தகைய மருந்து வகைகளை சுதேச வைத்தியர்கள் பயன்படுத்த முடியாது எனவும், இது குறித்து பொது மக்களும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உயர் அதிகாரி மேலும் கூறினார். (த-86)

## நகரசபைக் கடைகள் வாடகை; வணிகர் மன்றத்துடன் பேச்சு

### சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் தீர்மானம்

தென்மராட்சி,ஏப்.7

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான கடைகள் தொடர்பாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் நடத்துவதென நேற்று முன்தினம் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கடை அறைகளின்வாடகை அதிகரிப்பு தொடர்பாக வணிகர் மன்றத் தலைவரினால் கடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதையும், இது தொடர்பாக நகரசபைக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்ததையும் நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை சபையின் கூட்டத்தில் தெரியப்படுத்தினார்.

இதனையடுத்து சபையின் அனைத்து உறுப்பினர்களும் இணைந்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணிக்கு வணிகர் மன்ற நிர்வாகத்தினருடன் கலந்துரையாடுவது என தீர்மானிக்கப்பட்டது. (த-9)

## புத்தாண்டுச் சந்தை மட்டுவிலில் 2 தினங்கள்

'திவிநெகும' சமுர்த்திப் புத்தாண்டுச் சந்தை நாளையும் நாளை மறுதினமும் காலை 8.30 மணிக்கு மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்.தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொண்டு புத்தாண்டுச் சந்தையை ஆரம்பித்து வைப்பார்.

புத்தாண்டுச் சந்தையில் திவிநெகும, சமுர்த்தி பயனாளிகளால் உற்பத்தி செய்யப்பட்ட, தயாரிக்கப்பட்ட பொருள்களும் யாழ்.மாவட்டத்தின் பிரபல வணிக, கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்களின் விற்பனைப் பொருள்களும் விற்பனை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

RALEIGH காட்சியறை
திறப்பு விழா அழைப்பு
07.04.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு Ahtus காட்சியறை கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளதால் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரதம விருந்தினர்: கௌரவ திருமதி யோகேஸ்வரி பற்குணராசா (மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்)
இல. 30, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். ☎: 0117206888, 0117206777
(35768)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளியவளையில் தேக்கங்காட்டை அழிப்பதற்காக அமைச்சர் ரிஷாத்தின் ஆதரவாளர்களால், கொண்டு வரப்பட்ட 'பைக்கோ' இயந்திரங்களைச் சுற்றி போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் முல்லைத்தீவு மக்கள் இவர்கள். (த)



## தமிழீழ வீர...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

★ஈழத் தமிழர்களுக்குத் தனித் தமிழீழமே ஒரே தீர்வு. இதனை ஐக்கிய நாடுகள்சபை பொதுவாக்கெடுப்பின் ஊடாக நடைமுறைப் படுத்த வேண்டும்.

★ இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும். அத்துடன் இலங்கையுடான உறவை இந்தியா கண்டிக்க வேண்டும்.

★இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்க வேண்டும்.

★ தமிழீழ வரலாற்றை தமிழ்நாட்டு மாணவர்களின் பாடநூல்களில் சேர்க்க வேண்டும் என்ற ஐந்து அம்சக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று மாணவர்கள் தெரிவித்தனர். (த-5)

## பொதுநலவாய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இதற்காகத் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் லண்டனுக்குப் பயணமாகவுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் பொதுநலவாய மாநாடு இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாதெனக் கனடா - பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் இந்த மாதம் லண்டனில் பொதுநலவாய அமைச்சர்களின் மாநாடு இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாட்டுத் தூதுவர்களிடம், இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படக் கூடாதென்பதை வலியுறுத்துமாறு தி.மு.க.நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று கோருவர்.

இதற்காக தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் லண்டனுக்குச் செல்லவுள்ளதாக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்தார். (த-5)

## இந்தியாவிலுள்ள...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இயந்திரக் கோளாறு காரணமாகப் பழுதடைந்து நின்று விட்டது.

இந்த நேரத்தில், இந்தியக் கடலோரக் காவல் படையினர் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டு நின்ற படகுகளை அவதானித்துள்ளனர். இந்தியக் கடற்படையினர், கரையோரக் காவல் படையினர், இந்திய விமானப் படையினர் இணைந்து நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த படகுகளில் இருந்து 120 பேரை மீட்கப்பட்டனர்.

இதன்போதே இவர்கள் இந்தியாவிலுள்ள ஈழத் தமிழர்கள் என்பதும் ஆஸ்திரேலிய செல்ல முற்பட்டவேளை படகு பழுதடைந்ததும் தெரிய வந்தது.

மீட்கப்பட்ட 120 ஈழ அகதிகளும் பத்திரமாகக் காரைக்காலுக்கு நேற்று மதியம் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (த-5)

## ரிஷாத்துக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முள்ளியவளை ஆறாவது மைல் கல் அருகில் 540 ஏக்கர் தேக்கங்காடு உள்ளது. இந்தக் காட்டை முற்றாக அழித்து அந்தப் பகுதியில் தனக்கு ஆதரவான ஆயிரத்து 445 குடும்பங்களைக் குடியேற்றுவதற்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இதற்காக குறித்த பிரதேசத்தை நில அளவை செய்வதற்காக கடந்த மாதம் 21 ஆம் திகதி நில அளவையாளர்கள் அங்கு சென்றுள்ளனர். அவர்களை நிலஅளவை செய்ய விடாமல் முல்லைத்தீவு மக்கள் திரண்டு எதிர்ப்புத் தெரிவித்து திருப்பி அனுப்பினர்.

இவ்வாறானதொரு நிலையில் முல்லைத் தீவுக்கு நேற்று சனிக்கிழமை பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்காக அமைச்சர் ரிஷாத் சென்றிருந்தார். இதன்போது அமைச்சர் காட்டை அழித்து அந்தப் பகுதியில் தனது ஆதாரவாளர்களை குடியேற்றும் திட்டத்தையும் ஆரம்பித்து வைப்பதற்கு திட்டமிட்டிருந்தார். இதற்காக அவரது ஆதாரவாளர்களும் அங்கு அமைச்சரால் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

நேற்றுக் காலை குறித்த காட்டுப்பகுதியின் அருகே 5 'பைக்கோ' இயந்திரங்கள் சகிதம் அமைச்சரின் ஆதரவாளர்கள் அங்கு வந்து இறங்கினர்.

இதனை அறிந்து கொண்ட முல்லைத்தீவு மக்கள் நேற்றுக் காலை 7 மணிமுதல் மேற்படி காட்டுப் பகுதியில் குவிந்தனர்.

''எங்களுக்கு காணிகள் வழங்காமல் இந்தக் காட்டை வெட்ட முற்பட்டால் 'பைக்கோ' இயந்திரங்களை அடித்து நொருக்குவோம்'' எனத் தெரிவித்து அமைச்சரின் ஆதரவாளர்களை எச்சரித்தனர் முல்லைத்தீவு மக்கள். அத்துடன் 'பைக்கோ' இயந்திரங்களுக்கு குறுக்காக படுத்து அவற்றை நகரவிடாமல் செய்தனர்.

மக்களின் இந்த எதிர்ப்பு நடவடிக்கையால் நேற்று நண்பகல் வரை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அங்கு வரவில்லை.

இறுதியில் நேற்று மாலை 4.30 மணியளவிலேயே அமைச்சர் ரிஷாத் அங்கு வந்தார். இதனையடுத்து அங்கு திரண்டிருந்த முல்லைத்தீவு மக்கள் அமைச்சருக்கு எதிராகக் கொந்தளித்தனர்.

''கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 940 குடும்பங்கள் காணியில்லாமல் உள்ளனர். எங்களுக்கு காணிகளை வழங்காமல் உங்கள் ஆதரவாளர்களுக்கு இங்கு காணிகள் வழங்கவிடமாட்டோம்.

நாங்கள் அளித்த வாக்குகளில் தான் நீங்கள் அமைச்சரானீர்கள். இப்போது உங்கள் ஆதரவாளர்களுக்காக மாத்திரம் செயற்படக் கூடாது. அதற்காக நாங்கள் வாக்களிக்கவில்லை'' என்று மக்கள் ஒரே குரலில் திட்டவட்டமாகத் தெரிவித்து விடாப்பிடியாக இருந்தனர். மக்களின் கடும் எதிர்ப்புக்கு அமைச்சரால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தில் பணியாற்றும் விஜிந்தன் என்பவர் (''உதயன்'' பத்திரிகைக்கு எதிராக வன்னிப் பிராந்தியத்தில் போராட்டங்கள் நடத்துபவர்). அமைச்சருக்காக வக்காளத்து வாங்கி முல்லைத்தீவு மக்களிடம் வாங்கிக்கட்டினார்.

மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான வீதியின் ஒரு கரையான முள்ளியவளை மேற்கில் உங்களுக்கு காணிகள் தரமுடியும். முள்ளியவளை மத்தியில் ஆதரவாளர்களைக் குடியமர்த்தவிடுங்கள் என விஜிந்தன் முல்லைத்தீவு மக்களிடம் கேட்டார்.

மக்கள் அவரை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்ததுடன் தமது முடிவிலும் உறுதியாக இருந்தனர்.

இதனால் ஒன்றரை மணி நேரமாக மக்களுடன் வாக்குவாதப்பட்ட அமைச்சர் ரிஷாத் இறுதியில் திங்கட்கிழமை (நாளை) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அரச அதிபருடன் கலந்துரையாடல் நடத்திவிட்டு முடிவைக் கூறுவதாக சொல்லி அங்கிருந்து பின்வாங்கிச் சென்றார். அவரின் ஆதரவாளர்களை குடியேற்றும் ஆரம்ப முயற்சியும் இதனால் பிசுபிசுத்துப்போனது.

இதேவேளை - நேற்று குறித்த பகுதியில் படையினர், பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் எனப் பல நூற்றுக்காணக்கானோர் குவிக்கப்பட்டிருந்தனர்.

குறித்த இடத்தில் காட்டை அழித்து விட்டு மக்களை குடியேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## தமிழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பரப்புக்குள் ஊடுருவி மீன் பிடித்துக்கொண்டிருந்த வேளையிலேயே தாங்கள் கைது செய்ததாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதிவான் ஆர்.சபேசன் உத்தரவிட்டுள்ளார்.

26 மீனவர்களும் தமிழகத்தின் பாண்டிச்சேரி, காரைக்குறிஞ்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் 5 இழுவைப் படகுகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

''சர்வதேசக் கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த எமது மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி வரும் இலங்கைக் கடற்படையினர் வேண்டுமென்றே தமிழக மீனவர்களை கைது செய்தனர் என தமிழக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

தமிழகத்தில் கடந்த ஒரு மாத காலமாக ஈழத்தமிழருக்கு ஆதரவாகப் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் போராட்டங்களால் தமிழகமே பெரும் கொந்தளிப்பு நிலையில் உள்ளது. தமிழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் பின்னர் மக்கள் போராட்டங்களாக மாற்றமடைந்து உச்சக் கட்டத்தை எட்டியுள்ளன.

இந்த நிலையில் தமிழக சட்ட சபையிலும், இலங்கையில் தனித் தமிழீழம் அமைய வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழகமும் திரும்பியுள்ள நிலையில், தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்களும், கைது செய்யப்படும் சம்பவங்களும் திடீரென அதிகரித்து வருகின்றன.

கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி 53 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 34 பேர் நெடுந்தீவு கடற்படையினராலும், எஞ்சிய 19 பேர் மன்னார் கடற்படையினராலும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் நெடுந்தீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 34 தமிழக மீனவர்களும் இரு தினங்களில் விடுவிக்கப்பட்டனர். ஆனால் மன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 19 பேரையும் விடுவிக்குமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் இரு வாரங்களுக்கு மேலாகப் போராட்டம் நடத்தினர். இறுதியில் மீனவர்கள் விடுவிக்கப்படாமலேயே அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர்.

கடந்த சில தினங்களாகக் கச்சதீவுக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் விரட்டி விரட்டி தாக்கப்பட்டுள்ளனர். இவர்களை இலங்கைக் கடற்படையினரே தாக்கியதாக இராமேஸ்வரம் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே பாண்டிச்சேரியைச் சேர்ந்த 26 மீனவர்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் நெடுந்தீவு கடற்பிரதேசத்தில வைத்து இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். இவர்கள் கடற்படையினரால் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அதிகாரிகள் அவர்களை ஊர்காவற்றுறை பதில் நீதிவான் ஆர்.சபேசனிடம் முற்படுத்தினர். இவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் இவர்களால் பிடிக்கப்பட்ட 1000 கிலோவுக்கு அதிகமான மீன்களை அழிக்குமாறும் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததுடன், சட்ட விரோத மீன் பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடித்ததாகவும் கடற்படை பேச்சாளர் கோசல வர்ணசூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கைதான மீனவர் விவரம் வருமாறு:-

சுப்பிரமணியம், காரியப்பன், கோபாலன், கோவிந்தராசா, முருகையா, தங்கராசா, யோகநாத், பாக்கியராஜ், சுரேஸ், ரமேஸ், பிரமானந்தன், வீரபத்திரன், சந்திரகாசு, சாரங்கபாணி, கண்ணதாசன், ஆரோக்கியராஜ், ராஜ்ராமன், அம்பிகை ராஜன், குமாரசாமி, ஈஸ்வரன், சிவகுமார், ஜோண் விக்டர், விஜயன், விஜேந்திரன், தட்சணாமூர்த்தி, பாலமுருகன். (த-5-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்து



Best Wishes

பல்துறை வல்லோன்

### கலாநிதி த. கலாமணி

அகவை 60 காணும் முனைவர் த.கலாமணி
அவர்களை மனமகிழ்வுடன் பாராட்டுகின்றோம்.
இந்நாளில் மேன்மேலும் சிறப்புக்களுடனும், தேக
நலத்துடனும் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்கள் 2009/2011 (பகுதிநேரம்)

(35781)(16.09)

## German Swiss மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. Embassyல் கேட்கப்படும் Certificate Goe the Instituteல் வழங்கப்படும் புதிய வகுப்புகள் 05.05.2013 அன்று ஆரம்பம் வெளி மாவட்டத்திலிருந்து வருவோர்க்கு தங்குமிட வசதி ஏற்படுத்தித் தரப்படும்.
#10, Palaly Road, Jaffna. T.P:- 0771604823. Mrs.P.Kajenthini. (35778) (23.16)

## வாகனம் விற்பனைக்கு

தனி நபர் பாவனையில் உள்ள பெற்ரோல் 'லைட் ஆஸ்' வான் விற்பனைக்கு உண்டு. புதிதாக வடிவமைக்கப்பட்டது.
A/C, புஸ் பாக் சீற் கசட் யாவும் உண்டு. லீசிங் வசதி செய்யக்கூடியது.

(35776) (23.16) தொடர்புகளுக்கு:- 0772188840

## மணிவிழா வாழ்த்துக்கள்



Best Wishes

கலை, கல்வி, அறிவியல்துறை வல்லோன்
மணிவிழா நாயகன்
**கலாநிதி. த. கலாமணி** அவர்களின் மணிவிழா நாளில்
நாமும் வாழ்த்துகின்றோம்.

(சி/8244)(16.09) அரியாலை. செ.செல்வதாசன் குடும்பத்தினர்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **அப்புத்துரை பொன்னாபரணம்**
முள்ளி வீதி, ஆனைக்கோட்டை

அம்மா உன்னைத் தேடுகிறேன்....
எங்கே நீ சென்று விட்டாய்? - உன்
பிள்ளைகளைத் தவிக்க விட்டு
நினம் தினம் உன் நினைவால் தவிக்கிறோம்
அம்மா நீ எங்கே?

மண்ணில் 26.05.1943
விண்ணில் 07.04.2009

(சி/8256)(16.09)

உன் நினைவால் வாடும்
அன்பு மகன் - குகன் (சவுதி), மருமகள் - தங்கா,
பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.




## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் அன்னமுத்து

(புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை)



புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் அன்னமுத்து நேற்று (06.04.2013) சனிக்கிக்கிழமை தனது 96 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பியப்பா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, கற்பகம் மற்றும் துரைச்சாமி (கனடா), காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் பூபதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மருதடியான் (RTD. Labour Officer - Colombo), கருணாகரன் (ஜேர்மனி), விநாயகமூர்த்தி (நிரு அரைக்கும் ஆலை உரிமையாளர் - புளியங்கூடல்) ஆகியோரின் அன்புத் தாயும், சாரதா (கொழும்பு), வசந்தாதேவி (ஜேர்மனி), செல்வகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும், பேகன் (பாபுஜி - ஜேர்மனி), பிரதீபா (கொழும்பு), நிருதரன் (லண்டன்), நிதர்சன் (காலி பல்கலைக்கழக மாணவன்) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, செல்லம்மா, முத்தம்மா, இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புளியங்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை.
0778155161, 021 300 1275

(35772)(6.7.2)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலநாதன்

### ஆதீசன் (ஆதி)

மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலநாதன் ஆதீசன் நேற்று (06.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலநாதன் (ஓய்வு பெற்ற வெளிக்கள உத்தியோத்தர், சுகாதாரத் திணைக்களம்) புஷ்பலீலாவதி (ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரிய ஆலோசகர்- தென்மராட்சி) தம்பதியரின் அன்புப் புதல்வனும், தியாகரூபனின் (லண்டன்) பாசமிகு சகோதரரும், தர்ஷாயினியின் (லண்டன்) அன்பு மைத்துனரும், ஆதிராவின் (லண்டன்) செல்லச் சித்தப்பாவும், ஜெயக்குமார், புஷ்பராணி, புஷ்பநிதி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் சிவஞானசுந்தரம், தியாகசொரூபினி, செல்விகாராணி காலஞ்சென்ற மீனலோஜினி ஆகியோரின் மருமகனும், சங்கீதா, வேணுகானன், வாகீசன், விமலன், விபுலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், கயல்விழி, பிரணவன், மலர்விழி, றொசானி, நிரோசினி, சாளினி, பிரதீபா, திவாகரன், நாகநிவேதா, சுஜிதசாஜி ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஷ்வகேதனின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக படித்த மகளிர் திட்ட இந்துமயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.62, படித்த மகளிர்
திட்டம், மிருசுவில்.

(27823)(16.09)

தகவல்:
தி.பொன்னம்பலநாதன் (தந்தை),
பொ.தியாகரூபன் (சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகர மத்தியில்

# "உதயன் விருந்தினர் விடுதி"




- குடும்ப அறை வசதி உண்டு.
- குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் குளிரூட்டப்படாத அறைகள்.
- யாழ்ப்பாண உணவு வகைகள் தயாரித்து தரப்படும்.
- பரந்த வாகன நிறுத்துமிட வசதி.
- காலை உணவுடன் கூடிய அறை வசதி.

குழுமப் பதிவுகளுக்கு விசேட கழிவு உண்டு.

**இன்றே ஒருமுறை வருகை தந்து பாருங்கள்**

12, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(c/6914)(8.14.16)

**021 222 2330**
**021 567 7603**



## Vacancies For Marketing Executives

**JOIN US TODAY!**

பல்தேசிய நிறுவனத்துக்கு Education Technologies கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Benefits:**

* Unlimited income potential
* Comprehensive Training
* Basic Salary / Travel Allowances / Commission incentives
* Overseas Travel/ Coferences for Achievers
* Management positions within 6 month - 1Year
* Motor Bike / Car Allowances

**Requirement:**

* Age Below 35 Years.
* G.C.E. (A/L) Qualification
* A Positive attitude with a pleasing personality
* நேர்முகத்தேர்வு 8/04/2013 தொடக்கம் 12/04/2013 வரை

**Education Technologies**
No:100, 2nd Floor Manipay Road, Jaffna.
**Contact-** Manager -Mr.G.ANTHANY.
**0773434823**
WWW.Pioneerhouselearning.Com


## கண்ணீர் அஞ்சலி



யா/குடத்தனை கரையூர்
றோ.க.த.க. பாடசாலையில்
விஞ்ஞான ஆசிரியராகச்
சேவையாற்றும்
**திருமதி விஜயராணி சிவகடாட்சம்**
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி. மகேஸ்வரி பாலகிருஷ்ணர்

கடந்த (05.04.2013) அன்று காலமான செய்தியை அறிந்து ஆழ்ந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/ குடத்தனை கரையூர்,
றோ.க.த.க. பாசாலை, குடத்தனை. (சி/8261) (23.16)

பாடசாலைச் சமூகம்.


### உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு

**021-567 1111, 021- 567 6666**



### மணமகள் தேவை UK (uk citizen)

இந்து கௌரவ குடும்பம் 25/03/1980 புனர்பூசம் 2ஆம் பாதம் பாவம் 35 ( IT officer ), 01/10/1973 பூராடம் பாவம் 29, சுப்பர் மார்க்கற்றில் வேலை புரிபவர். இவர்கள் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

TEL:- 0044 7833819736 FAX:- 0044 208 5488847 chihra 004@yahoo.co.uk



### விற்பனைக்கு/ குத்தகைக்கு

01. யாழ். மாவட்டத்தில் செயற்படும் கல்லுடைக்கும் ஆலை விற்பனைக்கு அல்லது நீண்டகால குத்தகைக்கு உண்டு.

02. கோப்பாய் தெற்கு இறையில் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு எதிரில் உள்ள ஒழுங்கையில் 10 பரப்பு தோட்டக் காணி (கிணற்றுடன், விற்பனைக்கு உண்டு) (பகுதியாகவும் பிரித்து வழங்கப்படும்)

**T.P- 0770534470, 0718475019**

(35775)(16.09)



### விற்பனைக்கு

கொக்குவில் பொற்பதி வீதியில் 3½ பரப்புக் காணியும் நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு மாடி 10 அறைகள், 5 குளியல் அறைகள் மற்றும் சமயல் அறை மற்றும் வாகனத் தரிப்பிடம், கொங்கிரீற்றால் தயாரிக்கப்பட்ட வாகன ஒடு பாதையும், பல வாகனங்கள் நிறுத்தக் கூடிய வீடு வளவு விற்பனைக்குண்டு.

(35777) (23.16) **தொடர்புகளுக்கு:- 021 321 9449**


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா வயித்திலிங்கம்

மூளாளையைப் பிறப்பிடமாகவும் சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா வயித்திலிங்கம் நேற்று(06.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை வயித்திலிங்கத்தின்(ஓய்வு பெற்ற மத்திய வங்கி உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான M.K சுப்பிரமணியம், தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியபாமா, யோகேஸ்வரி, மங்கலேஸ்வரி(லண்டன்), சந்திரலேகா(ஜெயந்தி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம், மைசூர்நாதன், மற்றும் லோகநாதன்(லண்டன்), இராச குலசேகரன் ஆகியோரின் அன்பு மாமியும், கிருபாகரன்(லண்டன்), கலைச்செல்வி (லண்டன்), கருணாகரன்(நோர்வே), சிவகரன், தயாழினி, தர்மினி, கண நாதன்(லண்டன்), செந்தூரன்(லண்டன்), தேவகி(லண்டன்), இராசகுமாரன்(லண்டன்), அனுசாதேவி(நோர்வே), அஜிதா, பாலராஜ் (சுரபி), ரவிவர்ணன், நிஷாந்தினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அரவிந்(லண்டன்), மயூரா(லண்டன்), ஆரணி(நோர்வே), ஆதீசன் (நோர்வே), ஆரபி(நோர்வே), அபிரா, ஆதிபன், அபிசாலினி, அபிசனா, சகானா, பிரசன்னா, மீனாட்சி, கபிஷன்(லண்டன்), சிந்துசா(லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.04.2013) திங்கட்கிழமை காலை 8மணிஅளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச் வீதி, சித்தங்கேணி.
T.P:- 021 3206667

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### செல்வி வல்லிபுரம் செல்வம்



மயிலங்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்வி வல்லிபுரம் செல்வம் 05.04.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் -பசுபதி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், தெய்வேந்திரம், முத்துப்பிள்ளை (கனடா), கிருபாசக்தி, சறோஜினிதேவி, தெய்வநாயகி, சிதம்பரநாதன் (பிரான்ஸ்), சகுந்தலா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற கந்தசாமி மற்றும் நல்லையா, சிவஞானசுந்தரம், காலஞ் சென்ற சத்தியமூர்த்தி மற்றும் பாலச்சந்திரன் விஜயகுமாரி (பிரான்ஸ்), பரஞ்சோதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ் சென்ற சாந்தினி மற்றும் மோகனதாஸ், வசந்தினி, சுமதினி (பிரான்ஸ்), வசந்(பிரான்ஸ்),பிரதீபன், பிரபாகரன், உமாசுதன் (பிரான்ஸ்) உஷாந்தினி (கனடா), சிவரூபன் (பிரான்ஸ்), பகீரதன் (பிரான்ஸ்), அருட்செல்வி (இத்தாலி), காந்தரூபன், தர்மிலா, சசிகலா (பிரான்ஸ்), கருணகலா, விஜிகலா (கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி, ஆசிரியை), அன்பரசி,தமிழரசி, புகழரசி, பேரூயன் (மலேசியா), மாதங்கி, நிசாந்தி, துளசிகா (பிரான்ஸ்), இந்துசன் (பிரான்ஸ்), ரிஷிகேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பெரியதாயும், ஆனந்தராசா, ஜெயாயினி, தர்மலிங்கம், தனபாலசுந்தரம் (பிரான்ஸ்), ஜெனிதா, மதிச்செல்வி, கிட்னேஸ்வரி, ஸாம்பவி (அன்ரா டிஜிற்ல் இமேஜ்), பிரதீபன் (கனடா), யோகசயந்தி, லோகரூபன் (இத்தாலி), வசிகரன் (இத்தாலி), மங்களேஸ்வரன் (பிரான்ஸ்), செல்வராசா, கஜலக்ஸ்மன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின் றோம்.

மயிலங்கூடல், இளவாலை. (C/8270)(6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தாம் நினைத்ததைச் செய்யும் பெரும்பான்மைப் பலப் போக்கு...

''காணி நிலம் வேண்டும்-பராசக்தி
காணி நிலம் வேண்டும்.
.............................................
.................................
காணி நிலத்திடையே-ஓர் மாளிகை
கட்டித்தரவேண்டும்''

அன்னை பராசக்தியை வேண்டி மகாகவி பாரதியார் பாடிய கவிதையின் ஆரம்ப வரிகள் இவை .

மனிதனின் இல்லற வாழ்க்கைக்கு உணவு, உடை என்பவற்றுக்கு அடுத்த அத்தியாவசிய தேவை வீடும் அதனை அமைப்பதற்கான காணியும் என்பதனையும் மேற்சொன்ன கவிதை வரிகள் சுட்டி நிற்கின்றன.

நாட்டின் வடக்கு, கிழக்கில் அரசாங்கம் நடத்திய போரின் விளைவாக, சந்ததி சந்ததியாக தமது சொந்த நிலங்களிலும் அவற்றில் தாம் கட்டி எழுப்பிய வீடுகளிலும் வாழ்ந்த தமிழ் மக்களில் 90 சதவீதமானோர், தமது இல்லிடங்களையும், நில புலங்களையும் விட்டு ஏதிலிகளாக இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

போர் முடிவுற்று நான்கு வருடங்கள் இன்னும் சில நாள்களில் கரைந்து போகவுள்ளன. வடக்கில், வன்னிப் பிரதேசங்களிலும், யாழ்ப்பாண மாவட்டத்திலும் இன்னும் பல்லாயிரக்கணக்கான தமிழ் முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று கொட்டில் வாழ்க்கை தானும் நடத்த முடியாமல் அல்லாடுகிறார்கள்; அவலமுறுகிறார்கள், அவஸ்தைப்படுகிறார்கள்.

இத்தனைக்கும் அரசாங்கம் தனது தேவைகளுக்கென, மிக மிகப் பல இடங்களில் படைத்துறையினரின் நிரந்தர தேவைகளுக்கெனத் தமிழ் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அது தடுப்பார் இன்றி முடிவிலாது தொடர்கிறது. மக்களின் பூர்வீகக் காணிகளுக்குப் பதிலாக மாற்றுக்காணிகள் வழங்கப்படும் என ''ஆறுதல்'' கூறுகிறது அரசு.

தமிழ் மக்களின் காணிகளைப் பறிக்கும் அரசின் செயல் மனித உரிமைகளை மீறும் பெரும் அடாவடித்தனம் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இருக்க இயலாது. எனினும் தான் செய்வது ஜனநாயக ரீதியானது, நீதியானது என்று காட்டுவதற்கு, காணிப் பறிப்பை- சுவீகரிப்பை- யாழ்.,வன்னி மாவட்டங்களில் அதிவேகப்படுத்தியுள்ளது அது.

வடமாகாணத்தில் முப்படையினராலும் கையகப்படுத்தப்பட்ட- சுவீகரிக்கப்பட்ட- காணிகளுக்குப் பதிலாக, அதே மதிப்பீடுள்ள மாற்றுக் காணிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கடந்த மாதத்தில் துறைசார் வட்டாரங்களில் பேசப்பட்டது. ஏன் அதனை ஊர்ஜிதமாக்கி, அது தொடர்பில் சுற்றறிக்கை ஒன்றும் அரசால் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் காணிப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கென, காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் ஒன்றும் கடந்த மாத மத்தியில் திறந்து வைக்கப்பட்டது. கையோடு படைத்தரப்பினருக்குத் தேவையென்று இனங்காணப்பட்ட காணிகளை அரசுடைமையாக்கும் பணிகள் இப்போது மும்முரமாகியுள்ளன.

மாவட்டத்தில் மிகப் பல பிரதேச செயலகங்களில் காணிகளை அரசுடைமை ஆக்கும் அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட காணி அமைந்துள்ள இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. அரசுடைமையாக மாற்றுவது குறித்து மறுப்புத் தெரிவிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறோ, அரசு வழங்கப்போகும் நட்டஈடு எந்த வகையிலும் ஈடாகுமா என்பது விடையில்லாத வினாவாகவே நீண்டு செல்லும். மொத்தத்தில் மக்களின் மன விருப்பத்துக்கு மாறாக அவர்களை நிர்ப்பந்திக்கும், கட்டாயப்படுத்தும் மறைமுக நடவடிக்கையாகவே அவர்கள் இந்த ஏற்பாட்டை நோக்குகிறார்கள்.

பல்லாண்டு காலமாக வளமாக வாழ்ந்த சிறந்த மண்ணை விட்டுத் தாம் துரத்தப்படுகிறார்கள் என்ற உள்ளுணர்வு பொங்கி எழுந்தாலும், மறுத்தால் பின்விளைவுகள் படுபாதகமாக அமையும் என்ற அச்ச உணர்வுடன் மிகமிகப் பலர் இதனை எதிர்நோக்குவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இதயம் வெடிக்கும் அளவுக்கு அவர்கள் நொந்து போவர் என்பதனைச் சொல்லித் தெரியவேண்டியதும் இல்லை.

ஆளவந்தோரின் சட்டங்கள், சட்டவிதிகள், மனுநீதியையும், மனித உரிமைகளையும் முழுக்க முழுக்க மதித்து இயற்றப்படுபவை என்று சொல்வதற்கில்லை. அதிலும் ஆள்வோரும், ஆளப்படுவோரும் மக்களே என்ற இயற்கையின் நியமத்தைக் கருத்தில் கொண்டு பல சட்டங்கள் பிரகடனப்படுத்தப்படுவதில்லை.

காணிச் சுவீகரிப்புச் சட்டம் அந்த வகை சார்ந்ததா என்பது இனிமேல் தான் பூதாகரமாகத் தெரியவரும்.

எது எப்படியோ, தமிழர் பிரதேசங்களில் பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசு, தான் நினைத்ததை, திட்டமிட்டதைச் செயற்படுத்தலாம் என்ற நிலை மேலுயர்ந்து செல்கிறது.

# மாற்று வலுவுடையோருக்கு விசேட செயல் திட்டங்கள்

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.7

யாழ்.மாவட்ட மாற்றுவலுவுடையவர்களுக்கான விசேட செயல் திட்டங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பிரிவுக்குட்பட்ட மாற்றுவலுவுடையோர் சுய உதவிக் குழுக்கள் கடந்த 4 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபரைச் சந்தித்து மாற்று வலுவுடையவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்தன.

குறிப்பாக மாற்று வலுவுடையவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதற்கான மாற்று நடவடிக்கைகளை சமூக சேவைத்திணைக்களம் ஊடாக முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்தக் குழுக்கள் அரச அதிகாரிகளிடம் விடுத்தன.

இதற்கமைவாக எதிர்காலத்தில் மாற்று வலுவுடையவர்கள் நலன் பேணும் செயல் திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரச அதிபர் கூறினார். (த-14)

# குற்றச் செயல்கள் யாழில் மிகக் குறைவு

## பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப்.7

ஏனைய மாவட்டங்களை விட யாழ். மாவட்டத்தில் பெரும் குற்றச் செயல்கள் மிகக் குறைவாகவே உள்ளன எனப் பெருமைப்பட்டுக் கொள்கிறார் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்ரி.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏனைய மாவட்டங்களில் கொலை, கொள்ளை, குழு மோதல் எனப் பெரிய குற்றச் செயல்கள் அதிகளவு இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெரிய குற்றச் செயல்கள் இடம்பெறுவதில்லை.

சிறு சிறு குற்றச்செயல்கள் மட்டுமே தற்போது இடம்பெற்று வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

பெரிய குற்றச் செயல்கள் இடம்பெறாவண்ணம் தொடர்ந்து பாதுகாப்புக் கடமைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன- என்றார். (த-14)

# நல்லூரில் மாணவிகளுடன் இளைஞர்கள் சேஷ்டை

## பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.7

தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவிகளுடன் நல்லூர் ஆலயச் சூழலில் இளைஞர்கள் சேஷ்டை புரிவதாகப் பெற்றோர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர்.

நல்லூர் ஆலயச் சூழலில் மாலை நேரங்களில் ஒன்று கூடும் இளைஞர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவிகளுடன் சேஷ்டை புரிந்து வருகின்றனர்.

நல்லூர் ஆலயச்சூழலில் குறிப்பாக தென்னிலங்கையில் இருந்து வருகைதரும் வாகனச் சாரதிகள், வியாபாரிகள், சுற்றுலாப் பயணிகள் ஆகியோரே அதிகளவில் கூடி நிற்கும் நிலையில் புரியாத மொழிகளைப் பேசி மாணவிகளுடன் சேஷ்டையில் ஈடுபடுவதாகப் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனால் மாணவிகள் தனியார் கல்வி நிலையங்களுக்கு மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்திச் சென்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான முறைப்பாடு யாழ். பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றதையடுத்து யாழ்ப்பாணப் பொலிஸார் அங்கு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-14)

# நிர்வாக சேவைப் பரீட்சைக்கான வயதெல்லையை இரத்துச் செய்க

## சேவையிலுள்ள பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 7

அரச சேவைகள் பட்டதாரிகளுக்கு நிர்வாக சேவைகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விதிக்கப்பட்டுள்ள 45 வயது என்ற வயதெல்லையை இரத்துச் செய்யுமாறு சேவையி லுள்ள பட்டதாரிகளின் சங்கம் அரசிடம் கோரியுள்ளது.

இந்த வரையறைகளை நீக்குவது போன்றே பட்டதாரிகள் நிர்வாக சேவைகள் பரீட்சைக்குத் தோற்றுவதுடன் தொடர்புடைய யாப்புக்களை மீளாய்வு செய்யும் சட்ட மூலத்துக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெறும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சங்கம் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யு.டி.ஜே. செனவிரத்னவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட வயதெல்லை ஓய்வு பெற்றுச் செல்லும் வயதெல்லையான 57 வயது என்ற அதிகபட்ச வயதெல்லைக்கு உட்பட்டதாக மீளாய்வு செய்யப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ள இந்தச் சங்கம் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவது தொடர்ந்தும் தாமதமானால் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளைத் திரட்டித் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனவும் எச்சரித்துள்ளது. (த-22)

# சட்ட உதவி ஆணைக்குழு 33,000 வழக்குகளுக்கு உதவி

கொழும்பு,ஏப்.7

நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு வரும் 33 ஆயிரம் வழக்குகளுக்குச் சட்ட உதவி ஆணைக்குழுவின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாக பிரதம சட்ட அதிகாரியான திருமதி தமயந்தி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வருமானம் குறைந்த பொது மக்களுக்கு சட்ட உதவிகள் ஆணைக்குழுவினால் இந்தச் சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அப்பாவிகளான சாதாரண பொதுமக்களின் 9 ஆயிரத்து 300 சட்டச் சிக்கல்களை புதிய வழக்குக்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு ஆணைக்குழு உதவியுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த மூன்றாண்டு காலத்துள் நீதிமன்றங்களுக்குச் செல்லா மல் சமரசமாகத் தீர்த்துக் கொள்ளும் 47 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சட்ட ஆலோசனைகள் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் 143 சட்ட உதவி அமர்வுகளை நடத்தி 19 ஆயிரத்து 524 பேருக்கு அறிவூட்டியுள்ளதாகவும் தமயந்தி கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய இந்த ஆண்டில் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு 115 மில்லியன் ரூபாவும், முதலீட்டுச் செலவினங்களுக்கு 28 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. (த-22)

# வெப்ப நோய்த் தாக்கம் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்.குடாநாட்டில் தற்போது நிலவும் கடும் வறட்சி மற்றும் வெப்பமான காலநிலை காரணமாக மக்கள் வெப்ப நோய்களுக்கு இலக்காகி வருகின்றனர். இந்த மாதத்தில் வெப்ப நிலை அதிகரித்துக் காணப்படுவதால் வெப்பநோய்களின் தாக்கமும் உயர்வடைந்து வருகிறது.

காய்ச்சல், தலைவலி, கண்நோய், தொண்டை நோய், தடிமல் மற்றும் அம்மை நோய் என்பவற்றின் தாக்கத்துக்கு மக்கள் இலக்காகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய்த் தாக்கத்துக்கு இலக்காகும் மக்கள் அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனைவிட வெப்பு நோய்களுக்கு இலக்கான பெரும் எண்ணிக்கையான மக்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிலும் தினமும் சிகிச்சை பெற்று வருகின்றனர். கூடுதலான இடங்களில் சிறுவர்கள் அம்மைநோய்த் தாக்கத்துக்கு இலக்காகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கம்பியில் சிக்கியது 'கிரேன்' வாகனம் இயக்கி சாரதி காயங்களுடன் தப்பினார்




மன்னார்,ஏப்.07

மன்னார்-தாழ்வுபாடு பிரதான வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற மின்சார விபத்தில் ஒருவர் காயமடைந்து மன்னார் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்

மன்னார்-தாழ்வுபாடு பிரதான வீதியில் சேமித்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மின் கம்பங்களை 'கிரேன்' பொருத்தப்பட்ட கனரக வாகனத்தில் ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் 'கிரேன்' அருகில் இருந்த மின்சாரக்கம்பியில் முட்டிக்கொண்டது.

இதன் போது குறித்த வாகனத்தில் மின்சாரம் பாய்ந்து பற்றி எரிய ஆரம்பித்தது.

வாகனத்தை இயக்கிக்கொண்டிருந்தவர் மின்தாக்குதலுக்கு இலக்காகி நீண்ட போராட்டத்தின் மத்தியில் வெளியேற்றப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். வாகனத்தின் முக்கிய பாகங்கள் தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளன. குறிப்பாக டயர்கள் உருகி உருக்குலைந்து போய்விட்டன. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-12)

வெளியிடங்களில் இருந்து வருவோர் குறித்து

## முல்லைத்தீவு மக்களிடம் தகவல் திரட்டும் படையினர்

கிளிநொச்சி, ஏப்.7

முல்லைத்தீவு கரையோரப் பிரதேசங்களில் உள்ள மக்களின் வீடுகளுக்கு செல்லும் சீருடையினர் அங்கு குடியிருப்பாளர்களது விவரங்களைப் பதிவு செய்வதுடன் புதிதாக யாரும் வந்து சென்றால் தமக்கு அறிவிக்க வேண்டும் எனப் பணித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கையில்:-

தமது வீடுகளுக்கு வரும் படையினர் புதிதாக வருபவர்களின் பெயர் விவரங்களைத் திரட்டும் அதே வேளை வெளியிடங்களில் இருந்து யாராவது வரும் போது அவர்கள் பற்றிய தகவல்களை உடனடியாக தமக்கு வழங்க வேண்டும் என்று பணித்துள்ளனர்.

எதற்காகப் பதிவு செய்கிறீர்கள் என மக்கள் கேட்டதற்கு, குறிப்பாக வெளி நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளாக வரும் சிலர் மறைமுகமாக மக்களைச் சந்தித்து தகவல்களைத் திரட்டி வருவதாகவும் அவ்வாறான சம்பவங்களைத் தடுக்கும் நோக்கிலேயே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர் எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ-6)

# வெளியாரின் அத்துமீறலால் முல்லை மீனவர்கள் பாதிப்பு

**புதன்கிழமை திருகோணமலையை சேர்ந்த மீனவர்கள் அத்துமீறி தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.**

முல்லைத்தீவு,ஏப். 7

முல்லைத்தீவு கடற்பரப்பில் வெளிமாவட்ட மீனவர்களின் ஆக்கிரமிப்புத் தொடர்வதால் தாம் தொழில் செய்ய முடியாதுள்ளதாக முல்லைத்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வலைஞர் மடம் கடற்பகுதியில் தொடர்ச்சியாக திருகோணமலையைச் சேர்ந்த மீனவர்கள் அத்துமீறித் தொழிலில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் செல்வபுரம் மீனவர் சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கையில்:

வலைஞர்மடம் கடற்பகுதியில் கடந்த புதன் கிழமை திருகோணமலையைச் சேர்ந்த மீனவர்கள் அத்துமீறித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை அவர்கள் கடுமையாக மிரட்டியுள்ளனர். 'டைனமற்' வெடி பொருளைக் காட்டி விலகிச் செல்லுமாறும் எச்சரித்துள்ளனர்.

இவை தவிர சட்டவிரோதமான மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி அவர்கள் தொழிலில் ஈடுபடுவதுடன் தமது பகுதி மீனவர்களது தொழில் உபகரணங்களையும் சேதப்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி எமது மாவட்ட மீனவர்கள் எமது பிரதேசத்தில் சுதந்திரமாக மீன் பிடிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என மீனவர் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (ஐ-13)

வவுனியா பிரதேச செயலகத்தில்

## கலை இலக்கிய போட்டிகளுக்கு ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி, ஏப். 7

தேசிய கலை இலக்கிய விழாவை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலான இலக்கியப் போட்டிக்கான ஆக்கங்களை வவுனியா பிரதேச செயலகம் கோரியுள்ளது.

இந்தப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் திறந்த போட்டியாளர்களுக்குமாக நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகள் கீழ் பிரிவில் 6-10 வயதினருக்கான கவிதைப் போட்டி, கையெழுத்துப் போட்டியும், கனிஸ்ட பிரிவில் 11-15 வயதினருக்கான கவிதை, கையெழுத்துப் போட்டியும், சிரேஷ்ட பிரிவில் 16-19 வயதினருக்கான கவிதை, கட்டுரைப்போட்டி, பாடல், நயத்தல் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

திறந்த பிரிவின் 19 வயதுக்கு மேற்பட்டோருக்கு பாடல் ஆக்கம், நாட்டார் கலை, இலக்கிய விவரணம், சிறுகதை, கவிதை, சிறுவர் கதை ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளது. ஒவ்வொரு பிரிவுகளிலும் வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்குப் பரிசில்களும், ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக வவுனியா பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் கையளிக்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-402)

## வங்கிக் கிளை இன்று திறப்பு

வவுனியா, ஏப்.7

இலங்கை வங்கியின் வவுனியாக் கிளை புனரமைப்பு செய்யப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் எச்.எம்.முதியன்சே பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு கிளையைத் திறந்து வைக்கிறார்.

கௌரவ விருந்தினர்களாக வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி எஸ்.மேகநாதன், வவுனியா பொது வைத்திய சாலை அத்தியட்சகர் ரி.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-402)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள

## குளங்களைப் பராமரிப்பதற்கு அதிகாரிகள் முன்வரவேண்டும்

அக்கராயன், ஏப்.7

கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைக்கப்படும் குளங்களைப் பாதுகாக்க, பராமரிக்கும் நடவடிக்கைகளை நீர்ப்பாசனத் திணைக்களம் எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் குளத்தின் வான்பகுதி மற்றும் வாய்க்கால்களில் கனரக வாகனங்களை கழுவுவதன் காரணமாக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கட்டுக்கள் உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இல்லாதுவிடின் முன்னர் போன்று கட்டுக்கள் இடிபாடடைந்து அடுத்த மாரி காலத்தில் வெள்ள அபாயம் ஏற்படும் நிலையே உருவாகும் என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் கீழ் உள்ள முதன்மை வாய்க்காலுக்கு முள்வேலி அமைக்கப்படுவதைப் போன்று ஏனைய நீர்ப்பாசனக் குளங்களுக்கும் அமைத்துப் பாதுகாக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (ஐ-18)




கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள உதிரவேங்கை வைரவர் ஆலயத்துக்கான காணியை அடாத்தாகப் பிடித்துள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று அங்கு அவசரஅவசரமாக மதில் கட்டுவதற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளது. (ஐ-426)

# 28 வீதமானவர்களுக்கே கிளிநொச்சி மாவட்டத்தில் மின்சாரம்

கிளிநொச்சி, ஏப்.7

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 28 வீதமானவர்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் நகரை அண்மித்த சிலபகுதிகளில் இன்று வரை மின்சாரம் வழங்கவென எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதேபோன்று கண்டாவளை, வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம், அக்கராயன், திருவையாறு ஆகிய பகுதிகளில் மின் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடக்கின் வசந்தம் எனப் பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அவற்றிலும் அரசியல் புகுத்தப்பட்டுப் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

புளியம்பொக்கணைக்கு சுமார் 40 வருடங்களுக்குப் பின்னர் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் மிகவும் பழைமை வாய்ந்த கிராமங்களில் ஒன்றாகவும் புளியம் பொக்கணை நாக தம்பிரான் ஆலய வீதியில் உள்ளதுமான தம்பிராசபுரம் கிராமத்திலுள்ள அ.த.க.பாடசாலைக்கு இது வரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இந்தப் பாடசாலைக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் இங்குள்ள பத்துக்கும் மேற்பட்ட கணினிகள் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளன.

இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் பாரபட்சமான விதத்தில் மின்சாரம் வழங்கப்பட்டு வருவது தொடர்பாகப் பலரும் பல்வேறு வகையில் விசனம் வெளியிட்டுள்ளனர். (சு-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டில் வைப்பிலிடுபவர்களுக்கு பரிசில்கள்

தேசிய சேமிப்பு வங்கியினால் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று பணம் வைப்புச் செய்ப வர்களுக்கு பரிசுப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை புதுவருட கொடுக்கல் வாங்கல் மற்றும் கைவிசேடத்துக்காக வங்கி திறந்திருக்குமெனவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

புத்தாண்டு தினத்தன்று 25 ஆயிரம் ரூபாவும் அதற்கு மேற்பட்ட தொகையினை அவுறுது வாசனா கணக்கில் வைப்பிலிடுவோருக்கு சில்வர் கரண்டித் தொகுதியும் 10 ஆயிரம் ரூபாவுக்கும் அதற்கு மேற்பட்ட தொகையினை அவுறுது வாசனா கணக்கில் வைப்பிலிடுவோருக்கு மீள்நிரப்பு கை மின் விளக்கும் பரிசாக வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

**கடை வாடகைக்கு**

ஈச்சமோட்டை வீதியில் அமைந்த கடைத் தொகுதியில் உள்ள குளிர்பானக்கடை முழு உபகரணங்களுடன் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 720 9686
(35758)(5-6-7)

**ஹைஏஸ் வான் வாடகைக்கு உண்டு**

உள்ளூர், வெளியூர் சேவைக்கு.
தொடர்பு: 077 373 4109
(35749)(6.7.11)

**தவறிவிட்டது**

NPXU-6256இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும்.
தொடர்பு: 077 817 7020/ 021 222 2582
(35760)(5-6-7)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

O/L,A/L,B.A மாணவர்களுக்கான ஆங்கில இலக்கணம்,வினா விடை வகுப்புக்கள்
By: ந.விக்னேஸ்வரன் ஆசிரி (Dip in English)
424 K.K.S.வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை,
தொடர்பு: 077 675 1649
(35761)(5-6-7)

## கொடிகாமத்தில் திடீர் பாய்ச்சல் சிக்கின காலாவதியான பொருள்கள்

தென்மராட்சி, ஏப்.7

கொடிகாமம் நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனைகளை நடத்தி திகதி காலாவதியான பொருள்களை கைப்பற்றியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொடிகாமம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜெ.றொனால்ட் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் கொடிகாமம் நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது பரிசோதனைகளை நடத்தினர்.

பரிசோதனையின்போது எட்டு வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த திகதி காலாவதியான சொக் லேட் வகைகள், குளிர்பானங்கள், பிஸ்கட் வகைகள் போன்றவற்றை கைப்பற் றி னர்.

இந்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# மரண அறிவித்தல்

## திருமதி வி. தங்கரத்தினம்



கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வி. தங்கரத்தினம் நேற்று (06.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வினாசித் தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா தம்பதியரின் மகளும், சிவபாக்கியம், கதிரவேலு, சதாசிவம் ஆகியோரின் சகோதரியும், அதிஷ்ரலட்சுமி அம்மா, ஆண்டியப்பு (ஓய்வுபெற்ற, கல்வித் திணைக்கள தலைமை பொறியியலாளர்), தருமராசா (பிரான்ஸ்), சிறீஸ்கந்தராசா, புஸ்பராசா (சுவிஸ்), புஸ்பராணி (தாதிய பரிபாலகி ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயும், கணேசன், ராதாமணி, பூலோகசுந்தரி, ஜெயந்தி, விஜயா, கருணாகரன் (ஓய்வு பெற்ற மருந்துக்கலவையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமியும், லோகதாஸ் (கனடா), மோகனதாஸ், கிருபா (கனடா), கார்த்திகேயன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்), சோபா (பிரான்ஸ்), சுயி (நோர்வே), ஜனந்தினி, வினோத் (சுவிஸ்), விநோதினி (சுவிஸ்), புவிதரன் (சுவிஸ்), கிருஷ் யாயினி, ரூபினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10 மணியளவில் சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

நா.மு தெரு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/8235)(10.6.7)

## தேர்த் திருவிழா

வட்டுக்கோட்டை, ஏப்.7

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்1 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை திங்கட் கிழமை மாலை 5 மணிக்கு ஆலய பித்தர் கேணியில் அம்மன் நீராடுவார். மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (ந)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.7

வளலாய் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை அடுத்து பதினொரு தினங்கள் மண்டலாபிஷேகமும் இறுதி நாள் சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன. (ந-11)

★ ★

யாழ்ப்பாணம், ஏப்.7

அராலி தெற்கு மாவத்தை நாச்சிமார் அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரு தினங்கள் மண்டலாபிஷேகமும் இறுதி நாள் சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (ந)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 * 10 * 1954

மறைவு
19 * 03 * 2012

## திருமதி தேவநாயகி மதியாபரணம்

[முன்னாள் ஆசிரியை] திதி: அபரபட்ச துவாதசி

**ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவலைகள்**
**எம் மனதை விட்டகலாது அன்புத் தெய்வமே!**
**ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்**
**எங்கள் நெஞ்சில் என்றும் நீங்கள் வாழ்வீர்கள்**
**அன்புத் தெய்வமே அம்மா**

உங்கள் ஆத்மா ஆண்டவனின் பாதமடைய இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

உங்கள் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

(35759)(5.6.7)

# மரண அறிவித்தல்

## சடையர் மருதப்பு (சின்னத்துரை ஆசாரி)



2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சடையர் மருதப்பு (05.04.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.04. 2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெடுந்தீவு மேற்கு வெல்ல மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

(2.6.7)(35737)

**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் அதிரடி விலைச்சலுகை**

**System 1**
intel Core i3
Mother Board H61M DGS
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer LITE ON
Casing POWER LOGIC
Monitor HP 19" LED
Key Board
Mouse
UPS Power 111
61,200/=

**System 2**
Dual Core 2nd G
Mother Board H61M DGS
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer LITE ON
Casing POWER LOGIC
Monitor HP 19" LED
Key Board
Mouse
UPS Power 111
52,200/=

FREE
Speaker
Card Reader
4 GB Flash
Web Camera

TOSHIBA 4 GB - 750/-
SONY 8 GB - 1100/-
KINGSTON 8 GB - 1000/-
Kaspersky 1 User 1550/-
Kaspersky 3 User 3000/-
USB Mouse 310/-
Speaker 450/-
Web camera 750/-
Card Reader Multi 750/-
HP Monitor 19" 12,500/-

இச்சலுகை 16.04.2013 வரை மட்டும்

**Laptop HP 1000**
2nd G intel Core i3 2348 M
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer Optical
14.1" LED HD Bright Display
W LAN & BT
67,500/=

**Laptop HP 2000**
2nd G intel Core i3 2328M
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer Optical
15.6" LED HD Bright Display
W LAN & BT
68,500/=

FREE
Head Phone
Mouse
Laptop Cooler

**Laptop ASUS X55A**
Dual Core 2nd G
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer Optical
15.6" LED HD Display
W LAN & BT
59,500/=

(2.6)(சி/8236)

**Computer Corner** K.K.S Road, Mallakam, Jaffna 021 205 9044

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வு, நாகராசா வீதியில் அமைதியான சூழலில் 2¼ பரப்புக்காணியில் அமைந்த நன்னீர் கிணற்றுடன் கூடிய ஓட்டு வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 720 9686
(35757)(5-6-7)

**விற்பனைக்கு**

கொக்குவில் பகுதியில் யமுனா பாரி ஆட்டுக் கடாக்கள் விற்பனைக்கு.
தொடர்பு: 075 650 7481
(35748)(6.7.11)

**நாஹா மருத்துவ நிலையம்**

* வேகமான இரத்தக் கட்டி தரும் - தீவிர பாரிசவாதம், தீராத புண்கள், அல்சர், மனநோய், ஆஸ்மா, நீரிழிவு
* குழந்தையின்மைக்கான அற்புத சிகிச்சை.

தினமும் 8.00 am - 12.30 pm
T.P: 077 321 2740
வங்கி முன்லேன், சந்நாவத்தை வைரவர் கோவிலடி (ஜெகபதி வீடு),மானிப்பாய்.
(35750)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் உயர் கல்வி கற்பதற்கான சகல விதமான ஏற்பாடுகளும் செய்து தருவதோடு, பகுதி நேர வேலை வாய்ப்புக்களும் (15,000 - 200,000) குறையாத ஊதியத்துடன் ஏற்பாடு செய்து தரப்படும். QS, Civil Engineering, Electrical Engineering மற்றும் கட்டடத்துறை சார்ந்த உயர் கற்கை நெறிகளும் வேலை வாய்ப்புகளும் ஏற்பாடு செய்து தரப்படும். WP Pass, S Pass, E Pass என்பவை பெற்றுத் தரப்படும்.

(ஏ/8111)(5-6-7) தொடர்பு: 0772 521070/ 0775 192517

## Dutch (Netherlands), German, French, English

மொழிகளை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடத்தப்படும் விசாவுக்கான பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடையவும் அந்தந்த நாடுகளிலிருந்து வருகை தந்த ஆசிரியர்களினால் Audio, Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகின்றது.

Netherland தூதரகத்தினால் April லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள M.V.V விசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைய புதிய வகுப்புகள் APRIL 15 ஆரம்பிக்கப்பட்டவுள்ளன. ஏற்கனவே Netherland தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும், கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விசேட வகுப்புகளும் மாதிரி பரீட்சைகளும் தமிழில் உண்டு.

மாணவர்கள் கவனத்திற்கு:- இலங்கையில் போலியான ஆசிரியர்கள் இருப்பதாக எமக்கும், Netherland தூதரகத்திற்கும் தகவல் கிடைத்துள்ளது எனவே உங்களுடைய ஆசிரியரை தெரிவு செய்ய முன் வெளிநாட்டிலிருந்து உங்களை Sponsor செய்பவர் மூலம் நீங்கள் தெரிவு செய்யும் ஆசிரியருடன் அந்தந்த நாட்டு மொழியில் கதைத்து அவர் உத்தரவாதம் மிக்கவரா? என்பதை உறுதிப்படுத்தியபின்பு உங்கள் கற்கை நெறியை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் உங்கள் பணத்தையும் நேரத்தையும் சேமிக்க கூடியதாக இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும்!

Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை பெற்ற ஒரே International Language Academy

"Dutch Lanka Academy" # 69- 2/1, Galle Road, Dehiwala. Tel #: 0777 251 332 / 011 271 8811

வெளிமாவட்டத்தில் இருந்து வரும் மாணவர்களுக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.* * Condition Apply

## மரண அறிவித்தல்

### சிவசாமி தர்மலிங்கம்

(மணிக்குரல் வைசின் தர்மலிங்கம்)
(மணிக்குரல் விளம்பரசேவையின் ஸ்தாபகரும், இ.போ.ச முன்னைநாள் ரிக்கற் பரிசோதகர், செக்கிங் இன்ஸ்பெக்ரர்)



இல.19, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி தர்மலிங்கம் 05.04.2013 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/8, டேவிட் ஆவனியு லேன்,
(கச்சேரி நல்லூர் வீதி,)
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மணிக்குரல் V.S.சற்குணன்.
(35763)(5.6.7) 021 222 7535/ 077 715 8476

## காணி விற்பனைக்கு

சுண்டுக்குளி மகளிர் பாடசாலையில் இருந்து கொழும்புத்துறை வீதிப் பக்கமாக 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(ஏ/8113)(5-6-7) தொடர்பு - 0750 736183

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு பின்னால் தென்ஸ்மன் லேனில் முதலாவது ஒழுங்கையில் தண்ணீர்க்கிணற்றுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(ஏ/8118)(5-6-7) தொடர்பு: 077 756 3525

## கடை, வீடு வாடகைக்கு

நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில், பெருமாள் கோயிலுக்கு அருகில் கடையுடன் சேர்ந்த வீடு வாடகைக்கு உண்டு. கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் கம்பனிகளுக்கு உகந்தது.

தொடர்பு: 075 0496 867 (35762)(45.6.7)

## பணியாள் தேவை

நிறுவனத் தலைவர் ஒருவரின் கண்டியிலுள்ள பங்களாவிற்குச் சிறந்த அனுபவமுடைய செகண்ட் சேர்வன்ட்/ஹவுஸ் போய் ஒருவர் தேவை. வீட்டுப் பராமரிப்பு தொடர்பான வேலைகளில் சிறந்து விளங்குபவராகக் காணப்படல் வேண்டும். பொருத்தமானவருக்கு கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட வசதி மற்றும் மேலதிகச் சலுகைகளும் வழங்கப்படும். உங்கள் சான்றிதழ்களுடன் விண்ணப்பியுங்கள்:

விளம்பரதாரர் - இல.19, டிக்கல் வீதி, கொழும்பு-08. (ஸ்/8112)(6.7)

## விற்பனைப் பிரதிநிதி-தேவை

"Puremax" Detergent தயாரிப்புக்களை உற்பத்தி செய்து சந்தைப் படுத்தும் Soft Vision Marketing நிறுவனத்திற்கு தகுந்த விற்பனைப் பிரதிநிதி யாழ்ப்பாணத்திற்குத் தேவை. அடிப்படைச் சம்பளம் 15,000/=+ கொமிஷன் வழங்கப்படும்.

தொடர்பு: 077 724 2083 (35322)(6.7.11)

## விற்பனைக்கு

10 K.V, 3 பேஸ் லிற்றர் பெற்றர் England ஜெனரேற்றர், 250 லிற்றர் எயர் கொம்பிறஷர் 02 (3 பேஸ்), விற்பனைக்குண்டு.

S.N.T சேவிஸ் ஸ்ரேசன்,
யாழ் வீதி, மானிப்பாய்.
(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்) (C/8238)(7.11)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணர்

(தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை)



மணியகாரன் வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இணுவில் - மானிப்பாய் வீதி, பாலாவோடை, மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணர் (05.04.20 13) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் பாலகிருஷ்ணரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொ.சின்னையா -சி.நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் ந.இந்திராணி (ஓய்வு நிலை பிரதம லிகிதர், நல்லூர் பிரதேச செயலகம்), காலஞ்சென்ற ப.நிர்மலராணி மற்றும் பா.இராஜசேகரன் (ஓய்வு நிலை கணித ஆசிரிய ஆலோசகர், யாழ். வலயம்), சந்திரசேகரன் (அதிபர், யா/தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை), கௌ.ரஞ்சிதராணி, பா.ஞானசேகரன், பா.சிவபாலசேகரன் (ஓய்வுநிலை நில அளவையாளர்), சி.விஜயராணி (ஆசிரியை, யா/குடத்தனை கரையூர் றோ.க.த. பாடசாலை), கெ.தேவிகாராணி (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச சபை, நல்லூர்), பா.உதயசேகரன், பா.சர்மிளா (ஆசிரியை, யா/யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயும் இ.நடராஜசுந்தரம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), சு.பஞ்சரத்தினம் (ஓய்வு நிலை, நிதி உதவியாளர்), இ.வடிவாம்பிகை, ச.ஜெயந்தி, ச.கௌரிசங்கர் (நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு), ஞா.ரஞ்சிதா, சி.உமாரதி (அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர், பிரதேச செயலகம், கரவெட்டி), தி.சிவகடாட்சம் (முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி), க.கெங்காதரன் ஆகியோரின் அன்பு மாமியும் ந.வாணி, (இலங்கை வங்கி, 2 ஆம் கிளை, யாழ்ப் பாணம்) ப.வித்யா, கௌ.சத்யன், ந.சங்கீதா, இ.ஜுதுசன், ச.நிதர்சன், ச.பிரதீபன், ஞா.திவ்யகஜன், சி.சிவனிகா, சி.நிரோஷிகா, ஞா.ரம்யகஜன், சி.நிரேஸ், ஞா.பிரவீனகஜன், ச.சனுசா, ச.சானுகா, கெ.சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சு.பாக்கியம், கி.தங்கரத்தினம், சி.பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில், மானிப்பாய் வீதி,
பாலாவோடை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
0770712178 (35764)(6.7.11)


Sales
# தமிழ், சிங்கள
## புது வருடத்தை முன்னிட்டு
JAFFNA ELECTRICAL (SHOW ROOM)

LG No 1 Dealer in SriLanka நிறுவனத்தின்

விசேட விலைக்கழிவுகள் அனைத்துப் பொருள்களுக்கும்




| | Normal Price | Now Special Price |
|---|---|---|
| 189 LITERS | ~~59900/=~~ | 49900/= |
| 239 LITERS | ~~69900/=~~ | 59900/= |
| 379 LITERS | ~~79900/=~~ | 69900/= |
| 700 LITERS | ~~99900/=~~ | 89900/= |

GL-M252 UMEI (Door Cooling)

West Point Deep Freezer
05 years warrantee country of origen France

LG JAFFNA ELECTRICAL (Show Room)

141, Power House Road, Jaffna. T.P: 021 222 8378, 5766.
No 135, A-9 Road, Kilinochchi. T.P: 021 228 0008
Authorized Dealer Abans



# IELTS
BRITISH COUNCIL

We are "British Council IELTS Registration Center"



* Strategies and techniques are taught to gain a higher score
* All 4 skills are paid equal attention
* Special attention to weak students
* 60 hours of learning in 8 weeks
* Affordable charges

* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

IELTS பரீட்சைகள் 16.05.2013 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

Registrations now in progress
வகுப்புக்கள் ஆரம்பம் : 08.04.2013

| Weekdays | Course duration | Course fee |
|---|---|---|
| Mou - Tues - | 8.30 - 10.30 am. | 60 hours |
| Wed - Thurs | 4.30 - 6.30 pm. | Rs.15,000/= |

For registration and further details contact
# CITY COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 2220384 / 077 8803887 (33756)(6.7)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# லபார்ஜ் மைக்ரோசொப்ட், சர்வோதய இணைந்து தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையம்

இலங்கையிலுள்ள முதன்மையான இரண்டு சர்வதேச நிறுவனங்களான லபார்ஜ் மஹாவலி சிமெந்து நிறுவனமும் மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்காவும் இலங்கையின் மிகப் பெரிய சமூகசேவை நிறுவனமான சர்வோதயவுடன் இணைந்து ஜா-எல துடெல்ல பகுதியில் அண்மையில் தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையமொன்றை ஆரம்பித்துள்ளன.

லபார்ஜ் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதானி சுசந்த பெரேரா, லபார்ஜ் நிறுவனத்தின் விற்பனை தொடர்பாடல் நிறைவேற்று அதிகாரி ட்ரேஸி ஹெனிபல்ஸ், சர்வோதய பியூஷன் முகாமையாளர் இசுறு சில்வா ஆகியோர் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டனரர்.

இதன்போது கருத்து தெரிவித்த சர்வோதய பியூஷன் முகாமையாளர் இசுறு சில்வா, இலங்கையின் எழுத்தறிவு 95 வீதமானபோதிலும் , தகவல் தொழில்நுட்ப அறிவு 20வீதமாகவே உள்ளது. இலங்கையில் தகவல் தொழில்நுட்ப அறிவு வீதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம். நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக அக்கறை செலுத்தும்போது அது முக்கியமாகும். இந்த தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையத்தை அமைக்க வேண்டும் என்பது லபார்ஜ் மஹாவலி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அனுராக் கேக்கின் ஆலோசனையாகும். இதன்மூலம் வருடந்தோறும் 80 மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.

துடெல்ல பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மத்திய நிலையத்தை நடத்திச் செல்வதற்கான நிதி உதவிகளை லபார்ஜ் மஹாவலி சிமெந்து நிறுவனம் ஏற்றுள்ளதுடன் தகவல் தொழில்நுட்ப உதவிகளை மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்கா நிறுவனம் வழங்கியுள்ளது. இதன் கண்காணிப்பு பணிகள் சர்வோதய பியூஷன் நிறுவனத்தின் கண்காணிப்பின் கீழ் இடம் பெறுகின்றது.

இதன்மூலம் குறித்த பகுதியில் வசிக்கும் இளைஞர், யுவதிகளின் தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வோதய பியூஷனின் டனேஷ் மதுரங்க எரித்திரிய மாணவியொருவருக்கு பயிற்சிகளை வழங்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படம்.

# BCAS வழங்கும் Biomedical Science

**கற்கை நெறி மூலம் சிறந்த தொழில் வாய்ப்பு**

இலங்கையில் இன்று **BTAC–HND** பாடநெறிகளை வழங்குவதில் நீண்ட கால அனுபவமும் பிரசித்தியும் பெற்றதாக BCAS கல்வி நிறுவனம் திகழ்கின்றது. **BCAS** கல்வி நிறுவனத்தில் உயர் கல்வித் தகைமை, திறமை மற்றும் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள் கடமையாற்றுகின்றமை, BCAS கல்வி நிறுவனம் கல்விப் போதனைக்குரிய அனைத்து வசதிகளையும் கொண்டு திகழ்கின்றமை ஆகியவைகளே இதற்குப் பிரதான காரணங்களாகும் என்று **BCAS** கல்வி நிறுவனத்தின் வர்த்தக அபிவிருத்தி முகாமையாளரான மும்மத் இஸ்திகார் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

**HND in Biomedical Science** 18 மாத கால பாடநெறியாகும். இப் பாடநெறியை பூர்த்தி செய்தவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் (UK) எந்த ஒரு பல்கலைக் கழகத்தில் மருத்துவம் விஞ்ஞானத்துறை சார்ந்த உயர்மட்ட நெறிகளில் இலகுவாக பிரகாசிக்க முடிவதுடன் குறித்த Biomedical Science கல்விநெறியை அந்த பல்கலைக்கழகங்களில் பூர்த்தி செய்து ஐக்கிய இராச்சியத்திலேயே பதிவு செய்யப்பட்ட உயிரியல் விஞ்ஞான பட்டத்தையும் மருத்துவத் துறையில் உயர் பதவிகளையும் பெற முடியும் என்றார்.

இஸ்திகார் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;

**BTEC–HND** பரீட்சைகளில் **Biomedical Science** (உயிரியல் மருத்துவ விஞ்ஞானம்) பாடநெறியை மாணவர்கள் கூடுதலாகத் தெரிந்தெடுப்பதற்கு மிகச் சிறப்பான காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கிய காரணிகள் **Biomedical Science** பாடநெறிகள் பெரும்பாலும் அனைத்து மருத்துவ விஞ்ஞான பாட விதானங்களைச் சார்ந்ததாக இருப்பதும் அவ்வாறே மருத்துவத்துறை சார்ந்த அனைத்து தொழில் முறைகளிலும் வேலை வாய்ப்புகளைப் பெற பயன் படக்கூடிய கல்வித்தகமையாக விளங்குவதுமாகும்.

பொதுவாக சிறப்பான எதிர்காலத்துக்கான கல்வி நெறிகளை மாணவர்கள் தெரிந்தெடுக்கும் போதும் அவர்களுக்காகப் பெற்றோர்கள் தெரிந்தெடுக்கும் போதும் அவர்களின் பிரதான எதிர்பார்ப்பு தாம் தெரிந்தெடுக்கும் கல்வித்தகமையானது தொடர்ந்தும் உயர் கல்வியைப் பெறுவதற்கோ அல்லது குறித்த கல்வித்தகமையுடன் தமது வாழ்கைக்கான சிறந்த தொழில் வாய்ப்பை பெறுவதற்கோ பயனுள்ளதாக அமைய வேண்டும் என்பதே.

இந்த வகையில் **BTEC–HND in Biomedical Science** உயிரியல் மருத்துவ விஞ்ஞானம் உயர் கல்வி பெறுதல், உயர் தொழில் வாய்ப்பை பெறுதல் ஆகிய பிரதான இரண்டு எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் பரந்துபட்ட சிறப்பான பாடநெறியாகும். அவ்வாறே குறித்த பாட நெறியைப் பயில்வதற்கான சிறந்த கல்வி நிறுவனத்தைத் தெரிந்தெடுப்பதும் முக்கிய அவதானம் செலுத்த வேண்டிய விடயமாகும்.

மருத்துவ விஞ்ஞானத்துறை சார்ந்த. வேலை வாய்ப்புகள் தற்போது ஐக்கிய் இராச்சியத்தில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் மேற்கு நாடுகளிலும் அவ்வாறே ஏனைய முன்னணி நாடுகளிலும் ஏராளமாக உள்ளன. எனவே பிரிட்டன் மற்றும் மேற்கு நாடுகளில் மருத்துவத்துறையில் உயர் பதவிகளைப் பெற்று சிறப்பாக வாழும் எதிர்காலத்தை நாடும் எவரும் அதற்கு சிறந்த தகமையான **HND Biomedical Science** கல்விநெறியும் ஏனைய **UK** பல்கலைக்கழக உயர் கல்வி வாய்பை வழங்கும் **HND** கல்விநெறிகளினையும் முன்னணி கல்வி ஸ்தாபனமாகிய **BCAS** கல்வி நிறுவனத்தில் பெற முடியும்.

இப்பொழுது **HND in Biomedical Science** பாடநெறியை யாழ்ப்பாணத்திலேயே நீங்கள் தொடர முடியும். எனவே நீங்களும் இப்பாட நெறியில் இணைய விரும்பினால் 16, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள **BCAS JAFFNA CAMPUS** இல் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது 021 221 991 0, 0777 102 131 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

# தகவல் தொழில்நுட்ப சந்தையில் எச் வன் நிறுவனத்தின் புரட்சி

ஹைட்ராமனி குழுமத்துக்கு சொந்தமான எச் வன் நிறுவனம் மைக்ரோசொப்ட் ஒபஸ்365 பெக்கேஜ்ஜின் புதிய பதிப்பை வெளியிட்டுள்ளது. அத்துடன் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் புதிய உற்பத்தியான ஒபஸ் 2013 இலங்கைக்கு முதலில் அறிமுகப்படுத்தியுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பங்குதாரரான எச் வன் நிறுவனம் செயற்படுத்துவதில் நாட்டில் முன்னிலை நிறுவனமாக தற்போது விளங்கு கின்றது. ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், ஹேலீஸ், பிரவுன் மற்றும் கெப்பிட்டல் மகாராஜா போன்ற மாபெரும் வர்த்தக நிறுவனங்களுக்கு தமது சேவையை எச் வன் நிறுவனம் ஏற்கனவே வழங்கியுள்ளது.

தொழில்நுட்பத்தை கொண்டு புதிய ஒபஸ்2013 கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை அதன் சிறப்பம்சமாகும். உலகம் முழுவதும் தற்போது வர்த்தக நிறுவனங்கள் க்ளைவுட் தொழில்நுட்பத்தை கொண்டு செயற்படும் பின்னணியைக் காணலாம்.

2013 அமைந்துள்ள அனைத்து சிறப்பம்சங்களும் ஒபஸ்365 இற்கு புதிய பெறுமதியை கொடுத்துள்ளது. இதன்மூலம் வர்த்தக நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்ப பின்னணியில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என எச் வன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சமத் பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஒபஸ்365 பெரிய நிறுவனங்களுக்கு மாத்திரமல்ல சிறிய நிறுவனங்களுக்கும் சிறந்தது. எமது குழுவினரின் அர்ப்பணிப்பு, குழு என்ற உணர்வு ஆகியனவும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பிலும் அவர்கள் எடுத்துக் கொள்ளும் அக்கறையே எமது வெற்றிக்கு பிரதான காரணங்களாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்

ஜோன் கீல்ஸ் நிறுவனத்தில் ஒபஸ்365 செயற்படுத்தும்போது அது மிகவும் பெரிய நடவடிக்கையாக இருந்தது. அந்நிறுவனம் பெரிய நிறுவனம் என்பதுடன் அதில் அநேக ஊழியர்கள் பணியாற்றுகின்றமை அதற்கான காரணமாகும். அந்நிறுவனத்தின் தகவல் தொடர்பாடல் பிரிவினருடன் எமது குழுவினர் இணைந்து மிகவும் ஒத்துழைப்புடன் நீண்ட நாள்களாக பணிபுரிந்தனர். இதனால் ஒபஸ்365 தமது சேவையை விஸ்தரித்துக் கொள்ளும்போது அந்நிறுவனத்தின் நாளாந்த கடமைகளுக்கு எவ்விதமான இடையுறும் ஏற்படவில்லை என்றார்

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பிரதம உப தலைவர் மற்றும் பிரதான தொடர்பாடல் அதிகாரி ரமேஷ் சண்முகநாதன், இதனை ஸ்தாபிக்கும்போது எச் வன் நிறுவனம் செயற்பட்ட விதம் பாராட்டத்தக்கது. பாரிய ஊழியர்களை தமது முன்னைய மின்னஞ்சல் முகவரியிலிருந்து புதிய மின்னஞ்சல் முகவரிக்கு கொண்டுவருவது இலகுவான காரியமல்ல. எச் வன் நிறுவனம் அதனை சிறப்பாக முகாமைத்துவம் செய்தது என கூறினார்.

# கண்படல சத்திர சிகிச்சைகளுக்கு ஒத்துழைக்கும் 'சன் ஷைன்ஸ்'

சன்ஷைன்ஸ் குழுமத்தின் கிளை. நிறுவனமான சுவிஸ் பயோஜனிக்ஸ் லிமிட்டட் அரசாங்க வைத்தியசாலைகளில் 250 கண்படல அறுவை சிகிச்சைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக் கில் பார்வை திறன் அதிகரிக்கும் லென்ஸ்களை யும் அத்தியாவசிய பொருள்களையும் அன்பளிப்பு செய்துள்ளது.

எதிர்காலத்தில் இலவச கண்படல அறுவை சிகிச் சைகளுக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கும் நிறுவனத்தின் யோசனைத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே சுகாதார அமைச்சினூடாக இந்த அன்பளிப்பு சுகாதார அமைச்சில் அண்மையில் கையளிக்கப்பட்டன. இலங்கை சுகாதாரத்துறையில் கடந்த 45 ஆண்டுகளாக நிறுவனம் மருத் துவ பொருள்களை அர்ப்பணிப்புடன் விநியோ கித்து வருகின்றதுடன் சந்தையில் சிறப்பானதொரு இடத்தையும் தன்வசப்படுத்தியுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ப.ஜி.மஹிபாலவிடம் சத்திரசிகிச்லசக்கு அத்தியாவசியமான லென்ஸ்கள் மற்றும் பொருள்களை கையளித்தன் நோக்கம் விஷன் 2020 கண்புரை ஒழிப்புத்திட்டத்திற்கு அமையவேயா கும். அத்துடன் இவ்வாறு கையளிக்கப்பட்ட முதலாவது தொகுதி பொருள்கள் டாக்டர்சாயா சமரசிங்கவினால், ஹட்டன் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் மேற் கொள்ளப்பட்ட கண்படல சத்திரசிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. அத்துடன் ஏனைய தொகுதிகளுக்கு தேவையான லென்ஸ்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு எதிர் காலத்தில் அனுப்பி வைக்கவும் நிறுவனம் எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



டாக்டர் அஹமட் ஜெஷா (விஷன் 2020 செயலகம்), சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர். ப.ஜி. மஹிபால, எஸ்.பி.எல். நிறுவன பணிப்பாளர் எஸ்.நடராஜா, எஸ். ப. எல் நிறுவன தொடர்பாடல் முகாமையாளர் டி.வத்சலா, டாக்டர்.அசேல அபேதீர (விஷன் 2020 செயலகம்) ஆகியோர் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமக்கள் தேவை

யாழ்ந்த கௌரவ நடுர்வம் 1974 கார்த்திகை 8இல் செவ்வாய் மணமகனுக்கும் 1981 பூராடம் செவ்வாய் இல்லாத மணமகனுக்கும் தகுந்த மணமக்கள் தேவை.

தொடர்பு: 077 0783 832 (35320) (45.6.7)

## கடை வாடகைக்கு

பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு, சந்தியில் பாமசி, ஹோட்டல், புடைவைக் கடை என்பன நடத்தக் கூடிய, பாமசி ஒன்றுக்கு தேவையான தளபாட வசதிகளுடன் கூடிய கடை ஒன்றும், இதன் மேல்மாடியில் எட்டு அறைகளுடன், நான்கு குளியலறை வசதிகளுடன் கூடிய முடியும் தறுவாயில் உள்ள கட்டடமும் வாடகைக்கு உண்டு. தனியார் வைத்தியசாலை, விருந்தினர் விடுதி அலுவலகமாக பயன்படுத்தக் கூடியது. வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்பு: 077 5230 029 (35702) (45.6.7)

## வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி,
யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள புதிய வீடு
(1½ பரப்பு)
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 710 0884 (35709) 5.6.7)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும். பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே! என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமானதாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த 3 நாள்களுக்கு இச்செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும்.

ஓர் அடியாள்.

(35701) (45.6.7)

## வவுனியாவில் கடை வாடகைக்கு உண்டு

58 அடி நீளமும், 11¼அடி அகலமும் கொண்ட கடை (ஆதி விநாயகர் முன்பாக) வாடகைக்கு விடப்படும்.

- ★ தனியார் வகுப்புகள் மற்றும்
- ★ வெளிநாட்டு பயண ஒழுங்குகள் செய்வதற்கு பொருத்தமானது.
- ★ தரகர்கள் தேவையில்லை

முகவரி: இல. 66 1/1, இரண்டாவது மாடி, புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.
தொ.பே. 024 2220 112 (26207) (45.6.7)

## விற்பனைக்கு உண்டு

கறுப்பு நிறமுள்ள பொமனேரியன் (ஆண், பெண்) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0783014280, 021 205 1514
(35692)(6.7) சேர்ச் ஒழுங்கை, அராலி வடக்கு.

## வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம்.

## பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துடன் எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்பு: 077 3033 803

(26209) (6.11)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

2½ வயது நிரம்பிய ஆண் அல்ஷேசன் லயன் செப்பேட், 40 நாள் ஜேர்மன் செப்பேட் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:ம.மார்க்கண்டு,
M.S லேன், கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.T.P: 077 553 8492 (35683)(6.7.11)

## தேவை

காஞ்சிரம் வித்து (எட்டிக்கொட்டை) தொகையாகத் தேவை.
வன்னி, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கும்.

EK & Co
55/1, ஸ்ரீ மகிந்த தர்ம மாவத்தை, கொழும்பு-09.
Tel: 011-2677077

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் அரியாலையில் வீடு வாடகைக்கு உண்டு. அரச தனியார் நிறுவனங்களுக்கும் உகந்தது.

(35691) (6.7) தொடர்பு: 0755440505

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
56 - XXXX இலக்கமுடைய
டொல்பின் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 3001 119 (35649) (45.6.7)

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் கடைக்கு உகந்த குளிர்சாதனப் பெட்டிகளும் ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் இயந்திரமும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 7115 419 (35653) (45.6.7)

## கார் விற்பனைக்கு

NISSAN FB 151 EX-SALOON. (WP JL) DOCTOR OWNED, 2001/2004 NOVEMBER, SUPER WHITE, BEINGE INTERIOR.

T.P. 077 7250 931 (35664) (45.6.7)

## வீடும் காணியும் விற்பனைக்கு

சாவகச்சேரி, சங்கத்தானை ஞானவைரவர் கோயில் ஒழுங்கையில் 3 பரப்புக் காணியுடன் சேர்ந்த 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

T.P: 078 880 3036 (27817)(6.7.11)

## காணி விற்பனைக்கு

- நாவற்குழி, கேரதீவு வீதியில் நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு அருகில் 6 பரப்புக் குடியிருப்புக் காணியும்
- சாவகச்சேரி, கைதடி, நுணாவில் ஆராய்ச்சி தோட்டத்தில்,கிணற்றுடன் 2 ஏக்கர் குடியிருப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 803 0676,
077 592 0911 (27815) (6.7.11)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் பஸ் டிப்போவிற்கு முன்னால் கோகுலம் வீதியில் நான்கு (4) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 2055 784/ 077 5427 099 (35575) (45.6.7)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி, கரந்தன்றோட்டில் இருந்து 100 யார் தூரத்தில் ராமுப்பிள்ளை பாடசாலைக்கு அருகில் 10 பரப்புத் தோட்டக்காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776511682, 0217903917,
077 604 8921 (35601)(7.11)

## வேலையாள்கள் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை.
தொடர்பு: த.குமாரசாமி அன்சன்ஸ்
248/1, K.K.S வீதி, யாழ்ப்பாணம். (C/8048)(6.7.11)

## கடை விற்பனைக்கு

இல.82, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் எனும் விலாசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கடைக்கட்டடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 759 2651 (35614)(6.7.11)

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் அம்மன் கோயில் வீதி, கொக்குவில் கிழக்கில் 1½ பரப்பு காணியில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: அ.பூபாலசிங்கம்
077 948 4978 (35593) (6.7.11)

## காணி விற்பனைக்கு

யாழ்.அரியாலையில் கண்டி வீதிக்கு அருகில் (100m) பொன்னம்பலம் சந்தியில் 6 பரப்புக் காணியில் 3 பரப்புக் காணி சுற்று மதிலுக்கான பத்திரிப்புக் கட்டுடனும் கிணற்றுடனும் கூடியது விற்பனைக்குண்டு.
6 பரப்பாகவும் வாங்கலாம்.

தொடர்பு-0112360525
0772935509

(27816) (6.7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
22*01*1939
இறைவன் அடியில்
08*03*2013

## திருமதி யோகம்மா பசுபதிப்பிள்ளை

எங்கள் அம்மா யோகம்மா, ஊருக் கெல்லாம் குண்டம்மா
உனது பேச்சினிலே சிறப்பம்மா, வந்தோரை வரவேற்பதில்
உனக்கு நிகர் நீதானம்மா
விருந்தோம்பலின் அன்னம் அம்மா, நீ சிரிப்பதினிலே அழகம்மா
நீ இறுதி யாத்திரை சென்று விட்டாய் - எங்கள்
கண்ணகை அம்மா கடற்கரைக் கம்மா
இனி எப்போ காண்போம் உன் முகத்தை அம்மா!

எங்கள் குடும்ப அன்னையின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலை பேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட விளையாட்டுக் கழகங்களுக்கும் மற்றும் ஆலய நிர்வாக சபையினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு. அன்னையின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 05.04.2013 வெள்ளிக்கிழமை காலை புங்குடுதீவு கண்ணகை அம்மன் புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பலவாணர் அரங்கடி,
12 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

குடும்பத்தினர்.

(C/8100)(2.6.7)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி





தோற்றம் 05.08.1926
மறைவு 02.04.2008

தோற்றம் 24.06.1928
மறைவு 13.05.2007

திதி: துவாதசி (07.04.2013)

அமரர்
**கந்தையா துரை** (துரைராசா)

திருமதி
**துரை பாக்கியம்**

*பாசத்தின் இருப்பிடமே ! பண்பின் சிகரமே*
*எம் குடும்பத் தெய்வங்களே! முருகன் திருவடி பணிந்த நீங்கள்*
*இனிய உங்கள் முகம் எங்கள் நெஞ்சை விட்டகலாது*
*பாசமுடன் இணைந்து பண்புடன் வாழ்ந்தீர்கள்*
*கனிந்த பேச்சும் நேச மொழியும் காதுகளில் கேட்கிறதே*
*சடுதியில் எமை பிரிந்து எங்கு சென்றீர்கள் ?*
*மறக்கத்தான் முடியவுமில்லை உங்கள் நினைவுகளை*
*துறக்கவும் முடியாது கலங்குகின்றோம் இங்கே நாம்*
*உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

நிரந்தர முகவரி:
வாகைபடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
தற்போதைய முகவரி:
கல்லடி வீதி, நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:

**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

(27812) (10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புக்காய்ச்சல்

இன்று எம்மிடையே பல்வேறுபட்ட தொற்று நோய்கள் மிக வேகமாகப் பரவி வருகின்றன. இத்தொற்றுநோய்கள் பெருமளவில் பக்றீரியா (Bacteria), வைரஸ் (Virus), பங்கஸ் என்ற நுண் உயிர்களால் ஏற்படுகின்றன. நெருப்புக்காய்ச்சலும் ஒரு வகை பக்றீரியாவால் ஏற்படுகின்ற தொற்று நோயாகும். இந்த நோயை ஏற்படுத்துகின்ற பக்றீரியாவின் பெயர் Salmonella typhi. சில சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட பக்றீரியாவை சகல வகைகளிலும் ஒத்த Salmonella paratyphi என்ற பக்றீரியாவாலும் நெருப்புக் காய்ச்சல் ஏற்படுகின்றது. நெருப்புக் காய்ச்சலை உருவாக்கக் கூடிய நோய்க் கிருமிகள் மனித உடலில் மட்டும் பெருகக் கூடிய இயல்புகள் கொண்டுள்ளன. இந்த நோய்கிருமி மனித உடலில் பெருக்கமடைந்து நோயை உருவாக்குகின்றது.

இந்த நோய்க்கிருமி பல முறைகளில் மனித உடலுள் புகக் கூடிய வழிகள் இருப்பினும் இவை பிரதானமாக நோய்க்கிருமியின் தொற்றுக்கு உட்பட்ட நீர், உணவு என்பவற்றுடன் சேர்ந்து மனிதனின் சமிபாட்டுத் தொகுதியை சென்றடைந்து, அங்கிருந்து நிணநீர்க் கணுக்களுக்குச் சென்று பின்னர் குருதிச் சுற்றோட்டத்தை வந்தடைகின்றன. இவ்வாறு தொற்றுக்கு உட்பட்ட மனிதனில் சமிபாட்டுத் தொகுதியில் இருந்து குருதிச் சுற்றோட்டத்தை அடைய இந்த நோய்க் கிருமிக்கு 10-14 நாள்கள் எடுக்கும். நோய்க்கிருமிகள் குருதிச் சுற்றோட்டத்தை அடைந்த பின்னர் மனிதனில் நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றன. எனவே மனிதனுக்கு தொற்று ஏற்பட்டு 10 நாள்களின் பின்னரே நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றன.

இந்த நோய்க்கான முக்கிய அறிகுறிகள் விட்டு விட்டுக் காயும் உயர் காய்ச்சல், தலைவலி, வயிற்றுநோ, வாந்தி, தொடக்க காலங்களில் மலச்சிக்கல், பின்னர் வயிற்றோட்டம், நிணநீர்கணுக்கள் வீக்கம் (றோஸ்) Rose நிற புள்ளிகள் உடலின் மேற்பகுதியில் ஏற்படுதல் என்பனவாகும்.

இந்த நோய் சாதாரணமாக 2-3 கிழமைகள் வரை நீடிக்கலாம். இந்த நோய் சிலருக்கு மருத்துவ உதவியின்றி தானாகவே குணமாகின்ற போதிலும் பெரும்பாலானவர்கள் மருத்துவ உதவிகளால் சுகப்படுத்தப்படுகின்றனர். பலர் மருத்துவ உதவியின்றி இந்த நோயின் தீவிர சிக்கல்களுக்கு உள்ளாக நேரிடலாம். எனவே இந்த நோய்க்குரிய அறிகுறிகள் இருப்பவர்கள் நோயின் தொடக்கத்திலே மருத்துவ உதவியை நாடுவதன் மூலம் நோயின் சிக்கல்களையும் இறப்பையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

இந்தநோயின் சிக்கல்கள் (Complication) பெரும்பாலும் இரண்டு வாரங்களின் பின்னரே ஏற்படுகின்றன. இந்த நோயின் தாக்கத்தால் சிறுகுடல் சேதமடைதல், சிறுகுடலில் இருந்து பெருமளவு இரத்தப் பெருக்கு, செப்ரிக் சொக் (Septic shocic) எனப்படும் குருதி அமுக்கம் குறைவடைதல்,Dic எனப்படும் இரத்தப்பெருக்கு போன்ற பலவகை சிக்கல்கள் ஏற்பட்டு இறப்பு ஏற்படும். இந்த நோய் ஏற்பட்டு குணமானவர்களில் 10 வீதமானவர்கள் எந்தவிதமான நோய் அறிகுறிகளும் இல்லாமல், அவர்களின் மலத்துடன் இந்த நோய்க்கான கிருமியைத் தொடர்ந்து வெளியேற்றலாம். இதன் மூலம் அடுத்தவர்களுக்கு இவர்கள் இந்நோயை ஏற்படுத்துகின்றார் கள். இவர்கள் நோய்க் காவிகள் என்று அழைக்கப்படுவர். இந்த நோய்க்காவிகளின் பித்தப்பையில் நோய்க்கிருமிகள் பல மாதங்கள் வரை இருந்து சிறிது சிறிதாக மலத்துடன் வெளியேற்றப்படுகின்றன.

இந்த நோயைக் கண்டுபிடிக்க பலவகை சோதனைகள் செய்யப்பட்ட போதிலும், பிரதானமாக Blood culture என்ற பரிசோதனை முக்கியமாகப் பயன்படுகிறது. மருத்துவர்களால் நோய் அறிகுறிகளின் அடிப்படையிலோ அல்லது பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலோ மருந்துகள் வழங்கப்படுகின்றன. இந்த நோய்க்கு பொதுவாக வழங்கப்படுகின்ற Antibiotic இன் பெயர் சிப்ரோவுளொக்சின் (Ciprofloxacin) என்ற மருந்தாகும். இது நோயாளியின் நோயின் தீவிரத்தைப் பொறுத்து மாத்திரைகளாகவே அல்லது ஊசி மருந்தாகவோ வழங்கப்படுகின்றது. இந்த மருந்துகள் மொத்தமாக 7-10 நாள்கள் வரை வழங்கப்படும். சிலவேளைகளில் அதிதீவிர நோய்கள் 3rd generation Cephalosporin என்ற ஊசி மருத்துகளாலும் சுகமாக்கப்படுகின்றன. இந்த நோய்க்கு உட்பட்டவர்கள் நோய்க்காலங்களில் லேசான ஆகாரங்கள் உண்ணுதல் (light diets) முக்கியமாகும். சோறு போன்ற உணவுகள் நோயின் தீவிரத்தைக் கூட்டக் கூடியவை.




நெருப்புக்காய்ச்சலும் ஒரு வகை பக்றீரியாவால் ஏற்படுகின்ற தொற்று நோயாகும். இந்த நோயை ஏற்படுத்துகின்ற பக்றீரியாவின் பெயர் Salmonella typhi. சில சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட பக்றீரியாவை சகல வகைகளிலும் ஒத்த Salmonella paratyphi என்ற பக்றீரியாவாலும் நெருப்புக் காய்ச்சல் ஏற்படுகின்றது.

இந்த நோய் ஏற்படமுன் கவனமாக இருப்பதன் மூலம் தவிர்த்து கொள்ளலாம். இந்த நோயைத் தடுக்கும் வழிமுறைகள், முறையாகவும் சுத்தமாகவும் வீடுகளில் தயாரிக்கப்பட்ட உணவை அருந்துதல், வீடுகளில் உணவைச் சரியாக மூடி வைத்தல், சுத்தமாகப் பரிமாறுதல் போன்றவையாகும். இதன் மூலம் இந்த நோய் ஏற்படுவதை குறைக்க முடியும். இதேபோன்று வீடுகளில் கொதித்தாறிய நீரைப் பருகவேண்டும். சகல வீடுகளிலும் சரியான மலசல கூட வசதிகள் கடைப்பிடிக்க வேண்டும். எப்பொழுதும் உணவு அருந்தும் முன்பும், மலம் கழித்த பின்னரும் சவர்க்காரம் கொண்டு கைகளை நன்கு கழுவ வேண்டும். இயலுமானவரை கடைகளில் உண்ணும் பழக்கங்களைத் தவிர்த்து கொள்ளுதல் அவசியமாகும். சகல உணவுக் கடைகளிலும் முறையாகவும் சுத்தமாகவும் உணவு தயாரிக்கப்படுகின்றனவா? அவை சரியான முறையில் பாதுகாக்கப்படுகின்றனவா? சரியான முறையில் பரிமாறப்படுகின்றனவா? என்பதை சுகாதார சேவையாளர்கள் உறுதிப்படுத்துவதன் மூலமும் இந்த நோயைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இந்தநோய் வேகமாகப் பரவி வரும் காலங்களில் நோயைக் கட்டுப்படுத்த தடுப்பு மருந்துகளும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் தடுப்பு மருத்துகள் மாத்திரைகள் மூலமாகவும், ஊசி மூலமாகவும் வழங்கப்படலாம். எனினும் எமது சமூகத்தில் இந்தத் தடுப்பு மருந்துகள் மிகவும் குறைவாகவே பாவிக்கப்படுகின்றன.

எனவே நாம் மேற்குறிப்பிட்ட தடுப்பு முறைகளைக் கவனத்தில் கொண்டு இயலுமான வரை இத்தொற்று நோயில் இருந்து எம்மைப் பாதுகாத்து நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற நோயற்ற வாழ்வை வாழ்வோம்.

**Dr.பி.போஸ்சன், M.D (MEDICINE)**
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# மீண்டிடுமா அந்தக் காலம்?

அருகிப் போன நமது பாரம்பரிய உணவு முறைகளை மீட்டிப் பார்க்கிறது இந்தக் கவிதை.

கதிரேசபிள்ளை தர்ஸனன், வைத்தியர்,
மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம்

நெல்லரிசி, வரகரிசி, சாமை, தினை, குரக்கன் என்று
பல்வேறு தானியங்கள் பக்குவமாய் பயிரிட்டு
பொல்லா நோய் அத்தனையும் பொசுக்கியது அக்காலம்

நாட்டுக் கோழி வறுத்து நற்சீரகம் சேர்த்து
கூட்டிக் குழம்பாக்கி குடும்பமாய் உட்கார்ந்து
பாட்டி வைத்தியத்தில் பசி தணித்ததக்காலம்

அரிசிமா சேர்த்து அதில் அளவாய்த் தேன் விட்டு
சரியாக நீர் சேர்த்து எங்கள் அம்மா களிக்கிண்ட
வரிசையாய் நின்று அதை ருசித்ததுவும் அக்காலம்

தினை அரிசிச் சோறும் கேள்வரகுக் கூழும்- எங்கள்
பனை மரத்துப் பதநீரும் பனங்கட்டித் துண்டுமொன்றாய்
பிணைந்தெடுத்து ஊட்டிவிட பித்தானதக்காலம்

மண்சட்டி வைத்து அதில் மஞ்சள் மண மணக்க
தண்ணீரில் தோய்த்த பருப்பெடுத்து பால் சேர்த்து
உண்ணும் வரை எச்சில் ஊற வைத்ததக்காலம்

நண்டுக் குழம்பு விட்டு நாவாரருசித்த பின்னால்
துண்டுக் காலலெடுத்து அதை உறிஞ்சி இழுத்த பின்னால்
சுண்டு விரல் நக்கிச் சுவை பார்த்ததக்காலம்

[illegible] களைத்த பின்னால்
[illegible] ஒரு வீட்டில்
விடிய விடிய இருந்து விருந்துண்டதக்காலம்

நெய் மணக்கும் தோசை, தேனூறும்
கொழுக்கட்டை-அம்மா
கை மணக்கும் சாம்பாரும் கத்தரிக்காய்க்
கூட்டுமுண்டு
மெய் மறந்து மேனி சிலிர்த்ததுவும் அக்காலம்

விழாக்காலம் என்றாலே கொண்டாட்டம்
-ஊரெல்லாம்
உலாப் போந்த பின்னாலே உற்றாரும் மற்றாரும்
நிலாச் சோறு உண்டு மனம்
களித்திருந்ததக்காலம்

தேரோடும் வீதியிலே மோர்ப்பந்தல் போட்டு-
அதில்
போராடி மோராடி நீராடி வீதியெல்லாம்
மோரோடிக் கிடந்து மணத்ததுவும் அக்காலம்

எங்கள் உணவுகளில் ஏற்றம் இறக்கமென்று
சொல்லுதற்கு ஒரு குறையுமில்லை-ஆனால்
எங்கள் உணவிதென்று மார்தட்ட எம்மிடத்தில்
இன்றோ பல வகைகள் இல்லை

எடுக்கும் அளவறிந்து உட்கொண்டால்
எப்போதும்
தடுக்கும் பல நோயை உணவு- அதை
விடுத்து விதவிதமாய் வீணாகச் சாப்பிட்டால்
கொடுக்கும் பல நோயை உணவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவெட்டி மத்தியஸ்த சபை நடவடிக்கை 20 இல்

சித்திரை புதுவருடப் பிறப்பை முன்னிட்டு கரவெட்டி மத்தியஸ்த சபையின் நடவடிக்கைகள் எதிர் வரும் 14 ஆம் திகதி நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மத்தியஸ்த சபை யின் நடவடிக்கைகள் இடம் பெறும் என்று தவிசாளர் சி.நற் குணசிங்கம் அறிவித்துள்ளார். (ந-ரி)


**ஆரோக்கியத்தின் காவலன்**

★ நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், உயர் கொலஸ்ட்ரோல், உடல் எடை அதிகரிப்பு, மூட்டு வாதம், இருதயக் கோளாறு, குடற்புண், மூலநோய், புற்றுநோய் ஆலோசனைகள், சேவைகள் அனைத்தும் இலவசம். வீட்டுக்கு வீடு சேவை வழங்கப்படும்.

(35742)(2.6) அழையுங்கள்:- 021 568 5999

**தவறிவிட்டது**

திருநகர், கிளிநொச்சி என்னும் முகவரியை உடைய நிருபன் ஜோதிராஜ் வேந்தன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (963350023v) மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் இளவாலைக்கும் பண்டத்தரிப்புக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 808 9805 (35744)(6.7.11)

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி சத்திரச்சந்திக்கும் சிவன் பண்ணை வீதி சந்திக்கும் இடையில் 100 அடி நீளம் 15 அடி அகலம் கொண்ட கடை வாடகைக்கு.

T.P: 077 728 3811 (35747)(6.7.11)

**ENGLISH MEDIUM CLASSES**

Home visit -Group/Personal
A/L - Accounting
O/L - Arts Subjects

CONTACT: 077 331 6402
(35741)(5-6-7) JAFFNA.

**விற்பனைக்கு**

குளிரூட்டி A/C நல்ல நிலையில் உள்ளதும் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தகரத்தால் செய்யப்பட்ட 15 அடி அகலம் 08 அடி உயரம் கொண்ட கதவு, 8 அடி அஸ்பெஸ்ரர் சீற், 6 அடி உயர அகலம் கொண்ட கண்ணாடி அலுமாரி, 6 அடி அகலம், உயரம் கொண்ட முதிரை பலகையால் செய்யப் பட்ட றாக்கை, வேப்பம்பலகையால் செய்யப்பட்ட மேசை என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 728 3811 (35745)(6.7.11)

**தேவை**

தொடர்ந்து 18 வருட காலமாக இயங்கி வரும் எமது கம்பனி யில் சிறந்த துறை, அதிக வருமானம், குறுகிய காலப்பயிற்சி, நிரந்தர தொழில் இவை யனைத்தும் பெற வேண்டுமெனில் அனு பவம் தேவை யில்லை. அதிகூடிய தகைமை (O/L) மாத்திரமே. முதல் 20 வெற்றிடங் கள். மாதம் 12,000 முதல் பின் 45,000 க்கு மேல். முல்லைத் தீவு, யாழ்., வவுனியா, மன்னார், திருகோண மலையில் வசிப்பவர் களுக்கு முன்னுரிமை.

தொடர்பு: 077 821 5859
(35698)(6.7) 077 599 9155

**வான் விற்பனைக்கு**

53-xxxx தொடரிலக்கமுடைய செல் மொடல் ஹைஏஸ் வான் விற்பனைக்கு ண்டு. (லீசிங் வசதி செய்து தரப்படும்)

(35755)(5-6-7) தொடர்பு: 077 222 5180

**வாடகைக்கு வீடு தேவை**

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வாடகை வீடு தேவை.

(35743)(5-6-7) தொடர்பு: 077 060 2224

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

4½ பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. இடம் இல.76, அரசடி றோட், யாழ்ப்பாணம். (IDEAL LODGE)

தொடர்பு: 071 4275 724 (35680)(45.6.7)

**தவறிவிட்டது**

அல்லைப்பிட்டிக்கும் மண்கும்பானுக்கும் இடையில் இரண்டு கூறைச்சாறிகள் கடந்த (05.04.2013) வெள்ளிக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
(சன்மானம் வழங்கப்படும்) (35736) (45.6.7)

தொ.பே. 077 9322 602, 077 6142 645

**விற்பனைக்கு**

வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட குறைந்த மணித்தியாலங்கள் பாவனையில் இருந்த மிக நல்ல நிலையில் உள்ள Massey Fergusan 240 டிரக்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.நல்லநாதன்
32, சட்டநாதர் வீதி, நல்லூர். (35754(6.7.11)

**வீடு வாடகைக்கு**

யாழ். நகர் மத்தியில் உள்ள பாங்சால் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 7179 778 (35740) (45.6.7)

**மணமகன் தேவை**

34 வயது நிரம்பிய குடும்பப் பெண்ணுக்கு வளர்ப்புப் பெற்றோர் மண மகனைத் தேடுகின்றனர். (கிறிஸ்தவனாயிருத்தல் விரும்பத்தக்கது)

தொடர்பு: 021 3210 804 (35751) (45.6.7)

**F.B. 15 கார் விற்பனைக்கு**

ஆண்டு 2001 மொடல், HI-9XXX, சில்வர் கலர், டபிள் எயாபக் மிக நல்ல நிலையில்.
உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 1362 202 (சி/8232) (45.6.7)


## மரண அறிவித்தல்

### திருமதி வயிரமுத்து மகாலட்சுமி



மூளாய், ஆஸ்பத்திரி வீதியைப் பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வயிரமுத்து மகாலட்சுமி நேற்று முன்தினம் (05.04.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ராமசாமி வயிரமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவச்செல்வராசா மற்றும் வரதராசா (கனடா), கணேஸ்வரன் (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (கனடா) ஆகி யோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கோமளவல்லி மற்றும் கௌரி (கனடா), மல்லிகா (ஜேர்மனி), சித்திரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ஹெல்மூட் (கனடா), டயானா (ஜேர்மனி), அனுசியா (ஜேர்மனி), கவீனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தையல்முத்து, சுப்பிரமணியம், மீனாட்சி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04. 2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆஸ்பத்திரி வீதி, மூளாய். (2.6.7)(35739) **பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்



### திருமதி
## தம்பிஐயா சரஸ்வதி

இடிகுண்டடி, நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஐயா சரஸ்வதி கடந்த 05.04.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - அன்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தம்பிஐயா வின் அன்பு மனைவியும், பரமேஸ்வரியின் (வேவி) அன்புத் தாயும், காலஞ்சென்ற சத்தியபாமாவின் அன்பு மாமியும், கிருஷ்ணகுமார் - வாமதேவி (சசி - கனடா), காலஞ்சென்றவர் களான வாமதேவன், கிருஷ்ணதேவன் மற்றும் சுதாகர்- கிருஷ்ண தேவி (ஜேர்மனி), ரமேஸ்குமார் - கிருஷ்ணவேணி (கனடா), ஜெயமோகன் - சுகிர்தா (லண்டன்), சத்தியதாசன் - சாந்தகுமாரி (லண்டன்), கபிலேஷ் - சத்தியபிரியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மயூரி, சாருமதி, கீர்த்தனா, சரண்யா, ராகுல், ரம்மியா, ஷியாம், சர்வின், தனுஷன், விணோ, நிஷான், அனுசியா, கவிதாஸ், அஸ்வினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சத்தியபாமா பரமேஸ்வரி (மகள் - வேவி)
தொ.பே. 021 3737 359/ 077 7245 925.

இடிகுண்டடி வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய். (35746(6.7.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு நீரகம் தேவை

B ⁺ குருதிப் பிரிவையுடைய ஒருவருக்கு மாற்றுச் சிறு நீரகமொன்று அவசரமாகத் தேவைப்படுகின்றது.
B⁺, B⁻ அல்லது O⁺, O⁻ குருதிப் பிரிவையுடைய 25 - 35 வயதுக்கிடைப்பட்டவர்கள் தானம் செய்ய விரும்பினால் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
(ஆண்களின் சிறுநீரகம் விரும்பத்தக்கது)

தொடர்பு: 0773508241, 0772376203
(C/8215)(6.7.2)

## காணி விற்பனைக்கு

வண்ணார்பண்ணை சிவன்கோயில், வைத்தீஸ்வராக் கல்லூரி, ஈழநாடு Press ஆகியவற்றுக்கு அருகில் உள்ள வெள்ளாந்தெருவில் 2பரப்பு 13குழி காணி விற்பனைக்குண்டு.
This property is very close to grand bazar and ideal for business or residential use.
For details contact (519) 433-3654
Contact in Jaffna: +94 21 221 2115 / +94 21 490 7069

## குறும்பட விழாவும் , கண்காட்சியும்

AVR மூவி மேக்கர் இந்தியாவுடன் இணைந்து
ஜெய் சர்வ மகா கலாஷேத்திரம்
குறும்பட விழாவையும், கண்காட்சியையும் நடத்தவுள்ளது. இந்த விழாவின் போது தரமான குறும் படங்களுக்கு விருது வழங்குவதும், சிறந்த குறும் படங்களை சர்வதேச அளவில் விநியோகிப்பதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
5-15 நிமிடங்களுக்கு உட்பட்ட தங்கள் குறும்படங்களை 25.04.2013 இற்கு முன்பாக மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் (வவுனியாக்கிளை), வைரவப் புளியங்குளம், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தொடர்பு: 077 460 4576 (C/7502)(6.7.11)

## திருமண சேவை

கொழும்பு மாநகரில் முன்னணியில் திகழும் சாயிநாதன் திருமண சேவையுடன் தொடர்பு கொண்டு உங்கள் பிள்ளைகளின் திருமணங் களை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொள்ள முடியும். எங்களிடம் உள்நாடு/வெளிநாடு எல்லா இனத்தவரின் சாதகக் குறிப்புக்களும் ஏராளம் உண்டு. Doctor, Engineer, Accountant, BSc, MSc ஆசிரியர்களின் சாதகங்களைத் தேர்ந் தெடுக்க முடியும்.
**சாயிநாதன் திருமணசேவை,**
இல.27, வெள்ளவத்தை, கொழும்பு-06.
அத்துடன் வாடிக்கையாளர்களுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
T.P: 011 236 4146
Fax- 011 236 3436
E mail- saainathan.lk@gmail.com
(35591)(6.7.11)

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்
வீட்டுக்கிருத்திய
அழைப்பும்



அமரர்
**செம்பன் சுந்தரம்**
தோற்றம்
24*06*1929
மறைவு
08*03*2013

08.03.2013 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்டோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வு 09.04.2013 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது மருமகன் தேவராசா இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி,பத்தமேனி,
அச்சுவேலி. மருமகன் தே[illegible]சா குடும்பத்தினர்.

## கோழி விற்பனை

40 கல்பேட் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 7496 516 (35710) (45.6.7)

## அறைகள் Annex வாடகைக்குண்டு

யாழ். பல்கலைக்கழகம் அருகில் பலாலி வீதியில் பெண்கள் தலைமைத்துவமாக 3 or 4 பேர் கொண்ட சிறிய குடும்பம், பல்கலைக்கழக மாணவிகள், உத்தியோகம் பார்க்கும் பெண்கள், கல்லூரி மாணவிகளுக்கு அறைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு: 021 222 7069/ 077 930 0148
(35700) (45.6.7)

## காணி விற்பனைக்கு

கொல்லங்கலட்டி தச்சங்காட்டு வீதியில், 24 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
பரப்பு ரூபாய் நான்கு லட்சம்.
தொடர்பு:077 073 4569
(35708)(6.7.11)

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக ¾ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 900 6729
(C/8274)(6.7.11)

## தொழிலாளர்கள் தேவை

அலுமினியம் தொழிற்சாலைக்கு றோலிங், ஸ்பினிங், அலுமினியம் வார்ப்பு மற்றும் அரிதட்டு வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.
தொடர்பு: 077 073 4569/ 077 458 9312
(35707)(6.7.11)

## காணி வீடு விற்பனைக்கு

குப்பிளான் வடக்கு, கேணியடி வைரவர் கோயிலுக்கு முன் காணி 4¾ பரப்பும், 15/14, நல்லூர் வடக்கு, சங்கிலியன் வீதியில் உள்ள வீடு கிணற்றுடன் கூடிய 4பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 3658 321
(சி/8207) (45.6.7)

## காணி விற்பனைக்குண்டு

37, ஸ்ரேசன் வீதியில், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 890 0225,
021 321 0626
(35725) (6.7.11)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிவன் கோயில் வடக்கு வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0775409938

## புத்தகங்கள், சஞ்சிகைகள் விற்பனைக்குண்டு

ஆசிரியரின் பிரத்தியேக சேகரிப்பில் இருக்கும் தமிழ், ஆங்கில சஞ்சிகைகள், நாவல்கள், சமய புத்தகங்கள், 6ஆம் வகுப்பில் இருந்து பல்கலைக் கழகம் வரையான கணித, விஞ்ஞான, ஆங்கில, சமையல் - எல்லாப் பாடங்களுக்கான புத்தகங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. ஏராளமான புத்தகங்கள்.
தொடர்பு: நீச்வரி 8 மணிமுதல் 4மணிவரை
ஆசிரியர்: R. பாலசுப்பிரமணியம் B.Sc. PGDE
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, நீராவியடி குளத்துக்கு முன்னால்
யாழ்ப்பாணம்.
(35724) (45.6.7)

## A/L பௌதிகவியல் இணைந்த கணிதம் (தமிழ்/ஆங்கிலம்) 2014, 2015, 2013 (மீட்டல் மட்டும்)

பிரபல கல்லூரிகளில் சிறப்பாக மேற்படி பாடங் களைக் கற்பித்து சிறந்த பெறு பேறுகளைப் பெற்ற ஆசிரிய ரினால் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத் தாள் உட்பட) மிகக் குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். வகுப் புக்கள் நடைபெறுகின்றன. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். விவரங்களுக்கு
ஆசிரியர் R.பாலசுப்பிரமணியம்
B.Sc,PGDE. 42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி குளத்திற்கு முன்னால், யாழ்ப்பாணம்.
T.P:077 664 8751, 077 517 8727 (35722) (6.7.11)

## பணியாளர்கள் தேவை

★இயந்திர இயக்குநர்கள்
(Ryobi. Davidson)
★முகாமையாளர்கள்(பெண்கள்)
★கணினி இயக்குநர்கள்(இருபாலரும்)
★அலுவலக உதவியாளர்கள்
(அச்சக அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
08.04.2013 திங்கள் காலை 09.00மணிக்கு தங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.
[illegible]
யாழ்ப்பாணம்.
021 222 4143

## குறும்பட போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.7

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் சிறந்த குறும்படத்தேர்வு 2013 ஆம் ஆண்டு போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சமகாலத்தில் அடையாளம் காணப்படும் பண்பாட்டுப் பிறழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல் எனும் கருப்பொருளில் 20 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருக்கக் கூடியதாக இந்தக் குறும்படப் படைப்புகள் அமையவேண்டும்.

பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்தில் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிக்கு ஆர்வமுடையவர்கள் பிரதேச மட்டத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாகவும், மாவட்ட மட்டத்தில் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்ன தாகவும், மாகாண மட்டப் போட்டிக்கு எதிர் வரும் 23 ஆம் திகதிக்கு முன்னதாகவும் விண்ணப்பிக்கலாம் என்று வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி தெரிவித்துள்ளார். (ந-14)

## ST. JOHN'S COLLEGE, JAFFNA.
## CHUNDIKULI GIRL'S COLLEGE, JAFFNA.
### MERIT SCHOLARSHIP AWARD-G.C.E.(A/L)-2015 BATCH

(ஆங்கில/தமிழ் மொழிமூலம்)

2012 O/L எடுத்து 2015 Batch இல் க.பொ.த. (உ/த) எடுக்க இருக்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. பெயர்: ........................................
2. 2012 இல் O/L எடுத்த பாடசாலை: ........................................
3. க.பொ.த. (உயர்தரத்தில்) பயில விரும்பும் துறை : கலை/ வர்த்தகம்/ உயிரியல்/ கணிதப்பிரிவு.
4. பயில விரும்பும் மொழி: ஆங்கிலம்/ தமிழ்
5. தந்தையார் தொழில்: .................... தாயார் தொழில்:....................
6. தடுப்ப விவரம்: ........................................
........................................
........................................
........................................
7. விலாசம்: ........................................

அதிபரால் உறுதி செய்யப்பட்ட பிறப்புச்சான்றிதழ் போட்டோ பிரதியும, O/L பெறுபேற்றுச் சான்றிதழ் போட்டோ பிரதியும் இணைக்கப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் 10.04.2013 இற்கு முன்னர் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆண்கள்: அதிபர், சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
பெண்கள்: அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
அதிபர்கள்.
(C/8226)(10.6.7)

45ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
12.05.1989
ஆண்டவன் அடியில்
22.02.2013
அமரர்
**இராஜகுமார் ரவிராஜ்**

"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துய்ப்பார் நட்பு"
என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க

கடந்த 22.02.2013 அன்று இறைபதமடைந்த எமது அன்புச் செல்வம் இராஜகுமார் ரவிராஜ் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து உதவி புரிந்தவர்களுக்கும் வெளிநாடுகளில் இருந்தும், தொலைபேசி மூலமும், கண்ணீர் அஞ்சலி, மலர்வளையம் மற்றும் பத்திரிகைகள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

சிறுவிளான், இளவாலை. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.7

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை 2012 பெறுபேறுகள். அண்மையில் வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை ரீதியாக எமக்குக் கிடைத்த பெறுபேறுகள் வருமாறு:-

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**தமிழ் மொழிமூலம்**

பேரானந்தன் சங்கீத்தன்-9ஏ, சிறிதாஸ் தனுசன்- 9ஏ, இந்துஷானி தனபாலசிங்கம்-9ஏ, அபிராமி துரைசிங்கம்-9ஏ, துளசிகா உருத்திரேஸ்வரன்-9ஏ, தில்லைநாதன் மதுரன்-8ஏபி, செல்வரட்ணம் சுஜீபன்-8ஏபி, உஷாந்தினி ஜெகானந்தராஜா-8ஏ.பி, நாகேந்திரன் குமரன்-8ஏ,சி, மாணிக்கவாசகர் லஜீவன்-8ஏசி, லிங்கேஸ்வரன் மிளிரன்-8ஏசி, இந்திரகுமார் ஜினிதன்-8ஏசி, மதிவதனி கருணாகரன்-8ஏசி, அபிராமி பாஸ்கரன்-8ஏ, ரம்யா இன்பநாதன்-7ஏ2பி, சாந்திகா உருத்திரமூர்த்தி-7ஏ2பி, செல்வரட்ணம் விதுசன்-7ஏபிசி, சாமினி ராஜேஸ்வரன்-6ஏ3பி, மாப்பாணம்பிள்ளை சாரங்கன்-6ஏ 2பி சிசுந்தரலிங்கம் சுபாங்கன்-5ஏ4பி, நன்னித்தம்பி செந்தூரன்-5ஏ3பிசி, கிருஷானி ரகுநாதன்-5ஏ3பிசி, பகீரதன் ஜினோத்-5ஏ 2பிசிஎஸ், சுப்பிரமணியம் சஞ்சீவன்-5ஏ2பி2சி, ஜெயக்குமார் றதீபன்-5ஏ2பி2சி, மயூரா காந்தராஜன்-5ஏ2பி2சி, பிரவீணா சிறிகாந்தா-5ஏ 2பி2சி, தனுசிகா விமலேஸ்வரன்-5ஏ 2பி2சி, தர்சிகா முத்துலிங் கம்-5ஏபி3சி, ஜெனந்தினி சத்தியமூர்த்தி-5ஏபி3சி, பரமேஸ்வரன் துவாகரன்-5ஏ4சி.

**ஆங்கிலமொழி மூலம்**

மகாரூபன் பானுசன்-7ஏபிஎஸ், சிறிராமச்சந்திரன் லேய்பிரணவன்-7ஏசிஎஸ், தவராசா டிவேசன்-6ஏ2பிசி. சிவராஜா வைகுந்தன் -5ஏ3பிசி

**பெரியபுலம் மகா வித்தியாலயம்**

சு.நிரோஜினி-7ஏ2பி, சு.ஐங்கரன்-7ஏபிஎஸ், செ.துர்க்கேசன்-6ஏபி2சி, சே.தனுஷியா-2ஏ 4பி2சி எஸ், ந.தர்சன்-2ஏ3பி2சி 2எஸ், ப.குமணன்- 2ஏபி4சி2எஸ், ந.அனுரேகா- ஏ 3பி4சிஎஸ், சி.டிலக்சன்-ஏ2பி5சிஎஸ், பா.கனீஸ்வரி-ஏபி5சி 2எஸ்.

**யாழ். மத்திய கல்லூரி**

சிவகுமாரன் ராம்குமார்-8ஏசி, செல்லத்துரை சுஜன்-7ஏபிசி, அமிர்தநாயகம் அமுதன்-6ஏபி2சி, சிவகுலசிங்கம் கேடில்ஸ்-5ஏபி3சி, ஜெயசேகரம் குகந்தன்-4ஏ3பி2சி, கதிர்காமநாதன் கிருசாந்தன்-4ஏ3 பி2சி, கணேஸ் துஷ்யந்தன்-4ஏ3பிசிஎஸ், கிருஷ்ணகுமார் கிருசாந்தன்-4ஏ2பி3சி, தர்மலிங்கம் சுபேசன்-4ஏ2பிசிஎஸ், தவராசா சரண்ராஜ்-4ஏபி4சி, ஜோன் சண்டக்ளஸ் பிளேக்கால்-3ஏ 5பிசி, தேவேந்திரன் யுவகாந்-3ஏ3 பி2சிஎஸ், புஸ்பராஜா ரகுராமன்-3ஏ3பி2சிஎஸ், சசிகரன் பதுஜன்-3ஏ3பி2சி, கணேசலிங்கம் நிமல் -3ஏ3பி3எஸ், நந்தகுமார் நிலக்ஷன்-3ஏ2பி3சிஎஸ், அரவிந்தன் தனுராஜ் -3ஏ2பி3சிஎஸ், இராசேந்திரம் தனுஷ்குமார் -3ஏ பி3சி 2எஸ், ஜெயராசா நிசாகரன்-3ஏபி2சி 3எஸ்.

**சென் பற்றிக்ஸ் கல்லூரி**

**தமிழ் மொழிமூலம்**

எவ்.பிறாங்லின்டன்-8ஏஎஸ், ஈ.டொனால்ட்சன்-7ஏபிசி, எ.டி.எ.நிவிங்ஸ்ரன்-7ஏ2சி, எஸ்.ஸ்ரீபன்ராஜ்-7ஏபிஎஸ், டி.கீர்த்தன்-6ஏ3பி, சி.எ.அன்ரன் கொலின்ஸ்-6ஏ 2பிஎஸ், எஸ்.தேவதர்சன்-6ஏபி2சி, ரி.தேனுஸன்-6ஏபி2சி, எம்.லக்ஸ்மன்-5ஏ3பிசி, எ.ஜே.அன்ரனி நிரோஜன்-5ஏ3பிசி,

**ஆங்கிலமொழி மூலம்**

யு.மிதுசன்-7ஏபிசி எ.சீலன் -6ஏ2பிஎஸ், எ.எ.ஜெனுஸன்-6ஏ2பிஎஸ், ஜி.அல்பிரட் கனிஸ்ரஸ்-5ஏ2பி2சி, எ.றொஹான் டயோனி-5ஏ பி3சி.(ந)

**தவறிய பெறுபேறு**

நேற்று வெளிவந்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பெறுபேறுகளில் இ.மகிந்தன் என்ற மாணவனின் பெயர் தவறவிடப்பட்டு விட்டது என்றும் இ.மகிந்தன்-7ஏ,பிசி பெறுபேற்றை பெற்றுள்ளார் என்றும் அதிபர் அறிவித்துள்ளார்.

# சட்டவிரோத மீன்பிடியை கைவிட்டனர் மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவிரோத இழுவைப் படகு மீன்பிடி முறை கைவிடப்பட்டதைத் தொடர்ந்து, அந்த மீனவர்கள் மாற்று நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

சாதாரண மீன்பிடி முறைகளான தூண்டில் போடுதல், வழிச்சல் ஆகிய முறைகளை இவர்கள் தற்போது பயன்படுத்தி வருகின்றனர் என யாழ். மாவட்ட கடல்தொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையான இழுவைப் படகு மீன்பிடியை அரசு பலமுறை தடை விதித்திருந்த போதும், அந்தத் தடையையும் மீறி மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

குருநகர்ப் பகுதியில் 160 இழுவைப் படகுகளையும் வடமராட்சி வதிரிப் பகுதியில் 20 இழுவைப் படகுகளையும் மீனவர்கள் உபயோகித்து வந்தனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு சட்ட விரோதமான இந்த மீன்பிடிமுறை நிறுத்தப்பட்டு, அரசினால் போதிய நிதி உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மீண்டும் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பரவலாக உபயோகிக்கத் தொடங்கினார்கள். அரசினாலும், திணைக்களங்களினாலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டும், நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட போதும் தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி வந்தனர்.

தடை செய்யப்பட்ட உபகரணங்களினால் கடல் வளம் இயல்பாகவே அழிந்து செல்லும் நிலை ஏற்படுகிறது. கடல் உயிரினங்களின் இனப்பெருக்கமும் குறை வடைந்து செல்கிறது.

இந்த நிலையில் திணைக்களத்தின் தொடர் அழுத்தங்களினால் தடை செய்யப்பட்ட இழுவைப் படகு மீன்பிடியை மீனவர்கள் தாமாகவே தற்போது நிறுத்தியுள்ளார்கள்.

தடைசெய்யப்பட்ட உபகரணங்கள் வைத்திருந்த 180 பேருக்கும் இதுவரையில் எரிபொருள் மானிய முத்திரைகள் வழங்கப்படவில்லை.

இனிவரும் மாதங்களில் இவர்களுக்கான மானிய முத்திரைகளும் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-13)

# கிராம அலுவலர்கள் 72 பேருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 72 கிராம அலுவலர்களுக்கு யாழ். மாவட்ட செயலகத்தினால் இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக இத்தகைய இடமாற்றங்கள் வழங்கப்படாத நிலையில் தற்போது திடீரென இந்த இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிட்ட கிராம அலுவலர்களுக்கு இடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

ஏற்கனவே இத்தகைய இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு வருடங்கள் சென்ற நிலையில், தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறித்து கிராம அலுவலர்கள் தொழிற்சங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தமக்கு இத்தகைய இடமாற்றம் சம்பந்தமான விவரங்கள் எதுவும் தெரியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-86)

## 'படி' மோதியது; வயோதிபர் காயம்

மோட்டார் சைக்கிளில் வீதியைக் கடக்க முயன்றவரை வேகமாக வந்த படி ரக வாகனம் மோதியது. இதில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவருக்கு இடுப்பு எலும்பில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர் சாவகச்சேரி சுந்தையா வீதியைச் சேர்ந்த சோமநாதன் இரவீந்திரன் (வயது-71) என்பவ ராவார். இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ந-9)

# திங்கள்– புதன் வரையான மின் தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் காலை 8.30மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக் கும்.

திங்கட்கிழமை மாலுசந்தி முதல் இரும்பு மதவடி மடத்தடி வரையான பிரதேசம், அண்ணா சிலையடி முதல் கரணவாய் வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும், செவ்வாய்க் கிழமை சாமியன் அரசடிப் பிரதேசத்திலும், புதன்கிழமை சுப்பர்மடம் பிரதேசத்திலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** காலைப்பொழுதிலிருந்தே மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**இடபம்:** வெகுநாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பிள்ளைகளின் உடல் நிலை சீராக இருக்கும். உத்தியோகத்தில் மதிப்பு கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**மிதுனம்:** அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உறவினர்கள் மதிப்பார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.



**கடகம்:** குடும்பத்தில் ஒருவர் மாறி ஒருவர் குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் அதுபொல்லாப்பாக முடியும். வியாபாரத்தில் வேலையாட்களால் பதற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.



**சிங்கம்:** ஆடம்பரமான செலவுகளைக் குறைப்பீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியுண்டு. மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. விருந்தினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.



**கன்னி:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயல்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள்.

## நாளை

பங்குனி-26 திங்கட் கிழமை 08.04.2013

திதி: திரயோதசி பி.ப. 03.49 வரை

நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ. 08.33 வரை

சுபநேரம்: 12.07- 01.37 வரை

இராகுகாலம்: 07.37- 09.07 வரை



**துலாம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிள்ளைகள் ஒத்துழைப்பார்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். முகப் பொலிவு கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் நன்மை கிட்டும். அரசால் அனுகூலம் உண்டு.



**விருச்சிகம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். தாயாரின் உடல் நிலை சீராகும். கணவன் -மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வாகனத்தைச் சீர்செய்வீர்கள்.



**தனுசு:** மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயல்பட வேண்டுமென நினைப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும்.



**மகரம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உடல் நிலை சீராகும். பழைய பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.



**கும்பம்:** குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். யாரும் உங்களை புரிந்துக் கொள்ள வில்லை என ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும்.



**மீனம்:** உறவினர், நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். திட்டமிடாத செலவுகளை போராடி சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி லாபம் வரும். உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பி எந்தப் பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 9 | 7 | 2 | | | 1 | |
| | 8 | | | | | 2 | | 6 |
| 2 | | 7 | 8 | 3 | 6 | | | |
| | | | 9 | | 3 | | | 4 |
| | 2 | | | 8 | | | 5 | |
| 5 | | | 6 | | 2 | | | |
| | | | 3 | 9 | 5 | 7 | | 1 |
| 7 | | 1 | | | | | 9 | |
| | 6 | | | 7 | 1 | 4 | | 8 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 9 | 4 | 5 | 1 | 8 | 6 | 7 |
| 7 | 5 | 8 | 9 | 3 | 6 | 2 | 4 | 1 |
| 4 | 6 | 1 | 8 | 2 | 7 | 9 | 3 | 5 |
| 2 | 9 | 7 | 3 | 1 | 4 | 6 | 5 | 8 |
| 8 | 3 | 6 | 2 | 7 | 5 | 4 | 1 | 9 |
| 1 | 4 | 5 | 6 | 8 | 9 | 3 | 7 | 2 |
| 9 | 7 | 4 | 1 | 6 | 8 | 5 | 2 | 3 |
| 6 | 1 | 3 | 5 | 9 | 2 | 7 | 8 | 4 |
| 5 | 8 | 2 | 7 | 4 | 3 | 1 | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100% புலமைப்பரிசில் இலவசம்

**மறைமுகக் கட்டணங்கள் எதுவுமில்லை**




*Career Success Skills*
*English Language Skills*
*Computer Skills*

**கல்வி அமைச்சினால் முற்றிலும் இலவசமாக, பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த, தொழில் வாய்ப்பைத் தேடும் இளையோருக்கான திறன்விருத்திக் கற்கைநெறி எமது அனைத்துக்கிளைகளிலும் ஒரே நாளில் ஆரம்பமாக இருக்கின்றது. ஆர்வமுடையோர் தொடர்பு கொள்ளவும்**

GATEWAY TECH

தலைமையகம் :
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 567 5555

கிளைகள்:

| நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி, 021 567 8444 | 50, பருத்தித்துறை வீதி நல்லியாடி, 021 226 2395 | கரடிப்போக்குச் சந்தி, கண்டி வீதி,கிளிநொச்சி 021 228 0068 |
|---|---|---|


### விளையாட்டு விழா

கைதடி கலைநகர் வளர்மதி முன்பள்ளியில் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில், வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் சி. திரவியம் தலைமையில் நடைபெறும்.(ஒ-ரி- 788)


**விற்பனைக்கு**

கோப்பாய் கிளுவானை ஒழுங்கையில் (வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடி) 7 பரப்புக்காணியுடன் வீடு விற்பனைக்குள்ளது
தொடர்பு கொள்ளவும்
0771 125 349
0775 953 196

**கருங்கல்**

சான்பிளாஸ்ட் மூலம் எழுத்துக்கள் பொறித்து வழங்க 1 சதுர அடிக்கு கல்லுடன்
3500/= மட்டுமே
S.S.JASOTHARAN ARTS
0777 110 610



## மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவராகவும், கல்வியியற்துறையின் விரிவுரையாளராகவும், உத்தம பணியை ஆற்றிவரும் பல்துறை வல்லோன்

**கலாநிதி.த.கலாமணி**



அவர்கள் யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை மணிவிழா காண்கின்ற இனிய நாளிலே அவரது சேவையைப் பாராட்டி அன்புடன் வாழ்த்துகின்றோம்.

*கல்வி நிறை பெரியோனாய் கலைமகள் திருவுருவாய்*
*பல்லறிவும் கொண்டு பண்புடை கருமமாற்றி*
*வல்லமையும் வாய்மையும் நிறைவாக வார்த்தையில் கனிவாக*
*பல்துறை வல்லோனாய் பண்புடன் வாழ்பவரே- வாழியவே!*

ஆசிரிய மாணவர்கள்- 2012/ 2013
பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழுநேரம்) கல்வியியற்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்





**காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச்சபை**

*அம்பிகை அடியார்களே!*

மேற்படி ஆலயத்தின் இராஜகோபுரம், மணிமண்டபம், உட்பிரகாரத்திருத்த வேலைகள் செய்து அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடத்துவதற்காக திருப்பணிச்சபையினர் முழுமூச்சாக செயற்பட்டு வருகின்றனர். இத்திருப்பணியை நிறைவேற்ற பலகோடி ரூபா தேவைப்படுகின்றது. அம்பாளின் அடியார்கள் தாராள மனதுடன் வாரி வழங்கி இத்திருப்பணியாம் பெரும்பணியை நிறைவேற்ற உதவி புரிந்து அம்பாளின் அருட்கடாட்சத்தை பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம். பண உதவி செய்ய விரும்புவோர் நேரடியாக திருப்பணிச் சபைக் காரியாலயத்தில் அல்லது "THIRUPANI SABAI' BANK OF CEYLON, ACCOUNT No: 7641518, KARAINAGAR (SWIFT CODE BCEYLKLX) எனும் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தி வங்கியில் வைப்புச் செய்த ரசீதை திருப்பணிச் சபைக் காரியாலயத்தில் கொடுத்து பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள் :
075 5860153/ 077 0711206/ 021 226 4237

| தலைவர்/பெறுநர் வே.நடராசா | (C/8242)(5,6,7) | செயலாளர் திருப்பணிச்சபை |
|---|---|---|



# ஓமந்தை, வண்ணான்குளம் கண்ணகை அம்மன் பொற்கோவில்
## மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

மாபெரும் இன்னிசை நிகழ்வு **11.04.2013** மாபெரும் வீணை கச்சேரி









சுப்பர் சிங்கர் புகழ்




இசை நிகழ்வுகள் மாலை 6.30 மணியளவில் ஆரம்பமாகும்

**நாட்டியாஞ்சலி**

நாட்டிய கலா ரத்னா
**திவ்யா சிவநேசன்**
அவரது அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி மாணவிகளுடன் இணைந்து வழங்கும்
**ஸ்வாத்ம நாதம்**



*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111

## உடன் விற்பனைக்கு

திருநெல்வேலி சிவன் அம்மன் கோவிலுக்கு அருகில் மணல்தறை ஒழுங்கையில் அமைந்துள்ள காணி (1பரப்பு 3குளி) கிணறு, மூன்றுபக்க மதில், மலசலகூட வசதியுடன் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு- 0776589624

(35774) (18.09)

## Vacancy
### Sanken Construction (Pvt) Ltd.

Having the following Vacancies in Jaffna Branch.

**Asst.Engineers** - N.D.T/ HNDE Civil Eng. Candidates Only

**Quantity Suveyors** - B.Sc(Q.S) from University of Moratuwa or N.D.T.(Civil)

*Details to be Sent*

**The Manager,**
**Sanken Construction (Pvt) Ltd.,**
**31,Wyman Road, Nallur,Jaffna.**
**Email:jayanthi@sankenconstruction.lk**

(C/8083)(5.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,அத்தியடி,அம்பலவாணர் வீதியில், 4 பரப்பு காணி,கிணறு மற்றும் வீட்டுடன் விற்பனைக்குண்டு. 2,2 பரப்பாக பிரித்தும் வழங்கப்படும்.

(29351)(5-6-7) தொடர்பு: 077 923 9334

## COMPUTER REPAIR

உங்கள் கணினியில் ஏற்படுகின்ற எவ்வாறான பழுது பார்த்தல் நடவடிக்கைகளுக்கும் எங்களை அழையுங்கள். உங்கள் வீடுகளுக்கே வந்து உடனடியாக திருத்தி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-0758354251

## O/L பிரத்தியேக வகுப்புக்கள்

கணிதம் - A.K. யசிந்தன்

புதிய பிரிவு III மிக விரைவில்

யாழ். நகர் 0771882518

## சேவை

Canada, Australia, France, UK, Swiss, Italy, German, New Zealand மற்றும் ஏனைய நாடுகளுக்கும் Visit Visa, Student Visa, Sponsor, Bank Balance.

இந்த அனைத்தும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

(சி/8123)(5-6-7) 0773-637864

## காணி விற்பனைக்கு

பழைய வீட்டுடன் 8 பரப்பு காணி பருத்தித்துறையில் தும்பளை றோட்டில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0777 495688

(சி/8115)(5-6-7)

## சேவை

வெள்ளவத்தை - Langaa Medical Mission - Home Nursing பயிற்சி பெற்ற எமது தமிழ் தாதிமார்கள் அன்பாகவும், நம்பிக்கையுடனும் உங்கள் வீடுகளுக்கு வந்து சேவையாற்றுவார்கள். முதியோர் இல்லம் உண்டு.. (சி/8126) (2.6)

71-1/1, மெனிங் பிளேஸ், 0777 569 382

## கடைகள் வாடகைக்கு

நுணாவில் மேற்கு, தேவாலயத்திற்கு முன்பாக ஏ - 9 வீதியில் புதிதாக சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட மூன்று கடைகள் (மொத்தமாக 1200 சதுர அடி) வாடகைக்கு உண்டு. (27620) (45.6.7)

தொடர்பு: 077 5190 675

## தேவை

* பணியாளர்கள் - பெண்கள்
* நெல்லிக்காய் * சிறுகுறிஞ்சா இலை
* கருவேப்பிலை

தொடர்பு: அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்து உற்பத்திசாலை. 0773535516

(36785) (2.6.7)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் றோட், சேச்சிற்கு முன்பாக உள்ள 451/1, 451/2 எனும் இலக்கத்தைக் கொண்ட ஒன்றே முக்கால் (1¾) பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தனியார் வகுப்புக்கள் நடத்துவதற்கு அல்லது தங்குமிட விடுதிகள் அமைப்பதற்கு உகந்தது.

தொடர்பு:
077 3405 856, 071 8098 052

(சி/8124) (45.6.7)

## அறிவித்தல்

### அண்ணா ரயர் வேக்ஸ்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகில் ஏ - 9 வீதி, இல. 229 இல் இயங்கி வந்த அண்ணா ரயர் வேக்ஸ் வழமையான இடத்தில் இயங்கிவருகிறது. பெயர் மாற்றமோ இடம் மாற்றமோ செய்யப்பட வில்லை என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்.

(27821) (45.6.7)

## மரண அறிவித்தல்

### கனகசபாபதி சற்குருநாதன்

(முன்னாள் பிரதம பொறியியலாளர்- Dept. of Machinery equipment, Pallegala, Kandy)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், UK ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி சற்குருநாதன் (பொறியியலாளர்) UK இல் 04.04.2013 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. க.கனகசபாபதி-சவுந்தராம்பிகை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், வியாபாரி மூலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் சு.பெ.மு.கனகசபாபதி-பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், கிருபாவதியின் அன்புக் கணவரும், ஜனனி, நிமலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி சேதுநாயகி சண்முகநாதன், காலஞ்சென்ற திருமதி இரத்தின பூபதி சிவப்பிரகாசம் மற்றும் Dr. இரத்தினவடிவேல், சண்முகநாதன் (பொறியியலாளர்), திருமதி பங்கஜதேவி - சோமாஸ்கந்தன் (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி மனோன்மணி - வசந்தநாதன் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமரகுரு (KBM Brothers), Dr. ரகுநாதன், சுந்தரேசன் (Goby Traders), பாஸ்கரன் (KBM Brothers), மோகனதாஸ் (KBM Brothers) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2013) ஞாயிற்றுக் கிழமை UK இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்

325(253), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். 021 2219328
00447952429183 (லண்டன்) (35769)(10.6.7)

தகவல்:
சகோதரிகள்
(பங்கஜதேவி,
மனோன்மணி)

## டுபாய்



TANZIFCO

கிளீனர்ஸ் (ஆண்)
சுத்திகரிப்பாளர்கள்

| தொகை | சம்பளம் |
| --- | --- |
| 100 | 700 + 150 (Basic + Allowance) |

அரசாங்க நிர்ணய கட்டணம் DHS 1 = Rs.35/-



AL/1980/ADVT/60/12

<u>நியதிகளும் நிபந்தனைகளும்</u>

- 02 வருட கால ஒப்பந்தம் , 06 மாத கால பயிற்சி
- வாரத்தில் 06 நாட்கள் வேலை.ஒரு நாளைக்கு 08 மணித்தியாலங்கள் வேலை
- தங்குமிடம், பாதுகாப்பு மற்றும் மருத்துவ வசதி இலவசம்
- மற்ற எல்லா நியதிகளும் நிபந்தனைகளும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தொழிற் சட்ட பிரகாரம்
- ஒப்பந்த கால முடிவில் திரும்பி வர இலவச விமான டிக்கட்

1980

(சி/8122) (2.6)

FLEX Graphic

### பான் குளோபல்

ரெக்ருட்மன்ட் (பிரைவட்) லிமிடட்
இல. 351/1 ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, கொழும்பு 03
(மகாநாம வித்தியாலயத்திற்கு அருகில்)

தொடர்பு கொள்ள
0773140802
0773140788
0115300100

## அபாட்மண்ட் விற்பனைக்கு

கொழும்பு கின்சி றோட், வாட் பிளேஸ் சந்தி அருகில் கின்சி றோட்டில் ஒரு அபாட்மண்ட் விற்பனைக்கு உண்டு. (வைத்திய கல்லூரி, நசனல் ஆஸ்பத்திரி, கண் ஆஸ்பத்திரி அருகில்) (சி/8117)(5-6-7)

தொடர்பு: 077 259 3012

## வீடு/காணி விற்பனைக்கு

கோப்பாயில்,யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியில் வீட்டுடன் 7 பரப்புக்காணி விற்பனைக்குண்டு முழுமையாகவோ பகுதியாகவோ பிரித்துக் கொடுக்கப்படும் தொடர்பு : (சி/8120) (2.6.7)

0785381399,0112638168

MMW

## வீடு வாடகைக்கு விடப்படும்

ஆடியபாதம் வீதி, நந்தாவில் அம்மன் வீதிச் சந்தியில், சகல வசதிகளுடனும் கூடிய புத்தம் புதிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு (ஐந்து வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகளும் உண்டு) தனியார், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (35770)

தொடர்பு: 0774374244, 0774369277

## FAST TRACK DEGREE



- குறுகிய காலத்தில் உங்கள் பட்டப்படிப்பை தொடர்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
- Degree and Masters:-
  BA,BBA,BSc, LLB, MA, MBA, Msc, LLM
- பட்டப்படிப்பை பூர்த்திசெய்ய முடியாதவர்கள்,பட்டப்படிப்பை தொடர விரும்புபவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
- சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சிறந்த பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை தொடர முடியும். (சி/8127) (2.6)
- குறைந்தபட்ச தகைமை O/L & A/L
- B1, B2, A1 பரீட்சைகளுக்கான ஆலோசனைகளும், UK Student Visaக்களுக்கான வழிகாட்டல்களும் வழங்கப்படும்.

**Hotline: 0770660475**

**No.162B, Galle Road, Dehiwala.**

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பரும் நுணாவில் மத்தியைச் சேர்ந்தவருமான

**மார்க்கண்டு மதியழகன்**

கடந்த 01.04.2013 அன்று சவுதி அரேபியாவில் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (27822)(6.7.11)

வே.சிறிகாந்தராஜா

## மரண அறிவித்தல்

### மனுவேற்பிள்ளை குணரத்தினம்



யாழ். சில்லாலையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட மனுவேற் பிள்ளை குணரத்தினம் நேற்று (06.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - செல்லம்மா தம்பதியரின் அருமை மருமகனும், கமலாதேவி, லீலாதேவி, தனேஸ்வரி, சாரதாம்பாள், விமலாதேவி, காலஞ்சென்றவர்களான குமார குலசிங்கம், நாகராசா ஆகியோரின் சகோதரரும், லட்சுமியின் பாசமிகு கணவரும், வாசுகி, சுகிதரன் (டுபாய்), நளினி (லண்டன்), பாஸ்கரன், சிறிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவமதி, திருலோகநாதன், பார்த்தீபன் (லண்டன்), விஜிதா, யசோதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான சிவாஜினி, தேவி ஆகியோரின் மைத்துனரும், சிந்துஜன், திருசனா, பிரியங்கா, பிரவின், பிரியந்தி, கதிரவன், சங்கீதா, போமிகா ஆகியோரின் பேரனும், பிரதீபா, நவஜீவா, விஜித்தா, சுஜித்தா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறிஸ்ரோர்ஸ் அன்ட் பயனீர் ஸ்ரேசனரி
திருலோகநாதன் (மருமகன் - 077 6995 696/ 021 225 5276),
பாஸ்கரன் (மகன்- 077 3247 192).

தகவல்:
குடும்பத்தினர்
மூத்ததம்பி லேன்,
மானிப்பாய்.

(35766) (45.6.7)

## REALMATRIMONYயின் மணப்பந்தல்

- 1983, ரேவதி 4, Marine Engineer,Singapore மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1979, திருவாதிரை 2 , UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1980, அத்தம், Assistant Manager,Singapore மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1979, பரணி, Merchant Navy,Canada PR மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1981, Chirstian RC,Accountant,Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1980,சித்திரை 2,Bank Officer,Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- 1984, பரணி, Technical Officer,Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- 1983, புரட்டாதி, Engineer Singapore மணமகனுக்கு மணமகள் தேவை
- 1985, ஆயிலியம் 2, Medical Officer Canada PR மணமகளுக்கு மணமகன் தேவை
- 1985, ரோகினி 1, Accountant,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1977, அனுஷம் Divorced Healthcare, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை
- 1976, மகம் 2, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை

**Real Matrimony(Pvt)Ltd**
இல.05, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel : 021 4923 739 / 864 / 738
WWW.realmatrimony.com ,E-Mail : support@realmatrimony.com

## REALMATRIMONY வழங்கும் சித்திரை புதுவருட விலைக்கழிவு

**சித்திரை 7 ம் திகதி தொடக்கம் 14 ம் திகதி வரை மட்டுமே!!**

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு ரியல் மற்றிமோனி அங்கத்துவ கட்டண கழிவு சலுகை 3 மாத கட்டணமாக 2000.00 (சித்திரை 7-14 வரைக்கும்).

இந்த கழிவு சலுகையை அனுபவிக்க இன்றே முந்துங்கள்.....

மேலதிக தகவல்களுக்கு அருகில் உள்ள கிளையை நாடுங்கள் அல்லது தொலைபேசியில் அழையுங்கள் (சி/8119) (2.6)

021-4923738, 021-4923739,
011-4380900, 011-4346130

MMW

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நாயகர்களின் போர்'

# வெற்றிக் கிண்ணம் மகாஜன வசமானது



வலி.வடக்கு, ஏப்.7

13 ஆவது தடவையாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற நாயகர்களின் போரில் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அதன்படி முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 126 ஓட்டங்களைப் பெற்று அனைத்து இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி 63 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மகாஜனக் கல் லூரி 14 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கை இழந்தநிலையில் முதலாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து நேற்று இரண்டாம் ஆட்டத்தை ஆரம்பித்தது மகாஜன அணி.

நேற்றைய தினமும் மகாஜனவின் துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றினர். தொடர்ந்து இலக்குககள் சரிந்து கொண்டிருந்தன.

மயூரன் 25 ஓட்டங்களையும், சாரங்கன் 10 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது டிலோசன், சுபதீபன் தலா 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்ற 35.2 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது மகாஜனக் கல்லூரி. உதிரிகளாக 13 ஓட்டங்கள் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் ஜனக்சன் 15 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், நிரோஜன் 1.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சிந்துஜன் 8 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், றொகான் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், கனுஜன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சொதப்பியது. துடுப்பாட்ட வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். கனுஜன் 22 ஓட்டங்களையும், ஜனக்சன் 16 ஓட்டங்களையும், சஜந்தன் 16 ஓட்டங்களையும், பிரசாத் 12 ஓட்டங்களையும் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையைச் சற்று உயர்த்தினர். ஏனைய வீரர்கள் சோபிக்கவில்லை.

இறுதியில் 34.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது ஸ்கந்தா. உதிரிகளாக 10 ஓட்டங்கள் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரி அணி சார்பில் ஜனந்தன் 8.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், கஜந்தன் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ரமேஷ்குமார் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், திலக்ஷன் 5 பந்துப்பரி மாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த ஜே.ஜனக்சன் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டார். எ.றொகான் சிறந்த களத்தடுப்பாளராகவும், மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த எ.பிரசாத் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், சகலதுறை வீரனாக எஸ்.கஜந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். போட்டியின் நாயகனாக ஜே.ஜனந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

(ற-86-38)

## கே.ஸி.ஸி.ஸி வி.கழகத்தின் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.7

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் 30 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

பிரதம விருத்தினராகக் கலந்துகொள்ளும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினரும், துடுப்பாட்ட வீரருமான எல்.நற்குணந்திரன் தொடரை ஆரம்பித்து வைப்பார்.

காலை 8.30 மணி

ஸ்ரீ காமட்சி வி.க. எதிர் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. வி.க.

பி.ப. 1 மணி

பற்றிசியன்ஸ் வி.க. எதிர் நியூ ஸ்ரார் வி. க. (ற-23)

## வலிகாமம் வலய கிரிக்கெட் போட்டிகள் இன்று

வலி.வடக்கு, ஏப்.7

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் இன்று காலை 8 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், இணுவில் மத்திய கல்லூரி என்பன மோதவுள்ளன. (ற-86)

### வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம்

## நியூ ஸ்ராரை வீழ்த்தியது திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ.

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் ஓர் ஆட்டத்தில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி வெற்றி பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் திருநெல்வேலி வை.எம். எச்.ஏ. அணியும், நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 24.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 134 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

றேகன் 21 ஓட்டங்களையும், ரமணன் 26 ஓட்டங்களையும், சஞ்ஜீத் 24 ஓட்டங்களையும், நிரஞ்சன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் வை.எம். எச்.ஏ. அணி சார்பில் சுபாஸ், சிந்துஷன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், நிலான் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வை.எம்.எச்.ஏ. அணி 38 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

சந்துரு 15 ஓட்டங்களையும், இராஜேந்திரம் ஆட்டம் இழக்காமல் 25 ஓட்டங்களையும், சுபாஸ் 15 ஓட்டங்களையும், நிலான் ஆட்டம் இழக்காமல் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் நியூஸ்ரார் அணி சார்பி[illegible]மணன் 2 இலக்குகளையும் [illegible] சீவ், அருண் ஆகியோர் [illegible] ஒரு இலக்கினையும் வீ[illegible]ர். (ற-23)

## தாவடி காளி அம்பாள் சம்பியன்



யாழ்ப்பாணம், ஏப்.7

கைதடி தென் கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வலிகாமம் ரீதியாக நடத்திய தாச்சிப் போட்டியின் இறுதியாட்டத்தில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கடந்த புதன்கிழமை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது.

பரபரப்பாக நடந்த போட்டியில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 8:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

சிறந்த விளையாட்டு வீரனாக தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக வீரர் ராஜாவும் தொடர் ஆட்ட நாயகனாக புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி வீரர் கொட்வினும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-23)

## சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப் 7

ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கத்தின் சேவைநலன் பாரட்டுவிழா இன்று மாலை 4மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள் ளது.

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தால் இந்த சேவைநலன் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் கி.மனோகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-23)

Midea Electro Mart
Midea PC Show Room
Authorized Dealer for Abans Ltd.

1. Samsung - 32" LED - 64900/= with Samsung DVD Player Free
2. Samsung - 22" LED - 36900/= with Samsung DVD Player Free
3. SONY - 32" LCD - ~~56900/=~~ SIEDLES 2 year's Warranty Special Price 51900/=
4. SONY - 32" LED - ~~69900/=~~ SIEDLES 2 year's Warranty Special Price - 65900/=
5. SONY - 24" LED - ~~39900/=~~ SIEDLES 2 year's Warranty Special Price - 37900/=
6. ONIDA - 24" LED - 31900/=

Refrigerator's விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளவும்.
Washing Mechine Special Promation

Woofer 2.1 - 2500/=
Woofer 5.1 - 6900/= - micro Lab
Singsung 5.1 - 12900/= Home Theater
DVD Player - 3990/=
IRON - 1200/= - Heavy
Mixture Grinder - 3900/=

Rice Cooker, Graainder, Kattel, Fan, DVD Player, Woofer, Water Filter போன்றவை.
புதுவருடத்தை முன்னிட்டு 13.04.2013 வரை விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அசத்தியது ராஜஸ்தான்

கடைசிப் பந்து வரை பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லி டெயாடெவில்ஸ் அணியை வீழ்த்தியது.

ஆறாவது ஐ.பி.எல். தொடர் இடம்பெற்று வருகின்றது. தொடரின் 4 ஆவது ஆட்டம் டெல்லியில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பம் முதலே பந்துகளை வீணடிக்காமல் ஓட்டங்களைக் குவிப்பதில் ராஜஸ்தான் ரோயல்ஸ் மும்முரம் காட்டியது. தொடக்க வீரர்களான குசய பெரேரா 12 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 14 ஓட்டங்களையும் ரஹானே 24 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 28 ஓட்டங்களையும் எடுத்தனர். அடுத்து வந்த ராகுல் டிராவிட் அதிரடி ஆட்டம் ஆடினார். 51 பந்துகளில், 2 ஆறு ஓட்டங்களும், 6 நான்கு ஓட்டங்களும் அடங்கலாக 65 ஓட்டங்களைக் குவித்து ஜடேஜாவின் பந்துவீச்சில் ஜயவர்த்தனாவிடம் பிடிகொடுத்து வெளியேறினோர். பின்னர் களமிறங்கிய பின்னி 20 பந்துகளில் 40 ஓட்டங்களைக் குவித்தார். எனினும் பின்வரிசை வீரர்கள் போதிய பங்களிப்புச் செய்யவில்லை.

இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 7 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

டெல்லி டெயாடெவில்ஸ் பந்துவீச்சில் யாதவ் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது டெல்லி டெயாடெவில்ஸ். மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த உன்முக்த் சந்த் 19 பந்துகளில் 1 ஆறு ஓட்டங்களும், 2 நான்கு ஓட்டங்களும் அடங்கலாக 23 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வோர்னருடன் வெளுத்துவாங்கினார் அணித்தலைவர் ஜெயவர்த்தனா. 16 பந்துகளில் 19 ஓட்டங்களைப் பெற்றநிலையில் சுக்லாவின் பந்து



வீச்சில் ரஹானேயிடம் பிடிகொடுத்து வெளியேறினார் ஜெயவர்த்தனா.

அடுத்து வோர்னர் - ஜூனேஜா இணை சிறப்பாக ஆடியது. வோர்னர் அரைச்சதம் கடந்தார். 2 பந்துப் பரிமாற்றங்கள் எச்சியிருந்த நிலையில் ஜூனேஜா 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அப்போது டெல்லி டேர்டெவில்ஸ் அணி 149 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அடுத்த சில பந்துகளிலேயே நம்பிக்கையளித்துக் கொண்டிருந்த வோர்னர் ஆட்டமிழந்தார். 56 பந்துகளில் 1 ஆறு ஓட்டங்களும் 9 நான்கு ஓட்டங்களும் அடங்கலாக 77 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 'ரன்அவுட்' முறையில் அவர் ஆட்டமிழந்தார்.

19 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 4 இலக்குகள் இழப்புக்கு 155 ஓட்டங்களைப் பெற்றிருந்தது டெல்லி டேர்டெவில்ஸ். 9 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தை எதிர்கொண்டது.

ரஸ்ஸலும் போத்தாவும் களத்தில் இருந்தனர். போத்தா 2 ஓட்டங்கள் கூடுதலாக எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். 2 பந்தில் 6 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் ரஸல் ஏமாற்றினார். இறுதியாக களமிறங்கிய நமன் ஓஜாவும் கைவிரிக்க 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சொந்த மண்ணிலேயே டெல்லி டெயாடெவில்ஸை வீழ்த்தியது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி.

ஆட்டநாயகனாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ராகுல் டிராவிட் தெரிவானார்.

# மயிரிழையில் மாண்டது சென்னை

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சொந்த மண்ணில் முதலாவது ஆட்டத்திலேயே தோல்வியைத் தழுவியது. அணித்தலைவர் டோனி இறுதிவரையில் அரைச்சதம் கடந்து போராடியபோதும் மும்பையிடமிருந்து வெற்றியைத் தட்டிப்பறிக்க முடியவில்லை.

ஐ.பி.எல். தொடரில் சென்னையில் நடைபெறும் முதலாவது ஆட்டம் என்பதால் ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் குவிந்திருந்தனர். மேலும் கடந்த ஐ.பி.எல். போட்டியில் இருமுறை சம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு சென்னை மைதானம் பெருமளவு கை கொடுத்தே வந்திருக்கிறது.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதல் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அந்த அணியின் தொடக்க வீரர்களாக சச்சினும், ரிக்கி பொன்டிங்கும் களம் இறங்கினர். முதல் பந்தை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நனிஸ் வீசினார். முதல் பந்துப்பரிமாற்றத்தில் 4 பந்துகளில் பொன்டிங் 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 5 ஆவது பந்தை சச்சின் எதிர்கொண்டார். ஆனால் சச்சின் 'எல்.பி.டபிள்யூ' முறையில் வெளியேறினார்.

இதனால் ஆட்டம் தொடக்கத்திலேயே சூடுபிடிக்கத் தொடங்கியது. ரிக்கி பொன்டிங்குடன், தினேஷ் கார்த்திக் இணைந்து கொண்டார். அவர் 9 பந்துகளில் 10 ஓட்டங்களை விறுவிறுப்பாகக் குவித்தார். ரிக்கி பொன்டிங் 10 பந்துகளில் 6 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அங்கித் வீசிய பந்தில் அவர் அஸ்வினிடம் பிடிகொடுத்து வெளியேறினார். இதனால் அந்த அணி 18 ஓட்டங்களில் 2 ஆவது இலக்கை இழந்து அதிர்ச்சிக்குள்ளானது.

தினேஷ் கார்த்திக்குடன் ரோஹித் சர்மா இணைந்தார். ரோஹித் சர்மா வந்த வேகத்தில் ஓட்டங்களை அதிரடியாகக் குவித்துக் கொண்டிருந்தார். 6.1 ஆவது பந்துப்பரிமாற்றங்களில் மும்பை இந்தியன்ஸ் அணி 41 ஓட்டங்களை எடுத்திருந்தது. அப்போது 8 ஓட்டங்களுடன் இருந்த ரோஹித் சர்மா பிரோவோவின் பந்தை எதிர்கொண்டார். அவர் டோனியிடம் பிடிகொடுத்து வெளியேறினார். 7 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்கை 41 ஓட்டங்களிலேயே பறிகொடுத்தது மும்பை இந்தியன்ஸ் அணி. இதனைத் தொடர்ந்து தினேஷ் கார்த்திக்குடன் அம்பாத்தி ராயுடு இணைந்தார். 8 ஆவது பந்துப் பரிமாற்றங்களில் மும்பை இந்தியன்ஸ் அணி ஒருவழியாக 50 ஓட்டங்களைக் கடந்தது. 9 ஆவது பந்துப்பரிமாற்றங்களில் 25 பந்துகளில் 37 ஓட்டங்களை எடுத்திருந்த தினேஷ் கார்த்திக், பிரோவோவின் பந்தில் எல்.பி.டபிள்யூ. முறையில் வெளியேறினார். மும்பை இந்தியன்ஸ் அணியில் சற்று நிலைத்து ஓட்டங்களைக் குவித்தவர் தினேஷ் கார்த்திக். இதனைத் தொடர்ந்து ராயுடுவுடன் பொல்லார்டு இணைந்தார். பொலாட் தொடக்கத்திலேயே நான்கு ஓட்டங்களாக விளாசத் தொடங்கினார். அப்போது 10 பந்துகளை எதிர்கொண்டு 7 ஓட்டங்களை எடுத்திருந்த ராயுடு. நன்னேஸிடம் பிடிகொடுத்து அரங்கு நோக்கி நகர்ந்தார். 11 ஆவது பந்துப்பரிமாற்றங்களில் 5 ஆவது இலக்கு இழப்புக்கு 75 ஓட்டங்களை எடுத்திருந்தது மும்பை இந்தியன்ஸ் அணி. பொலாட்டுடன், ஸ்மித் இணைந்தார். அவர் 3 ஓட்டங்கள் மாத்திரமே எடுத்திருந்த நிலையில் பிராவோவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். மும்பை இந்தியன்ஸ் அணி 83 ஓட்டங்களில் 6 ஆவது இலக்கையும் பறிகொடுத்தது.

அதன் பின்னர் பொலாட், ஹர்பஜன்சிங் இருவரும் இணைந்து மும்பையின் பாதையையே மாற்றியமைத்தனர். இருவரின் அதிரடியில் மும்பை அணி மேலதிக இலக்கு இழப்பைத் தவிர்த்து 148 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பொலாட் 38 பந்துகளில் 5 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 57 ஓட்டங்களையும், ஹர்பஜன் 21 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் பிராவோ 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்னை ஆரம்பம் முதலே சீரான இடைவெளியில் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்தது.

மத்திய வரிசையில் களமிறங்கிய அணித்தலைவர் டோனி மாத்திரம் பொறுப்புணர்ந்து விளையாடினார். டோனியின் தனிமனித ஆட்டத்தால் சென்னை வெற்றியை நோக்கிப் பயணித்தது. 18 பந்துகளில் 40 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் டோனியின் அதிரடி ஆட்டத்தால் 6 பந்துகளில் 10 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை என்ற நிலைக்கு வந்தது.

இறுதிப் பந்துப்பரிமாற்றத்தின் முதலாவது பந்திலேயே டோனி 26 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 51 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார். அத்தோடு சென்னையின் வெற்றியும் பறிபோனது.

இறுதியில் சென்னை 9 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் முனாப் படேல் 3 இலக்குகளையும், ஹர்பஜன், ஓஜா தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக மும்பையின் பொலாட் தெரிவானார்.



# டிராவிட்டுக்கு பத்மபூஷண்

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ராகுல் டிராவிட்டுக்கு பத்மபூஷண் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. பல்வேறு துறைகளில் சாதித்தவர்களுக்கு உயரிய விருதான பத்மபூஷண் விருது இந்திய அரசால் வழங்கப்படுகிறது.

இந்தநிலையில் விளையாட்டு துறையில் சிறப்பாக செயற்பட்ட கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட்டுக்கு பத்ம பூஷண் விருதை இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வழங்கி கௌரவித்தார். [ற]

# சேவாக் மிகவும் அபாயகரமானவர்

## – சுனில் நரைன்



சேவாக் மிகவும் அபாயகரமான துடுப்பாட்ட வீரர் என்று தெரிவித்துள்ளார் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சுழல்பந்து வீச்சாளர் சுனில் நரைன்.

கொல்கத்தா அணியில் இடம்பெற்றிருக்கும் சுனில் நரைன் தனது மயாஜாலப் பந்து வீச்சால் துடுப்பாட்ட வீரர்களைத் திணறடித்து வருகின்றார்.

டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணி பெற்றுக் கொண்ட வெற்றிக்கு, 4 விக்கெட்டுகளை வீழ்த்திய சுனில் நரீன் முக்கிய காரணமாக இருந்தார்.

இந்த வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே நரைன் இவ்வாறு தெரிவித்தார்.

''நான் பந்து வீசியவர்களில் ஷேவாக் மிகவும் அபாயகரமான துடுப்பாட்டக்காரர். சூழ்நிலையை குறித்து அவர் கவலைப்படமாட்டார், எப்போதும் பந்து வீச்சாளரை பின்னுக்கு தள்ளி விடுகிறார். வாய்ப்புக் கிடைத்தால் கவாஸ்கருக்கு ஒருமுறை பந்து வீச வேண்டும் என்று விரும்புகின்றேன்''–என்று அவர் தெரிவித்துள்ளார். [ற]

**இன்றைய ஆட்டம்**

ஹைதராபாத் சன்ரைசர்ஸ்

எதிர்

பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ்

இரவு 8 மணி

INDIAN PREMIER LEAGUE

# பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் உறுதியானவர்கள்

## – வசீம் அக்ரம் கூறுகின்றார்

''இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களை விட, பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறந்தவர்கள்''– இவ்வாறு தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சு நட்சத்திரம் வசீம் அக்ரம்.

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

''பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்களின் உடற்கட்டமைக்கு உறுதியானது. அவர்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பலமானவர்கள். ஆனால் இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் ஒரு வருடத்திற்குள் தங்களது இயல்பை இழந்து விடுகிறார்கள்.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் பங்குபற்றாமை வருத்தத்திற்குரியது. பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின்றி இந்தியன் பிறீமியர் லீக்கில் துடுப்பாட்ட வீரர்கள் இலகுவாக ஓட்டங்களைக் குவிக்கின்றனர்''– என்றார். [ற]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா சிவராத்திரியை முன்னிட்டு இலங்கை சார்பாக யாழ்ப்பாணம் கொக்குவில் கலாபவன மாணவன் ம.தபேந்திரன், சிதம்பரம் நாட்டியாஞ்சலி சபாவின் நாட்டியாஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டார். சிதம்பரம் நாட்டியாஞ்சலி சபாவில் இம்முறை கலந்து கொண்ட இலங்கையைச் சேர்ந்த இருவரில் இவரும் ஒருவர். சாந்தினி சிவனேசனின் மாணவரான தபேந்திரனின் நடன நிகழ்வின் ஒரு காட்சி. (ம-7)



வட்டுக்கோட்டை தாவளை சைவ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். உதயராணி கலந்து கொண்டார். (ம)



'நாம் இன்று பயிரிடுவோம்; நாளை பயன் பெறுவோம்' என்ற தொனிப் பொருளில் நான்கு மில்லியன் மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் மரக் கன்றுகளை மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு யாழ்.இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது. பாடசாலை அதிபர் வீ.கணேசராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிபரால் மாணவன் ஒருவனுக்கு மரக்கன்று வழங்கப்படுகின்றது. (ம-5)



வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் சேவை நயப்பு விழா பணியாளர் நலன்புரி சங்கத்தின் தலைவர் நா.அருணகிரிநாதன் தலைமையில் இடம்பெற்றது.
இதில் 40 வருட சிறப்பு சேவையாற்றி சிறந்த உள்ளூராட்சி சேவையாளன் என்ற விருது பெற்று ஓய்வு பெற்ற சிதம்பரநாதன் சிறிகாந்தன் சிறப்புரையாற்றுகிறார். (ம-50)



நவாலி கிழக்கு முதியோர் சங்கத்துக்கு அவ்வூரைச் சேர்ந்த அன்பரொருவர் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக அனுப்பி வைத்த பணத்தின் மூலம் உலர் உணவுப் பொருள்கள், பால்மா வகைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டு சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டன. (ம-100)



ஆறுதல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முன்பள்ளி டிப்ளோமா பயிற்சி நெறியில் சித்திபெற்ற தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 31 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்றது. தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக 'ஆறுதல்' நிறுவன நிறைவேற்று அலுவலர் சுந்தரம் டிவகலாலா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-9)



கில்னர் வீதி, யாழ்ப்பாணம் ஸ்ரீ மகா மாரி அம்பாள் தேவஸ்தானத்தில் மார்கழி மாத திருவெம்பாவை வீதி பஜனையில் பங்குபற்றியோருக்கான பரிசளிப்பு விழா அண்மையில் ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்பெற்றது. பிரதம விருந்தினராகப் பங்குபற்றி பரிசில்கள் வழங்கிய கலாபூஷணம் கே.எஸ்.ஆர்.திரு ஞானசம்பந்தர் ஓதுவார் மூர்த்தி பொன்னாடை போர்த்தியும் மாலை சூட்டியும் கௌரவிக்கப்பட்டார். ([illegible])



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் உத்தியோகத்தர்கள் இரத்ததானம் வழங்கினர். (ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691 (20772)(15-14)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
**O/L DAYCLASS**
புதிய பிரிவு ஆரம்பம்
12.04.2013 காலை 8 மணி
➡ கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
➡ O/L Day Class நடைபெறும் ஒரே இடம்.
முதல் அனுமதி பெறும் 100 மாணவர்களுக்கு மட்டுமே பிரிவு | இல் அனுமதி (C8216)

## 2015 A/L வர்த்தகத் துறைக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

★கணக்கீடு - B.Balakajan B.Com (Jaffna), H.N.Dip.in.Acc
★வணிகக்கல்வி - V.K Ravikaran B.Com, PGDE
★பொருளியியல்- L.Regi B.A.(Hons) Special in Econimics
இடம்: 32, பேபின்றாயகம் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.(யாழ்.கச்சேரி அருகில்)
காலம்: 10.04.2013 புதன்கிழமை
நேரம்: 3.00.P.M தொடக்கம் 6.00.P.M வரை
T.P-0777046968

## வகுப்புக்கள்

AVR மூவி மேக்கரின் (இந்தியா) ஜெய் சர்வ மகா கலாஷேத்திரத்தின் ஊடாக வைரவப் புளியங்குளம், வவுனியா என்ற முகவரியில் அமைந்துள்ள காமராஜர் பல் கலைக்கழகம் (வவுனியா கிளையில்) பின் வரும் கலை வகுப்புக்களை நடத்த உள்ளது.

1. ஓவியம்
2. மேற்கத்தேய நடனம் (பிரேக்)
3. ஒயிலாட்டம்
4. பரதநாட்டியம்
5. நாடகம்
6. நடிப்பு, திரைப்படப்பயிற்சி
7. படத்தொகுப்பு (Vedio Editing)
8. வீடியோ, புகைப்படம் எடுத்தல் பயிற்சி
9. யோகாசனம்
10. மிருதங்கம்
11. சங்கீதம்
12 சிலம்பாட்டப் பயிற்சி

15.04.2013 இக்கு முன்பு தமது பதிவுகளை காமராஜர் பல்கலைக்கழகம் வவுனியாக் கிளையில் நேரடியாகவோ, விண்ணப்பப்படிவங்கள் ஊடாகவோ மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
தொடர்பு: 077-4604576 (சி/7501)(10,8,7)

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு-

advt@uthayan.com
0215671111

## ABI BABY MART in

பரிசு மழை
1000/= மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களிற்கும் பரிசுப்பொருள்கள்! உடனேயே தங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். காத்திருக்காமல் உடனேயே விரையுங்கள்...!
Discount 10% - 20% வரை
★ 3000/= மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் பெயர்கள் 13.04.2013 11 மணிக்கு குலுக்கலும் இடம் பெறும்.
#267, Brown Road, Jaffna.

## STUDY IN UK

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
GCE(O/L) தகமை போதுமானது
April/ May Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்
நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14
EXPONET
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## சேவிஸ் ஸ்ரேசன் மெசினரிஸ்

4, 8, 12, 16 தொன் லிப்டுகள்(Hydraulic Hoist)
கொம்பிரசர் (Air Compressor)
பிரசர் பம்ப் (Washing/ High pressure pumps)
கிரிஸ் பம்ப் (Grease pumps/ Heavy duty)
வெக்கும் கிளீனர்ஸ் (Vacuum Cleaners)
ஓட்டோ லிப்ட், பைக் லிப்ட் (Hydraulic)
சகல திருத்துதல் வேலைகளும் செய்து தரப்படும்.
**CARTEC TRADING (PVT) LTD**
லீசிங் வசதி செய்து தரப்படும்
94, 4ஆம் குறுக்குத்தெரு (அடைக்கலமாதா ஆலய வீதி), யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077687 2656, 0777265181
வெகு விரைவில் மட்டக்களப்பில் எமது கிளை ஆரம்பம். (35628)(10,6,7)

## FRENCH LANGUAGE CENTRE

யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்
**FRENCH CLASSES**
Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).
690 க்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்..
ஆரம்பம்: 20.04.13 Sat 2 pm
No. 23, Palaly Road, அரியகுளம். (அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
ஆரம்பம்: 23.04.13 Tue 11am
No, 181, 1st Floor, Main Street, Nelliady. (கோஷி வீதி முன்பாக)
T.P. 0779 789 456
English (A1,B1,IELTS), Italian, Deutsch, Sinhala வகுப்புக்களும்...

## Wiring, Pipeline வேலைகள் செய்து கொடுக்கப்படும்

Hot and Cool water mixing மற்றும் Bathroom fitting போன்ற pipeline வேலைகளும், Wiring வேலைகளும் நவீன முறையில் செய்து தரப்படும்.
தொடர்புக்கு: (26206) (10,6,7)
077- 9305008 B. தீபன்

## IELTS A1 B1 B2 KU Education

Quick Preparation Available Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்.உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய.அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கியதும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

## Personal Class (கணினி)

✱ உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
✱ MS Office, DTP, Web Design, Internet and E-mail, Graphic Design, சிறுவர்களுக்கான கற்கைநெறி
✱ சான்றிதழ்கள் வழங்கப்படும்.
✱ குறிப்பு: கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
✱ ஆசிரியர்: KRC
✱ T.P: 0779672038 நல்லூர் (34212)(8,6,10)

## சர்வதேச புலவர் திருமணசேவை

(10.05.1962 இல் இந்து திருமண சேவையில்)
நீங்கள் விரும்புகின்றபடி உள்நாட்டு, வெளிநாட்டுத் திருமணங்களைச் செய்துகொள்வதற்குத் தொடர்பு கொள்ளவும்.
மதுராகனம் (வடக்கின் தலைமையகம்)
238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0212227147, 0758427395
106, கச்சாய் வீதி, சாவகச்சேரி 0214900733, 0755287045 (35656)

## வேலையாள்கள் தேவை

சுத்திகரிப்புச் சேவைக்கு ஆள்கள் தேவை. 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவை.
தொடர்புகளுக்கு: 077 193 0272, 077 127 5158, 077 421 7892 (35752)(6,7,11)

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends
- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- இலவச Tutorial Facilities

**City & Guilds** A1 A2 B1 B2
Duration: 48 hrs Week/ Week ends
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL,SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

Certificate in **SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறைமூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்க முடியும்.
- O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படும்.

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்
#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## தற்போது யாழ் நகரில்...

edexcel UNIVERSITY OF WOLVERHAMPTON
சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்
UK Degree in
- Marketing
- Business Management
- Human Resources Management

- பகுதி / முழு நேர பாடநெறியை தொடரும் வாய்ப்பு
- உங்கள் தொழில் தகைமையை கூட்டிக் கொள்வதற்கான அரிய வாய்ப்பு
- இலகு தவணை கட்டண முறைமை
- பட்டப்படிப்பு வரை யாழ்ப்பாணத்திலேயே நிறைவு செய்ய முடியும்
- நவீன கற்றல் சூழலில் கற்பதற்கு ஓர் அரிய வாய்ப்பு



www.bcas.lk ISO 9001:2008 CERTIFIED 14 Years of Trust & Excellence in Higher Education
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers - Transforming Lives
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar
Macro Ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



இவன் யார் என்று தெரிகிறதா?

07



03

சர்வதேசம் சரியாகச் செயற்படவில்லை

அணுகுண்டு வீசுவதற்கு வடகொரியா தயார்



21



பஸ் படும் பாடும் படாத பாடும்

04



பரதேசி (திரைவிமர்சனம்)

20


# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 07 ஏப்ரல் 2013 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


தில்லாலங்கடி

# ஒரு கொலை நால்வர் கைது அவர் யார்...?

கடந்த சில வாரங்களாக யாழ். குடாநாட்டில் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் மிகத் தீவிரமாக சில தமிழ் இளைஞர்களை வேட்டையாடி வருகின்றனர்.

கொக்குவில் நந்தாவில்அம்மன் கோயில் பகுதியில் 06.12.2012 திகதியன்று கோடரியால் வெட்டிக் கொல்லப்பட்ட சிங்களவர் ஒருவரின் கொலை தொடர்பிலேயே கொழும்பிலிருந்து வரும் பொலிஸார் இந்தத் தீவிர வேட்டையில் இறங்கியிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் வீதி அகலிப்பு வேலைகளை மேற்கொண்டுவரும் தனியார் நிறுவன ஊழியர் ஆர்.டபிள்யூ.டி.நிசாந்த சம்பத் ராஜபக்ஷவே வெட்டிக் கொல்லப்பட்டவர். பதுளையைச் சேர்ந்தவர் இவர்.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 19 கொலைச் சம்பவங்களில் ஒன்று இவருடையது. ஆனால் மற்றைய கொலைகளுக்கு கொடுக்காத முக்கியத்துவத்தைக் கொடுத்து இந்தக் கொலை தொடர்பில் மட்டுமே பொலிஸார் மிகத் தீவிரமாக இயங்கி வருகிறார்கள்.

பொதுவாக சாட்சியங்களைக் கொண்டு வாருங்கள் அல்லது குற்றவாளி யார் என அடையாளம் காட்டுங்கள்; நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறும் பொலிஸார் இந்தக் கொலையில் மட்டும் யாரும் சாட்சியம் சொல்லாதபோதும், துருவித் துருவி விசாரணை செய்கிறார்கள். அதனால்தான் இந்த விடயத்தில் அப்படி என்னதான் இருக்கிறது என்ற ஆர்வம் 'உதயன்' பத்திரிகைக் குழுவுக்கும் ஏற்பட்டது.

எம்மிடம் எழுந்த முதல் கேள்வி, இந்தக் கொலையில் பொலிஸார் இவ்வளவு ஆர்வம் காட்டுவதற்கான காரணம் அவர் சிங்களவர் என்ற ஒரே காரணம் தானா என்பதுதான். அப்படியல்ல; அதையும் தாண்டி அவர் படைகளுக்கு மிகவும் வேண்டப்பட்டவராக இருந்திருக்கக்கூடும் என்ற ரீதியிலும் ஒரு சிலர் கூறுகின்றனர். ஒருவேளை நீதியான ஒரு விசாரணை நடத்தப்படுமாக இருந்தால், சம்பத் ராஜபக்ஷ யார்? அவர் உண்மையில் யாருக்கு வேலை செய்தார்? அவரது இரகசிய உண்மை வேலைகள் என்ன? போன்ற விவரங்களும் நீதி விசாரணையில் வெளிவரக்கூடும்.

இவர் கொலை செய்யப்பட்ட பின்னர் கடந்த ஜனவரி மாதமளவில் யாழ்ப்பாணத்தில் சில 'போஸ்டர்'கள் ஒட்டப்பட்டன. பின்னர் மார்ச் மாதமளவில் கொழும்பிலிருந்து வந்து குதித்த குற்றப் புலனாய்வு அணியினர் தேடுதல் மற்றும் கைது வேட்டைகளை சட்ட ரீதியாகத் தொடக்கினர். பொலிஸார் இரு இளைஞர்களைக் குறிவைத்துத் தேடுகின்றனர் என்பது எமது குழுவின் அலசலில் சிக்கியது. அந்த இரண்டு பேரும் அவர்களது வீடுகளில் இப்போது இல்லை. தப்பியோடி விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.



குறித்த இரு சந்தேகநபர்களையும் கைது செய்வதற்காக பொலிஸார் கையாளும் நடவடிக்கைகள் மனித உரிமை மீறல்களுக்கு நிகரானவை என்று மனித உரிமைக் காவலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த மார்ச் 18 ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் நீர்வேலியில் ஒருவரை கொழும்பிலிருந்து வந்த பொலிஸ் குழுவினர் சந்தேகத்தின் கைது செய்ததுடன் கைதுப் படலம் ஆரம்பித்தது.

வீட்டில் நித்திரையாகக் கிடந்த எங்களை எழுப்பினார்கள். 2 பேர் பொலிஸ் சீருடையில் இருந்தார்கள். மற்றவர்கள் 'சிவில்' உடையில் இருந்தார்கள். வாகனம் விக்கிறது தொடர்பில் ஒரு பிரச்சினை என்று சொல்லி அவரை கொண்டு போய் விசாரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். பொலிஸ் வாகனத்தில் இல்லாமல் சாதாரண வானில தான் வந்து ஏற்றிக் கொண்டு போனார்கள்'' என்கின்றனர், அந்த நபரின் குடும்பத்தினர்.

மறுநாள் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு உறவினர்கள் சென்றபோது கைது செய்யப்பட்டவரைக் காட்ட பொலிஸார் மறுத்து விட்டனர். 20ஆம் திகதியே உறவினர்களுக்கு அவரைக் காட்டியுள்ளனர். அதன் பின்னர் 26ஆம் திகதி வரையில் அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஆனால் நீதிமன்றத்தின் முன்பாகவோ நீதிவானின் முன்பாகவோ அவர் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

26ஆம் திகதி கொழும்புக்குக் கொண்டு செல்வதாக உறவினர்களுக்கு தெரிவித்து விட்டுச் சென்றுள்ளனர். சந்தேகநபர் கைது செய்யப்பட்ட சில நாள்களின் பின்னரே ''நந்தாவில் அம்மன் கோயில் பகுதியில் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புபடுத்தியே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்ற உண்மை விடயத்தை குடும்பத்தவர்களிடம் தெரிவித்திருக்கின்றனர் பொலிஸார்.

கைதானவர் ஒரு 'கராத்தே' மாஸ்டர்.

பொலிஸ் தேடும் சந்தேகநபர்களில் சிலர் இவரிடம் கராத்தே கற்றனர் என்பது தானாம் அவர் கைது செய்யப்படுவதற்கான காரணம் என்று பொலிஸார் குடும்பத்தினரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

தாங்கள் தேடுபவர்கள் தம்மால் கைது செய்யப்பட்டால் அல்லது அவர்களாகச் சரணடைந்தால் மாத்திரமே 'கராத்தே மாஸ்டர்' விடுவிக்கப்படுவார் என்றும் கூறியிருக்கிறார்களாம்.

நீதிமன்றத்தில் முற்படுத்தப்படாமல் பாதுகாப்புச் செயலரால் வழங்கப்படும் டீ.ஓ. (DO- Detention Order) இலக்கம் போட்டே இவரைக் கைது செய்து வைத்

(சூரியகாந்தி 22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேசம் சரியாக செயற்படவில்லை

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவருமான செ.கஜேந்திரகுமார் அண்மையில் ஜெனிவா சென்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இரண்டு நிமிடங்கள் உரையாற்றி இருந்தார். தமிழர்களின் பிரச்சினைக்கு உடனடியாக இடைக்கால நிர்வாகம் ஒன்று தேவை என்று அவர் அங்கு வலியுறுத்தி இருந்தார். இலங்கை தொடர்பான சர்வதேச நிலைப்பாடுகள் தொடர்பில் அவருடனான சந்திப்பில் இருந்து.......

சந்திப்பு:டிலீப்

**இ**லங்கை அரசுக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபையில் இரண்டு தடவைகள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளன. இரண்டாவது தடவையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு வார காலம் கடந்த நிலையில் கிளிநொச்சியில் இரண்டு சம்பவங்கள் நிகழ்ந்தேறியுள்ளன. (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான தாக்குதல், உதயன் மீதான தாக்குதல்) இவற்றை எவ்வாறு நீங்கள் பார்க்கின்றீர்கள் ?**

இங்கு பிரச்சினையாக இருப்பதாக சர்வதேசம் குறிப்பிடும் விடயங்கள் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கின்றன. கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் இலங்கை அரசுக்கு நெருக்கடிகள், அழுத்தங்கள், தடைகள் இல்லை என்பது இதன் மூலம் வெளிப்படையாகத் தெரிகின்றது.

இலங்கை அரசின் ஆட்சிக்கு ஜெனிவா தீர்மானம் ஓர் அவமானம். ஆனால் அந்த அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு எந்த விதமான தடையும் அதனால் ஏற்படவில்லை.

இங்கே நடக்கும் தமிழின அழிப்பை தடை செய்யும் வகையில் எந்தவொரு சரத்தும் ஜெனிவா தீர்மானத்தில் இல்லை. தமிழின அழிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம். இந்தத் தீர்மானத்தில் அது நிறைவேற்றப்படவில்லை. சர்வதேச சமூகம் தனது பொறுப்பிலிருந்து இந்தத் தீர்மானம் மூலம் தவறியுள்ளது.

தீர்மானத்திலுள்ள குறைகளை வைத்துக் கொண்டுதான் இலங்கை அரசு, சிங்கள- பௌத்த- தேசியவாதத்தை முன்னெடுத்து செல்கின்றது. அரசின் கொள்கையே முழு இலங்கை தீவையும் சிங்கள- பௌத்த மயமாக்குவதுதான்.

இதன் வெளிப்பாடாகத்தான் கூட்டமைப்பின் மீதான கிளிநொச்சித் தாக்குதலையோ, எங்களால் மேற்கொள்ளப்படுகின்ற போராட்டங்கள் மீதான தாக்குதல்களையோ அல்லது அநியாயங்களை வெளிக்கொண்டு வரும் ஊடகங்கள் மீதான தாக்குதல்களையோ கொள்ள முடியும்.

தமிழ்த் தேசியத்தின் தூண்களை கட்டம் கட்டமாக இல்லாமல் செய்யும் வேலைத் திட்டம் தான் இன்று அப்பட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ் எதிர்ப்பு நடவடிக்கையும் தாண்டி முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கையையும் அரசு தொடங்கியுள்ளது.

**நீங்களும் ஜெனீவாவுக்குச் சென்றீர்கள் தானே? தீர்மானத்தில் உள்ள குறைகளை அங்கு முன்வைத்தீர்களா ?**

ஜெனிவாவில் 2 கோரிக்கைகளை முன்வைத்தோம். இன்று நடந்து கொண்டிருக்கின்ற இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய வகையில் சர்வதேச கண்காணிப்பிலும் சர்வதேச பாதுகாப்பிலும் இடைக்கால நிர்வாகம் வேண்டும் எனக் கோரினோம்.

நாங்கள் தனிநாடு பற்றிக் கதைக்கவில்லை. சிங்கள- பௌத்த தேசியவாதத்திலிருந்து தமிழர் தாயகப் பிரதேசங்களைக் காப்பதைப் பற்றித்தான் பேசினோம்.

போர் முடிந்த பின்னரும் நாங்கள் அழிந்து கொண்டிருக்கிறோம். இது ராஜபக்ஷ ஆட்சிக்கு முன்னரே தொடங்கியது. அவருக்குப் பின்னரும் நடக்கத்தான் போகின்றது. ஈழத்தில் நடந்ததை, நடப்பதை முழுமையாக விசாரித்து தொடர்வது இனப் படுகொலைதான் என்று சர்வதேசம் தீர்ப்பளிக்க வேண்டும்; குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**உங்களது இந்தக் கருத்துக்களை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளுமா?**

இனப்படுகொலையின் ஓர் அங்கமாகத்தான் போர்க்குற்றங்கள் இருக்கின்றன. சர்வதேச சமூகமும் முட்டாள்கள் இல்லை. சர்வதேச சமூகத்துக்கு இந்த விடயங்கள் நன்றாகத் தெரியும்.

இங்கு தற்போது நடப்பது, நடந்தது அப்பட்டமான இன அழிப்புத்தான் என்பதை ஆதாரபூர்வமாக சர்வதேசத்துக்கு சொல்லுகின்றபோது சர்வதேச சமூகம், இன அழிப்பைப் பற்றிக் கதைக்க வேண்டாம் என்று எங்களிடம் திரும்பச் சொல்கிறது.

ஓர் அரசு, தனது கட்டுப்பாட்டுக்குள்ளேயிருக்கின்ற ஓர் இனத்தைத் திட்டமிட்டு அழிக்கின்றது என்றால், அந்த இனத்தை அரசிடமிருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு உருவாகும். அந்தக் கட்டத்தில் சர்வதேச சமூகம் தமிழ்த் தேசியத்தை அங்கீகரித்து அதைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும்.

ஆனால் இன்று சர்வதேச சமூகம் அந்தக் கட்டத்துக்குச் செல்லத் தயாரில்லை. இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று நிரூபிக்கப்பட்டால் சர்வதேச கொள்கைகளின் அடிப்படையில் அவர்கள் அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டும். அதாவது தமிழர்களின் தேசத்தைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் அதற்குத் தயாரில்லை. ஒரு சில மட்டுப்பாடுகளுடன் நிறுத்திக் கொள்கின்றனர்.

சிங்கள பௌத்த தேசியவாதத்தை முன்னெடுப்பதை எதிர்க்கும் அனைத்துத் தரப்புகளையும் மௌனிக்க வைக்கின்ற ஒரு வேலைத்திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. மேலும் சிங்கள-பௌத்த தேசியவாதத்துக்கு எந்தவொரு தடையும் இல்லாமல், நாங்களே விரும்பி ஏற்றுக் கொண்டதைப் போன்ற நிலைமையை தோற்றுவிக்க முயற்சி எடுக்கப்படுகின்றது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் 3-4 வருடங்களில் நாங்கள் தமிழ்த் தேசியத்தைப் பற்றி கதைப்பதில் அர்த்தமிருக்கமாட்டாது.

**சர்வதேச சமூகத்தில் எந்தத் தரப்பு இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது?**

இலங்கைப் பிரச்சினை தொடர்பில் சீனா தலைமையிலான சர்வதேசம், அமெரிக்கா தலைமையிலான சர்வதேசம், இந்தியா தலைமையிலான சர்வதேசம் என்று மூன்று வகையாக சர்வதேசத்தை வகைப்படுத்த முடியும்.

மஹிந்த அரசின் வெளிவிவகாரக் கொள்கை சீனா சார்ந்த போக்கில் உள்ளது. அமெரிக்கா, இந்தியா இரண்டு நாடுகளுக்கும் நலன் சார் விடயங்களில் அது பிரச்சினையாக இருக்கின்றது.

இங்கு ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையைப் பழைய நிலைக்கு - சீனா சார் வெளிவிவகார கொள்கைகளிலிருந்து விடுவித்தக் கொண்டு செல்லலாம் என்று அமெரிக்காவும் இந்தியாவும் நினைக்கின்றன. ஆகவேதான் இலங்கை அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வரவில்லை. ஆட்சி மாற்றத்துக்குத்தான் நடவடிக்கை எடுக்கின்றனர். அரசின் செல்வாக்கை நாட்டு மக்கள் மத்தியில் குறைத்து ஆட்சி மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்றுதான் சர்வதேச சமூகம் செயற்படுகின்றது. மஹிந்த அரசு இதற்கு எதிராக சர்வதேசத்துடன் மோதிக் கொள்கின்றது.

அரசுக்கு எதிராக மட்டும் நடவடிக்கை எடுப்பதால் தமிழருக்குப் பிரயோசனமில்லை. வெறுமனே ஆட்சி மாற்றம் எங்களுக்கு உதவப் போவதில்லை.

சர்வதேச சமூகத்துக்கு தேவை இருக்கின்றது. எங்களைப் பயன்படுத்தி ஆட்சி மாற்றம் கொண்டு வர வேண்டிய தேவை இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைத்தான் தமிழர் தரப்பு சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எங்களைச் சர்தேசம் பயன்படுத்தும்போது அதனூடாக நாங்கள், தமிழர் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

**சர்வதேசம் விரும்புகின்ற ஆட்சிமாற்றம் நிகழ்ந்த பின்னர் தமிழர் பிரச்சினைக்கு என்ன நடக்கும்?**

புதிய அரசு இந்தியா மற்றும் அமெரிக்கா சார்பான சர்வதேசத்துக்குச் சார்பாக இருக்கும் பட்சத்தில் அதற்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்பதற்காகவே தமிழர் பிரச்சினைகள் கிடப்பில் போடப்படலாம்.

சர்வதேசத்தின் நோக்கம் இலங்கையில் ஆட்சி மாற்றம் தான்; தமிழர் பிரச்சினை அவர்களுக்கு முக்கியமல்ல.

புதிய கட்சி ஆட்சி வந்தால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய பிரச்சினை ஏற்படும். தமிழர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து பல தேசங்களை ஒன்றிணைத்து உருவாக்குகின்ற அடிப்படையில் ஒரு தீர்வை கொடுக்குமாறு கூறினால், அதனை செயற்படுத்த புதிய கட்சி நடவடிக்கை எடுத்தால் அந்த கட்சி சிங்கள அடிப்படைவாதிகளால் கவிழ்க்கப்படும். அதை சர்வதேசம் விரும்பாது.

புதிய ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்காத வகையில், ஆனால் மஹிந்த அரசை அவமானப்படுத்தும் வகையில்தான் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் சர்வதேசம் தெளிவாக இருக்கின்றது.

**சர்வதேசம் ஆட்சி மாற்றத்தை விரும்புகின்ற நிலையில் இடைக்கால நிர்வாகம் எப்படிச் சாத்தியமாகும் ?**

இடை நிலை நிர்வாகம் யதார்த்தமானது. இது பல நாடுகளில் - கிழக்கு திமோர், தென்சூடான் போன்ற பல்வேறு இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மோதல் நடைபெறும் இடத்தில் மோதலை நிறுத்துவதற்கும் தீர்வு காண்பதற்கும் மோதலால் பாதிக்கப்படும் தரப்பைப் பாதுகாப்பதற்கும் இது ஒரு இடைக்கால நிவாரணத்தைக் கொடுக்கிறது.

ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தலாம் என்ற நினைப்பில் சர்வதேச சமூகம் இருக்கின்ற வகையில் இடைக்கால நிர்வாகம் கடினமானதாகத்தான் இருக்கும்.

சிங்கள- பௌத்த தேசியவாதம் தங்களுக்கு சவால் என்று சர்வதேசம் உணரும் பட்சத்தில் சர்வதேசத்தின் நலன்களும் தமிழர்களின் நலன்களும் ஒரு புள்ளியில் சந்திக்கும் வாய்ப்பு இருக்கின்றது.

அந்தச் சந்திப்புப் புள்ளியை அடையும் வரையில் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும். இதற்கு இடைப்பட்ட காலப் பகுதி மிகவும் ஆபத்தானது. அதே நேரம் வாய்ப்புகளையும் கொடுக்கக் கூடியது.

**இலங்கை தொடர்பில் இந்தியா சார்ந்த சர்வதேசத்தின் நிலைப்பாடும் ஆட்சி மாற்றத்தைதான் எதிர்பார்க்கின்றதா ?**

இந்தியா ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கையின் வெளிவிகார கொள்கையான சிங்கள - பௌத்த தேசியவாதம் தங்களின் எதிரி என்பதை உணர்கின்றது.

இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகளை எதிரியாகப் பார்த்தது. தமிழீழ விடுதலைப் புலிகளை உலக வரைபடத்திலிருந்து அகற்றினால் இலங்கை தொடர்பான தங்களுடைய பிரச்சினை தீர்ந்துவிடும் என்று இந்தியர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் தற்போது இந்தியாவால், சிங்கள தேசிய வாதத்தை கையாள முடியாமல் இருக்கின்றது.

இந்தியா சார் நிலைப்பாடுகளை ஆதரிக்க சிங்கள மக்கள் தயாராக இல்லை. இந்த நிலைமை இந்தியாவுக்குத் தெரியும். இந்தியா பிராந்திய வல்லரசு. எத்தனையோ இடங்களில் மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஆட்சிகளை மாற்றியிருக்கின்றது.

**இந்தியாவில் ஒருவேளை ஆட்சி மாறினால் தமிழர் தொடர்பான அதன் வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுமா ?**

இல்லை! தமிழர் தொடர்பான நிலைமைகளில் அது மாற்றத்தை ஏற்படுத்தாது. இது கட்சி சார்ந்த நிலைப்பாடு இல்லை. யார் ஆட்சிக்கு வந்தாலும் வெளிவிவகார கொள்கை மாற்றமடையாது. உள்வீட்டு அரசியலில் கொள்கைகள் மட்டுமே மாற்றமடையும்.

**தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மாணவர் எழுச்சி - தமிழக அரசின் நிலைப்பாடு என்பன இந்திய மத்திய அரசையும் பாரதிய ஜனதா போன்ற முக்கிய தேசியக் கட்சிகளையும் அசைத்துப் பார்த்திருந்பதாகத் தெரிகிறதே?**

இந்திய மத்திய அரசுக்கு தமிழகத்தின் நிலைப்பாடு சவாலாக இருக்கின்றது. மாணவர்களோடு இது மட்டுப்படுத்த வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றனர். ஆனால் மாணவர் தரப்பு அதையும் மீறிச் செல்கின்றது. அரசியல் தரப்பினரும் அதனை ஆதரிக்கின்ற வகையில் நிலைப்பாடு மாற்றமடைந்திருக்கின்றது.

தமிழ்நாடு எழுச்சியடைந்து, சர்வதேச அரசியலை விளங்கிக் கொண்டு தனது கொள்கையை முன்வைக்கிறது.

தமிழ் நாட்டின் நலன்சார்ந்த விடயமாகவும் இது மாறுகின்றது. தமிழ் நாட்டில் சிறந்த நிலைப்பாடாக இது மாறுவதாக இருந்தால் மத்திய அரசு கவனிக்காமல் விட முடியாது.

வேறு மாநிலங்களில் சாதாரண பாரம மக்கள் நீதி, நியாயத்தின் அடிப்படையில்தான் முடிவெடுப்பார்கள், நலன்களின் அடிப்படையில் இல்லை. எனவே மக்கள் மட்டத்தில் ஏனைய மாநிலங்களுக்கும் இது பரவும் வாய்ப்பு உண்டு.

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் பரவும் அச்சுறுத்தல் அரசியல்



சந்திரசேகர ஆஷாத்

அண்மையில் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் இடம்பெற்ற பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடலில் இராணுவப் பேச்சாளர் ரூவான் வணிகசூரிய உரையாற்றியபோது, இலங்கையில் ஊடகச் சுதந்திரம் முழுமையாகப் பேணப்படுகிறது எனவும், ஆனால் இங்கு பலர் ஊடகச் சுதந்திரம் இல்லையெனக் காட்ட முயல்வதாகவும் தெரிவித்திருந்தார். மேலும் பிரசுரிக்கும் செய்திகள் இராணுவத்துடன் கருத்துப் பகிர்ந்து, அவர்களின் கருத்துகளையும் கேட்டு அதனையும் பிரசுரிக்க வேண்டும். அதை விடுத்து தம்மிடம் கருத்துகளைக் கேட்காமல் மற்றவரது கருத்தை மட்டும் பிரசுரிக்க வேண்டாம் எனவும் ஊடகங்கள் தம்முடன் கைகோர்த்துச் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

### ஊடக சுதந்திரத்துக்கு வரைவிலக்கணம்

அவர் அங்கு ஊடகச் சுதந்திரம் முழுமையாக நிலவுகிறது என்று கூறிவிட்டு வெளியிட்ட அடுத்த விடயங்களே ஊடகங்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பாக அச்சுறுத்தல் கலந்த எச்சரிக்கையாகவே அமைந்துள்ளது. அதாவது தம்மிடம் கேட்காமல் மற்றவர்களின் கருத்துகளைப் பிரசுரிக்க வேண்டாம் எனப்படும்போது அந்த மற்றவர்கள் எவராயிருப்பினும் அவர்களின் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. அங்கே ஊடக தர்மம் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. அதாவது தமது அனுமதியின்றி எந்தக் கருத்தும் மக்களைச் சென்றடையக் கூடாது என்றும், அதற்கு ஊடகங்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கோரப்படும் வேளையில் எங்கே இருக்கிறது ஊடகச் சுதந்திரம்?

அடிப்படையில் அவரின் பார்வையில் அரசினதும், அரச சார்பு சக்திகளினதும், படையினரதும் கருத்துகளை வெளியிடுவதும் அவற்றை நியாயப்படுத்துவதுமே ஊடகச் சுதந்திரம் எனக் கருதப்படுகிறது.

அங்கு ஒரு ஊடகவியலாளர் யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகை விநியோகஸ்தர் தாக்கப்பட்டமை தொடர்பாகவும், 'உதயன்' கிளிநொச்சிப் பணிமனை தாக்கப்பட்டமை தொடர்பாகவும் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு உதயன் பத்திரிகை விநியோகஸ்தர்கள் தாக்கப்பட்டமை தனிப்பட்ட பிரச்சினை எனவும் பணிமனை தாக்கப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் பதிலளித்திருந்தார்.

'உதயன்' பத்திரிகை விநியோகஸ்தர் தாக்கப்பட்டமை தனிப்பட்ட பிரச்சினை என்றால், பத்திரிகைக் கட்டுகள் ஏன் நடு வீதியில் போட்டு எரிக்கப்பட்டன? அடுத்தடுத்த நாளில் ஏன் தினக்குரல் பத்திரிகை விநியோகஸ்தர் தாக்கப்பட்டு, பத்திரிகைகள் எரிக்கப்பட்டன? "பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்" என ஒரு பழமொழி தமிழில் உண்டு. பொய்யைக்கூடப் பொருந்தவும் சொல்லாத இராணுவப் பேச்சாளர் போன்றவர்களிடம் கேட்டுத்தான் எதையும் பிரசுரிக்க வேண்டும் என்றால் ஊடக சுதந்திரம் தப்பிப்பிழைக்க முடியுமா?

ஆனால் அவர்கள் மொழியில் அவர்கள் சொல்பவற்றை, அவர்களின் கருத்துகளை பிரசுரிப்பது மட்டுமே ஊடக தர்மம் எனக்கொள்ளப்படுகிறது. அந்த வரையறைக்குள் வர மறுப்பவர்கள் கொலை, கொலை முயற்சி, தாக்குதல், நிறுவனங்கள் மீதான வன்முறைகள் எனப் பலவிதமான அச்சுறுத்தல்கள் மத்தியிலேயே ஊடகப்பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையில் கொல்லப்பட்டவர்கள், கொலை முயற்சிகளில் தப்பிப் பிழைத்தவர்கள், காணாமற் போனவர்கள், உயிர்ப் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறியோர், சிறையில் அடைக்கப்பட்டுப் பலவித சித்திரவதைகளை அனுபவித்தவர்கள் என ஒரு நீண்ட ஊடகவியலாளர் பட்டியலே உண்டு.

ஆனால் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதுமில்லை, தண்டிக்கப்படுவதுமில்லை. அப்படி ஓரிருவர் தவிர்க்க முடியாத நிலையில் கைது செய்யப்பட்டாலும் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு வெளிநாடுகளுக்குத் தப்பியோடி விடுவார்கள்.

இலங்கையில் அவர்கள் கூறும் முழுமையான ஊடகச் சுதந்திரம் இப்படித்தான் அமைந்துள்ளது. அச்சுறுத்தல் அரசியலின் மத்தியிலேயே ஊடகவியலாளர்கள் உயிரைப் பணயம் வைத்தே தமது பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கிளிநொச்சியில் 'உதயன்' பணிமனை மீது கொச்சைத் தமிழ் பேசிய முகமூடிக் காடையர்களால் அகோர வன்முறைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதற்கு அடுத்த நாளிலேயே இராணுவப் பேச்சாளர் ஊடகச் சுதந்திரத்துக்குப் புதிய வரைவிலக்கணம் கொடுத்து விளக்கமளித்துள்ளார் என்றால் அதன் அர்த்தத்தை எவரும் புரிந்து கொள்ள முடியும். அவர் மறைமுகமாக வெளிப்படுத்திய கருத்துத்தான் குறிப்பிட்டது போன்று ஊடகங்கள் நடக்கத் தவறினால் இப்படியான சம்பவங்கள் இடம்பெறும் என்பதுதான்.

### சகல துறைகளிலும் சட்டமீறல்கள்

இப்படியான சம்பவங்கள் ஊடகத்துறை மீது மட்டுமல்ல பல முனைகளிலும் தீவிரமடைந்து வருவதை நாம் காண முடியும். அரசு ஆதரவு பெற்றவர்கள் எது செய்தாலும், எத்தகைய சட்ட மீறல்களில் ஈடுபட்டாலும் அவர்கள் காப்பாற்றப் படுவார்கள் என்பது பல சந்தர்ப்பங்களில் மீண்டும் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இப்போது அது மேலும் தீவிரமடைந்து வருகின்றது. சட்டம், ஒழுங்கு, நியாயம் என்பனவெல்லாம் இவர்கள் விஷயத்தில் வேறு அர்த்தங்களைக் கொண்டுவிடுகின்றன.

### முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம்

ஞாயிறு காரம்

பொதுபல சேனா என்ற சிங்கள பௌத்த தீவிரவாத அமைப்பு முஸ்லிம்களுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது. இது 'ஹலால் சான்றிதழ்' வழங்கப்படுவதற்கு எதிரான போராட்டமாகும். முஸ்லிம் அமைப்புகளும், முஸ்லிம் அரசியல் வாதிகளும் எவ்வளவோ விட்டுக் கொடுப்புகளை மேற்கொண்ட போதிலும் அவர்கள் திருப்தியடையவில்லை.

அடுத்து அவர்களின் பார்வை முஸ்லிம் பெண்களின் பாரம்பரிய உடையான 'ஹபாயா' மீது பாய்ந்தது. மன்னம்பிட்டியில் இரு முஸ்லிம் பெண்களின் ஹபாயா உடையைக் களைய முயற்சி செய்யும் அளவுக்கு அவர்களின் அடாவடித்தனம் கொடிகட்டிப் பறந்தது. எனினும் பெண்கள் இருவரும் ஓடி தபாலகத்துக்குள் புகுந்து தப்பிவிட்டனர்.

எனினும் முஸ்லிம் தலைமைகள் அமைதி காத்து இன நல்லிணக்கத்தைக்காப்பாற்றிக்கொண்டன.

இந்த நிலையில் கொழும்பு புறநகர்ப் பகுதியிலுள்ள பிப்பிலியானவிலுள்ள 'பாஷன் பக்' என்ற ஆடை விற்பனை நிறுவனத்தின் மீது அங்கு சிங்களப் பெண்கள் வேலைக்கமர்த்தப்பட்டு துன்புறுத்தப்படுவதாகக் கூறப்பட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் சில பிக்குகள் தலைமையிலான ஒரு குழுவினரே ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் பத்திரிகையாளர்கள் உட்படப் பலர் காயமடைந்ததுடன், வாகனங்கள், ஆடைகள் உட்படப் பல பொருள்கள் சேதப்படுத்தப்பட்டன. நீண்ட நேரத்தின் பின்பே அதிரடிப்படையினர் வந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். பொலிஸார் முன்னிலையில் இடம்பெற்ற இந்த வன்முறை தொடர்பாக எவரும் உடனடியாகக் கைது செய்யப்படவில்லை. பின்பு சிலர் கைது செய்யப்பட்டனர். மூன்று பிக்குகள் சரணடைந்தனர்.

வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது 'பாஷன் பக்' நிறுவனம் வழக்கைத் தொடர விரும்பவில்லை என அறிவித்த நிலையில் நீதிபதி எதிரிகளை எச்சரித்து விடுதலை செய்தார். 'பாஷன் பக்' ஏன் வழக்கைத் தொடர மறுத்தது என்பது தான் இங்கு எழும் கேள்வி. பாதுகாப்புச் செயலரின் ஆதரவு பெற்ற பொதுபல சேனா இந்தத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லையென மறுத்த போதும் அந்தத் தலைமையே செய்திருக்கக் கூடுமென நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் உட்படப் பல தரப்பினரும் நம்புகின்றனர்.

'பாஷன் பக்' ஒரு வர்த்தக நிறுவனம். அது மேலும் வழக்கைத் தொடருமானால் பல்வேறு ஆபத்துகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரலாம். அப்படியான நிலையில் தங்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லையென்பதை அவர்கள் அறிவார்கள். ஏற்கனவே பொலிஸார் முன்னிலையில் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் அதைத் தடுத்து நிறுத்த அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாக்குதல் இடம்பெற்றவுடன் உடனடியாக அமைச்சரவை கூட்டப்பட வேண்டும் எனக் குரலெழுப்பிய நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆள்கடத்தைத் தடுப்பது தொடர்பான மாநாட்டில் பங்குகொள்ள இந்தோனேஷியா போய் விட்டார். இந்தத் தாக்குதல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் பதவியைத் துறந்துவிட்டு வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமை ஏற்படும் எனச் சவால் விட்ட அமைச்சர் றிசாத் பதியுதீன் சீனத் தூதுவருடன் வர்த்தக உறவுகள் தொடர்பான பேச்சுகளில் இறங்கி விட்டார்.

எல்லோரும் கைவிட்ட நிலையில் அரசியல் பின்னணி கொண்ட சிங்கள பௌத்த தீவிரவாத சக்திகளின் முன் அந்த வர்த்தக நிறுவனம் என்ன செய்ய முடியும்? வேறு வழியில்லாத நிலையில் அது வழக்கைத் தொடர விரும்பவில்லை எனக்கூறித் தன்னைத்தானே காப்பாற்றிக் கொண்டது. ஒரு பெரும் வெளிப்படையாகத் தெரியாத அச்சுறுத்தலுக்கு அவர்கள் பணிந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

அமைச்சர் மேர்வின் டி சில்வாவின் மகனான மாலங்கா சில்வா ஒரு இராணுவ மேஜரைத் தனிப்பட்ட களியாட்ட விடுதி ஒன்றில் வைத்துத் தாக்கியமைக்காகக் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டுப்பின் பிணையில் விடுவிக்கப்பட்டார். இராணுவ மேஜர் கடமை நேரத்தில் சூதாட்ட விடுதியின் பாதுகாவலராகச் செயற்பட்டார் எனவும் அவர் இராணுவ நீதிமன்றில் விசாரிக்கப்படவுள்ளார் எனவும் அவர் பற்றிப் பல செய்திகள் வெளிவந்தன. இப்படிப் பலவித அச்சுறுத்தல்களுக்கு உள்ளான அவர் தன்னை மாலக சில்வா தாக்கவில்லை எனச் சொல்லிவிட்டார். வழக்கு விசாரணைக்கு வந்தபோது போதிய சாட்சியங்கள் இல்லையெனச் சட்டமா அதிபர் தெரிவித்ததன் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இவை அண்மைய சம்பவங்கள் மட்டுமே. இதற்கு முன்பு கூட இப்படியான பல நியாயத்தையும், நீதியையும் புறந்தள்ளிவிட்டு அரசும், அரச ஆதரவு அமைப்புகளும் தாம் நினைத்தபடி வன்முறைகளை அரங்கேற்றி வந்துள்ளன. இவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொலிஸார் அவற்றைக் கண்டுகொள்வதில்லை. அப்படியானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படும் நிலை வரும்போது அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் காப்பாற்றப்படுகிறார்கள்.

தென்னிலங்கையிலும் சரி, வடக்குக் கிழக்கிலும் சரி ஒரு பயங்கர அச்சுறுத்தல் நிலை படரவிடப்பட்டுள்ளது. மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான ஜனநாயக வழியிலான போராட்டங்கள் அரச படைகளாலும், அரச சார்பு காடையர் கூட்டத்தாலும் அடக்கியொடுக்கப்படுகின்றன. அதேவேளை அரச சார்பு வன்முறைகளுக்கு சகல ஆதரவும் வழங்கப்படுகிறது.

இதே அடிப்படையில் தான் 'உதயன்', 'சுடரொளி' நிறுவனங்கள் மீது தொடர்ந்து கொலைகளும், கொலை அச்சுறுத்தல்களும் விடுக்கப்படுகின்றன. ஆனால் இதுவரை விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லப்பட்ட போதிலும் எவரும் கைது செய்யப்படவுமில்லை, நீதியின் முன் நிறுத்தப்படவுமில்லை.

எப்படியிருப்பினும் இலங்கையில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் மேலும் மேலும் வலுப்படுத்தப்படும் அதேவேளையில் நாட்டில் பரந்த அளவில் கட்டவிழ்த்து விடப்படும் ஒரு வன்முறை அரசியல் மூலமும், அச்சுறுத்தல் வழிமுறைகள் மூலமும் ஜனநாயக விழுமியங்கள் புறந்தள்ளப்படுகின்றன என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் படும்பாடும் படாத பாடும்

■ சோபனா




"நாங்கள் படாத பாடுபட்டுத்தான் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிடம் லைசன்ஸ் எடுத்தம். இப்ப எங்கடை பஸ்களைத்தான் அடிக்கடி பொலிஸ் மறிக்குது. அது இருக்கோ! இது இருக்கோ? என்று ஆயிரம் கேள்வி கேட்கினம். ஆனால் எங்களுக்கு பின்னாலையும் முன்னாலையும் வழி அனுமதிப் பத்திரம் இல்லாமல் பல பஸ்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடுது. அதை யாரும் மறிப்பதாக இல்லை. காசையும் கட்டிப் போட்டு சுதந்திரமா பயணிகளைக் கொண்டு போய் இறக்கவும் முடியாமல் நாங்கள் படுகிற பாடு இருக்கே.......".

யாழ்ப்பாணம்-கொழும்பு சேவையில் ஈடுபடும் அரைச் சொகுசு பஸ்களின் உரிமையாளர் ஒருவரின் குமுறல் இது.

தனது பெயரைச் சொன்னால் எங்கே தனது பஸ்கள் இன்னும் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டிவருமோ என்ற பயத்தில் தனது விவரங்களை மறைத்துக் கொள்ளுமாறு அவர் உதயனிடம் கேட்டார்.

கொழும்பு-யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடுகின்ற தனியார் சொகுசு பஸ்கள் இடையிலான போட்டியால் அடிக்கடி சேவை நிறுத்தங்கள் நடப்பது வாடிக்கையாகிவிட்டது. பஸ்கள் தாக்கப்படுவதும் பஸ்களின் சாரதிகள் தாக்கப்படுவதுமான சம்பவங்களும் அவ்வப்போது இடம்பெறுகின்றன.

இந்த முரண்பாடுகள், கைகலப்புகள் தொடர்வதற்கு முக்கிய காரணம் வழி அனுமதிப் பத்திரம் இல்லாத பஸ்கள் சேவையில் ஈடுபடுவதே என்று தனியார் பஸ்களின் யாழ்ப்பாண உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

"நாங்கள் வழி அனுமதிப்பத்திரம் எடுப்பதற்கு கிட்டத்தட்ட 4-5 வருடங்கள் அலைந்து திரிந்து காலிலை விழாத குறையாக கெஞ்சித்தான் எடுக்கிறம். சட்ட ஒழுங்குகளின்படி நடந்தால் ஒரு பிரச்சினையும் வராது என்றுதான் நினைச்சம். இப்ப நடக்குறதைப் பார்த்தால் அனுமதிப் பத்திரத்தை எடுக்காமல் பஸ் ஓடியிருக்கலாம் என்று தோன்றுகிறது" எனக் கவலைப்படுகிறார் மற்றொரு பஸ் உரிமையாளரான அப்பன். மூன்று அரைச் சொகுசு பஸ்களை யாழ்ப்பாணம்-கொழும்பு சேவையில் ஈடுபடுத்தியுள்ளார் அவர்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் பஸ் அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்து, 4-5 வருடங்கள் கடந்தும் கிடைக்காததால் ஏமாற்றம் அடைந்த நிலையில் தமது பஸ்களை உள்ளூர் சேவையில் ஈடுபடுத்தியுள்ள யாழ்ப்பாண பஸ் உரிமையாளர்களும் உள்ளனர். ஆனால், வழி அனுமதி இல்லாமல் 'பசின்' கணக்கான தென்னிலங்கை பஸ்கள் யாழ்-கொழும்பு சேவையில் ஈடுபடுகின்றன. பொலி ஸாரும் அவற்றைக் கண்டும் காணாது விட்டு விடுகின்றனர் என்கிறார்கள் இங்குள்ள பஸ் உரிமையாளர்கள்.

இதனால், பெரும் சிரமங்களுக்கு இடையில் நுழைந்து வழி அனுமதிப் பத்திரம் பெற்ற பஸ் உரிமையாளர்கள் இரண்டும்கெட்டான் நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளனர்.

"என்னுடைய 2 பஸ் இப்ப, கொழும்பு-யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடுது. 2 பஸ்ஸுக்கும் வழி அனுமதிப்பத்திரம் இருக்கு. மாதம் 60 ஆயிரம் ரூபா ஒரு பஸ்ஸுக்கு வரிக்காசாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு கட்டுறன். ஆனால் வரிக்காசைக்கூட திரும்ப எடுக்க ஏலாத நிலைதான் இருக்குது. பயணி களை ஏற்ற முடியாதுள்ளது. சொகுசு பஸ் குறைந்த காசோடை ஏத்துறாங்கள் என்று பயணிகள் சொகுசு பஸ்சிலை ஏறிப் போயினம். நாங்கள் ஒரு 10 பேரோடைதான் கொழும்பு போறாம். இடையிலை லைசன்ஸ் இருக்கோ அது இருக்கோ இது இருக்கோ என்று பொலிஸ் மறிச்சுக் கேட்கும். முன்னுக்கு லைசன்ஸ் இல்லாமல் போற பஸ்களை மட்டும் கண்டும் காணாதது போல விட்டு விடுவினம்" என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத பஸ் சாரதி ஒருவர்.

யாழ்ப்பாணம்-கொழும்புக்கான சேவையில் ஈடுபடுகின்ற தனியார் அரைச் சொகுசு பஸ்களில் எத்தனை பஸ்கள் வழி அனுமதிப்பத்திரம் பெற்றுள் ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு சரியான விவரம் தெரியாது. அதிகாரிகளின் ஓடர்களின் பிரகாரம் சில பஸ் உரிமையாளர்களுக்கு மட்டும் உடனடி வழி அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், அதே பெயரில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களை பொலிஸார் இடை மறிக்காத அளவுக்கு 'ஸ்பெஷல்' அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பாதிப்படைந்த பஸ் உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த நிலையில் சுமார் 15 இற்கும் மேற்பட்ட அரைச் சொகுசு, சொகுசு பஸ்கள் வழி அனுமதிப்பத்திரம் பெறாமல் தற்போது சேவையில் ஈடுபடுவதாகவும், அவற்றில் அதிகளவு தென்னிலங்கையைச் சேர்ந்த பஸ் உரிமையாளர்களின் பஸ்கள் எனவும் அறிய முடிகிறது.

ஈழப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏ-9 பாதை சீராக இருந்த காலத்தில் மதவாச்சி, மாங்குளம் ஆகிய இடங்களில் தனியார் பஸ்கள் மறிக்கப்பட்டு, 'லைசன்ஸ்' சோதனையிடப்பட்டது. அப்போது மாற்று வழிகளைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டதால், 'லைசன்ஸ்' இல்லாமல் எந்த பஸ்ஸும் சேவையில் ஈடுபடவில்லை என் கிறார்கள். இன்று நிலைமை அப்படியல்ல. "சாரதிகள் தமக்குத் தெரிந்த வழிகளால் கொண்டு போயினம். பொலிஸும் இதைக் கவனிப்பதில்லை. இப்ப நேர் வழியிலை சகல ஆவணங்களோடைபோற பஸ்களை மட்டும்தான் பொலிஸ் மறிக்குது. இது தொடர்பாக பல இடங்களில் முறைப்பாடு கொடுத்து களைச்சுப் போய்க் கைவிட்டாச்சு. பொலிஸ் மட்டும்தான் இதற்கு சரியான முடிவு எடுக்க முடியும்" என்று தெரிவிக்கின்றார் தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ. கெங்கா தரன்.

வருடாந்தம் 7 லட்சத்துக்கும் கூடிய தொகையை தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு வரிப்பண மாகச் செலுத்திவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 40இற்கும் மேற்பட்ட பஸ் உரிமையாளர்கள் இந்த சட்ட விரோத பஸ் ஓட்டத்தால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடிபோல் அரைச் சொகுசு பஸ் உரிமையாளர்களுக்கு தென்னிலங்கையர்களால் மட்டுமின்றி யாழ்ப்பாணத்தவர்களாலும் பாதிப்புத்தான்" அரைச் சொகுசு பஸ்ஸுக்கு ஒரு பயணிக்கு 666 ரூபா வாங் குறம். ஆனால் சொகுசு பஸ்களில 500 ரூபா யோடவும் பயணிகளை ஏத்தீனம். சனமும் காசு குறைய, அதோட சொகுசு பஸ் என்பதால் அதிகம் பேர் அதில ஏறிப் போகினம்" என்றார் பஸ் உரிமையாளர் ஒருவர்.

ஏ-9 வீதியில் நிற்கும் பொலிஸாரைத் தவிர்ப்பதற்காக வழி அனுமதி இல்லாத சொகுசு பஸ்கள் ஏ-9 வீதியைத் தவிர்த்து கைதடி வீதியூடாக மாற்றுப் பாதைகளால் கொழும்புக்குச் செல்கின்றன. முயற்சி எடுத் தால் பொலிஸாரால் உடனடியாக இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். இல் லையேல் இதுவே வடக்கு-தெற்குக்கான மற் றொரு மோதலுக்கு அடித்தளமாகிவிடக் கூடும்.

**"வருடாந்தம் 7 லட்சத்துக்கும் கூடிய தொகையை தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு வரிப்பண மாகச் செலுத்திவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 40இற்கும் மேற்பட்ட பஸ் உரிமையாளர்கள் இந்த சட்ட விரோத பஸ் ஓட்டத்தால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன- உடல் இயந்திரம்:

## கருத்தியல் மீளுற்பத்தி

■ ந.மயூரரூபன்

கலை இலக்கியங்கள் தொடர்பான பார்வையில் மனதின் அமைப்பும், மன - உடலின் இயங்கியலும் அதிக கவனத்தை பெற வேண்டியவை. ஒரு படைப்பு, ஒரு படைப்பாளி, ஒரு பத்திரிகை, ஒரு சஞ்சிகை கொண்டிருக்கின்ற கருத்தியல் / புரிதல் அமைப்பும் மாற்றமும் என்பன தனியனின் சுயம் (Individual Consciousness), கூட்டுநிலை (Collective Consciousness) என்பவற்றிலும் அவற்றின் பிரக்ஞை உடைப்பிலுமே தங்கியிருக்கின்றன.

ஒரு மன - உடலின் நிலையியல் (Static) தன்மையும் இயங்கியல் (Dynamic) தன்மையும் வெளிப்படுத்துகின்ற படைப்பு உருவாக்கம் என்பது அதன் கருத்தியல் அமைப்பிலேயே பிணைந்துள்ளது. இங்கு கருத்து (Concept), கருத்தியல் (Ideology) என்ற சொற்கள் ஐரோப்பிய சிந்தனைத் தளத்தில் பெறப்பட்டவை - மார்க்சிய சிந்தனைத் தொடர்ச்சியின் வழியாக அறியப்படுபவை.

கருத்தியல் என்பது வெறும் பிரமை, வெறும் கனவு எனவும் கருத்தியலுக்கு வரலாறு இல்லை எனவும் 'ஜேர்மன் கருத்தியல்' எனும் நூலில் மார்க்ஸ் கூறியுள்ளார்.

ஆனால் அல்தூசர்,

''கருத்தியல் என்பது நனவிலி மனதை ஒத்தது. நனவிலி மனதுக்கு செயற்பாடு உண்டு. வரலாற்றைக் கடந்தது - எல்லாக் காலங்களிலும் உள்ளது. இதேபோல் தான் கருத்தியலும் வரலாற்றைத் தாண்டியது. தனக்கான செயற்பாட்டைக் கொண்டது.'' - என்கிறார்.

இது பொதுவான கருத்தியல் கோட்பாடாக அணுகப்படுகிறது.

இத்தகைய புரிதலில்; ஒரு மன - உடலின் வெளிப்பாட்டு இயங்குநிலைக்கான நிலையியல் அமைப்பை கீழ்வரும் காட்டுருக்கள் மூலம் அடையாளப்படுத்த முடியும்.










ஒரு தனியன் சமூகத்துடன் கொள்ளக்கூடிய கற்பனைத் தொடரின் பிரதிநிதியாக கருத்தியலைக் கணிக்க முடியும். அதற்கு மேற்குறித்த காட்டுருவே எடுத்துக்காட்டு. தனியனின் கருத்தியல் மையம் என்பது; மதம், கல்வி, குடும்பம், சட்டம், அரசியல், பால், தொடர்பு சாதனம், சாதி போன்ற சமூக நிறுவனங்களின் (Social Institutions) அதிகாரப் பண்பாட்டு முலாம் பூசப்பட்ட ஒரு வடிவமே.

இங்கு தனியன் கருத்தியல்,

பால் → அதிகாரம் → பண்பாடு / கலாசாரம் → உடல்-மனம் எனும் மூடுண்ட கடத்து நிலை அமைப்பைக் கொண்டது. இங்கு பால் + சாதி இணைந்து தருகின்ற அதிகார பண்பாட்டு கருத்தியல் மையத்தைக் காணலாம். இதேபோல் பால் + சாதி + மதம் இணைந்த அமைப்பு என பால் + சாதி + மதம் + கல்வி + .......... என்றவாறான இணைந்துருவாக்க கருத்தியல் மையமே உருப்பெறுகிறது.

பொதுவாக ஒரு சமூகம் அளந்து தருகின்ற ஆரையிலேயே தனியனின் - சமூகக் குழுவின் கருத்தியல் வெளி வரையப்படுகிறது. அதனை நம்புகிறோம், கொண்டாடுகிறோம், கட்டுண்டிருக்கிறோம்.

ஒரு சமூக அமைப்பு தனது உற்பத்திக்கான நிலைமைகளை மறு உற்பத்தி (Reproduction) செய்யாது விட்டால் அது ஒரு ஆண்டுக்குக்கூட நிலைக்காது என மார்க்ஸ் கூறுகிறார்.

### கருத்தியலுக்கும் இதே நிலைதான்

சமூகத்தின் நிறுவனங்கள் சமூகவயமாக்கத்தினூடாக (Socialization) கருத்தியல் மறு உற்பத்தியை (Reproduction of Ideology) நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. சாதி அமைப்பு, பாலினம் தொடர்பான கருத்தியல்கள் தமது அமைவையும், செயலையும் இவ்வாறே மீளுற்பத்தி செய்து கொள்கின்றன.

கருத்தியலுக்கு வரலாறு இல்லை என்பதன் அடிப்படை இதுதான். வரலாறு எப்போதும் ஒன்று என்ற அர்த்த நிலை உண்டு. எனவே கருத்தியலுக்கு வரலாறு உண்டு என்பது; கருத்தியல் எப்போதும் ஒன்றே என்ற அர்த்தத்தையே தரும்.

சமூகம் எப்போதும் கருத்தியல் இயந்திரமாகவே (Ideology Machine) தொழிற்பட்டு வருகிறது. இந்தத்தொழிற்படுதலில் கருத்தியலின் மீளுற்பத்திக்கூடாக; தனிமனிதன் - சமூகக்குழு - இனம் மீதான வன்முறை வெளிப்படுவதையும் இனங்காணலாம். எப்போதும் கருத்தியல் இயந்திரம்; ஆளும் அதிகார வர்க்கக் கருத்தியலின் உற்பத்தி மையமாகவே அமைந்துவிடுகிறது.

இவ்வாறு ஒரு கருத்தியலின் உருவாக்கம் நிகழுகிற போது; ஒரு தனியனின் சுயமும் இந்தக் கருத்தியலின் வழி உருவாகிறது. கருத்தியல் ஒரு தனியனை 'தன்னிலை'யாக மாற்றுகிறது. புறநிலையில் ஒரு கூட்டு நிலையினையும் உருவாக்குகிறது.

ஒரு ஆன்மிக வாதியாக, அரசியல் வாதியாக, படைப்பாளியாக பொதுநிலையில் ஒரு தனியன் அடையாளப்படுத்தப்படுகிற போது அவனது கருத்தியலில், அவனது சுயத்தை உணருகின்ற நிலை தன்னிலைக்கான பிரக்ஞையைத் தருகிறது.

ஒரு தனியன் பிறக்கின்றபோதே அவனது சமூகத்தின், சாதியின், குடும்பத்தின், தாயின், தந்தையின், மதத்தின், அரசின் கருத்தியலுக்குள் தோயும் நிலை உருவாகிவிடுகிறது. இங்கு தனித்தன்மையான சுயத்தினையும், ஒத்தவகை மாதிரியான சுயங்களையும் சமூகக் கருத்தியல்கள் வார்ப்புரு செய்கின்றன.

ஒரு தனியன் தனக்கான தனித்துவ அடையாளத்தைக் கட்டமைக்க, தனது சமூகம் தந்த வகை மாதிரி ஆரைகளில் பயணிப்பதிலிருந்து இறங்க வேண்டும். எப்போதும் ஒரு தனியன் தன்னை- தனது கருத்தியலை சமூகத்துக்கான கருத்தியல் மையமாகவே அடையாளப்படுத்துகிறான்.

ஒரு தனியன் கொண்டிருக்கக்கூடிய பிரக்ஞை உடைப்பு என்பதுதான் கருத்தியலின் இயங்கியலை அடையாளங் காட்டுவதாக அமையும்.

ஒரு தனியனின் நனவிலி மனம் என்பது அதிகாரத்தையும், கண்காணிப்பையும் புற மொதுக்கிய கருத்தியலில் கட்டுறும் போதே, சுய பிரக்ஞையுடைய வெளிப்பாட்டு மனதினை - அறிவுசார் கருத்தியல் பார்வையை - கண்டுகொள்ள முடியும். ★



உதயனின் ''சூரியகாந்தியில்'' உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.

உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி;
சூரியகாந்தி - உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் நிலம்



11

-சடா கோபன்

என் ஊரில் இப்போது
மரங்களில் மொட்டுக்கள்
எட்டிப் பார்க்கின்றன
என் மனதுக்குள் பூக்கள்

நேற்று
கனவகை நிறங்களில்
கொடிகள் அசைய
கனவுகள் வந்து
கண்களில் இறங்கியது

காத்திருந்தார்கள்
அம்மாக்கள்தான் அதிகமாய்
காத்திருந்தார்கள்

இன்று
எல்லாம் முடிந்துபோயிருக்கிறது
வெற்றி தோல்வியை
வேறுபடுத்த முடியாத விளையாட்டாய்
எல்லாம் முடிந்து போயிருக்கிறது

மேகங்கள் இறங்கி வந்து
தூக்கிப் போன எங்கள் பிள்ளைகளை
மீட்டுக் கொள்ள முடியாத
இந்த விளையாட்டு
முடிந்துதான் போகட்டுமே

போட்டியென்று வந்தால்
ஆனந்தம் ஆச்சரியம்
அற்புதமும் இருக்கும்

களைப்பு உழைப்பு
விட்டுக்கொடுப்பு வேதனை
அவலமும் இருக்கும்
எல்லாமும் இருக்கும்

மாபெரும் போட்டிகள் எப்போதும்
மைதானத்தைவிட வெளியேதான்
கூடுதலாய் நடக்கிறது

வெற்றுத் தோட்டாக்கள் நிறைத்த
என் நிலத்தை
இப்போது
வெற்றுப் போத்தல்கள் மூடுகின்றன

விழிப்பூட்டும்
தெருக்கூத்துக்கள் பார்த்த
எங்கள் தெருக்களில்
பேய்களும் பேயோட்டிகளுமாய்
ஆடுகின்றார்கள்

ஆடுகளங்களில்
வாகனங்கள் போகின்றன
வீதிகளில் ஆட்டம் நிகழ்கிறது

மாபெரும் போட்டிகள் எப்போதும்
மைதானத்தை விட வெளியேதான்
கூடுதலாய் நடக்கிறது

பகிடியாய் தொடங்கியது
வதையாக மாறி
வளாகத்து வளவில்
புதிதாய் முளைத்த
புற்களின் நுனிப்பனியை
களவாடிப் போகிறது...
பகிடியாய் தொடங்கியது

வெற்றுத் தோட்டங்கள் நிறைத்த
என் நிலத்தை
இப்போது
வெற்றுப் போத்தல்கள் மூடுகின்றன

ஊரை
உலகுக்குக் கொண்டு போகிறோம்
உலகை
ஊருக்குக் கொண்டு வருகிறோம்

ஒவ்வொரு நாளும்
ஊர்
காணாமல் போகிறது
உங்களுக்கு தெரிகிறதா!

ஆங்கிலேயர் இலங்கையர்
இந்தியர் போராளியர்

எல்லா
அதிகாரங்களின் கீழும் வாழ்ந்தும்
எல்லா
ஆயுதங்களின் கீழும் வாழ்ந்தும்
தம்மை தொலைக்காத
முதிசங்கள் இம்மண்ணில்
இன்றும் வாழ்வது தெரிகிறதா!

முன்னவரிடம் இன் நிலத்தை
கடனாய் பெற்றோம்
பின்னவர்க்கு கையளித்து
கடன் தீர்த்தே போக வேண்டும்

கண்டபடி ஆட்டம் போட்டு
அடையாளங்களைஅழித்துப்போட்டு
கடன் தீர்க்கும் வேளையிலே
கையறுத்து நிற்பதுவா!

யாரோ எழுதும் விதிகளில்
எங்கள் நாட்கள்
இனியும் வேண்டாம்
எங்கள் விதியை நாமே எழுதுவோம்

முன்னவர் வாழ்ந்த
தளங்களில் நின்று
எங்கள் நாளைகளை
நாங்களே ஆக்குவோம்
என் ஊரில் இப்போது

மரங்களில் மொட்டுக்கள்
எட்டிப்பார்க்கின்றன
என் மனதுக்குள் பூக்கள்.

# கேட்டானே ஒரு கேள்வி

■ நிதன்



ஜம்புலிங்கம் ஒரு முறை கொழும்பில் உள்ள அலுவலகம் ஒன்றில் அலுவலக பணியாளராக (பியூன்) கடமையாற்றிக் கொண்டிருந்தார்.அவரிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. யாராவது, ஒருவரைப் பற்றி பேசிக் கொண்டிருந்தால், நடுவில் புகுந்து, ''ஓ... அவரா? அவரை எனக்கு தெரியுமே'' என்று தம்மட்டமடிப்பார்.

ஒரு முறை அந்த அலுவலகத்தின் மேலதிகாரி (அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவர்) பிரபல நடிகர் ஆர்னோல்ட் ஸ்லாஸ்நேகரைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார். உடனே எப்போதும் போல நமது ஜம்புலிங்கம், ''ஓ ஆர்னோல்டா, அவர் என்னோட நண்பர்'' என்று கூறினார். இதைக் கேட்ட முதலாளிக்கு சிரிப்பு வந்துவிட்டது. ''என்ன ஆர்னால்டை உனக்குத் தெரியுமா? சரி அடுத்த முறை நான் அமெரிக்காவுகுப் போகும்போது உன்னையும் அழைத்துச் செல்கிறேன். உனக்கு ஆர்னோல்டை தெரியுமா இல்லையா என்பதை அப்போது பார்க்கிறேன்'' என்று கூறினார். அதற்கு ஜம்புலிங்கமும் ஒப்புக் கொண்டு தலையசைத்தார்.

முதலாளி சொன்னபடியே ஜம்புலிங்கத்தை அமெரிக்காவுகு அழைத்துப் போனார். பிறகு ஆர்னோல்டின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். ஆர்னோல்ட் ஜம்புலிங்கத்தை பார்த்ததும் ஓடி வந்து ''ஹாய் ஜம்பு... எத்தினை நாளாப்போச்சு உன்னப் பார்த்து... எங்கேயடா போனனாய் இவ்வளவு நாளா?'' என்று கேட்டவாறு அவரை உள்ளே அழைத்துச் சென்று தேநீர் விருந்து அளித்தார்.அதுவரை வாசலில் நின்றிருந்த முதலாளிக்கு அதிர்ச்சி. பின்னர் ஜம்புலிங்கம் வந்ததும்,

''ஒபாமா வீட்டுக்கு அழைத்துச் சென்றார். ஒபாமாவும் ஆர்னோல்டைப் போலவே ஜம்புலிங்கத்தை கட்டி அணைத்துக் கொண்டு, ''ஒரு கோப்பியாவது குடித்துவிட்டுப் போ'' என வற்புறுத்தினார். இதைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்தே போனார் முதலாளி.

கடைசியாக வத்திக்கானுக்கு ஜம்புலிங்கத்தை அழைத்துப் போனார் முதலாளி. அங்கு மக்கள் கூட்டம் அலை மோதியது. அந்த கூட்டத்தில் உள்ளே நுழைந்து பாப்பரசரைப் பார்ப்பதென்பது மிகக் கடினமான விஷயமாக இருந்தது. ஆனால் ஜம்புலிங்கம்- தனது முதலாளியிடம் ''கொஞ்சம் இங்கேயே இருங்கள். நான் போய் வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

சிறிது நேரத்தில் வத்திக்கான் மாளிகையின் மேல்மாடியில் இருந்து பாப்பரசரின் கைகளை பிடித்துக் கொண்டு ஜம்புலிங்கம் தோன்றினான்.அவ்வளவுதான் வாசலில் நின்று இதனைப் பார்த்துக் கொண்டிருந்த முதலாளி மயங்கி விழுந்தார். அவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிகிச்சை அளித்த பின் ஜம்புலிங்கம், ''முதலாளி என்ன நடந்தது உங்களுக்கு?'' என்று கேட்டார்.

அதற்கு முதலாளி, ''ஆர்னோல்டை உனக்குத் தெரியும், ஒபாமாவுக்கும் உன்னைத் தெரியும், போப்பட்டனும் உனக்கு பழக்கம் இருக்கிறது. இதெல்லாம் பெரிய விஷயமே இல்லை. ஆனால்........

நீ பாப்பரசருடன் தோன்றியதும் அங்கு கூடியிருந்த கூட்டத்தில் இருந்த ஒருவன், என்னிடம்... யாரடா அவன் ஜம்புலிங்கத்தின் கையைப் பிடித்துக் கொண்டிருப்பது என்று கேட்டானே ஒரு கேள்வி, அதைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' என்று கூறிவிட்டு மீண்டும் மயக்கமானார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■டிலீப்

முத்தையாவின் உலக சாதனைகள் ஹென்றி ஒலங்காவின் மனித நேயத்துக்கு முன்னால் நிற்க முடியுமா? அவரது கால் தூசிக்கு பெறுமானம் ஆகுமா ?

# இவன் யாரென்று தெரிகிறதா?

இலங்கை அணியின் முன்னாள் சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ட் அரங்கில் மிகச் சிறந்த பந்து வீச்சாளர். அந்த முரளிதரனின் பந்து வீச்சில் 400 ஆவது இலக்காக வீழ்ந்தவர் சிம்பாப்வே அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஹென்றி ஒலங்கா.

சிம்பாப்வே நாட்டைச் சார்ந்த ஹென்றி ஒலங்கா ஒரு சாதனையான கிரிக்கெட் வீரர் அல்ல. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்கு எதிராக தனது இறுதியாட்டத்தை விளையாடினார். அந்த உலகக் கிண்ணத் தொடரில் அவர் கிரிக்கெட்டில் சாதனைகள் என்ற ஒன்றைப் படைக்காவிட்டாலும் மனிதநேயத்தால், சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராக போராடியதால் எல்லோராலும் உற்று நோக்கப்படுகின்ற ஒருவராகவே இருக்கின்றார்.

சிம்பாப்வே அணியில் இடம் பெற்ற முதல் கறுப்பு இனத்தவர் ஒலங்கா. சிம்பாப்வே கிரிக்கெட் அணி ஒரு காலத்தில் தென்னாபிரிக்கா போன்று வெள்ளையர் ஆதிக்கத்தில் இருந்தது.

ரொபர்ட் முகாபே எனும் கறுப்பர் தேர்தலில் ஒரு முறை தோற்று சில காலம் கழித்து மீண்டும் இரண்டாவது முறையாக அதிபரான போது தன்னுடைய செல்வாக்கினை தக்க வைத்துக் கொள்ள கறுப்பர்களை தூண்டி விட்டு சிறுபான்மை வெள்ளையர்களின் சொத்துக்களை அபகரிக்க வழி செய்தார். நாட்டில் வெள்ளையர்களுக்கு பாதுகாப்பில்லாத ஒரு நிலைமை உருவாக்கினார்.

கிடைத்த வரைக்கும் லாபம் என்று கறுப்பர்கள் வெள்ளையர்கள் மீது தாக்குதல் நடத்தி சொத்துக்களை அபகரித்தனர். சிம்பாப்வேயில் நிறவெறி தலைவிரித்தாடியது. வெள்ளையர்களின் உயிர்கள் மலிவாக்கப்பட்டன.

இந்த வேளையில் 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் ஆபிரிக்க நாடுகளான தென்னாபிரிக்கா, கென்யா, சிம்பாப்வே மூன்று நாடுகளிலும் நடத்தப்பட்டது. இந்தத் தொடரில் சிம்பாப்வே அணியின் ஒலங்கா, ராபர்ட் முகாபேயின் இனவெறி அரசியலை எதிர்த்து குரல் கொடுத்தார். இதன் அடையாளமாக கிராண்ட் பிளவர் (இங்கிலாந்துப் பயிற்சியாளர் அன்டி பிளவரின் சகோதரர்) எனும் வெள்ளை இன வீரருடன் இணைந்து கையில் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடினார். விளைவு ஹென்றி ஒலங்கா, ரொபர்ட் முகாபேயின் கோபத்துக்கு ஆளானார். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தாய் நாட்டை விட்டு தப்பித்து வெளியே ஓட வேண்டியதாயிற்று.

தங்கள் முன்னோரை அடிமைப்படுத்தியிருந்த வெள்ளையருக்கு தங்களுடைய கறுப்பினத்தவரின் ஆட்சியிலே பாதுகாப்பில்லாத சூழல் ஒன்று உருவான போது ஹென்றி ஒலங்கா எனும் இளைஞர் தன்னுடைய வளமான கிரிக்கெட் எதிர்காலத்தையும் பொருட்படுத்தாமல் மனிதநேயத்தை வெளிப்படுத்தி நாட்டை விட்டு வெளியேறியது அன்று மிகவும் பரபரப்பாக பேசப்பட்டது.

ஆனால் உலக சாதனைக்கு சொந்தக்காரர் என்ற முத்தையா முரளிதரன் தன்னுடைய ஓய்வுக்கு பின்னரும் மனசாட்சியைப் பூட்டி வைத்து விட்டு தமிழர்கள் அமைதியாக வாழ்கிறார்கள் என்று தன்னுடைய சிங்கள எசமான விசுவாசத்தை வெளிக்காட்டியுள்ளார்.

தங்களை நிறவெறியால் அடிமைப்படுத்தி வைத்திருந்த வெள்ளையர் பால் மனிதநேயம் காட்டிய ஹென்றி ஒலங்கா எங்கே? தங்கள் இனத்தை கொன்று குவித்த பேரினவாதிகளுக்கு சாட்சி சொல்லும் முத்தையா முரளிதரன் எங்கே? முத்தையாவின் உலக சாதனைகள் ஹென்றி ஒலங்காவின் மனித நேயத்துக்கு முன்னால் நிற்க முடியுமா? ஒலங்காவின் கால் தூசிக்கு பெறுமானம் ஆகுமா ?

முத்தையா முரளிதரன்... ஒரு கிரிக்கெட் வீரர். சிறந்த சுழற் பந்து வீச்சாளர். அது மட்டுமே அவருக்கான அடையாளம். அவர் இந்தியத் தமிழர் என்பதால் பேரினத்தால் கௌரவிக்கப்பட்டவர் அல்ல. மாறாக, இலங்கை அமைச்சரவையில் டக்ளஸ் தேவானந்தா போல், கருணா போல், கே.பி. போல் தேவையின் நிமித்தம் பேரினவாதிகளால் அரவணைக்கப்பட்டவர். அதாவது, முற்று முழுதான சிங்கள கிரிக்கெட் அணிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுக்க முத்தையா முரளிதரன் தேவைப்பட்டார் என்பதற்கு அப்பால் வேறு எதுவும் இல்லை.

இலங்கைத் தீவில் இன முரண்பாடுகள் உச்ச நிலையில் இருந்த போதும் முத்தையா முரளிதரன் சிங்கள அணிக்காகப் பந்து எறிந்துகொண்டுதான் இருந்தார். போர் உச்சக்கட்டமாக நடைபெற்றுக்கொண்டிருந்த நாள்களிலும் அவர் வாய் பேசாமல் பந்தை எறிந்துகொண்டு இருந்தார். சிங்களப் படைகளால், ஆயிரக்கணக்கான தமிழர்கள் போர் நெறிகளையும் மீறிய குண்டு வீச்சுகளில் கொல்லப்பட்ட போதும் அவர் சிங்களத்திற்காகப் பந்தை எறிந்து கொண்டிருந்தார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், மூன்று இலட்சம் தமிழர்கள் முள்வேலி முகாமுக்குள் முடக்கப்பட்ட போதும், எண்ணற்ற இளைஞர்கள் தெரிந்தெடுத்துச் சுட்டுக் கொல்லப்பட்டபோதும், தமிழ் யுவதிகள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு, கோரமாகக் கொலை செய்யப்பட்ட போதும் வாய் திறக்காமல் முத்தையா முரளிதரன் சிங்கள அணிக்காகப் பந்தை வீசிக்கொண்டுதான் இருந்தார்.

ஈழத்தில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள், இன அழிப்பு நடவடிக்கைகள், தமிழர்களுக்கெதிரான இன வன்முறைகள் எதுவும் முத்தையா முரளிதரனுக்கு எந்தச் சலனத்தையும் கொடுக்கவில்லை. மாறாக, சிங்கள கிரிக்கெட் அணியின் வெற்றி குறித்தும், அதனால் தனக்கு கிடைக்கக்கூடிய பெயர், புகழ், பணம் குறித்தும் மட்டுமே அவர் சிந்தித்திருந்தார். அதனால், தமிழினத்தின் எந்த அவலங்களும் அவரை எதுவும் செய்யவில்லை.

அதனால்தான், ''இலங்கையில் கடந்த காலங்களில் போர்ச்சூழல் இருந்தது. ஆனால் தற்போது தமிழர்கள் இலங்கையில் அமைதியர்கவே வாழ்கின்றனர். இதனை இந்திய அதிகாரிகள் இலங்கையில் தமிழர்களாகிய நாங்கள் எப்படி வாழ்கிறோம் என்பதை வந்து பார்க்க வேண்டும்'', என்று சிங்களத்திற்காகப் பரிந்து பேசுகின்றார் முத்தையா முரளிதரன்.

முத்தையா முரளிதரனுக்கு எந்தத் தமிழர்களைத் தெரியும்? எத்தனை தமிழர்களைத் தெரியும்? தமிழர்கள் இலங்கையில் நிம்மதியாகவும், அமைதியாகவும் வாழ்வதாக முத்தையா முரளிதரன் நம்பினால், தமிழ் மக்கள் தமக்கு என்ன வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை அவர்களிடம் விட்டுவிடும்படி தமிழகத்தின் இளைய தலைமுறையும், தமிழக அரசும் கேட்பதை முத்தையா முரளிதரனும் உரக்கச் செல்வதுதானே முறை.

அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழும் தமிழர்கள் நிச்சயமாக சிங்களத்திடமிருந்து பிரிந்து செல்லவேண்டும் என்று நினைப்பதற்குச் சாத்தியம் இல்லையே. சிங்கள தேசத்தின் கிரிக்கெட் வீரராக உலகிற்கு அறிமுகமான முத்தையா முரளிதரன், சடுதியாகவே ஒரு சமூக விஞ்ஞானியாகி, கடந்த காலத்தில் நடந்ததை மறக்க வேண்டும் என்ற தத்துவத்தையும் தமிழர்களுக்கு உபதேசித்துள்ளார். எதை மறக்கவேண்டும் என்று முத்தையா முரளிதரன் சொல்ல வருகின்றார்?

தாயைக் கொன்றதையா ? தங்கையை கொடூரமான பாலியல் வல்லுறவு மூலம், தன் வீரத்தை நிரூபித்ததையா ? பிஞ்சுக் குழந்தைகள் தலையில் நஞ்சுக் குண்டை வீசியதையா. ? 90 ஆயிரம் தமிழ்ப் பெண்களை விதவைகளாக்கியதையா ? இன வன்முறைகளை எதிர்த்துக் களமாடிய குற்றத்திற்காக நிர்வாணப்படுத்தித் தலையில் சுட்டுக் கொன்றதையா ? பச்சிளம் பாலகனுக்கு 'பிஸ்கற்' கொடுத்துவிட்டு, அது தொண்டைக்குள் இறங்குவதற்கு முன்பாக அவன் நெஞ்சில் சுட்டுக் கொன்றதையா ? எதை மறக்கச் சொல்கின்றார் முத்தையா முரளிதரன்?

அதுவே உன் தாயாக இருந்தால், தன் தங்கையாக இருந்தால், தன் அண்ணனாக இருந்தால், தன் மனைவியாக இருந்தால்... அவரது வாயில் அப்படி ஒரு வார்த்தை வெளிவந்திருக்குமா...? என்று எங்கள் தமிழர்கள் பொங்கி எழுந்தால்... முத்தையா முரளிதரனை ஒரு தமிழன் என ஏற்றுக் கொள்வதிலும் அவர்களுக்குச் சங்கடமே மிஞ்சும்.

எங்கள் உறவுகளைக் கொன்றபோதும், எரித்தபோதும், புதைத்த போதும், புழுவைப் போலவே நசுக்கியபோதும் கவலையே கொள்ளாத முத்தையா முரளிதரன், ''ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடும் இலங்கை வீரர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை வருத்தமளிக்கிறது'', என்று வாய் கூசாமல் சொன்னதை... தமிழுலகம் மட்டுமல்ல, மனித நேயம் மிக்க எந்தச் சமூகமும் ஏற்றுக்கொள்ளாது.

இது கிரிக்கெட்டிற்கு வருத்தமான நாள் என்று சிங்களத்திற்காக வரிந்து கட்டும் முத்தையா முரளிதரன், மனிதமே வெட்கி மருகிநிற்கும் ஈழத்து இறுதிப் போர்க் கணங்கள் 'மனிதத்துக்கே வருத்தமான நாள்' என்று சொல்ல மறுத்தது சிங்களம் போடும் இரையினாலா...?

எது எப்படி இருந்தாலும், முத்தையா முரளிதரன் பந்தோடு விளையாடுவதுடன் தனது எல்லையை நிறுத்திக்கொள்ள வேண்டும். மாறாக, தமிழினத்தின் உணர்வுகளோடு விளையாட முற்பட்டால்... அது தவறான விளைவுகளையே அவருக்குப் பரிசளிக்கும்.

*(நன்றி- இணையத்தளம்-சில திருத்தங்களுடன்)*

# பந்தோடு முரளி முடித்துக் கொள்ள வேண்டும்



■அகத்தியன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வெலிஓயா: பேசவேண்டிய உண்மைகள்

எந்தப்பெரிய வீரனாக இருந்தாலும் அவன் போகும் போது எதையுமே கொண்டு போகப்போவதில்லை. ஆனாலும் இந்த உண்மை தெரிந்தும் பலர் அதை உணர்வதில்லை எங்கள் தலைவர்கள் உட்பட. ஒருவரின் உரிமையை பறித்து இன்னொருவருக்கு அன்பளிப்பாக வழங்குவதில் அவர்களுக்கு நிகர் அவர்கள் தான்.

மதுவிழி

மா மன்னன் அலெக்ஸாண்டர் போரின் வெற்றியில் நின்று மார்தட்டிக்கொண்டவன். பல தேசங்களை வென்ற சக்கரவர்த்தி.அந்நிய தேசங்கள் பலவற்றை வென்று இனி வெல்வதற்கு நாடு இல்லையே என்று கவலைப்பட்டவன். அத்தகைய அலெக்ஸாண்டர் ஒருநாள் தன் அமைச்சரை அழைக்கிறான்.''அமைச்சரே என்னுடைய இறுதிநாள்களை நான் நெருங்கிக்கொண்டிருக்கிறேன்.என்னுடைய இறுதிநாளின் பின்னான மரண ஊர்வலத்தின் போது என்னுடைய இரண்டு கைகளையும் சவப்பெட்டிக்கு வெளியே இருக்குமாறு பார்த்துக்கொள்வது உம் பொறுப்பு.'' ''ஆகட்டும் மாமன்னரே..ஆனால் அதன் காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா..?'' ''அமைச்சரே தேசங்கள் ஆயிரம் வென்ற ஆணாணப்பட்ட அலெக்ஸாண்டர் கூட போகும் போது வெறுங்கையுடன் தான் போனான் என்பதை இந்த உலகம் அறியட்டும்'' என்றான் அலெக்ஸாண்டர்.

உண்மைதான். எந்தப்பெரிய வீரனாக இருந்தாலும் அவன் போகும் போது எதையுமே கொண்டு போகப்போவதில்லை. ஆனாலும் இந்த உண்மை தெரிந்தும் பலர் அதை உணர்வதில்லை. எங்கள் தலைவர்கள் உட்பட. ஒருவரின் உரிமையை பறித்து இன்னொருவருக்கு அன்பளிப்பாக வழங்குவதில் அவர்களுக்கு நிகர் அவர்கள் தான்.

இப்போதெல்லாம் ஊடகங்களில் அதிகம் பேசப்படுகின்ற மீள்குடியேற்றம், இடப்பெயர்வு, உதவிகள் என்பனவெல்லாம் தமிழருக்கே உரியன போன்று மாறிவிட்டன. இடப்பெயர்வுக்கான அத்திவாரம் எப்போது இடப்பட்டது என்றால் அது இன்னும் பலருக்கு தெரியாத ஒன்றாகவே இருக்கலாம்.1983ஆம் ஆண்டு தமிழர்கள் வாழ்வில் பல கறுப்புப் பக்கங்களைக் கொண்ட ஓர் இருண்ட ஆண்டு.அதே ஆண்டில் தான் தமிழர்கள் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்துக்கும் பிள்ளையார்சுழி இடப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புற பிரதேசம் மணலாறு. திருகோணமலை மாவட்டத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் பிரிக்கின்ற இந்த எல்லைக்கிராமங்கள் வளமோடிருந்த காலப்பகுதி அது. ஒருபுறம் விவசாயம்,மறுபுறம் மீன்பிடியும் இன்னொரு புறம் ஏனைய வாழ்வாதார வசதிகளுமென தமிழ்மக்கள் வாழ்ந்திருந்த பகுதி. திடீரென ஒருநாள் அரச அறிவிப்பு பறந்து வருகிறது. ''இன்னும் 24 மணித்தியாலயங்களுக்குள் மணலாறில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் உடனடியாக வெளியேறவும்'' அவ்வளவு தான். மக்கள் கையில் கிடைத்தது கிடைக்காதது அனைத்தையும் விட்டுவிட்டு படபடப்புடன் வெளியேவந்தனர். வீதியெங்கும் வரிசையாய் தமிழ் எறும்புகள். எறும்புகள் ஊரத்தொடங்கின எங்கென்றே தெரியாமல். கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், நாயாறு கடந்தும் நடை தொடர்கிறது. இன்று மாலையோ நாளையோ நாளைமறுதினமோ ஊர்திரும்புவது தானே என்று பேசிக்கொண்டே நடந்த சனங்களின் குரலைக்கிழித்துக் கொண்டுஊர்ப்பக்கமாயிருந்து படைகளின்துப்பாக்கி வேட்டுகள்.

அவ்வளவு தான். ஊர்வாசம் விடுபட்டு ஏதேதோ இடங்களில் அவர்களின் வாழ்வு அல்லாடத் தொடங்கியது. இருபது ஆண்டுகளும் இன்னும் சில உதிரியாண்டுகளும் அகதி அந்தஸ்துடன் வாழ்ந்து முடிந்தாயிற்று. இப்போ போர் முடிந்த தான பின்னணியில் இங்கிருந்து வெளியேறிய மக்களும் மீளக்குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். சுமார் முப்பது ஆண்டுகளின் பின்னர் பற்றைக் காடாயிருந்த தங்களுடைய காணிகளைக் கண்டுபிடித்து எல்லை அமைத்து குடியேறியும் விட்டார்கள். மீளக்குடியேறிய போது கல்லுக்குவியலாயிருந்த வீதி இப்போது காப்பெற் வீதியாகச் சிரிக்கிறது. வாழ்வின் ஒளியையே பறித்த அவர்களே இப்போ வேகவேகமாய் மின்சார இணைப்புக்களை அமைத்து ஒளியேற்றப்போகிறார்களாம். கடுகதியில் இந்த வேலைத்திட்டங்கள் நடப்பதும் கண்கூடு. (இங்கு வடக்கு மாகாண தேர்தலையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும்) ஆனாலும் இப்போதும் அந்த மக்களுக்கு பிரச்சினைகளுக்கு பஞ்சமில்லை.

இப்போது அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் முன்பிருந்த பிரச்சினைகளை விட வித்தியாசமான விபரீதமான விளைவுகளைக் கொண்டுவரக் கூடிய பிரச்சினைகள்.

ஒன்று, மணலாறு என்பது வெலிஓயா என்றாகி அதற்கென்றொரு தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டு அது முல்லைத்தீவுடன் சேர்த்து இணைக்கப்படவுள்ளது.அதாவது முன்னர் கரைதுறைப்பற்று பிரிவுக்குட்பட்டிருந்த இந்தப் பிரதேசத்தை இப்போது தனியாக பிரித்து கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், நித்தியாகுளம், குமுழமுனை, தண்ணிமுறிப்புக் குளம், முந்திரிகைக்குளம், தென்னைமரவாடி, டொலர்பாம், கென்பாம் உள்ளிட்ட இன்னும் சில சிங்களக் கிராமங்களையும் உள்ளடக்கியதாக தனி வெலிஓயா உதவி அரசாங்க அதிபர் பிரிவாக்கி அதற்கு சிங்கள அதிகாரிகளை நியமித்துள்ளதாகவும் இதனால் தமிழ் மக்கள் சரியான முறையில் சேவைகளை பெற்றுக்கொள்ளமுடியாத நிலை காணப்படுவதாகவும் குறிப்பிடப்பிடுகிறது.

இரண்டாவது, மணலாறு கடலோடு அண்மித்த பிரதேசமாக காணப்பட்டாலும் இங்கு மிக அதிகளவில் விவசாயத்தொழில் முக்கியம் பெறுகிறது.நல்ல விளைச்சல் நிலங்கள் உள்ள இந்தப் பகுதிகளில் அதிக மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் இராணுவத்தினரால் கொண்டுவந்து குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்கள் முப்பது ஆண்டுகளாக இங்கு வசிக்கின்ற நிலையில் அவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தேவைகளுக்காக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். அவ்வாறு அவர்கள் விவசாயம் செய்வது தமிழர்களுடைய சொந்த விவசாய நிலங்களில். இதனால் தம்மால் விவசாயச்செயற்பாடுகளில் ஈடுபடமுடியாதிருப்பதாகவும் தொழில்முயற்சிகளுக்கான நிலங்களைப் பெறமுடியாதிருப்பதாகவும் மக்கள் விசனம் கொள்கிறார்கள்.

மூன்றாவது, முகத்துவாரப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சிங்களக் குடும்பங்களுக்கும் அயலில் இருக்கின்ற தமிழ் குடும்பங்களுக்குமிடையில் சிலவேளைகளில் முரண்பாடுகள் தோன்றுகின்றன.அதன்பின்னணியில் பல்வேறு விபரீத விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புகள் நிறைய உண்டு.

நான்காவது,திட்டமிட்ட குடியேற்றங்கள் இங்கு ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ 30 ஆண்டுகள் ஆகின்ற நிலையில் சிங்கள மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு உறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதே காணிகளுக்கு தமிழ்மக்களிடமும் உறுதிகள் காணப்பட்டாலும் அவர்களால் அதை நியாயப்படுத்தி பெற்றுக்கொள்ள முடியாத நிலையே தொடர்ந்து காணப்படுகிறது. கூமாடித்தண்டல், எரிஞ்சகாடு, அட்டையக்கறுத்தான் உள்ளிட்ட பல கிராமங்கள் இவ்வாறு கையறுநிலையில் காணப்படுகின்றன. குறிப்பாக முந்திரிகைக்காடு போன்ற பகுதிகளில் சிங்கள மக்கள் குடியிருக்கின்ற பகுதிகள் இவ்வாறு இரண்டு தரப்பினரினதும் உறுதிக் காணிகளாக காணப்படுகின்றன. அவை இராணுவ தலையீட்டின் பின்னர் சிங்கள மக்களிடமே ஒப்படைக்கப்படுவது மட்டுமன்றி 30 வருடங்களுக்குட்பட்ட உறுதிகளே செல்லுபடியாகுமென்றும் ஆரம்பகால உறுதிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற விளக்கமும் வேறு கொடுக்கப்படுகிறது.

ஐந்தாவது,மக்களுடைய வாழ்வியல் அம்சங்களில் ஒன்றான சமயத்தையும் நம்பிக்கைகளையும் பேணுவதில் கூட இயல்புநிலை காணப்படவில்லை. தாம் ஊரைவிட்டு வருகின்ற போது வணங்கிவந்த கோயில்கள் எல்லாம் இப்போது பௌத்த கோயில்களாக மாறியுள்ளதாக மக்கள் குறைப்பட்டு மனம் வெதும்புகின்றனர்.தங்களின் நம்பிக்கை மிகுந்த கோயில்களுக்கருகில் அல்லது அதே இடத்தில் பௌத்த கோயில்கள் இருப்பது மட்டுமன்றி அருகில் படைமுகாம்களும் காணப்படுவதாலும் தமது மத சுதந்திரம் கூட மீறப்படுவதாகவும் வெளியே சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் துன்பப்படுகிறார்கள்.

ஆறாவது ,சிங்கள அதிகாரிகளிடமிருந்து போதியளவு சேவையை பெற்றுக்கொள்வதற்கு மொழியுட்பட பல்வேறு வரையறைகள் காணப்படுவதால் சரியான முறையில் செயற்பாடுகளைக் கொண்டுசெல்ல முடியாமலிருக்கின்றது.

இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்கின்ற தமிழ்மக்கள் இடர்பாடுகளுக்குள்ளிருந்து வெளியேற எண்ணி தமது பிரதேசத்தை விட்டு வெளியேற முயற்சிப்பது இயல்பானது. கடல்வளம் நிறைந்த,விவசாய வளம் நிறைந்த, முகத்துவாரம், குடாத்துறை பறவைகள் சரணாலயம் போன்ற சுற்றுலா வளம் நிறைந்த பிரதேசத்தை விட்டு நாமாகவே வெளியேறினால் பால் கேட்டவருக்கு பாயாசமே கொடுத்தது போல் ஆகிவிடும். முன்னர் விதண்டாவாதத்துக்கு இடம்பெயர்த்திவிட்டு எதை அடைய நினைத்தார்களோ அதை நாமாகவே எடுத்துக் கொடுத்தது மாதிரி ஆகிவிடும். எண்ணி எண்ணி எல்லாவற்றையும் கொடுத்த நாம் இதையும் இனிமேலும் விட்டுக்கொண்டேயிருக்கப் போகிறோமா? தமிழ் அதிகாரிகளே.! தலைவர்களே..! இது எனக்கு உனக்கு என்றான விவகாரமல்ல. எங்களுடைய விவகாரம். தூங்கியது போதும் கொஞ்சம் விழித்துக்கொள்ளுங்கள்!பாடியது போதும் இனியாவது கொஞ்சம் பேசுங்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!



உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

**அண்டை வீட்டார்கள் நல்ல நட்புடன் இருந்தால் அல்லது ஆதரவுடன் இருந்தால், இவை அனைத்துமே நம் செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். அதனால் அண்டை வீட்டாருடன் சுமுகமாக நட்புடன் இருப்பதென்பது மிக முக்கியமானது.**

■ ராகவன் அல்பி

45

### அண்டை வீட்டாரால் ஏற்படும் 10 பிரச்சினைகளும், அவற்றை தீர்க்கும் வழிமுறைகளும்

**சத்தமான பார்ட்டிகள் :-** நீங்கள் நடத்தும் விருந்து அண்டை வீட்டாரை, தொந்தரவு படுத்தும் என்று நினைத்தால், விருந்துபசாரத்துக்கு அவர்களையும் கூப்பிடுங்கள். அவர்களும் கலந்துகொண்டால் பார்ட்டியைத் தொந்தரவாக நினைக்க மாட்டார்கள்.

**புகார் :-** ஒரு விடயத்தைப் புகாராக அவர்களிடம் கொண்டு போவதற்கு முன்னால், அதைப் பற்றி மறைமுகமாகச் சொல்லி விடுங்கள். இதனால் அவர்கள் அந்தக் குறையை மீண்டும் சொல்ல மாட்டார்கள். பிரச்சினையும் ஏற்படாது.

**கதவுச் சப்தம் :-** உங்கள் வீட்டை ஒட்டியே அண்டை வீடும் இருந்தால், அங்கு நடக்கும் அத்தனை கூச்சலும், சப்தமும் உங்களுக்குத் தொந்தரவாக இருக்கும். இது பற்றி அவர்களிடம் சொல்வது பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அமையும்.

**நாய் :-** வீட்டின் முன்னால் இருக்கும் இடத்தை நாய் வைத்திருக்கும் பலர் நாய் கழிவறையாகவே பயன்படுத்துவார்கள். அதனால் அங்கு செடிகள் நட்டு வைத்தால் அது போன்ற பிரச்சினைகள் வராது. அத்துடன் இதைக் குறிக்கும் வகையில் போர்டு வைப்பதும், அருகில் பாலித்தின் கவர் வைப்பதும் இன்னும் நல்லது.

**அதிகச் சேட்டை செய்யும் சிறுவர்கள்:-** குழந்தைகள் விளையாடும் போது சத்தம் போடத்தான் செய்வார்கள். பொறுக்கமுடியாமல் போகும்போது மட்டும் அதைப் பற்றி அவர்கள் பெற்றோர்களிடம் சொல்லலாம்.

**இரைச்சல் :-** நீங்கள் நன்கு தூங்கிக் கொண்டிருப்பீர்கள். அந்த நேரம் பார்த்துப் பக்கத்து வீட்டுக்காரர் தன் காரை இயக்குவார்கள் அல்லது திருத்துவார்கள். பொதுவாக ஞாயிற்றுக் கிழமைகளில் இது போன்று செய்யும் போது, அது நியாயமானது தான் என்று உணர்ந்து, நீங்கள் பொறுத்துப் போக வேண்டும்.

**பிரச்சினைகள் வந்தால் :-** நீங்கள் அண்டை வீட்டாரால் பாதிக்கப்படும் போது, அதை நம்பிக்கைக்கு உரியவரிடம் தெரிவித்தால் அவர்கள் அதற்கான ஆலோசனை தருவார்கள். ஆனால் அது போன்று ஆலோசனைகளுக்குப் போவதற்கு முன், அண்டை வீட்டார் பற்றி உங்கள் எண்ணம் சரியானது தானா, அல்லது தவறான முன் அபிப்பிராயத்தில் வந்ததா என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

**மோசமான நடவடிக்கைகள் :-** அண்டை வீட்டார் மோசமான விடயங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதை நீங்கள் பார்த்தால், அதை அவர்கள் நிவர்த்தி செய்ய தொழில் முறை ஆலோசகர்களின் உதவி தேவை. அது போன்ற செயல்கள் உங்களை அச்சுறுத்தும் வகையில் இல்லாவிட்டால் அதைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை.

**தொல்லை அளிக்கும் விலங்குகள் :-** கோழி போன்ற சில வளர்ப்புப் பிராணிகளை எலி, சுண்டெலிகள் போன்ற பிராணிகள் கடித்துத் தின்று விடலாம். விலங்குகளை நம் தோட்டங்களில் வளர்ப்பது நல்லது.

**குற்றம் :-** உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் சட்டத்துக்குப் புறம்பான வகையில் செயல்படுகிறார் என்றால், அது பற்றி முறைப்பாடு செய்வது அல்லது விட்டுவிடுவது என்பது உங்கள் மனசாட்சியைப் பொறுத்தது. ஆனால் அது போன்ற சமயத்தில் அதை முறையிடுவதுதான் நல்லது. அத்துடன் அவர்களிடமிருந்து விலகி இருக்கவும் வேண்டும்.

அண்டை வீட்டார்கள் நல்ல நட்புடன் இருந்தால் அல்லது ஆதரவுடன் இருந்தால், இவை அனைத்துமே நம் செயல்பாடுகளில் ஊக்கத்தை ஏற்படுத்தும். அதனால் அண்டை வீட்டாருடன் சுமுகமாக நட்புடன் இருப்பதென்பது மிக முக்கியமானது. நிறையப் பேர்களின் ஆதரவைக் கொண்டிருப்பது வாழ்க்கையில் பல விடயங்களை எளிதாகச் செய்து வெற்றியடைய உதவும்.

## எங்கள் சோதரனுக்கு..



கரிகாலன் கொழுந்தே
எரிதழல் இளமணியே
கூரிய தமிழுக்காய்
பாரி தேசத்தில்
வீரியமொடு
எரிந்து சரிந்தவனே....
ஆரியம் அழிக்கும்
அரிகொல்லும்
கூரிய தமிழின்
நேரிய வழி
மரித்ததென்றோர் வரலாறு
சூரியதேசத்தில்
வரியிடப்பட்ட
உரிமை கொடோம்
கோரிப்பெற
நரிகளின் சொத்தல்ல
கிரியவன்
தைரியம் கொண்டு

பரிவாரம் நடத்தி
வைரித்த சொத்து
உரிமைக்காய்
பிரி பிரி என
புரிந்த சமர்
பரு வந்து மாளாது
பாரதத் தோழனே
வரி வரியாய்
சொரிந்த கதை
சரிந்த உன் வடிவிலும்
விரிந்தது கண்டு
தரித்தொரு கணம்
சிரம் தாழ்த்தி
வெரிந்தது வீழினும் இல்லை
கருவோடும் நடப்போம்- நம்
தெருக்களை மீட்டேபோம்
[illegible] கொண்ட
கா் தழலில்

உயிர்ப் பூக்கள்
ஆயிரமாயிரம்
எம் மண்ணில்
கரியாகிய கனலவனே
கருவாகும் உயிர்கள்
உருவாகும் உன்
உதிர் சாம்பலிலும்
வெரிந்தது
வரிகளுக்கில்லையென
வீரியமொடு
சரிந்திட்ட சோதரனே
பாரொடு விண்ணாய்
பரந்து விரிந்து
வரிகள் நடை பயில
இரந்து திரியும்
கூற்றுவர்க்கு இரக்கம்
[illegible]துமோ...? அதை
[illegible]பேனா...! நான்

என். அகநிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவில் பெரிய வேலையை எப்படிச் செய்யலாம்?



முன்னொரு காலத்தில் அரசர் ஒருவருக்குத் திடீரென ஒரு நாள், தனது பட்டத்து யானை எவ்வளவு எடை இருக்கும் என்று அறிய ஆவல் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் எடை மேடைகள் இல்லை; யானையை அளக்கும் அளவுக்குப் பெரிய தராசும் கிடையாது. யானையின் எடையை எப்படி அறிவது? என்று அமைச்சர்களிடம் கேட்டார் மன்னர்.

யாருக்கும் அதற்கான வழி தெரியவில்லை. அப்போது அமைச்சர் ஒருவரின் பதினைந்து வயது மகன்முன்வந்து, தான் இதன் எடையைச் சரியாகக் கணித்துச் சொல்கிறேன்' என்றான். அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

ஆனால், அவனுக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்தார் மன்னர். அந்தச் சிறுவன், யானையை நதிக்கு அழைத்துச் சென்றான். அங்கே இருந்த மிகப் பெரிய படகில் யானையை ஏற்றினான். யானை ஏறியதும், படகு தண்ணீரில் சிறிது அமிழ்ந்தது. அப்போது அவன், படகில் தண்ணீர் மட்டத்தை அடையாள்ளம் செய்தான்.

பின்பு, யானையைப் படகிலிருந்து இறக்கியபின், பெரிய பெரிய கற்களைப் படகில் ஏற்றச் சொன்னான். முன்பு குறித்து வைத்திருந்த அடையாளத்தின் அளவுக்குப் படகு தண்ணீரில் அமிழும் வரை, கற்கள் ஏற்றப்பட்டன. பின்பு, அரசரிடம் அந்தக் கற்களைக் காட்டி, ''அவற்றின் எடை தான் அந்த யானையின் எடை'' என்றான்.

அனைவரும் வியந்தனர். அவனது புத்திசாலித்தனத்தைப் போற்றிப் புகழ்ந்தனர். எல்லோரும் யானையை ஒட்டுமொத்த உருவமாகத்தான் பார்த்தார்கள். ஆகவே, அவர்களால் அதன் எடையைக் கணிக்கமுடியும் எனும் நம்பிக்கை வரவில்லை.

ஆனால் அந்தச் சிறுவனோ, பல எடைகளின் கூட்டுத்தொகையே யானையின் எடை என்று எண்ணிச் செயல்பட்டான்; எளிதில் விடை கண்டான். எவ்வளவு பெரிய செயலாக இருந்தாலும், அதைச் சின்னச் சின்ன செயல்களாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். பிறகு, அந்த ஒவ்வொரு செயலையும், செவ்வனே செய்து முடிக்கவேண்டும். அப்போது, ஒட்டுமொத்தத் திட்டமும் அழகாக நிறைவேறிவிடும்.''

# மரியானா ஆழி

(Mariyana Trench)








மரியானா ஆழி வடக்குப் பசுபிக் பகுதியில் காணப்படுகின்றது. உலகிலேயே மிக ஆழமான ஆழி என்னும் பெருமையை மரியானா பெற்றிருக்கின்றது.

இந்த மரியானா ஆழியில் அரியவகைக் கடல் வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன. 1872-1876 வரையான சலஞ்சர் ஆய்வின் போது மரியானா ஆழியின் ஆழம் 9636 மீற்றர் என அறிவிக்கப்பட்டது.

கைகோ என்னும் ஜப்பானிய ஆய்வுக்கலம் 1995 ஆம் ஆண்டு ஆய்வின் போது மரியானா ஆழியின் ஆழம் 10911 மீற்றர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு கனேடிய திரைப்பட இயக்குனர் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் மரியானா ஆழியின் அடிக்குச் சென்றார்.

ஸ்பெயின் நாட்டு இளவரசியின் பெயர் மரியானா ஆகும். அவரது பெயரே உலகிலேயே ஆழமான ஆழிக்குச் சூட்டப்பட்டுள்ளது.

நேச வித்[illegible]
கிளிநொச்சி.

## இளமைப் பெயர்களை அறிந்து கொள்வோமா?

- ★ அணில் - குஞ்சு, பிள்ளை
- ★ ஆடு - குட்டி
- ★ நெல் - நாற்று
- ★ கீரி - பிள்ளை
- ★ கழுகு - கன்று, பிள்ளை
- ★ காகம் - குஞ்சு
- ★ கோழி - குஞ்சு
- ★ தவளை - பேத்தை, குஞ்சு
- ★ மூங்கில் - கன்று
- ★ பாம்பு - குட்டி
- ★ சிங்கம் - குருளை
- ★ மான் - கன்று
- ★ யானை - போதகம்
- ★ கிளி - பிள்ளை
- ★ வாழை - குட்டி
- ★ மா - கன்று
- ★ கரடி - குட்டி
- ★ மாடு - கன்று

ப.அனோஜா, தரம் 9,டி
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## சுமை

பயன்படாதவரை
பணம்பெட்டிக்குச் சுமை
சிந்திக்காதவரை
மூளை தலைக்குச் சுமை
துணிவு இல்லாதவரை
பயம் வெற்றிக்குச் சுமை
உழைக்காதவரை
மனிதன் உலகிற்கே சுமை

ச.சங்கவி, தரம்-7பி,
யா/ ஹாட்லிக் கல்லூரி.



த.வைஷ்ணவி,
தரம்-9,
யா/ கொழும்புத்துறை
இந்து ம.வி.



ரா.றொயின்ஸ்றாஜ்,
தரம்-8,
இ.றோ.க.ம.வி.



எ.றிந்தியா,
தரம்-5சி,
C.G.C



உ.அனிஸ்மன்,
தரம்-9பி,
யா/ சங்கானை
சிவப்பிரகாச ம.வி.



சி.சினேகா, தரம்-3,
கைதடி குருசாமி வித்தியாலயம்

## விடை தெரியுமா? 205

### உங்களுக்கும் பரிசுகள்

1. மண் புழு எதனால் சுவாசிக்கின்றது?
2. எந்த நாட்டினுடைய தேசியக் கொடியில் 50 நட்சத்திரங்கள் உள்ளன?
3. இலங்கையில் தோல் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?
4. உலகில் அதிகமான தங்கம் உற்பத்தி செய்யும் நாடு எது?
5. உலகின் மிகப் பெரிய நூலகம் எங்கு உள்ளது.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் **''சிறுவர்கதிர்''**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**விடைகள் 203**

1. யுரேனஸ்
2. மார்க்கோனி
3. மாலே
4. [illegible]
5. [illegible]

### விடை தெரியுமா?

தெரிந்தால் 13.04.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## வெற்றி பெற்றோர் விவரம் (203)

- * ஜெ.சங்கீதன், தரம் -6சி, யா/ இந்துக் கல்லூரி
- * ச.அலக்ஷன், தரம்-6, கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்
- * செ.சுலக்சன், தரம்-3, யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தி.
- * ஜெ.கஜீவன், தரம் -7ஏ, யா/ ஹாட்லிக் கல்லூரி
- * வி.ஐதுர்ஷன், புனித பத்திரிசியார் கல்லூரி
- * இ.யோதிகா, இல.14, குமரபுரம், பரந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்நாட்டுப் போரில் லிங்கன் கிட்டத்தட்ட நிம்மதியை இழந்திருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். கறுப்பின மக்கள், அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பது லிங்கனின் ஆசை, இலட்சியம்.

45

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

பா.உண்மை

உள்நாட்டுப் போரில் லிங்கன் கிட்டத்தட்ட நிம்மதியை இழந்திருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். கறுப்பின மக்கள், அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதுதான் லிங்கனின் ஆசை, இலட்சியம். அதற்கு விலையாகக் கிடைத்ததுதான் உள்நாட்டுப் போர். தேசம் இரண்டாக உடைந்து விழுந்தாலும் எப்படியாவது ஒட்டிவிடலாம் என்ற நம்பிக்கையோடுதான் தெற்குப் படைகளுக்குப் பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் அந்த வதந்தி எழுந்தது.

'மேரி டோட் லிங்கன் தெற்குப் பகுதிப் படைகளின் ஆதரவாளர். ஆதரவாளர் மட்டுமல்ல. அவர் ஓர் உளவாளி. வெள்ளை மாளிகையில் இருந்துகொண்டே எதிரிகளுக்கு நம் தேசத்தைக் காட்டிக் கொடுக்க முயற்சி செய்பவர்.'

இப்படி ஒரு வதந்தி பரவியதும் துடித்துப் போனார் லிங்கன். மேரி டொட்மேல் இப்படி ஓர் அவதூறு எழுவதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. மேரியின் பல முக்கியமான உறவினர்கள் தெற்குப் படைக்கு ஆதரவாகப் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். உள்நாட்டுப் போரில் தெற்குப் படைக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கி, சண்டை போட்டு, மேரியின் மூன்று சகோதரர்கள் இறந்து போயிருந்தார்கள். இவையெல்லாம் மேரியின் மீது அவதூறைப் பரப்பி விடக் காரணமாக இருந்தன.

இந்த வதந்தியில் முதலில் கலங்கினாலும் லிங்கன் அசரவில்லை. அவருக்கு மேரி டாடை நன்றாகத் தெரியும். மேரி ஆடம்பரமாக, டாம்பீகத்தோடு வாழ விரும்புவாரே தவிர, தெற்குப் படைகளோடு உறவு வைத்துக் கொள்கிற அளவுக்கு இறங்கிப் போகமாட்டார் என்பதை லிங்கன் அறிந்திருந்தார்.

ஒரு கட்டத்தில் நாடாளுமன்ற ஆய்வுக் குழு விவாதிக்கும் அளவுக்கு இந்த விடயம் போய் விட்டது. அதற்கு மேல் லிங்கனால் பொறுக்க முடியவில்லை. இதற்கு முடிவு கட்ட என்ன செய்யலாம் என்று யோசித்தார். இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர மேரி டொட்டால் மட்டும்தான் முடியும் என்பது தெளிவாகத் தெரிந்தது. மேரியிடம் பேசினார். மேரியும் பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து கொண்டார். உதவ முன்வந்தார்.

அமெரிக்க உள்நாட்டின்போது, போர் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கவும் ஒரு குழு (Joint Committee on the conduct of the war) ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஒருநாள் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் அந்த ஆய்வுக்குழுவுக்கு வருகை தந்தார் மேரி டாட். அமெரிக்க ஐக்கியப் படைகளுக்கு எதிராக எந்தச் சூழ்நிலையிலும் தம்மால் செயற்பட முடியாது என்பதைத் தெளிவுபடுத்தினார். அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் மாறிமாறிக் கேட்ட கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் சொன்னார். அதோடு நின்றுவிடவில்லை மேரி.

உள்நாட்டுப் போரில் காயமடைந்த வீரர்களைத் தேடிக் கொண்டு ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாக ஏறி இறங்கினார். அந்த அமெரிக்க ஐக்கியப் படை வீரர்களுக்கு ஆறுதல் சொன்னார். காயம்பட்டுக் கிடக்கிறவர்களுக்குத் தங்களைத் தேடிவருகிற மனிதர்கள்தானே ஆறுதல், நிம்மதி. அதை மேரி டாடை வைத்து மிகச் சரியாகச் செய்தவர் லிங்கன். காயமடைந்த ஐக்கியப் படை வீரர்களைத் தேடிக்கொண்டு மேரி டொட் போன செய்தி பரவப்பரவ, அவரைப் பற்றிய வதந்திகளும் காணாமல் போயின.

சில சமயங்களில் நிர்வாகத்திலும் மூக்கை நுழைப்பார் மேரி டொட். அந்தச் சந்தர்ப்பங்களில் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வார் லிங்கன். மிக நாசுக்காக மேரியின் யோசனை எப்படித் தவறு என்று சுட்டிக் காட்டுவார். நல்ல யோசனையாக இருந்தால் ஏற்றுக் கொள்ளவும் தயங்க மாட்டார்.

மேரி டொட்டின் சுபாவமும் சில சமயங்களில் தர்மசங்கடமான சூழ்நிலைக்கு லிங்கனைக் கொண்டு போய்த் தள்ளியது. மேரி டாட் அரசு அதிகாரிகளையோ, மந்திரிகளையோ மதிக்கமாட்டார். யாராயிருந்தாலும் சட்டென்று எடுத்தெறிந்து பேசிவிடுவார். சீவர்ட், ஸ்டேண்டன் போன்றவர்களைக் கூட மேரி டொட் விட்டுவைக்கவில்லை. ஆனால், மேரியின் சுபாவமறிந்து அவர்களும் பொறுத்துப் போனார்கள். லிங்கனுக்காகத் தாங்கிக் கொண்டார்கள்.

*(மீட்பர் வருவார்)*

வாழ வகை தெரிந்தவர்
வன்னி வந்து பல காலம்
எண்ணிலா - வளம் கொழிக்கும்
புண்ணிய பூமியை
வலம் வந்து வாழ்ந்து உயர்ந்தார்

சாதனை படைக்காத
சரித்திரமும் படிக்காத
உத்தமர்களா! எம் மண்ணில்
எந்திரியாய் வைத்தியராய்
காலடி வைத்தார் இமயம் என

பாவம் பாவையர் பலர்
பாடம் படித்து பட்டம் பெற்று
பதவியும் பெற்று விட்டார்
பரிதவிக்கும் தத்தம் குடும்பத்தை
கண்போல் காத்திட வேண்டும்
அது அவரவர் கடமைதான்

பாரிச வாதக் கணவன்
வயதான பெற்றோர்
பாலூட்டும் வயதில் குழந்தை
கருவை சுமக்கும் தாய்
மனிதாபிமானப்படி
இரக்கப்பட வேண்டியவர்கள்
இவர்கள் பாவம்

எண்ணிப் பார்க்கிறேன்
சீரழிந்த வாழ்வை- எல்லாம்
சீரான வாழ்வாக்கும் அரிய
மந்திரம் அறிந்தவர்கள்
இந்த - ஆசிரியர்களைத்தான்
மாதா, பிதா, குரு, தெய்வம்
என மனதில் எண்ணி
வணங்கி நின்றோம்
உயர்ந்து நின்றோம்

உணர்வை உசுப்பேற்றி
தடம் மாறிடும்
நிலை ஏன் வந்தது?
மாற்றத்தைத் தடுப்பதற்கு
மங்காத்தாதான் - பதில்
சொல்ல வேண்டும்

- முல்லை ரமணன்

# மங்காத்தா
## பதில் சொல்வாளா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வை இசையாக்கும் குழலிசை வித்தகி தையல்நாயகி

■வயாவிளான் தவமைந்தன்

அடுப்பங்கரையில் அடங்கிக் கிடக்கும் பெண்களைப் போலல்லாமல், நிறுவனங்களில் நாற்காலிகளில் அமர்ந்தவாறு நித்திரை செய்து, கருவியின் தந்தியைச் சுருதி கூட்டத் தெரியாமல் திண்டாடுகின்ற பட்டம்பெற்ற பாவையரைப் போல் அல்லாமல், தனது உதிரத்தை உரமாக்கி உணர்வை இசையாக்கி நாதக் குழலைத் தன்கையில் தாங்கிய இசையரசி.



கல்வி, கலை, விளையாட்டு முதலான அனைத்துத் துறைகளிலும் தற்காலத்தில் பெண்கள் சாதனையாளர்களாக வரலாறு படைத்து வருவதை நாம் நேரில் காண்கின்றோம். இவர்களுள் சிலர் நேர்மையுள்ளவர்களாகவும் முன்னுதாரணமானவர்களாகவும் தமது பணிகளைத் தொடர்ந்து வருகின்றனர். எனினும் கலைத்துறையில் அரச தொழில் புரியும் சிலர் சுருதிப் பெட்டியை, வீணையை, வயலினை கண்ணால் கூடப் பார்க்காமலும் வாரத்தில் ஒரு மணித்தியாலமாவது கற்பித்தலில் ஈடுபடாமலும் முழுநேர ஓய்வை அனுபவித்து அரை இலட்சம் ரூபாவை மாதச் சம்பளமாகப் பெறுகின்றனர் என்று ஒரு கதையுண்டு. இன்னும் சிலர் ஆய்வு செய்கின்றோம் என்று விடுப்பினைப் பெற்று வருடக்கணக்கில் வீட்டிலேயே ஆனந்தமாகத் தங்கியிருந்து தமது பண பலத்தால் உயர் பட்டத்தையும் தந்திரமாகப் பெற்று விடுகின்றனர். கடின உழைப்பு என்றால் என்னவென்றே இவர்கள் அறிந்திருப்பதில்லை.

ஆனால் தனது இல்லத்தின் பணிகளை அகம் குளிர்ந்து இன்முகத்துடன் குறைவின்றிக் கவனித்து நல்லதோர் மனைவியாகவும், சிறந்த தாயாகவும் விளங்கி வருவதுடன் தனது மூச்சுக் காற்றினை இசையாக்கிக் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளிற்கும் மேலாக உலகின் பல திசைகளிலும் நாதஸ்வரக் கருவியின் ஊடாக இன்னிசை மழை பொழிந்து வருகின்ற மரபு வழி தவறாத மங்கல இசைக் கலைஞராகவும் தனது பிள்ளைகளையும் இசையாளர்களாக உருவாக்கியிருக்கும் ஒப்பற்ற குருவாகவும் இசைத்துறையில் ஈடுபட்டு வருகின்ற பெண்களிற்கு எடுத்துக்காட்டான சாதனைப் பெண்ணாகவும் விளங்குபவர் இசைஞானமணி திருமதி தையல்நாயகி தியாகராஜசுந்தரம்.

மறைந்த கோபால் - முத்துலட்சுமி தம்பதியரின் மகளாக 04.05.1959 இல் கல்வியங்காட்டில் இவர் பிறந்தார். கல்வியங்காடு சைவத்தமிழ் கலவன் பாடசாலையிலும் செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் கற்ற இவர் அந்தக் காலத்தில் நாதஸ்வரக் கலைஞராகப் பெரும் புகழ் பெற்றிருந்த தனது தாயாரிடம் நாதஸ்வரக் கலையை பத்தாவது வயதில் இருந்து கற்று வந்தார். குரலிசையையும் குழலிசையையும் குருகுல முறையில் தனது தாயாரிடமே கற்று குழந்தைக் கலைஞராக வளர்ச்சி கண்டு வந்தார்.

இயற்கையான ஞானத்துடன் இசைக்கலையில் கடினமான பயிற்சிகளைப் பெற்று வந்த இவர் மிக விரைவாகக் கற்று பன்னிரண்டாவது வயதில் இருந்து தனது தாயார் முத்துலட்சுமியின் இணை நாதஸ்வரக் கலைஞராக மேடைகளில் வாசித்து வந்தார். தமிழ் மக்களின் பெரு வரவேற்பைப் பெற்று ஈழத்தின் பகுதிகள் அனைத்திலும் மங்கல இசை வழங்கி முப்பத்தைந்து ஆண்டுகளிற்கும் மேலாக இணை பிரியாத இரட்டை நாதஸ்வரக் கலைஞர்களாகத் தனது தாயார் மறையும் வரை இணைந்து செயற்பட்டார்.

இராகம் வாசிப்பதிலும் உருப்படிகளைப் பாடாந்தரம் வழுவாமல் இசைப்பதிலும் வல்லவரான இவர் ஈழத்தின் புகழ் கொண்ட நாதஸ்வர மேதைகளான என்.கே.பத்மநாதன், கோண்டாவில் பாலகிருஷ்ணன், எம்.ப.பாலகிருஷ்ணன், கே.எம்.பஞ்சாபகேசன், கே.ஆர்.சுந்தரமூர்த்தி, வீ.கே.கானமூர்த்தி, வீ.கே.பஞ்சமூர்த்தி போன்ற அனைத்துக் கலைஞர்களுடனும் சரிசமமாக அமர்ந்து இசை மழை பொழிந்து தமிழ் மக்களின் வரவேற்பைப் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்தின் அனைத்துப் பகுதிகளிற்கும் சிறப்பு மங்கல இசைக் குழுவாக அழைக்கப்படுகின்ற இவரது குழுவில் இவரது சகோதரி செல்வநாயகி தவிலிசை வழங்கி வருகின்றமை போற்றுதற்குரியதாகும். பெண்களிற்கென வரையறுக்கப்பட்டிருக்கும் எல்லைகளைத் தாண்டி உலகம் போற்றும் கலைஞர்களாக இசைத்தொழில் புரிந்து வரும் இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

2001ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டிற்கு அழைக்கப்பட்ட இவர் அங்கு இருக்கும் அனைத்துச் சைவாலயங்களிலும் மங்கல இசை வழங்கியவர். மூன்று மாதங்கள் அங்கே தங்கியிருந்து கலை விழாக்களிலும் இசைக் கச்சேரிகளிலும் இசை வழங்கி ஈழத்தின் கலையுலகிற்குப் பெருமைசேர்த்த இக்கலைஞரை புலம் பெயர் தமிழர்கள் பெருவிழா எடுத்துப் பாராட்டியும் மதிப்பளித்தும் பொற்கிளி வழங்கியும் தமது அன்பை வெளிப்படுத்தினர்.

அடுப்பங்கரையில் அடங்கிக் கிடக்கும் பெண்களைப் போலல்லாமலும் நிறுவனங்களில் நாற்காலிகளில் அமர்ந்தவாறு நித்திரை செய்து, கருவியின் தந்தியைச் சுருதி கூட்டத் தெரியாமல் திண்டாடுகின்ற பட்டம் பெற்ற பாவையரைப் போல் அல்லாமலும் தனது உதிரத்தை உரமாக்கி உணர்வை இசையாக்கி நாதக் குழலைத் தன்கையில் தாங்கிய இசையரசியாக எம்மிடையே வாழ்ந்து

## சாதனைக் கலைஞரைச்

### சந்திப்போம் சிந்திப்போம்

கொண்டிருக்கும் தையல்நாயகி தனது கருத்துக்களை இவ்வாறு கூறுகின்றார்.

"முதலில் மறைந்த எனது கணவரிற்கு எனது ஆத்மார்த்தமான நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். தவிலிசைக் கலைஞராக இருந்த அவரது ஆதரவும் அன்பும் இல்லாமல் இருந்திருந்தால் என்னால் இந்தத் துறையில் பெயர் பெற்றிருக்கவே முடியாது. எனது அம்மாவுடனும் கணவருடனும் தங்கையுடனும் இணைந்து ஊர் ஊராகச் சென்று விடிய விடிய வாசித்த காலங்கள் இனிமையானவை, மறக்க முடியாதவை.

தற்காலத்தில் எனது தங்கை செல்வநாயகி என்னுடன் தவில் வாசித்து வருகின்றார். எனது மகன்மாரும் எனது மங்கல இசைக் குழுவில் தவில், நாதஸ்வரக் கலைஞர்களாக இருக்கின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

எனினும் கால மாற்றம் என்பது எமது இசைத் தொழிலிலும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது என்றே கூறவேண்டும். நல்ல கீர்த்தனைகளையோ நீண்ட நேர இராக ஆலாபனைகளையோ தற்காலத்தில் மக்கள் விரும்புவதில்லை.

தென்னிந்தியச் சினிமா மோகம் என்பது எல்லை மீறிவிட்டது. அந்தக் காலத்தில் வந்த பாடல்கள் கேட்கக் கூடியவைகளாகவும் மனதில் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கக் கூடியவைகளாகவும் இருந்தன.

தற்காலப் பாடல்களைக் காது கொடுத்துக் கேட்கவே முடியவில்லை. அவற்றை வாசிக்கவும் முடியவில்லை.

ஆனால் மக்களின் இரசனையோ செவிக்கினிய இசைமீது இல்லாமல் குத்துப் பாடல்களின் பக்கமே திரும்ப விட்டது" என்று கவலையுடன் கூறுகின்றார் இசைக்கான ஜோதி திருமதி தி.தையல்நாயகி. ★

## யுத்தம்....



பல உயிர்களை
பறித்தெடுத்து
பாவி மக்களைப்
பரிதவிக்க வைத்து
பஞ்சத்தை பரிசளித்து
தூரப்போனது போர்.
இன்னமும் பதுங்கு குழிகள்
வெதும்பிய உடல்களால்
சிதம்பிக் கிடக்க
ததும்பிய கண்ணீர் துடைக்க
கரங்களின்றி
தவிக்கின்றோம்
ஒரு நாள் மீண்டும்
தலை நிமிர்வோம் வேண்டும்
தரணியும் போற்றுமன்று

-செந்தூரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனமாகக் கருதப்பட்ட பலங்கள்



இன்றும் மக்களிடையே பெரும் ஆதிக்கத்தைப் பெற்றுள்ள புராண இதிகாசக் கதைகளும் பெண்களை ஆண்களின் அடிமைகளாகவே படைக்கின்றன. உதாரணமாக பஞ்சபாண்டவர்கள் திரௌபதியைத் தம் மனைவியாகக் கொண்டிருந்தனர்.

[சென்ற வாரத்தொடர்ச்சி..]

முதலாவதாக மதக் கோட்பாடுகள் பெரும்பாலும் பெண்ணை ஆணுக்குக் கீழ்ப்பட்டவள் என்றும் ஆணுக்கு அடிமையானவள் என்றும் சித்தரிக்கின்றன. சிவன், பிரம்மா, விஸ்ணு, முருகன், யேசு, அல்லா, புத்தர் எனக் கூறப்படும் தெய்வங்கள், மதத்தலைவர்கள், மதப்போதகர்கள் அனைவருமே ஆண்கள். ஆண்கள் தலையெடுத்த சமூக அமைப்பில் முதன்மையான தெய்வத்தையும், ஆண்களாகவே படைக்க முடிந்தது. இதனால் பெண்களின் மனதிலும் நினைவிலும் கருத்தியல்ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் நாம் தரம் குறைந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்த முடிந்தது.

இன்றும் மக்களிடையே பெரும் ஆதிக்கத்தைப் பெற்றுள்ள புராண இதிகாசக் கதைகளும் பெண்களை ஆண்களின் அடிமைகளாகவே படைக் கின்றன. உதாரணமாக பஞ்சபாண்ட வர்கள் திரௌபதியைத் தம் மனைவி யாகக் கொண்டிருந்தனர். ஆனால் அவளுக்கு அவர்களில் ஒருவரை மட்டும் கணவனாக ஏற்றுக் கொள்ளும் உரிமை கிடையாது. குழந்தைப்பருவத்தில் ஆணும் பெண்ணும், சரிசமமாக வளர்கின்றனர், வளர்க்கப்படுகின்றனர். ஆனால் பெண் கள் பூப்பெய்துகின்றபோது உடல், உள ரீதியாக பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை வருவதனால் சமூகம் அவளின் செயற்பாடுகளை சுதந்திரத்தினை மட்டுப்படுத்துகின்றது. இதன் ஒரு அங்கமாகவே அந்தக் காலத் தில் பெண் பூப்பெய்தினால் வீட்டை விட்டு சுதந்திரமாக நடமாட முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறாள். அதன் உச்சக் கட்டமாக மாதவிடாய்க் காலத்தின்போது அவள் வாழும் வீட்டில் இருந்துகூட தூரத் தள்ளிவைக்கப்படுகின்றாள். எதுவித பணியுமின்றி வீட்டின் ஒரு மூலையில் கைதிபோல் அடைக்கப்பட்டிருக்கிறாள். இதற்கு குற்றம், துடக்கு என்ற சாட்டுக்களும், இரத்தப் போக்கு இருப்பதனால் ஓய்வு தேவை என்ற காரணமும் காட்டப்படுகின்றது. ஆனால் இன்று பெண்கள் மாதவிடாயின்போது நாளாந்தம் செய்து கொண்டு வந்த சகல பணிகளையும் இடைநிறுத்தாது, செய்கின்ற நிலையினைக் காண்கிறோம். இது எப்படிச் சாத்தியமானது என்பதனை விஞ்ஞான ரீதியாகப் பார்ப்போம். மாதவிடாய் மாதம் ஒரு முறை ஏற்படுகின்றபோது நான்கு அல்லது ஐந்து நாட்களிற்கு இரத்தப் போக்குக் காணப்படும். இது காயத்தின்போது ஏற்படுகின்ற குருதி இழப்புப் போல சடுதியாக ஏற்படுகின்ற குருதி இழப்பு அல்ல. ஓமோன்களின் செயற்பாட்டால் ஒரு மாதகாலமாகப் பருமன் தடித்து வழமைக்கு அதிகமாக குருதி விநியோகத்தைப் பெற்றிருந்த கருப்பை உட்சுவர் உடைந்து உதிர்வதனாலேயே இரத்தப் பெருக்கு ஏற்படுகின்றது. இதன்போது ஐந்து நாட்களுக்கும் சேர்த்து ஆகக் கூடுதலாக 300 மில்லிலீற்றர் இரத்தமே வெளியேறுகின்றது. எந்த ஒரு பெண்ணும் 18 வயதிற்கு மேல் 500 மில்லிலீற்றர் இரத்தத்தை உடலில் எதுவித பாதிப்பும் இன்றி இழக்கலாம் என்பது ஆதாரபூர்வமான உண்மையாகும். இந்த அடிப்படையில்தான் இரத்த தானம் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு இரத்ததானம் செய்யப்படுகின்றபோது, உடலில் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இந்த இழப்புக்கு ஈடாக, புதிய இரத்தம் இரு கிழமைகளில் உருவாகி விடுகின்றது. இதனால் இரத்தத்தில் புதிய அணுக்கள் சேருகின்றன. இதேபோல் பெண்களும், மாதாமாதம் இரத்தத்தை வெளியேற்றுகின்றபோது அவ் விரத்தம் இருகிழமைகளில் ஈடுசெய்யப்பட்டுக் கொண்டே வருகின்றது. இதனால் உடல் புதுத்தெம்பு பெறுகின்றது. ஆகவே பெண்கள் மாதவிடாய் காலத்தின்போது ஓய்வெடுக்காமல் வேலை செய்யக்கூடிய உடல், உள பலம் உண்டு என்பதே உண்மையாகும்.

அடுத்ததாக மகப்பேற்றினை எடுத்துக் கொள்வோம். இங்கு பெண்ணானவள் ஒரு புதிய உயிரை பத்து மாதங்கள் தன்னகத்தே சுமந்து பிரசவ வேதனையைத் தாங்கி அவ்வுயிரை வெளிக் கொணர்ந்து உலகிற்குத் தருகின்றாள். பின் இக்குழந்தையின் வளர்ப்புக்காக சிறுகாலம் தன் கடமையில் இருந்து ஓய்வு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இக்காலத்தில்தான் ஆண் கடமையில் முன் சென்று உயருகின்றான். ஓர் உயிரைப் பிரசவிப்பது என்பது பெரிய கடமை. ஆண்களிற்குக் கிடைக்காத பெரும் பாக்கியம் பெண்களுக்குக் கிடைக்கின்றது என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை ஒரு பல வீனமாகப் பார்க்காது, பலமாகப் பார்க்க வேண்டும். மேலும் மாதவிடாய் நிற்றலையும் பெண்ணின் ஓர் பல வீனமான அறிகுறியாகப் பார்த்து வந் துள்ளனர். ஏனென்றால் மாதவிடாய் நிற்கின்ற போது ஓமோன்களின் சுரப்பு குறைவதனால் உடல், உள நோய்கள் ஏற்படுவதனால் அவர்கள் வேலை செய்வதற்குத் தகுதி இல் லாதவர்கள் என்று காரணம் காட்டி ஒய்வில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆனால் இன்றைய உலகில் இதனைப் பல பெண்கள் பொய்யாக்கி உள்ளனர். மேலும் மாதவிடாய் நிறுத்தத்தின் பின்பு பெண்களின் ஆற்றல் பல மடங்காக அதிகரித்து உள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



மனிதவர்க்கவியல் நிபுணர்களான அற்றின்சீல்மான், நான்சீரானர் ஆகியோர் 1970இல் பழங்குடி மக்கள் மத்தியில் மேற்கொண்ட பல ஆய்வுத் தரவுகளின்படி அங்கு அவர்களின் நாளாந்த உணவில் 70 வீதமான உணவினைப் பெண்கள் சேகரித்து வருகின்ற தாவர உணவும், 30 வீதமானது ஆண்கள் வேட்டையாடி வரும் மாமிச உணவும் பூர்த்தி செய்கின்றன என்று தெரியவந்துள்ளது. ஆனால் ஆண்கள் வேட்டைக்காரர்களாகவும், பெண் குகையில் இருந்து ஆண்களுக்கு அடிமை வேலை செய்வதாகவும், ஆதி மனித வரலாறுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இதனை இன்றைய ஆய்வாளர்கள் நிராகரிக்கின்றனர்.

அவுஸ்திரேலியாவின் திவி இன பழங்குடி மக்களில் பெண்கள்தான் வேட்டைக்குச் செல்கின்றனர். அதே போல் கொங்கோவில் அடர்ந்த காடுகளில் வசிக்கும் பழங்குடி மக்கள், தங்கள் வேட்டைப் பணி யில் முழுக்குடும்பத்தினையும் ஈடுபடுத்துவதாக கிறிஸ்நைற் என்ற ஆய்வாளர் தெரிவிக்கின்றார். மேற்குலகச் சம்பிரதாயங்களின்படி வேட்டைக்குரிய தெய்வங்கள் யாவரும் பெண்களாகவே இருக்கின்றனர்.

இறுதியாக பெண்ணில் ஏற்படுகின்ற சில தவிர்க்க முடியாத உடற்றொழில் மாற்றங்களினால் அவள் கடமையில் பின்தங்கும்போது அதனைப் பலவீனமாகப் பார்க்கும் நிலைதான் அன்று இருந்துள்ளது. இன்று இதனைப் பலமாகப் பார்க்கும் காலம் தொடங்கிவிட்டது. இதற்குப் பெண்கள் அனைவரும் தம்மிடம் உள்ள பிற்போக்குச் சிந்தனைகளைக் களைந்து தம் ஆற்றல் திறனையும் முற்போக்குச் சிந்தனையையும் வளர்க்க வேண்டும். அத்துடன் அறிவியல்ரீதியாகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்படும் போது பெண்கள் ஆண்களுக்குச் சரிசமனான பலமுள்ளவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

# பெண்ணிற் பெருந்தக்க யாவுள



அ.ஜெஸ்சி சாவகர்(

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்றான் ஒரு கவிஞன். பூமித் தாய், கடல் அன்னை, வான மாதா என இயற் கையையே பெண்ணாகக் கருதி வழிபடும் மரபு தமிழ் மக்களுக்குரியது. "தாயும் பெண்ணே தாரமும் பெண்ணே" என்பது முதுமொழி. அந்த வகையில் காளி, முத்துமாரி, சரஸ்வதி, துர்க்கை என பெண்ணையே தெய்வமாக்கி வழிபடும் பெருமையைப் பெற்றவர்கள் எம்மவர்கள்.

ஆடவன் ஒருவனின் வாழ்வுக்கும், தாழ்வுக்கும் பின்னணியில் ஒரு பெண்ணே நிற்பாள் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். அதனால் தான் "ஆவதும் பெண் ணாலே அழிவதும் பெண்ணாலே" என பிற்கால கவிஞன் ஒருவன் பாடியுள்ளான்.

ஆரம்ப காலத்தில் ஆண் புலவர்களுக்கு நிகராக பெண் புலவர்கள் பலபேரும் செய்யுள்களை யாத்துள்ளனர். ஔவையார், காக்கைப்பாடினியார், ஆதி மந்தியார் போன்ற பலரை நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. "பெருந் தடங்கண் பிறை நுதலார்க்கு எல்லாம் திருந்து கல்வியும் செல்வமும் பூத்தலால்- வருந்தி வந்தவர்க்கு வைகலும் விருந் தும் அளித்தார்கள்" என அக்காலப் பெண்கள் பெருமையை கம்பன் சுட்டிக் காட்டுகின்றான். ஆணுக்குப் பெண் நிகரெனக் கொள்கை கண்ட தமிழ் மக்கள் மத்தியில் ஆரிய வருகையும், அவர்களின் சடங்குகளின் கலப்புக்களும் ஆணாதிக்க வர்க்கம் ஒன்றைத் தோற்றி வைத்தன. அந்தப்புர பொம்மைகளாகவும், அடுப்படி பொம்மைகளாகவும், கையடங்கி, மெய்யடங்கி, வாயடங்கி, மூச்சடங்கி பெண்கள் வாழவேண்டும் என்ற அரக்கத்தனம் இடைக்காலத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் ஈடிணையற்ற கவிஞரான பாரதியார் பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராக பொங்கி எழுந்தார். பொழியும் கவிதைகள் ஊடாக அந்தக் கொடுமைகளுக்கு எதிராக தீயை மூட்டினார். "வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என பாரதியின் பாடல்களும், "நிமிர்ந்த நன்நடையும், நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும் - நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்" என பாரதியின் புரட்சிக் குரலும் விண்ணதிர ஓங்கி ஒலித்தது. இதன் மூலம் அடக்குமுறைகளை உடைத்தெறிந்து கொண்டு பெண்ணினம் விழிப்புப் பெற்றது. கல்வியில், அரச தொழில்களில் , உயர் பதவிகளில் , நாடாளும் உயர் நிலையில் பெண்கள் சமூகம் ஜொலிக்கத் தொடங்கியது. ஆனால் தற்காலத்தில் நிகழும் சிறுமியர் வன்புணர்வு, சிசுக்கொலைகள் [illegible] எங்கும் செய்கின்றன. வரையறை கடந்த உரிமைகள் பெண்களின் வாழ்வையே சீரழித்து விடுமோ [illegible]. போராடிப்பெற்ற உயர்ந்த வாழ்வையும், உரிமைகளையும் நாகரிகப் புதுமை என்ற பெயரில் தொலைத்துவிடாமல் தம் உயர் நிலையைக் காப்பாற்ற பெண்கள் சமூகம் உறுதி எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 260



அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

### இடமிருந்து வலம்

1. (நூல்) பதிப்பது இங்கே
4. அரைவாசி
6. நீர் பாயும் மதகு
7. மேளம்
8. நரகம் அல்ல
11. எரிதல்
12. நித்திரையில் வரும்
13. விழி
14. சிரசு மயிர்
15. உள்ளன
16. கடையேழு வள்ளல்களில் ஒருவன்
18. சரீரம்
20. அஞ்சல்
22. இது இல்லாவிட்டால் பொக்குவாய்தான்
23. கைகூப்பு

### மேலிருந்து கீழ்

1. கிளி
2. யுத்தம் நடைபெறும் இடம்
3. ஓர விழி(ப்) பார்வை
4. பாவம் செய்தவன்
5. ஒரு இராகம்
7. தங்களது
9. காயத்தின் அடையாளம்
10. படி
12. வர்த்தக நிலையம்
14. சரித்திரம்
15. தேகம்
17. படிப்பறிவு தரும் கலை
18. துணை
19. உட்செல்ல
21. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 258 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) கையாலாகாதவன் (6) தாசி (7) முட்டை (9) சகடை (10) பாவி (11) குமரன் (13) மலடு (14) கண் (15) பிணம் (16) தர (17) பாரம் (19) சம்மதம் (21) மண் (22) தும்புத்தடி.

**மேலிருந்து கீழ்**

(1) கைதூக்கு (2) யாசி (3) காமுகன் (4) தட்டை (5) வடை (8) தவிடு (9) சரண் (10) பாலம் (12) மகரம் (13) மணம் (15) பிரம்பு (16) தசமி (17) பாதம் (18) வண்டி (20) மது (21) மத

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 260**
**நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்றும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (17.04.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டிஇல.260இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 21.04.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 258 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

**ஞானப்பிரகாசம் துரை,**
இல.85/4, கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**

**சகுணதாஸ் அஸ்வின்,**
அளம்பில், முல்லைத்தீவு.

**3 ஆம் பரிசு**

**திருமதி நிசாங்கர் கௌசி,**
ராஜ வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

**4 ஆம் பரிசு**

**ஜெ.சலக்ஷன்,**
இல.23/89, அண்ணா வீதி, தோணிக்கல், வவுனியா.

**5 ஆம் பரிசு**

**எஸ்.நந்தாஹினி,**
'புனித இருதயம்', கல்வயல், சாவகச்சேரி.

**பாராட்டுப் பெறுவோர்**

**நேச.வித்யாசாகர்,**
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

**திருமதி க.லிங்கமூர்த்தி,**
அமெரிக்க மிஷன் பாடசாலை வீதி, வல்வெட்டித்துறை.

**க.சுந்தரேஸ்வரன்,**
இல.34, சிவன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை [illegible] அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*



# எங்கள் நிலம் பூக்கட்டும்

ஆர்ப்பரிக்கும் தமிழகமே
அடங்காத் தமிழுறவே
வேர் பிடித்து எழட்டும்
உங்கள் விரதங்கள்

போர் பிடித்து எரிந்த இந்த
இனிய நிலம் பூக்கட்டும்
ஊர் பிடித்த பகையோட
ஏர் பிடிக்கும் இதயங்களே
யார் பிடித்தும்
அடி பணியாத் தமிழென்று
தீப் பிடித்துக் காட்டிய
தீபங்களே...

தூக்கி எறியுங்கள்
துரோகத்தவர்களை
தாக்கியழியுங்கள் - அந்தத்
தலைகளை பயம் போக்கி
ஓங்கி அறையுங்கள்
ஒலிக்கட்டும் தனி முரசம்
தமிழன்...
தன் மானமுள்ளவனென்று
உதைக்கட்டும்
உயிர் ஒவ்வொன்றும்
உணரட்டும் உணரட்டும்
உரிமை எமதென்று
பெருமை கொள்ளட்டும்
அறத் தமிழ் வளர்த்த
அரங்கமே..... புறப்படு புறப்படு
புதிதாய் பிறப்பெடு
சிறப்பொடு நடையாகி
புறப்படு புறப்படு இறப்பினும் இனிது
தமிழென்று புறப்படு புறப்படு.....



க.பருத்தி: தாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

07.04.2013 முதல் 13.04.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- திட்டமிட்ட பணியை குறித்த காலத்தில் நிறைவேற்ற, நல்லவர்களின் ஆலோசனை, உதவி கிடைக்கும். பேச்சில் நிதானம் மிகுந்திருக்கும். எதிரி உங்களிடம் மறைமுக உதவி பெற விரும்புவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கத் தேவையான மாற்றம் செய்வீர்கள். பணியாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்புக் கிடைக்கும். குடும்ப பெண்கள், கணவருக்கு உதவும் வகையில் நடந்து கொள்வர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து சிறந்த இலக்கை அடைவர்.

**இடபம்**- அன்பை பிரதானப்படுத்தி செயற்படுவீர்கள். முன்னர் அவமதித்தவர் அன்புடன் பழகும் சூழ்நிலை உருவாகும். எதிரியால் தொல்லை எதுவும் அணுகாத சுமுக வாழ்வு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையில் புதியசாதனை உருவாகும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்களுக்கு ஆடை, ஆபரணம் வாங்க அனுகூலம் உண்டு. மாணவர்கள், படிப்பில் சிறந்த நல்ல தேர்ச்சி பெறுவர்.

**மிதுனம்**- அறிமுகமில்லாதவரிடம் பொது விடயம் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. வீட்டிற்கு தகுந்த பாதுகாப்பும், வாகன பயணத்தில் மிதவேகமும் பின்பற்றுவது நல்லது. இல்லறத்துணையிடம், பழைய நிகழ்வுகளின் குறைபாடு பற்றி பேசவேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க அதிக முயற்சி, உழைப்பு உதவும். பெண்கள், கணவர் வழி உறவினர்களின் மாறுபட்ட எண்ணங்களை பற்றி, அதிருப்தியுடன் பேச வேண்டாம். மாணவர்கள் கல்வியில் அதிக முயற்சி எடுக்கவேண்டும்.

**கடகம்**- நண்பர், உறவினர்களிடம் முன்னர் யதார்த்தமாகக் கேட்ட உதவி, எதிர்பாராமல் வந்து சேரும். மனதில் தெய்வீக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். இல்லறத்துணையின் நற்குணத்தை மனமார புகழ்ந்து பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனத்தில், அதிக உழைப்பால் திருப்திகரமான பணவரவு பெறுவீர்கள். பணியாளர்கள், சிறப்பாகச் செயற்பட்டு நற்பெயர், சன்மானம் பெறுவர். பெண்கள் பொறுமைக் குணத்தினால், குடும்பத்திற்கு பெருமை சேர்ப்பர். மாணவர்களின் கல்விக்கு தகுந்த பணவசதி கிடைக்கும்.

**சிங்கம்**-கடந்த தினங்களில் திகைப்பு ஏற்படுத்திய பணியை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் நற்பெயரும் அந்தஸ்தும் ஏற்படும். இல்லறத்துணை சேமிப்புப் பணத்தை தந்து, சிறு அளவிலான தேவைகளை நிறைவேற்ற உதவுவார். தொழில், வியாபாரம் நண்பரின் உதவியால் வளர்ச்சி பெறும். பணியாளர் கூடுதல் தொழில் நுட்ப பயிற்சி பெறுவர். பெண்கள், குடும்பத்தின் எதிர்கால நலன் சிறக்க, கணவருக்கு நல்ல ஆலோசனை சொல்வர். மாணவர், சாகச விளையாட்டுகளை தவிர்ப்பது நல்லது.

**கன்னி**-உங்கள் சிறிய பணியை கூட நிறைவேற அதிக முயற்சி தேவைப்படலாம். போட்டி, பந்தயத்தில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதால் பணம், நேரத்தை மீதப்படுத்தலாம். உறவினர்களுக்கு எதிராக செயற்படுபவரிடம் விலகுவதால் மட்டுமே, உறவினர்களிடம் நற்பெயர் பெற இயலும். இல்லறத்துணையிடம் சுயகௌரவ சிந்தனை இல்லாமல், நடந்து கொள்வதால் மட்டுமே, குடும்ப ஒற்றுமை பலம் பெறும். பணியாளர், சக பணியாளர்களிடம் சுமுக நட்பு பாராட்டுவது அவசியம்.

**துலாம்**- கவனக்குறைவால் உருவான தவறு மனதில் பதற்றம் ஏற்படுத்தலாம். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். அன்புக்குரியவர் பரிசுப் பொருள் தருவார். இல்லறத்துணையின் மனதில், உங்கள் மீதான நல்ல எண்ணம் மாறாத வகையில் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள், சோம்பல் குணம் தவிர்ப்பதால், பணி இலக்கு நிறைவேறும். குடும்ப பெண்கள், கணவரின் சம்மதமின்றி எவருக்கும் எவ்வித பொறுப்பும் ஏற்க வேண்டாம். மாணவர்கள், புதியவர்களை நண்பராகத் தெரிவு செய்வதில் கூடுதல் கவனம் வேண்டும்.

**விருச்சிகம்**-உங்களின் நீண்ட கால லட்சியக் கனவை நிறைவேற்ற உரிய வாய்ப்பு வரும். தவறாமல் பயன்படுத்தி அளப்பரிய நன்மைகளைப் பெறுவீர்கள். வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றுவது, பயணமுறையை எளிதாக்கும். புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடந்து நற்பெயரும், படிப்பில் முன்னேற்றமும் பெறுவர்.தொழில், வியாபாரத்தில் உற்பத்தி செழித்து ஆதாய பணவரவு கிடைக்கும். மாணவர்கள், ஆன்மிக சிந்தனையுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**தனுசு** - உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான புதிய வாய்ப்பு உருவாகும். மனப்பூர்வமாக பணிபுரிந்து தாராள பணவரவும், மகிழ்ச்சி நிறைந்த அனுபவமும் பெறுவீர்கள். புத்திரரின் உடல்நலத்தில் கூடுதல் கவனம் கொள்வது அவசியம். எதிர் மனப்பாங்கு உள்ளவர், உங்களின் திறன்மிகு செயல்களைக் கண்டு விலகுவர். பணியாளர்களுக்கு நிர்வாகத்தின் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். மாணவர்கள் அதிக பயிற்சியால் சிறந்த தேர்ச்சியை அடைவர்.

**மகரம்** - மனதில் கலை உணர்வு அதிகரிக்கும். செயல்களை பொறுமை, நேர்த்தியுடன் நிறைவேற்றுவீர்கள். சீரான ஓய்வு தேவை. இல்லறத்துணை கூடுதல் பரிவு, பாசத்துடன் நடந்து கொள்வர். தொழிலில் அபிவிருத்திப் பணிசெய்து, உரிய நன்மையைப் பெறுவீர்கள். பணியாளர்கள், சுறுசுறுப்பாகச் செயலாற்றி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் புரிதல் திறன் வளர்த்து, சிறந்த தரத் தேர்ச்சி பெறுவர்.

**கும்பம்** - உங்கள் மனம் புகழ்ச்சியை விரும்பும். சிலரது யதார்த்த பேச்சை உள் அர்த்தத்துடன் கருதுகிற சூழ்நிலை இருக்கும். நட்பை நல்லவிதமாக பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும். அலைச்சல் பயணங்களை தவிர்ப்பதால், உடல்நல ஆரோக்கியம் சீராகும். இல்லறத்துணை முக்கிய தருணங்களில், உங்களின் கௌரவம் வளர தகுந்த ஆலோசனை சொல்லி வழி நடத்துவார். மாணவர்கள், சக மாணவர்களின் அன்பான உதவியால் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

**மீனம்**- மனவிரக்தியை பெரிதுபடுத்தாமல் பழைய நிகழ்வுகளின் நன்மைகளை உணர்ந்து, செயற்படுவது நற்பலன் பெற உதவும். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். இல்லறத்துணை உங்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தருவார். தொழிலில் அளவான மூலதனத்துடன், அதிக உழைப்பால் இருக்கிற அனுகூலத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்வீர்கள். மாணவர்கள், வெளிவட்டார பழக்கத்தைக் குறைப்பதால், படிப்பில் கவனம் வளரும்.

# சாம்பல் உதிர்க்கும் நகரம்

அஜிபன்

எரிந்து கருகிப் போயிருக்கிறது
மக்களின் நிலம்
அழிந்து சமதரையாகிப்போன வெளியில்
பேய்கள் திரிகின்றன
நிலம் எரிந்து சாம்பல் பூத்திருக்க
தலைகள் பிடுங்கப்பட
மரங்கள் மண்ணில் குத்துண்டு நிற்கின்றன
தலையிழந்த பனைகளால் மிகுந்த வெளியில்
நோட்டமிடுகின்ற காவலரண்களை
சுமந்து நிற்கும் வேர்பட்ட பனங்குத்திகள்
உப்பு விளைந்த வாடிகளில்
இல்லாத சனங்களின்
குருதியும் துயரும்
சேர்ந்து விளைகிறது

யாரும் திரும்ப முடியாத வழியில்
எங்கும் குழிகள்
அவற்றில் நிரம்பியிருக்கிறது அவலம்
கல்லறைகளை புதைத்து
நினைவுச் சிலைகளை கொலை செய்த
இடிந்த கட்டடத்தின் சுவர்க்கரையில்
மாடுகள் கன்றுகளை
ஈன்றிருக்கின்றன.
ஞாபகங்கள் அழிந்து குவிந்து கிடக்கின்றன
விட்டுச் செல்லப்பட்ட முகங்கள்
கொழுத்தப்பட்டுக் கொண்டிருக்க
கருகிக் கொண்டிருக்கிறது சூரியன்

அறுக்காத நெல்மணிகள் சாய்ந்து
எரிந்த சாம்பல் வயலில்
இருப்பிற்காய் அலைந்து
பாதியாய் உடைந்து போயிருக்கிற
கதிரையை யாரோ விட்டுச்
சென்றிருக்கிறார்கள்
புத்தர் கண் விழித்திருக்கிற
அரச மரங்களைத் தவிர எங்கும்
நிழலில்லை
வாசல் மறைத்து கறுப்புத் திரையிடப்பட்ட
கோயில்கள் இராணுவ நிறங்களால்
தீட்டப்பட்டிருக்கிறது
சனங்களின் கடவுள் வெளியேற்றப்பட்ட
ஊரில் அலைகின்றன மிருகங்கள்

மிஞ்சியிருக்கிற ஒரு சில வீடுகளின்
சிதைவில்
தொங்கிக் கொண்டிருக்கிறது சாம்பல்
அழிப்பின் உக்கிரம்
கூரைகளை இழந்த வீடுகளை
துளைத்துப் போயிருக்கிறது
பீரங்கி வண்டிகள்
பேரூந்தும் சைக்கிளும்
எரிந்த நகரச் சாம்பலில் புத்தர்
அமர்ந்திருக்கிறார்
கண்கள் பெரிதாய் திறந்தலையும்
அரச மரங்களின் கீழ்
பாத்திரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன.

அடையாளம் தெரியாத வீதியில்
பள்ளம் மேடாக்கப்பட்டு
மேடு பள்ளமாக்கப்பட்டு
சைக்கிள்களையும் கதிரைகளையும்
ஒதுக்கி குவித்து விடப்பட்டிருக்க
சாம்பல் பரப்பி விடப்பட்டிருக்கிறது
எரிந்த வானத்தின் கீழ்
நகரத்திற்கு மேலாக
சாம்பல் உதிர்ந்து கொட்டிக்
கொண்டிருக்கிறது

சிதைந்த மாடியிலிருந்து
தொங்கிக் கொண்டிருக்கிறது
எப்பொழுதும் விழக்கூடிய ஜன்னல்
மின் கம்பங்களில் முட்கம்பிகள் படர்ந்திருக்க
நெடு வீதி கரைந்து ஒழுகுகிறது
தொப்பியால் மூடப்படுகின்றன பள்ளிக்
கூடங்கள்
நெடு வீதி போர்த்தப்பட்டிருக்கிறது
சீருடையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72 அசை போட ஒரு விடயம்

# இனப்பிரச்சினையின் தலையும் வாலும்

■ ரம்பயன்

இலங்கையில் இனப் பிரச்சினை என்பது யாரால் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பது உண்மையிலேயே ஒரு உருசிகரமான கேள்வி தான். சிங்களவர்களைப் பொறுத்த வரை தமிழர்கள்தான் இனப் பிரச்சினையைத் தோற்றுவித்த வர்கள் என்பது அவர்களின் கணிப்பு.

தமிழர்கள் அதற்கு நேர்மாறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

இது பெரும்பாலும் ஐந்து குருடர்கள் யானையைப் பார்த்து வர்ணித்த கதைக்குத்தான் ஒப் பாகும்.

தும்பிக்கையைத் தொட்டுப் பார்த்தவன் யானை உலக்கை யைப் போலிருக்கிறது என்றான். காலைத் தொட்டுப் பார்த்தவன் உரலைப் போலிருக்கிறது என் றான், காதைத் தடவியவன் சுளகுபோல் இருக்கிறது என் றான். வாலைத் தடவியவன் தும்புக்கட்டை போலிருக் கிறது என்றான். விலாவைத் தடவியவன் சுவரைப்போல் இருக்கிறது என்றான். இவர்கள் கூறிய அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த இரண்டு கண் களும் உடைய ஒருவன் "நீங்கள் சொல்வதெல்லாம் தவறு. நீங்கள் தொட்டுப் பார்த்த பகுதிகள் யாவும் யானையின் முழு உருவத்தின் பகுதிகளே. இவை எல்லாவற்றையும் சேர்த்து பார்த் தால் தான் யானையின் உண் மையான வடிவம் புலப்படும்" என்று விளக்கினான். ஆனால் குருடர்களுக்கு அது விளங்கி யிருக்குமா என்பது சந்தேகமே

ஆக, என்னவென்றால் இந்தப் பிரச்சினை சரித்திரகாலம் தொட்டு இருந்து வருவது என்பதில் சந்தேகமில்லை. மகாவம்சம் போன்ற திருகு கதைகளை ஒதுக்கிவிட்டு பாரபட்சமின்றி இலங்கை சரித்திரத்தை ஆராய் பவர்களால் மட்டுமே உண்மைச் சரித்திரத்தை கண்டறிய முடியும்.

வட இந்தியாவிலிருந்து இலங் கைக்கு விஜயன் வந்திறங்கிய காலத்திலிருந்தே சிங்களவர் களின் சரித்திரம் தொடங்கு வதாகக் கூறப்படுகின்றது.

இதற்கு முன் இங்கே இருந் தவர்கள் எல்லாம் சாதாரண மனிதர்களாகக் கருதப்படக் காணோம். விஜயனும் கூட பக் கத்து நாடான தென் இந்தியாவுக் குச் சென்று தான் மட்டுமின்றி தனது தோழர்களுக்கும் அங்கி ருந்த உயர் குல பெண்களை திருமணம் முடித்துக் கொண்டு வந்ததாக கூறுகிறார்கள். அது மட்டுமல்ல கடல் வழியாக மிக குறுகிய தூரத்திலுள்ள தென்னிந் தியாவுக்கு விஜயன் சென்றி ருக்க முடியுமானால் தென் இந் தியாவிலிருந்து திராவிட இனத் தவர்கள் வெகு சுலபமாக வந்து போயிருப்பார்கள். குடியேறியும் இருந்திருப்பார்கள் என்பதை மறுக்கிறவர்கள் சிந்திக்க முடி யாதவர்களாய்த்தான் இருக்க முடி யும்.

எதுவானாலும் இந்தக் காலத் தவர்களுக்கு இனப்பிரச்சினை யின் தோற்றம் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததின் பின் னரே ஆரம்பமானதாகத் தோன் றும். ஓரளவுக்கு அது சரியாகவே படுகின்றது. அந்நியர் ஆட்சி யின் போது சகல இனத்தவர் களும் சட்டத்தின் கீழ் ஒன்றாக கணிக்கப்பட்டிருந்த நிலையில் இலங்கையின் ஆட்சியை பெரும் பான்மை சிங்களவர்களின் கையில் கொடுத்துவிட்டு வெள்ளைக் காரர் வெளியேறிவிட்டார்கள்.

சுதந்திர நாட்டில் எல்லா சமூகத்தினரும் பாரபட்சமின்றி நடத்தப்படுவார்கள் என்று வெள்ளையருக்கும், சிறுபான்மை யோருக்கும் வழங்கப்பட்டி ருந்த வாக்குறுதியை என்று பெரும்பான்மைச் சமூகத்தினர் மீறினார்களோ அன்றுதான் இனப் பிரச்சினை இங்கு மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்திய வம்சாவளி தமிழர் களின் பிரஜாவுரிமை வாக்குரி மைப் பறிப்பு, தமிழ்ப்பிரதேசங் களில் திட்டமிட்ட குடியேற்றம் தனிச்சிங்களச் சட்டம், 56 ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் உரிமை கேட்டு உண்ணாவிரதமிருந்த வர் மீது தாக்குதல், 58 ஆம் ஆண்டு இனக்கலவரம், தென் னிலங்கையில் பல மாவட்டங் களில் இருந்தும் தமிழர்கள் உயிர் தப்பி குடும்பம் குடும்பமாக வடக்கு கிழக்கில் திரும்பி யமை, தமிழ் இளைஞர்களை ஓரம் கட்டும் விதத்தில் விகி தாசார கல்விமுறை புகுத்தப் பட்டமை இவையும் இவை போன்றவையுமே விரக்தியுற்ற தமிழ் இளைஞர்களை ஆயுதம் தூக்கச் செய்தன என்பதை இன்று பலர் மறந்து விட்டார் கள்.

1983 இல் திட்டமிடப்பட்ட வகையில் தமிழருக்கெதிராக ஆரம்பிக்கப்பட்டிருந்த இனக் கலவரமானது திருநெல்வேலி யில் தமிழீழ விடுதலைப் புலி களால் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டமை ஒரு சாட் டாகவே அமைந்து விட்டிருந்தது.

தென்னிலங்கையில் முக்கிய தமிழர்களின் வீடுகள் தொழில் அமைப்புக்களின் பட்டியல் களுடன் அணி அணியாகச் சென்று தாக்குவதற்கு திட்டம் தீட்டப் பட்டிருந்ததாகச் செய்திகள் உண்டு.

இவ்வாறாக முப்பது ஆண் டுகளுக்கு மேலாக ஆயுத போர் நடைபெற்று முடிந்தும் தமிழர்கள் தமக்குரிய நிலை யான சரியான உரிமையைப் பெற்றுக் கொள்ளவில்லை.

எந்த ஒரு நாட்டிலும் எந்த ஓர் இனமும் தான் வாழும் பிரதேசத்தில் இன்னொரு இனத் தினால் தாம் ஆளப்படுவதை விரும்பாது- தமது உரிமைக்காகக் குரல் கொடுப்பது இனவாதமும் ஆகாது.

உள்நாட்டில் நீதி கிடைக்காத நிலையில்சர்வதேசத்திடம் இதைத் தீர்த்து வையுங்கள் என்று கேட் பதில் தவறு என்ன இருக்க முடி யும்.

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து பல்வேறு விதமான கருத்துக்களை பல ரும் வெளியிட்டு வருகிறார்கள். கடந்த முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானம் புறக்கணிக்கப்பட்ட தன் காரணமாகவே இரண்டா வது தீர்மானம் முன்னையதை விட இறுக்கமானதாக இந்த முறை முன் வைக்கப்பட்டது.

இந்த முறையும், தீர்மானம் உதாசீனம் செய்யப்பட மாட் டாது என்று நம்ப வேண்டும். ஏனென்றால் தீர்மானம் இந்த முறையும் புறக்கணிக்கப்பட் டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் இலங்கை நாட்டை யும் மக்களையும் மட்டும் பாதிப் பதாய் இருக்காது. சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசை காப்பாற்றிக் கொண்டிருக்கும் பிராந்திய வல்லரசான இந்திய அரசுக்கும் பேரிடியாகவே அமையும்.

அடுத்து நடைபெறவிருக் கும் மனித உரிமைகள் சபை யின் 24 மற்றும் 25 ஆவது கூட் டங்களிலும் இலங்கை பற்றிய விவாதம் நடைபெறவிருக்கி றது. 24 ஆவது கூட்டத்தில் இரண்டாவது தீர்மானம் தொடர் பான இலங்கையின் முன்னேற் றம் குறித்து மனித உரிமை ஆணையாளர் வாய் மூலமாக விளக்கம் ஒன்றை அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார். 25 ஆவது மாநாட்டில் ஆணையாளரின் இலங்கை தொடர்பான எழுத்து மூலமான அறிக்கை சமர்ப் பிக்கப்படவேண்டும் என்பது தீர்மானத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.



**சிங்களவர்களைப் பொறுத்தவரை தமிழர்கள்தான் இனப் பிரச்சினையைத் தோற்றுவித்தவர்கள் என்பது அவர்களின் கணிப்பு. எந்த ஒரு நாட்டிலும் எந்த ஓர் இனமும் தான் வாழும் பிரதேசத்தில் இன்னொரு இனத்தினால் தாம் ஆளப் படுவதை விரும்பாது- அதற்காக குரல் கொடுப்பதானது இனவாதமும் ஆகாது. உள்நாட்டில் நீதி கிடைக்காத நிலையில்சர்வதேசத்திடம்இதைத் தீர்த்து வையுங்கள் என்று கேட்பதில் தவறு என்ன இருக்க முடியும்.**

## முதன்முதலில் ஒலியைக் கேட்ட போது...

அந்த இளம் பெண்ணுக்கு வயது 26. பிறப்பில் இருந்தே முழு செவிடாக இருந்து வந்துள்ள அவர் தனது மகனின் குரலை முதல் தடவையாக கேட்ட போது அவருடைய நிலைமை அல் லது உணர்வுகள் எப்படி இருந்திருக்கும்? நம்ப முடி யாத அந்த ஒரு கணப் பொழுதில் அந்தப்பெண் வெளியிட்ட பிரதிபலிப் புகளை வீடியோ கருவி யொன்று பதிவு செய்துள்ளது.

அமி என்றழைக்கப்படும் அந்தப்பெண் மருத்துவ ரின் சிகிச்சை நிலையத்தில் குடும்பத்தாருடன் அமர்ந் திருந்த போது அவர் காது களில் அறுவைச் சிகிச்சை மூலம் நிலைப்படுத்தப் பட்டுள்ள இலத்திரனியல் கருவியை இயக்கி சப்தம் அல்லது ஒலி என்றால் என்ன என்பதை உணர்ந்தார். மருத்துவர் தன் அருகில் இருந்த அந்தப் பெண்ணின் தந்தையையும் பின்னர் ஆறு வயது மகனையும் பேசும் படி கூறிவிட்டு அவதானித் தார். முதல் முறையாக அவர் களின் குரல்களை கேட்டு உணர்ச்சி மயமானார் அமி.

"ஆய்- அம்மா" என்று அவர் மகன் பிளேக் குரல் எழுப்பிய போது அந்த அறையே மகிழ்ச்சியில் மூழ்கிப் போகிறது. அவ னது குரல் இனிமையாக கேட்கிறது என்று அமி தன் தலையை அசைத்து காட்டி னார். 'நான் அதிர்வுக் குள் ளாகிப் போனேன். எல் லாம் வித்தியாசமாகத் தெரி கிறது என்று கூறினார். காது கேட்காத குறைபாடு கள் இருந்த போதிலும் உயர் கலாசாலை டிப்ளோமா விருதையும் கல்லூரிப் பட் டம் ஒன்றையும் பெற்றுள் ளார். இருந்தாலும் வாழ்க்கை முழுவதும் சப்தம் என் பதை என்னவென்றே அறியாதிருந்துவிட்டு அந்த மௌன உலகில் இருந்து வெளிப்பட்டிருப்பது பேர் அதிர்ச்சியாகவும் ஆனந்த மாகவும் இருக்கிறது அவ ருக்கு. என்றாலும் ஒலி களின் வேறுபாடுகள் தொடர் பான பயிற்சிகளிலும் அறி வூட்டல் வகுப்புகளிலும் கலந்து கொண்டு வருகி றார். அவரது பேச்சில் உச் சரிப்பு இப்போது மேம் பட்டிருக்கிறது என்கிறார். அவருடைய உறவினரான ஆர்னோல்ட் என்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளையாத தமிழ்!

**நமது மூதாதையரின் பண்பு, பழக்கவழக்கங்கள், சொல் செயல் என்பன உள்ளடங்கியதே பாரம்பரியம். இவற்றைக் கடைப்பிடிப்பது ஒழுகுவது மரபு. இவற்றை நீக்கியோ அல்லது வேறுபடுத்தியோ செயல்படுவது மாற்றம். மாற்றக் கூடியவற்றை மாற்றுவதென்பது தமிழுக்குப் புதியதல்ல. பாரம்பரியமாக வழங்கிவந்த தமிழ் எழுத்துக்கள் ளை, லை, ணை, னை, ணு, ணே, ரு, ரே என்பன தேவைகருதி முறையே ளை, லை, ணை, னை, ணா, ணோ, றா, றோ என மாற்றமடைந்து வழங்கிவருவது கண்கூடு.**

■ ஸனா

இனிய எம் தமிழ் மொழி என்றும் வளம் குன்றாது வாழ்ந்தும் வளர்ந்தும் கொண்டேயிருக்கின்றது. தற்போதைய நிர்ப்பந்தங்களுக்கும் நெருக்குவாரங்களுக்கும் மத்தியில் சிறிது தளர்வுற்றது போல் தோற்றப்பாடினும் இவற்றையெல்லாம் முறியடித்துப் பீறிட்டெழுந்தும் பெருமை பெறும் என்பதில் ஐயமேதுமில்லை. வேற்று மொழிகளை அழித்துத் தான் வளரவேண்டிய ஒரு நிலை தமிழுக்கு இருந்ததுமில்லை, இருக்கப் போவதும் இல்லை. பிறமொழிகளிலுள்ள நல்லனவற்றைச் சேர்த்தும், அரவணைத்தும் கொண்டே தமிழ் மேலோங்கி வளர்ந்து வருகிறது. தமிழ் நிலையானதே!

நமது மூதாதையரின் பண்பு, பழக்க வழக்கங்கள், சொல் செயல் என்பன உள்ளடங்கியதே பாரம்பரியம். இவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவது மரபு. இவற்றை நீக்கியோ அல்லது வேறுபடுத்தியோ செயற்படுவது மாற்றம். மாற்றக் கூடியவற்றை மாற்றுவதென்பது தமிழுக்குப் புதியதல்ல. பாரம்பரியமாக வழங்கிவந்த தமிழ் எழுத்துக்கள் ளை, லை, ணை, னை, ணு, ணே, ரு, ரே என்பன தேவை கருதி முறையே ளை, லை, ணை, னை, ணா, ணோ, றா, றோ என மாற்றமடைந்து வழங்கி வருவது கண்கூடு. இவை ஏற்கப்பட்டேயுள்ளன. மாற்றப்பட வேண்டும் என்பதற்காக கிருஷ்ணராஜன் என்ற பெயரோ, மற்றும் சுந்தரலிங்கம், வாசுகி, அபர்ணா போன்ற பெயர்களோ உடன் மாற்றப்படக் கூடியன வல்ல. எனினும் புறநடையாகச் சில பெயர்கள் "வேதாசலம்" என்பது மறைமலையடிகள் எனவும் "சூரியநாராயண சாஸ்திரிகள்" என்பது பரிதிமாற் கலைஞர் எனவும் அந்தப் பெயர்களுக்கு உரியவர்களாலேயே மாற்றிய அமைக்கப்பட்டு இருக்கின்றன.

ஆலயங்களில் செய்யப்படும் பூஜைகள் வடமொழியான சமஸ்கிருதத்தில் ஆற்றப்படுகின்றன எனவும், இவைகள் விளங்கக் கூடிய மொழியில் அமைய வேண்டும் எனவும் கூறப்படுகிறது. "சமயம் ஒரு காரணியாகி மக்கள் மத்தியில் பெரிய எதிர்ப்பலைகளைத் தோற்றுவிக்கும் சூழ்நிலை தோன்றியிருந்தது", "இறைவனைத் துதிக்கும் மொழியை மாற்றக் கூடாது என்றோ மாற்றினால் ஏற்க மாட்டேன் என்றோ இறைவன் கூறவில்லையே" எனவும் சில கருத்துக்கள் சூரியகாந்தியிலும் வெளிவந்திருந்தன. இன்ன மொழியில் தான் துதியுங்கள் என்றுகூட இறைவன் கூறியுள்ளதாகத் தகவல் இல்லை. மொழி விளங்கவில்லை எனக் கூறுபவர்கள் அரச உத்தியோகங்களுக்காக நிர்ப்பந்தத்தின் பேரில் அரச மொழியையும் ஆங்கில மொழியையும் கற்றுத் தேர்ச்சி பெறவில்லையா? அதுபோன்றே வடமொழி சமஸ்கிருதத்தையும் கற்றுத் தேர்ச்சி பெறலாமே! யார் தடுத்தார்கள்?

உலகெங்கும் அனுஷ்டிக்கப்படும் மதங்களில் ஏறக்குறைய நூறு கோடி மக்களால் கைக்கொள்ளப்பட்டு வருவது இந்து மதம் எனப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இந்து மதம் சைவம், வைணவம் என இரு வகை உண்டு. இவற்றுள் வட இந்தியாவை நீக்கித் தென் இந்தியாவில் மட்டும் முப்பது கோடி இந்துக்கள் உள்ளனர். இவர்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். பிறமொழி பேசுபவர்களை தவிர்த்துக் கணக்கெடுத்தால் ஆறு கோடி ம[illegible]ள தமிழ் மக்கள் ஆங்கிலம் மட்டுமே தெரிந்த இந்துக்கள் தமிழ் மொழியிலமைந்த தேவார, திருவாசகத் திருப்பதிகங்களை ஆங்கில மொழியில் எழுதிப் படித்து மனனம் செய்து துதித்து வணங்கியும் வருகின்றனர். இவர்களுக்கெல்லாம் வழிபாட்டு மொழியாகவும் ஆதிமொழியாகவும் சமஸ்கிருதம் வழங்கிவருகின்றது. வடமொழியின் உச்சரிப்பே அந்த மொழியின் சிறப்பம்சம்.

இந்த உச்சரிப்பைத் தமிழில் வழங்கமுடியாது. அதற்கான வாய்ப்பும் இல்லை. தமிழில் தான் பூஜை வழிபாடுகள் நடைபெற வேண்டுமென தமிழ் மொழியாளர்கள் வலியுறுத்தினால் ஏனைய மொழி பேசுபவர்களும் தத்தம் மொழிகளிலேயே வழிபாடுகள் அமைய வேண்டும் என விளையின், நிலைமை என்னவாகும்? சிந்தனைக்குரியதே! மேலும் பௌத்தத்துக்குப் பாளியும், இஸ்லாமிற்கு அரபும், கிறிஸ்தவத்துக்கு லத்தீன் மொழியும் ஆதி மொழியாக அமைவது போல, இந்து மதத்துக்கும் வடமொழி ஆதி மொழியாகவும், பொதுமொழியாகவும், பூஜை மொழியாகவும் அமைந்தது மிகச்சிறப்பே.

ஒருவருக்குப் பெயர் எதற்காகச் சூட்டப்பட வேண்டும்? (பட்டப் பெயர்களல்ல) குறிப்பிட்ட பெயரை நினைக்கும் பொழுதும், அழைக்கும் பொழுதும் எழுதும் பொழுதும் அந்தப் பெயருக்குரியவரின் தோற்றம் எமது மனக் கண்ணில் பதிந்து அடையாளம் காணப்படுவதற்காகவே



சூட்டப்படுகின்றன. அழகிய தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவதோடு நின்றுவிடாமல் தமிழ் மரபு ஆடைகளை அணிந்தும், தமிழ் மரபுக்கமைந்த உணவு வகைகளை ஏற்றுண்டும், மரபுக்கமையாதனவற்றை நீக்கியும், பிறமொழிக் கலப்பின்றி தமிழ் மொழியில் ஐந்து நிமிடமாவது உரையாடவோ, எழுதவோ, பேசவோ தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ் மரபிலமைந்த ஆலய வழிபாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டும். தமிழ் மொழியில் பேசுவதற்காக வெட்கப்படக் கூடாது. சுருங்கக் கூறின், வள்ளுவன் குறள் வழி நடந்து தமிழ் மொழியின் வளர்வளம் கண்டு மகிழ்வோமாக. தமிழ் மொழி நிலையானது. இதில் மாற்றமில்லை. ★

## அலைபேசிக் காமச் செய்திபரிமாற்றம்

Dr.சி.யமுனானந்தா



தகவல் தொழில் நுட்பப்புரட்சியின் பின்பான சமூக உளப்பிரசினைகளில் அலைபேசிக் காமச் செய்திப் பரிமாற்றம் முதன்மையானது. கைபேசி வாயிலான பாலியல் தொடர்பான செய்திப்பரிமாற்றம் அலைபேசிக் காமச் செய்திப்பரிமாற்றம் என புதிய ஆங்கிலச் சொல்- 2005 ஆம் ஆண்டு வரையறை செய்யப்பட்டுள்ளது. இது தற்போது பெரும் சமூக உளப்பிரச்சினையாக உருமாற்றம் பெற்று உள்ளது. மேற்கத்தைய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் 20 சதவீதமான பதின்ம வயதினரும் 33 சதவீதமான 20-26 வயதினரும் தமது நிர்வாண அல்லது அவரை நிர்வாண படங்களை அலைபேசி ஊடாகப் பரிமாறி உள்ளனர். பதின்மவயதினரில் பெண்களே ஆண்களை விட அதிகஅளவு அலைபேசி பாலியல் செய்தி பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ளமையும் அதிலும் 13-16 வயது உடையோரே இதில் ஈடுபட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது.

காலம்காலமாக காதல், காமம் தொடர்பான செய்திப் பரிமாற்றங்கள் இடம்பெறுவது வழமையாக நடப்பவையே. இவை கடிதங்கள், பொருள்கள் மூலமாக நடந்தவை. ஆனால் தகவல் தொழில் நுட்பத்தின் துணையுடனான தற்போதைய பரிணாமமானது மிகவும் அபத்தானது. ஒருமுறை தகவல் தொழில்நுட்பத்தினுள் புகுந்த படங்களை மீளவும் எடுக்க முடியாது. இந்த ஆபத்து இளவயதினருக்கு புரிவதில்லை. 51 சதவீதமான பதின்ம வயது பெண்கள் தமது சக ஆண் நண்பர்களின் வற்புறுத்தலிலேயே அலைபேசிக் காமச் செய்திப்பரிமாற்றத்துக்கு உட்படுகின்றனர். ஆனால் 18 சதவீதமான பதின்மவயது ஆண்களே தமது பெண் நண்பர்களின் வற்புறுத்தலால் செய்வதாக கூறிஉள்ளனர். ஒருவரின் தன்னம்பிக்கையில் உள்ள சமநிலையில் ஏற்படும் குறைபாடே இதற்குக் காரணமாகும். தற்போது இவை சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுன்றன. அலைபேசிக் காமச் செய்திப் பரிமாற்றத்துக்கு எதிரான விழிப்புணர்வை பதின்மவயதினரில் நாம் ஏற்படுத்தவேண்டும்.

ஆயுத மோதல்களின் போது வலிமை குறைந்த எதிர்ப்பாலாரை துன்புறுத்துவது, கற்பழிப்பது, மற்றும் துன்புறுத்தி கொலை செய்வது என்பவற்றையும் 25 வயதுக்கு உட்பட்ட ஆயுதப்படையினர் செய்து அதனை தொலைபேசியில் குறும்பட செய்திகளாக அலைபேசிக் காமச் செய்திப்பரிமாற்றம் செய்கின்றனர். (sadistic sextinng) இது தொடர்பாக ஈராக்கில் அமெரிக்கப்படை பெண் எதிரான இனரீதியான பாலியல் துன்புறுத்தல்கள் அலைபேசிக் காமச் செய்திப்பரிமாற்றம் மூலம் 2009 இல் பரிமாற்றப்பட்டு உள்ளது. இவற்றின் எச்சங்களின் சிலதே சனல் 4 காணொளித் தொகுப்பில் வெளியானவை. அலைபேசிக் காமச் செய்திப்பரிமாற்றத்தின் அதிகூடிய பரிமாணம் இன அழிப்பாக இலங்கையில் வெளிப்பட்டது. இதன் வடிவங்களாகவே இசைப்பபிரியா உடலம் போன்ற சித்திரவதையை கட்புலகாட்சிகள் பதிவாகின. எனவே சிறந்த சமூக விழிப்புணர்ச்சி மூலமும், சட்டங்களின் மூலமும் அலைபேசிக் காமச் செய்திப் பரிமாற்ண்றங்களை நாம் கட்டுப்படுத்தல் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்பரிமாணப் பயணி

## ஒரு சோம்பேறியின் பக்கம்

■ த.அஜந்தகுமார்



கலையும் இலக்கியமும் இன்ன இன்னார்க்கு என்று வரையறுத்து விடக்கூடியவை இல்லை. பாடரீதியில் கலைத்துறை சார்ந்தவர்களைவிட வேறுதுறை சார்ந்தவர்களின் பங்களிப்பினாலே தமிழின் பல்வேறு வகைமைகளும் அதிகம் பொலிவு பெற்று வருவதுதான் வரலாறு. தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத பலரினாலே தமிழ்மொழியும் இலக்கியமும் வளர்ந்தும் சிறந்தும் வந்ததைப் போன்றதே இதுவும்.

விஞ்ஞானத்துறை சார்ந்த கவிஞர் முருகையனின் பங்களிப்பு கவிதைத்துறைக்கு அறிவியலின் புதுமையையும் புதிய பார்வைகளையும் கொண்டு வந்து சேர்த்தது. அதே போலவே பொறியியற்றுறை பேராசிரியர் சி.சிவசேகரத்தின் பங்களிப்பும் மிக முக்கியமானது.

மருத்துவத்துறை சார்ந்த நந்தி, ச.முருகானந்தன், எம்.கே. முருகானந்தன், தி. ஞானசேகரன், புலோலியுர் க.சதாசிவம் போன்றோரின் ஆக்க இலக்கியப் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கும் அனுபவங்களுக்கும் காரணமாயிற்று. இப்போது பிரபலமாயிருக்கும் மருத்துவர் சிவன்சுதனும் சில சிறுகதைகளை எழுதியமை ஞாபகம் வருகின்றது. தமது நெரிசலான வேலைகளுக்கு மத்தியிலும் அனுபவங்களும் அதற்கான தூண்டுதல்களும் கலைமனத்தை விழிக்கச் செய்தபடி அவர்களை இயக்கிக் கொண்டிருக்கின்றன.

உண்மையில் இவ்வாறு பிறதுறை அனுபவங்களும் ஆற்றல்களும் தமிழின் அனுபவத்தோடும் இலக்கியத்தோடும் சேர்கின்றபோதும் பயணிக்கின்றபோதும் அவை பல்பரிமாணத்தை எய்தி தமிழின் இருப்புக்கு இன்னும் செழுமை சேர்க்கின்றன.

அந்தவகையில் அடிப்படையில் விஞ்ஞானத்துறைசார்ந்த, ஒரு காலத்தில் சிறந்த பௌதீகவியல் ஆசிரியராக அறியப்பட்டஇன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகவும் சட்டத்துறைத் தலைவராகவும் விளங்குகின்ற கலாநிதி த.கலாமணியின் கலை இலக்கிய பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

இசை நாடகத்துறை, சிறுகதை, கவிதை, கல்வியியல், இலக்கியம் சார்ந்த கட்டுரைகள் விமர்சனங்கள் என்ற தனது செயற்பாடுகளால் பல்துறை படைப்பாளியாக இவர் யாவராலும் அறியப்படுகிறார். நாட்கள் கணங்கள் நமது வாழ்க்கை, பாட்டுத்திறத்தாலே ஆகிய சிறுகதை நூல்களை வெளியிட்டிருக்கிறார். இன்று மணிவிழா மலரோடு இவர் எழுதிய கவிதை, சிறுகதை, இசைநாடகம், கட்டுரைகள், விமர்சனங்கள் சார்ந்து 5 நூல்கள் வெளிவரவுள்ளன. தனியே ஒருவரின் பாராட்டுரைகளால் நிறைக்கப்பெறும் மலர்களைவிட அவரின் ஆக்கங்கள் வெளியிடப்படுவதே ஆரோக்கியமானதாகும். அந்தவகையில் இம்முயற்சி பாராட்டப்பட வேண்டியதும் பின்பற்றப்பட வேண்டியதும் ஆகும்.

ஒரே நாளில் வெளிவரும் 5 நூல்களும் அவரது பல்துறை ஆற்றலை வெளிப்படுத்துகின்றன.

★அம்மாவின் உலகம் (சிறுகதை)

★ஏன் இந்த தேவாசுர யுத்தம்? (கவிதை)

★இளையோர் இசை நாடகங்கள் (காத்தவன் கருணை, பக்தப் பிரகலாதா, கண்ணப்ப நாயனார், ஆத்மலிங்கம், மார்க்கண்டேயர் என்ற 5 இசை நாடகப்பிரதிகள்)

★புதிய கண்ணோட்டமும் புதிய அர்த்தங்களும் (இலக்கிய விமர்சனக் கட்டுரை)

★மாற்றங்காணும் உலகுடன் இணைதல் (கல்வியியல் கட்டுரைகள்)

என்னும் 'பஞ்சாமிர்த' நூல் முயற்சி 'பல்துறை வல்லோன்' என்ற இவரது பட்டத்திற்கு சான்றாகிவிடுகின்றது.

நூல்களே ஒரு படைப்பாளியின் ஆளுமையைக் காலங்களைக் கடந்த பின்னும் உயிர்ப்போடு தொடர வைக்கின்றன. ஐந்து நூல்களை ஒரே நாளில் வெளியிட்டு தனது பல்பரிமாண ஆளுமையை கலாமணி வெளிப்படுத்தி ஒரு புதிய சிந்தனையை திறந்து விட்டிருக்கிறார்.சிரஞ்சீவித் தனத்தோடு இந்தச் சிந்தனை சிறகடிக்கட்டும்.

# ஒரு மாமிசத் தெருவில்.....

நரம்புகள் உக்கிப்போன
நரக சொர்க்கத்திலிருந்து
வெளிக்கிளம்புகிறது
பிணங்களின் வாசனை..

தூபமிடும் பூசையறையில்
துச்சாதனனும் துரியோதனனும்
பிய்த்தெறிந்த சேலையால்
வெளிநடப்புச் செய்கின்றனர்
பீஷ்ம புத்திரர்கள்...

இலைகளின் மறைப்பில்
இரத்தம் குடிக்கிறது பூ..

தொட்டிலில் வரமுன்னரே-சவப்
பெட்டிக்கு ஆராதனை....

வெற்றுத் தேநீர்க்கோப்பையில்
விசம் நிரப்பி-முன்
முற்றத்தில் வைக்கப்படுகிறது...

கரங்களினிடையே ஊர்ந்த
முரட்டு மரணப்புழு
நெற்றியை நோக்கி
நெருங்கி நெளிகிறது...

கொல்லைப்புற எல்லையில்
குடியிருந்த கறையான்
மெல்ல மெல்லமாக
அறைச்சுவர் கடந்து
நடுவீட்டு விளிம்பில்
நங்கூரமிடுகிறது...

கிணற்றடிப்பாசியில்
வழுக்கி விளையாடிய
சில அழுக்குகள்
குடத்தடி வாசலுக்கும்
துளசி மாடத்திற்குமாய்
வியாபிக்கிறது...

எல்லைகளற்று பரந்தவெளியில்
காற்று சோ என கூவிப்போகிறது.
சொல்லமுடியாத ஓர் இராகத்தை
மெல்லமுடியாத ஒரு சோகத்தை
நெஞ்சறைக்கூட்டோடு
ஆழமாய் ஆணிவைத்து அறைந்தபடி..
ஆழமாய் ஆணிவைத்து அறைந்தபடி....



தமிழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லாம் அவன் செயல்



■ ஆ.ஈழநிலா

''என்னுடைய ஐயாவை நான்தான் வெளியில் கூப்பிட்டேன். நானே கூப்பிட்டு அனுப்பிப் போட்டன். இன்றைக்கு வீட்டுத் திட்டக் கூட்டமென்று எல்லோரும் போகினம். நான் போகவில்லை. எனக்கேன் பிள்ளை வீடு?... என்னுடைய பிள்ளைதான். கட்டிக்கொடுத்த வீட்டை வேண்டாமெண்டு போனவன்... அவனுக்கு அம்மாமேல் என்ன கோபமோ? தெரியாது. தனிய விட்டுப் போட்டான்.'

பேருந்துத் தரிப்பிடத்தில் தனக்குள் எதையோ பேசிக்கொண்டிருந்த ஒரு தாய் நான் போய் அவ்விடத்தில் நின்றதும் என்னருகில் வந்து இவ்வாறு சொல்லிக்கொண்டு நின்றார்.

எனக்கு எதுவுமே புரியவில்லை. அவரையே வியப்புடன் பார்த்தேன். ''அம்மாமேல் அப்படி என்னையா உனக்குக் கோபம்?... என்னை ஏன் தனிய விட்டுப் போனனீர்?...'' என்று மீண்டும் தன்னைத்தானே கேட்டுக்கொண்டார். கண்ணிலிருந்து கண்ணீர் மழையாய்ப் பொழிந்து கொண்டிருந்தது. அது குளிராக இல்லாமல் வெம்மையை எனக்குள் உணர்த்தியது.

அந்நேரம் ஒரு பேருந்து வந்து நிற்க, அந்த தாய் ஏதேதோ புலம்பியவாறு அதில் ஏறினார். எனக்குத் தெரிந்த ஆசிரியர் ஒருவர் அப் பேருந்திலிருந்து இறங்கி என்னை நோக்கி வந்தார்.

பெருமூச்சொன்றை உதிர்த்தபடி ''கண்மணி அக்காவோ உங்களுடன் நின்றவர்? 'அவரின் கண்ணீருக்கு விடை சொல்ல யாரால் இயலும்?'' என்றார்.

'ஏன் மலர்... என்ன நடந்தது? உங்களுக்குத் தெரியுமோ அவவை. எனக்கு முன்பின் அவவைத் தெரியாது. ஆனால் தெரிந்தவர் மாதிரி கதைத்து விட்டும் போகின்றார்''என்றேன்.

'எனக்குத் தெரியும்... இடம்பெயர்ந்திருக்கும் பொழுது அருகேதான் இருந்தோம். அதற்கு முன்னரும் அவரின் குடும்பத்தை எனக்குத் தெரியும். இப்பொழுது அவருக்கு நாற்பத்தைந்து வயதளவில் தான் வரும். ஆனால் அழுதழுது வயதான ஆள்மாதிரி ஆகிவிட்டார். ஆனால் தெரியாதவர்க ளெல்லாம் அவரை பைத்தியம் என்றுதான் பார்க்கிறார்கள்.' என்று ஒருவித கவலையுடன் சொன்னார்.

''மிகவும் வறுமையான குடும்பத்திலதான் பிறந்தவர். தகப்பன் சரியான குடிகாரன். வீட்டில் எந்நேரமும் துன்பமும் அழுகையும்தான். பெண் பிள்ளைகள் தான் மூன்று பேரும். தோட்ட வேலைகளுக்குப் போய்த்தான் படித்தார்கள். இவர் மட்டும் நல்ல கெட்டிக்காரி. வேலையும் கிடைத்துவிட்டது'' என்று அவர் தொடர்ந்தார்.

நான் பொறுமையின்றி ''அப்பா குடிகார னென்று நீங்கள் சொல்கிறீர்கள். அவர் அப்பா வைப் பற்றித்தானே அழுகிறார்...'' என்றேன்.

அவர் அவசரமாய் மறுத்தார் - ''இல்லை யில்லை... அவர் தனக்கு நேர்ந்த கொடுமையால் அழுகின்றார். எவ்வளவு பெரிய மனம் படைத் தவர் தெரியுமோ?... அக்காமாருக்காகத் தானே பேசித் திருமணம் செய்து வைத்தவர். அவர்கள் நல்ல நிலையில்தான் இருக்கிறார்கள். ஆனால் அவரைத் தேடுவதே இல்லை...!''

அவரின் துயரத்துக்கு அதுதான் காரணமோ என்று எண்ணியவளாய் ''நன்றி கெட்ட உலக மிது... தான் திருமணம் செய்யாமல் இருந்து விட்டாரோ?'' என்றேன். ஆசிரியர் கண்மணியின் கதையை சொல்லத் தொடங்கினார்.

''அவளும் ஒரு ஆளை விரும்பித் திருமணம் செய்தவர். அவருடைய திருமண வாழ்க்கை ஆக ஆறே மாதங்கள்தான்... மூன்று மாதம் கருவாகி இருந்தபோது ஏதோ வேலையாய் கொழும்புக்குப் போன கணவர் திரும்பி வரவேயில்லை. விதியை நொந்தபடி விழிகள் கரைய பள்ளிக்கூடம் வருவார். தெரிந்தவர்களிடமெல்லாம் அவரைப் பற்றிக் கேட்பார். விடை கிடைக்கவில்லை. பிறந்தது ஆண்பிள்ளை. அதற்குப் பிறகுதான் கணவர் வேறொரு திருமணம் செய்து வாழ்வதையும் அறிந்தார். அதன்பின் அவரைப் பற்றி எதுவுமே கதைப்பதில்லை. பிள்ளைதான் உலகமாக இருந்தார். பிள்ளை மாதுளன் நல்ல கெட்டிக்காரன். ஐந்தாமாண்டுத் தேர்வில் வெற்றியும் பெற்றவன். தாயே உயிர்மாதிரி எப்பொழுதும் அவரின் உடல்நிலையில் அக்கறையுடன் இருப்பான்.

தன்னுடைய பிள்ளை சிறப்பாக வாழவேண்டு மென்று வங்கியில் கடனெடுத்து காணி வாங்கி தாயும் மகனும் நாளும் பொழுதுமாகக் கற்பனை பண்ணி மிக அழகான வீடு கட்டினார்கள். எப்பொழுது அங்கே போனாலும் தாயும் மகனும் நண்பர்கள் மாதிரி பேசியபடி வீட்டை அழகு படுத்திக்கொண்டேயிருப்பார்கள்.

எப்பொழுதும் பிள்ளையினுடைய எதிர்காலத்தைப் பற்றிய கதையும் கற்பனையும்தான். ஆனால் அவற்றில் விழுந்தது மண். என்றார். 'ஏன் மலர் அந்தத் தம்பி தாயைத் தேடுவதில்லையோ வெளியே போயிற் றானோ?...' என்றேன் பொறுமையிழந்து. மலரின் கண்ணிலிருந்து உடனே கண்ணீர் விழுந்தது. நான் வியப்புடன் 'ஏன் மலர் என்ன நடந்தது? தடுப்பில் இருக்கிறானோ?'

'இல்லை. அதைவிடக் கொடுமை அவருக்கு நிகழ்ந் தது. இறுதியாகக் கரையான் முள்ளிவாய்க்காலில் இருந்தோம். எந்தவிடம் போனாலும் எவ்வளவு பணம் கொடுத்தென்றாலும் பதுங்குகுழி வெட்டிப்போடு வார். அதற்குள்ளேதான் மகனை நாளும் பொழுதும் வைத்திருப்பார்.

அன்றும் சரியான ஷெல்லடி. எவருமே சமைத்து உண்ண முடியாத நிலை. நாங்கள் அருகிலுள்ள பதுங்கு குழிக்குள்தான் இருந்தோம். ஷெல்லடி ஓயவில்லை. பிள்ளைகள் பசியால் அழத்தொடங்கிவிட்டார்கள். என்ன செய்வது?... பின்னேரம் ஓரளவு ஓய்ந்துவிட்டது. நான் ஒருமாதிரிக் கஞ்சியைக் காய்ச்சி எடுத்துக்கொண்டு பதுங்கு குழிக்குள் வைத்துக் கொடுத்தேன். அவர்கள் குடிக்கத் தொடங்கியபொழுது நான் பதுங்கு குழியின் மேல் வாசலில் இருந்தேன். எனது கணவரும் அருகில் இருந்தார்.

கண்மணி அக்கா காலையிலிருந்து தன் பிள்ளை எதுவுமே உண்ணவில்லை என்று புலம்பியவாறு கஞ்சி காய்ச்சினார்.

ஐந்து மணியளவில் ஷெல்லடி ஓய்ந்திருந்தது. அப் பொழுதுதான் கண்மணி அக்கா கஞ்சியை ஊற்றி ஆற வைத்துவிட்டுத் தன் மகனைக் கூப்பிட்டார். மாதுளன் வெளியில் வரப்பயந்து 'உள்ளே கொண்டுவாங்கோ குடிப்போம்' என்றான். அவர்தான் 'ஐயா உடம்பெல் லாம் நன்றாக வியர்த்துவிட்டது. சிறிது நேரம் காற்றுப் படட்டும் கஞ்சியைக் குடித்துவிட்டுப் போய் இரும்' என்று மீண்டும் வலிந்து அழைத்தார்.

மாதுளன் எழும்பி வந்து தாய்க்கு முன்னால் இருக்கத் தாய் கஞ்சிக் கிண்ணத்தைக் கையிலெடுத்துக் கொடுத்தார். அப்பொழுது பேரோசை .எங்கும் புகைமண்டலம். எதுவுமே தெரியவில்லை. ஒரு முனகல் ஒலி புகை கலைய எழுந்து பார்த்தோம்.

ஐயோ?... என்ன கொடுமை... என்ன கொடுமை... மாதுளனைப் பார்த்தேன்... அவன் உடல்தான் கிடந்தது. தலையைக் காணவேயில்லை. ஷெல்லின் துண்டொன்று கழுத்தை அறுத்துப் போயிருந்தது.' விழுந்த நான் பதுங்கு குழிக்குள் போனேன். மயங்கிக் போயிருந்த கண்மணி அக்காவைத் தூக்கிக்கொண்டு வந்தேன். பிறகென்ன அடுத்தடுத்த நாள்களில் நலன்புரி நிலையத்துக்கு வந்துவிட்டோம். அதற்குப் பிறகு கண்மணி அக்கா ஒரே அழுகை... புலம்பல்... ஒப்பாரி... தடுக்கவும் முடியா. அடக்கவும் முடியா.'

எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை அப் பொழுதுதான் அவர் என்னிடம் சொன்ன சொற்களுக் கான பொருள் ''எனக்குள் குமுறத் தொடங்யது. அந்தக் கணங்களை எண்ணி எண்ணிப் பார்க்கிறேன். யாரிட்ட சாபம் இது?... இந்தக் கண்ணீரெல்லாம் வீணாய்க் காய்ந்துதான் போகுமோ? கண்ணகியின் கண்ணீர் மதுரையை எரித்ததென்றால் கண்மணித் தாய் போன்றோரின் கண்ணீர் எதனை எரிக்கப் போகின்றது? 'எனக்குள் கேட்டுக்கொண்டேன். உறைந்துபோய் நின்றேன்.

'நலன்புரி நிலையத்தில் இருக்கும்பொழுது என்னைக் கண்டவுடன் அழுவார். பின்னர் எப் பொழுது என்னை வீட்டுக்கு விடுவார்கள்? அங்கே தம்பி வைத்த மரமெல்லாம் பூத்திருக்கும். நான் பார்க்கவேணும். என்னுடைய செல்லம் என்னைத் தேடிக்கொண்டு வீட்டில் நிற்பார்'. இவ்வாறு புலம்பிக்கொண்டே திரிவார்.

நான் என் கணவரிடம் கூறுவேன்... மிக விரைவாக கண்மணியக்கா தன் வீடு போக வேணும். அங்கே போனால் ஓரளவு நிம்மதி அடைவார். பிள்ளையின் நினைவு முழுவதையும் வீட்டுள் பொத்தி வைத்திருக்கின்றார். என்பேன். கணவரும் 'என் நினைப்பும் அதுதான் என்பார்' என்றார் மலர் ஆசிரியர்.

''அவருடைய வீடு உடையவில்லையோ என்றேன். ஐயோ அதையேன் கேக்கிறீர்? அது இப்ப இராணுவ முகாம். வீட்டின் ஒரு துண்டு கூட இல்லை. பாலைவனம் மாதிரி பூக்கள் ஒன்றுமேயில்லை. கொடுமையிலும் கொடுமை. கண்மணி அக்காவுக்கு நடந்தது... பாடசாலை விடுதியில் இப்ப தான் இருக்கிறார்' என்றார்.

நீண்ட நேரமாய் வராத பேருந்து அப்பொழுது வர என்னிடமிருந்து விடைபெற்றார் மலர். நானும் எனக்குரிய பேருந்தைத் தேடி ஏறிக்கொண்டேன்.

நெஞ்சு முழுவதும் கேள்விக் கணைகள் துளைத்துக்கொண்டிருந்தன. பிஞ்சு வயதில் வறுமை. பொறுப்புணராத் தந்தை இது விதியின் சதியா?

இளமையும் இடறல்... வாழ்க்கையும் ஏமாற்றம் கிடைத்த பிள்ளை கடைசிவரை இருக்க வேண் டுமே? துன்பப்படுபவன் நிலையான இன்பத்தை அடை வான் என்று துறவிகள் கூறுகிறார்கள். பிறந்தது முதல் நெருப்பினில் நடந்து வந்த இந்தத் தாய்க்கு அந்த இன்பம் கிடைக்காமல் போனதேன்? விழிகளில் நெருப்பைப் போட்டது போன்ற நிகழ்வை இறைவன் அனுமதித்தது எவ்வாறு?

தீர்ப்பைக் கொடுப்பதற்குக் கொடுமையான சாட்சிகள் தேவைப்படுகின்றதோ ஆண்டவருக்கு?

கனவுகள் சுமந்து கண்ணீரை விதைத்தன. செந்நீரை உழைப்பாக்கி உருவாக்கிய வீட்டை உருக்குலைத்த கய வரது கையைக் கண்டுகொள்ளாமல் இயற்கை வேடிக்கை பார்த்தது ஏன்? நஞ்சான உயிர்களை நிறையப் படைத்தார். கொடியவரை அழிக்கவில்லை ஏன்?

இது எல்லாம் எவன் செயல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதேசி
## திரை விமர்சனம்



19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட தாது வருஷப் பஞ்சத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தென் தமிழகத்தின் ஏழை மக்களை வெள்ளையர்களின் தேயிலைத் தோட்டங்களுக்கு பணத்தாசை காட்டி ஒப்பந்த அடிப்படையில் அழைத்துச் சென்று கொத்தடிமைகளாக கொடுமைப்படுத்திய சரித்திரத்தின் கறுப்புப் பக்கங்களே பரதேசி.

''எரியும் பனிக்காடு'' என்ற பிளச் டேனியல் என்பவரின் நாவலே இந்தப்படத்தின் மூலம் என்று கூறப்படுகிறது. தமிழில் புதுமைப்பித்தனின் சற்றே பெரிய சிறுகதையான துன்பக்கேணி இலங்கையின் தேயிலைத் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு கொத்தடிமைகளாக்கப் பட்ட தென் தமிழக மக்களின் வாழ்க்கையைப் பேசிய ஒன்றாகும்.

பிஜி தீவின் கரும்புத் தோட்டங்களுக்கு வேலைக்குச் சென்று கொத்தடிமைகளாக்கப்பட்ட தமிழர்கள் குறித்து பாரதி 1916இல் எழுதிய கவிதை ஒன்று கோடிடுகிறது.

ஆனால் தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை இதற்கு முன்னர் ரோசாப்பூ ரவிக்கைக் காரி படத்தில் ஒரு சிறு பகுதியாக வெள்ளையர்களின் தேயிலைத் தோட்டக் கொத்தடிமை முறையைக் குறித்து சொல்லியிருப்பார்கள். ஆனால் மிக விரிவாக, ஒரே நோக்குடன் தென் தமிழக கிராமமக்கள் மலையகத் தேயிலைத் தோட்டக் கூலிகளாக கொத்தடிமைத் தளையில் பட்ட பாடுகளைப் பேசும் சினிமா பாலாவின் 'பரதேசி'

1939ஆம் ஆண்டில் தொடங்கும் கதை, சாலூர் என்ற தென் தமிழக கிராமத்தின் பஞ்ச நிலை, சில்லறைக் கங்காணி ஒருவனது பசப்பு வார்த்தையை நம்பி கணிசமான மக்கள் ஒப்பந்தப் பத்திரத்தில் கைநாட்டு வைத்து முன்பணம் வாங்கி, மலையகத் தேயிலைத் தோட்டத்துக்குச் சென்று வாழ்வு முழுவதும் அடிமைகளாக, பாலியல் கொடுமைகள், உடல் ரீதியான சித்ரவதைகள், அற்பக் கூலியிலும் சுரண்டல்கள், மதம் மாற்றும் திருட்டுத் தனங்கள் என நாம் எண்ணிப்பார்க்கவியலா கொடுமைகளைச் சந்திப்பதை அழுந்தப் பதிவு செய்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் துரைகள் கூலிவேலை செய்யும் பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தும் காட்சிகளும், கடுங்குளிர் மற்றும் பாதுகாப்பற்ற பணிச்சூழலால் கொள்ளை நோய்களில் கொத்துக் கொத்தாய் அந்தமக்கள் சாகும் காட்சிகளும், தப்பியோட நினைக்கும் நாயகனின் கெண்டைக்கால் நரம்பைக் கத்தரித்து வாழ்நாள் முழுக்க அவனை நொண்டியாக்கும் காட்சிகள் என பாலாவின் ஆளுமை கனக்கிறது.

பாலாவை சைக்கோ என்றும் வன்முறையை வலிந்து திணிப்பவர் என்றும் கூவுகிறார்கள். இந்தப்படத்தில் கதையின் மிக முக்கியமான உடலுறவுக் காட்சி ஒன்றை மிக அழகாக ஆபாசம் துளியும் தலைகாட்டாது காட்சிப்படுத்தியிருப்பார் பாலா. நாயகனின் மேல் அமர்ந்து அவனை அடித்து விளையாடும் நாயகி சட்டென அவனது வேட்டையை உணர்ந்து திடுக்கிடும் காட்சியும் தொடர்பவையும் மிக அழகானவை!

அவர்கள் புணர்ந்ததற்குச் சாட்சியான அந்த காட்டிடைக் குடிசை சிதைந்திருக்க அதன் அருகில் பின்னொரு நாள் நாயகியும் குழந்தையும் மட்டும் அமர்ந்து அழும் காட்சி மென்சோகக் கவிதை.

சாலூர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு அப்பாவி இளைஞனை மையமாகக் கொண்டு நகரும் இக்கதையில் மேற்சொன்ன பாத்திரத்தில் ராசாவாக அதர்வா, அவனது காதலி அங்கம்மாவாக வேதிகா, மலையகத்தில் கூலியான தண்ஷிகா ஆகியோர் மட்டுமே முகம் பரிச்சயமான முக்கிய நடிகர்கள்.

பாலாவின் கதையை தூக்கி நிறுத்துமளவு நடிப்பாற்றல் இல்லாவிடிலும் அதர்வாவும் வேதிகாவும் பெரிதாகக் குறை சொல்லுமளவு இல்லை. படத்தின் நகர்வில் போகப்போக பொருந்தி விடுகின்றனர். தண்ஷிகாவின் பாத்திரமும் நடிப்பும் குறிப்பிடத் தகுந்தவை.

கங்காணி வேடத்திற்கேற்ற குரூரம் இதில் நடித்துள்ள நடிகருக்கு கைவரவில்லை. பாலாவின் படங்கள் விளிம்பு நிலை மனிதர்களின் வாழ்வையே எப்போதும் பேசினாலும் முதல் பாதியில் வரும் கொண்டாட்டங்கள் இதில் மிகக் குறைவு. வாழ்வு முழுக்கவும் ரணங்களையே சந்திக்கும் இம்மக்களின் கதையில் நாம் அதை எதிர்பார்க்கவும் இயலாது தான்.

செழியனின் ஒளிப்பதிவு எரியும் பனிக்காட்டை ஈரமிகுந்த வலியுடனும், வெப்பம் தகிக்கும் பஞ்ச கிராமத்தை வெயிலின் செந்நிறத்திலும் அசலாகப் பதிவு செய்திருக்கிறது. கலை இயக்குனர் பாலச்சந்தர் இப்படத்தில் தான் அறிமுகமாம். மிகப்பெரிய சுமையை அசாதாரணமாய் தாங்கியிருக்கிறார்.

நாஞ்சில் நாடனின் வசனங்கள் அக்காலத்தின் மொழிவழக்கை அப்படியே தராவிடிலும் அதை நாம் புரிந்துகொள்ளுமளவு சமனிலைக்கு கொணர்ந்திருக்கின்றன.

காட்சிகளுக்கு வலுவேற்றும் பாடல்களில் வைரமுத்துவின் மண் சார்ந்த அனுபவச் செறிவு. தேசியவிருதை முன்பதிவு செய்துவிட்டார். சமகாலத்தில் வைரமுத்துவுக்கு தீனிபோட்ட ஒரே இயக்குநர் பாலா தான் எனலாம்.

ஜிவி பிரகாஷ் ஆயிரத்தில் ஒருவனில் செய்த இசைக் கொடுமையை இதில் தவிர்த்துவிட்டார். பிரமாதமில்லைதான் எனிலும் குறையில்லை. இறுதியில் சிலகாட்சிகளில் காட்சிகளிலிருந்து துருத்திக்கொண்டு தனியே அலறுகின்றது இசை.

கதைக் கோர்வை, ஒழுங்கின்றி ஆங்காங்கே தாவி விடுவதை உணரமுடிகிறது. சுமார் 7 வருடங்கள் கதை நகரும் காலம் என்று காட்டப்படுகின்றது. கதை மாந்தர் உருவங்களில் வித்தியாசங்கள் பெரிதாய் ஏதுமில்லாமலே.

வித்தியாசமான பாலா சினிமாவான இதில் வணிகரீதியாக வெற்றிபெற எந்த ஒரு அம்சமும் இல்லைதான். சிறைச் சாலை போன்ற படங்களில் வரலாற்றை காட்சிப் புல சாதனத்தில் கொண்டு வர சில சமரசங்களும் சினிமாவுக்கே உண்டான முடிச்சுகளும் இருக்கும். ஆனால், பரதேசியை பொறுத்த வரை அதன் மிகவலுவான இறுதிக்காட்சி தவிர எந்த ஒரு திருப்பமோ, தேவையற்ற கிளைக்கதைகளோ இல்லாமல் அது ஒரே நேர்கோட்டில் நகருவதை காணமுடியும்.

தமிழ் சினிமாவின் மிக முக்கிய ஆளுமையான பாலா, தான் சறுக்கிய அவன் இவன் படத்துக்கும் சேர்த்தே இதில் உழைத்திருக்கிறார்.

கதா பாத்திரங்களின் தேர்வில் கவனம் செலுத்தப்பட்டிருக்கலாம். பிற்பாதியில் வரும் மதமாற்றக் காட்சிகளில் தெரியும் அமெச்சூர் தனமும் சம்பந்தமில்லாத நகைச்சுவையும் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டியவை.

ஒரு படம் நெடுக பார்வையாளனுக்கு சின்னச் சின்ன அதிர்ச்சிகளையும் முடிவில் கனத்த பாரத்தையும் தரும் அசாத்தியமான கதை சொல்லியான பாலா, தனது படத்தின் முடிவில் அடுத்த படத்திற்காய் நம்மை ஏங்க வைப்பதில் இருந்து வருகிறது அவரது வெற்றி. அது பரதேசியிலும் சர்வ நிச்சயமாகத் தொடர்கிறது.

■ ராஜன் லீக்ஸ்

# நான்கு ஆண்டுகளின் பின் ...



நான்கு ஆண்டுகளின் பின் ....
முன்பு விளையாடி மகிழ்ந்திருந்த
சீர் செய்யப்பட வேண்டிய
அதே மைதானம்
சிறு மாதுளம்பழ முத்துக்களாய்
ஒன்று கூடினர்
வயது ....
பதின் நான்கு
அவன் தான்
அவர்களுள் மூத்தவன்
அவர்களுடைய வாழ்விடங்கள்
உடைமைகள் அழிந்தும்
ஓட்டைகள் விழுந்தும்
முழுமையாய் அழிக்கப்பட்டும்
சீரழிந்து போயிருந்தன.
வாழ்விடங்களை
சீர் செய்யும் படலம்
தொடங்கியிருந்தது
ஆனாலும் ...
அவர்களது முகங்கள்
இலைகளற்ற கொடிகளாய்
குளிர்மை இழந்து தெரிந்தன
அன்று ...
இருபத்திரண்டு இளைஞர்கள்
விளையாடியிருந்த
உதைபந்து ஆடுகளத்தில்
இன்று ...
பதினான்கு பேர் மட்டும்
அவ்விடத்தில் சேர்ந்து
கொண்டனர்!
மிகுதி நண்பர்களுக்காக
எழுந்த பெருமூச்சு
புயலாய் அடித்தது.

■ கே.ஆர்.திருத்துவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுகுண்டு வீசுவதற்கு வடகொரியா தயார்




## சவாலை எதிர்கொள்ள அமெரிக்காவும் ஏற்பாடு

■ ரெங்கன்

கொரிய தீபகற்பம் பற்றி எரியும் நிலைக்குப் போய்விட்டது. எந்த நிமிடத்திலும் போர் மூளலாம் என்ற அச்சமும் பதற்றமும் அந்தப் பகுதியில் நிலைகொள்ளத் தொடங்கியிருக்கிறது. இதற்குக் காரணம் வடகொரியா தனது படைகளுக்கு அமெரிக்க இராணுவ நிலைகள் மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்தும்படி உத்தரவிட்டிருப்பதே.

ஒருசிறு அளவில் சீண்டுதல் நடந்தாலும் அணுகுண்டை வீசுவதற்குத் தயங்க வேண்டாம் என்று வடகொரியத் தலைவர் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. கடந்த வியாழக்கிழமை வடகொரியா இவ்வாறு அறிவித்ததையடுத்து அமெரிக்கா பசுபிக் சமுத்திரப் பகுதியில் தனது தற்காப்பு நிலைகளை அவசர அவசரமாகப் பலப்படுத்தத் தொடங்கியுள்ளது.

வடகொரியா தொடர்ச்சியாக அச்சுறுத்தலை வெளியிட்டு வரும் அதே சமயம் அதனிடம் இராணுவ தகுதியும் உண்டு. எனவே இது அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் உண்மையான தெளிவான அபாயம் என்றே பார்க்க வேண்டும் என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலர் சுக்ஹேகல் கூறியிருக்கிறார்.

அதனிடம் இப்போது அணுகுண்டு இருக்கிறது. அதேபோல் ஏவுகணை வீசும் திறனும் பெற்றிருக்கிறது. இந்த அச்சுறுத்தல்களை நாம் மிகப் பாரதூரமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும் - என்றார் அவர்.

### ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள்

குவாமிலுள்ள இராணுவ நிலைகளை பாதுகாப்பதற்காக தாட் (THAT) எனும் ஏவுகணை எதிர்ப்புச் சாதனங்களை அமெரிக்கா அனுப்பிவைத்துள்ளது. இது அமெரிக்காவுக்கு சொந்தமான இராணுவ தளம். வடகொரியாவின் தென்கிழக்கில் 380 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அங்கு 6,000 அமெரிக்கப் படைவீரர்களும், நீர்மூழ்கிகளும், குண்டு வீச்சு விமானங்களும் நிலைகொண்டுள்ளன.

கொரிய தீபகற்பத்தில் சமீபகாலமாக விரிவடைந்துவரும் போர் சூழ்நிலை இப்போது மேலும் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது. தென் கொரியாவின் ஆத்திரமூட்டும் சில செயற்பாடுகளால் தாங்கள் அதன்மீது போர் பிரகடனம் செய்ய வேண்டியேற்பட்டுள்ளதாக வடகொரியா தரப்பில் கூறப்பட்டாலும், தென்கொரியாவைப் பொறுத்தவரை தனதும் தனது நாட்டு மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்துகொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருப்பது துரதிருஷ்டமாகும் என்ற கருத்து நிலவுகின்றது.

வடகொரியா கடைசியாக எடுத்துள்ள சில நடவடிக்கைகள் தீபகற்பத்தில் பெரும் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது.

இதேவேளை தென்கொரிய அதிபர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் வடகொரியா ஆத்திரமூட்டும் நடவடிக்கை எதிலும் இறங்குமானால் கடும் இராணுவமட்ட பிரதிபலிப்பொன்றை மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

வடகொரிய நாடாளுமன்றம் தனது வருடாந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருந்த வேளையில், அதேபோல் வடகொரிய ஆளும் கட்சித் தலைவர்கள் அணு ஆயுதம் வைத்திருப்பதற்குத் தங்கள் நாட்டுக்கு உரிமையிருக்கிறது என்று அறிவித்திருந்த சந்தர்ப்பத்தில் தென்கொரிய அதிபர் பார்க் கெயுன் ஹியேவின் அறிவித்தல் வந்திருக்கிறது.

தென்கொரிய சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் கிம் குவான்ஜின் ஆகியவர்களுடன் ஆலோசனைகள் நடத்தியதன் பின் [illegible] மதி பார்க் வெளியிட்[illegible] சை [illegible] வடகொரியா பெரும்பாலும் தினசரி விடுத்துக் கொண்டிருக்கும் அச்சுறுத்தல்களை தாம் மிகப் பாரதூரமாகவே எடுத்துக் கொண்டிருப்பதாகவும், தமது மக்களுக்கு எதிராக ஆத்திரமூட்டும் செயல் எதிலும் வடகொரியா இறங்குமானால் வேறு அரசியல் விடயங்களுக்கும் மேலாக உடனடியாகவே பதிலடி கொடுத்தாக வேண்டும் என்பது தமது கருத்து என்றும் கூறினார்.

தேர்தல் காலத்தில் பிரசாரங்களின்போது வடகொரியா விடயத்தில் மிகவும் எச்சரிக்கையுடனேயே செயல்பட வேண்டும் என்று வற்புறுத்திவந்த கன்சர் வேடிவ் சிந்தனையாளரான திருமதி பார்க் பெப்ரவரியில் பதவி ஏற்றதன் பின் வடகொரியாவுக்கு எதிராகக் கடும் போக்கு ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்.

### அமெரிக்காவின் எதிர் நடவடிக்கை

வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் அமெரிக்கா பலவிதமான எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இப்பொழுது நாசகாரிக் கப்பல் ஒன்றைத் தென்கொரிய கரைக்கு அப்பால் நிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்துள்ளது. அண்மையில் இடம்பெற்ற வருடாந்த கடற்பயிற்சிகளில் கலந்துகொண்டதன் பின்னர் ஜப்பானிலுள்ள அதன் வழமையான தளத்துக்குத் திரும்பாமல் யு.எஸ்.எஸ்.பிட்ஸ் ஜெரால்ட் நாசகாரி தென்கரைப் பக்கமாக நகர்த்தப்பட்டுள்ளது.

அண்மையில் கூடிய வடகொரிய நாடாளுமன்றம் நாட்டை அணு ஆயுத நாடாக அறிவிக்கும் சட்டம் ஒன்றை நிறைவேற்[illegible] [illegible] களில் இது மிக முக்கியமான ஒன்று.

வடகொரியா முன்பு நிறுத்தி வைத்திருந்த பிரதான அணு உலைத் தொகுப்பினை மீண்டும் இயக்கப் போவதாக அறிவித்துள்ளது. அணு ஆயுதப் படைகளை மேலும் தரத்திலும் அளவிலும் வலுப்படுத்தும் கொள்கையின் அடிப்படையில் இந்தச் செயற்பாடு தொடங்கப்பட்டிருப்பதாக அணு சக்தித்துறை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### வடகொரியாவின் இன்னொரு செயற்பாடு

வடக்கு, தெற்குக் கொரிய நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை பிரதிபலிப்பதற்காக 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காஏசாங் கைத்தொழில் பேட்டையை வடகொரியா மூடுவதாக அறிவித்துள்ளது. இந்தத் தகவலைத் தென்கொரிய அதிகாரிகள் வெளியிட்டிருக்கிறார்கள். காஏசாங் தொழில் பேட்டையில் இருந்து ஊழியர்கள் வெளியேறுவதற்கு மாத்திரமே அனுமதிக்கப்படும். பேட்டையை நோக்கி எவரும் செல்ல அனுமதிக்க முடியாது என்று தங்களுக்கு அறிவித்திருப்பதாக அவர்கள் கூறினார்கள். தென்கொரிய ஒருமைப்பாட்டு அமைச்சர் கிம் ஹையுங்சுக் தகவல் தருகையில் தொழில் பேட்டை மீதான தடை எவ்வளவு காலம் நீடிக்கும் என்று அவர்கள் தெரிவிக்கவில்லை என்றார். வடகொரியாவின் இந்த நடவடிக்கை மிகவும் கவலைக்குரியது என்று தெரிவித்த கிம்; தென்கொரியாவைச் சேர்ந்த ஏறத்தாழ 861 அலுவலர்கள் அங்கு பணிபுரிகிறார்கள் என்றும் அவர்கள் அனைவரும் பத்திரமாக நாடு திரும்ப வேண்டும் என்பதே தமது அரசின் முதன்மை நிலைப்பாடு என்றும் கூறினார்.

இந்தத் தொழில் பேட்டை வடகொரியாவில் 10 கி.மீ. (6 மைல்) தூரத்தில் அமைந்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் பெருமளவில் நிதி குறைப்புச் செய்யப்பட்டு உள்ளமையால் சமஷ்டி தொழிலாளர்கள் விடுப்பில் செல்ல நேர்ந்துள்ளமைக்கு அனுதாபமாக அதிபர் தமது சம்பளத்தில் ஒரு பகுதியைத் திறைசேரிக்குத் திரும்பச் செலுத்துகிறார்.



### ஒபாமாவின் தாராளம்

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தமது மாதாந்தச் சம்பளமான 4,00,000 அமெரிக்க டொலரில் ஐந்து வீதத்தை அரசின் நிதித்துறைக்குத் திரும்பச் செலுத்தி விடத் தீர்மானித்திருக்கிறார். வரவு செலவுத் திட்டத்தில் பெருமளவில் நிதிக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளமையால் சமஷ்டி தொழிலாளர்கள் விடுப்பில் செல்ல நேர்ந்துள்ளமைக்கு அனுதாபமாக அதிபர் தமது சம்பளத்தில் ஒரு பகுதியைத் திறைசேரிக்குத் திரும்பச் செலுத்துகிறார்.

அமெரிக்க அதிபர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்கள் சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அதனால் அதில் மாற்றம் செய்ய முடியாது என்று பெயர் குறிப்பிட விரும்பாத வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இருந்தாலும் சமஷ்டி அரச ஊழியர்கள் அனைவரும் செலுத்துகின்ற தியாகத்தில் தமது பங்கும் இருக்க வேண்டும் என்று கருதுவதால் தமது சம்பளத்தில் ஒரு பங்கினை ஒபாமாவும் செலுத்த விரும்புகின்றார்.

### பிரெஞ்சு மன்னரின் இரத்தம் தோய்ந்த ஆடை ஏலத்தில்

1789 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் ஏற்பட்ட புரட்சியின் போது சிரச்சேதம் செய்யப்பட்ட லூயிஸ் XVI மன்னரின் இரத்தம் தோய்ந்த ஆடை கடந்த புதனன்று பாரிஸில் ஏலத்தில் விடப்பட்டது. ஏறத்தாழ 19,000 ஈரோவுக்கு (24,400 டாலர்) அது ஏலத்தில் எடுக்கப்பட்டது.

20 c.m. தர 18 c.m அகலம் கொண்ட அந்தத் துணி மிகச் சிறிய சவப்பேழையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அதனுடனிருந்த ஒரு குறிப்பில், "லூயிஸ் XVI மன்னரின் பெறுமதிமிக்க இரத்தம் - 21 ஜனவரி - 1793" என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்த நாளில்தான் பாரிஸ் நகரின் மத்தியில் வைத்து கிலட்டின் எனும் தலைகொய்யும் யந்திரத்தினால் மன்னரின் தலை துண்டிக்கப்பட்டது. மறைந்த மன்னரின் வரலாற்றில் ஆர்வம் கொண்ட பிரெஞ்சு நபர் ஒருவர் அந்தத் துணியை ஏலத்தில் எடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கொலை நால்வர் கைது அவர் யார்...?



(01 ஆம் பக்கத் தொடர்ச்சி )

திருப்பதாக பொலிஸார் உறவினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பில் கணினி நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய ஒரு பெண் உட்பட 3 பேரையும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கைது செய்துள்ளனர். யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இந்த நிறுவனம் இயங்கி வந்திருந்தது. இவர்கள் மூவரும் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த 26 ஆம் திகதி கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டனர். இவர்களும் இதுவரையில் நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை. நீதிமன்றங்களில் இவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படவும் இல்லை.

கொழும்பு கொண்டு செல்லப்பட்டவர்களின் உறவினர்களில் ஒருவர் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் கடந்த 4 ஆம் திகதி இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார். தனது பிள்ளையைக் கைது செய்து கொழும்பு கொண்டு சென்றுள்ளதாகவும் எங்கு வைத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை என்றும் தெரிவித்தே அவர் முறைப்பாடு செய்திருந்தார்.

அதுவரையில் குறித்த நபரைத் தாம் கைது செய்ததற்கோ அல்லது தடுத்து வைத்ததற்கோ உரிய ஆவணங்கள் எவையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவரது உறவினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அது பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியபோது, ''கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 4 பேரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளோம்'' என்று கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரால் எழுத்து மூலம் தனக்கு அறிவிக்கப்பட்டதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களைவிட தப்பிச் சென்றுவிட்டார்கள் என்று கூறப்படும் இருவரே முக்கிய சந்தேகநபர்கள் என்று பொலிஸார் கருதுகின்றனர் எனத் தெரிகிறது எனினும் அவர்கள் இருவரும் கைதாகும் வரையில் பணயக் கைதிகள் போன்று இவர்கள் நால்வரும் தடுப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் எனவும் அறிய முடிகிறது.

பொலிஸாரின் சந்தேக வளையத்துக்குள் சிக்கி இருக்கும் இருவரும் யாழ். நகரின் பிரபல தனியார் பாடசாலை ஒன்றில் 2005 ஆம் ஆண்டு உயர்தரம் ஒரே பாடசாலையில் கற்றவர்கள். ஒருவர் கொக்குவிலில் வசிப்பவர். மற்றையவர் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவர்.

கொக்குவில் வாசியின் வீட்டுக்கு கடந்த மாதம் 22ஆம் திகதியளவில் சென்ற பொலிஸார், தாம் தேடிய நபரைக் கொண்டு வருமாறு தெரிவித்து வீட்டிலிருந்தவர்களை விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர். குறித்த நபரின் சகோதரியிடம், ''தம்பியைக் கொண்டு வந்து தராவிட்டால் உன்னைக் கைது செய்வோம்'' என்று மிரட்டியுள்ளனர்.

சந்தேகநபரின் வீட்டில் நின்று கொண்டு வீட்டுக்காரர்கள் மூலமாக தாம் தேடி வந்த நபருக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து கதைப்பித்திருக்கின்றனர். அதன்போது குறித்த நபர் தான் இப்போது கொழும்பில் நிற்கிறார் எனத் தெரிவித்திருக்கின்றார். ஆனால் அவர் கிளிநொச்சியில் இருந்துதான் அப்படிச் சொன்னார் என்பதைத் தாம் கண்டறிந்தனர் என்று பொலிஸார் கூறியிருக்கின்றனர்.



கொக்குவிலைச் சேர்ந்த அந்த நபர் 6 மாதங்களுக்கு முன்னரே கட்டாரிலிருந்து வந்துள்ளார். இங்கு தொழில் முயற்சி ஒன்றைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் என்று உறவினர்கள் கூறுகின்றனர்.

பொலிஸார் தேடும் மற்றைய நபர் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவர். அவரது வீட்டுக்குச் சென்ற குற்றத் தடுப்பு பிரிவினர் முதல் நாள் தந்தையை விசாரணைக்காகக் கூட்டிச் சென்றனர். மறுநாள் அவரது வீட்டிலிருக்கும் ஏனையவர்களை விசாரணைக்காக கூட்டிச் சென்றுள்ளனர்.

இரண்டு தினங்களின் பின் அவர்களை விடுவித்துள்ளனர். ஆனாலும் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். சந்தேகநபருடன் தொலைபேசி வழியாக தொடர்பு வைத்திருந்த அனைவரிடமும் துருவித் துருவி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதில் அவரது உறவினரான உயர் அரச அதிகாரி ஒருவரும் அடக்கம்.

இவ்வாறு, கொலைச் சந்தேகநபர்களை அதிகாரிகள் சாதாரண சட்டங்களின் கீழ் அல்லாமல் தடுத்து வைத்திருக்க முடியுமா என்பது குறித்து யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கே.குருபரனிடம் கேட்டோம்.

''பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஒப்பத்துடன் கூடிய தடுப்புக் கட்டளையின் (DO) கீழேயே அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழேயே இவ்வாறான தடுப்புக் கட்டளை பிறப்பிக்கப்படவோ கைது செய்தவர்களைத் தடுத்து வைத்திருக்கவோ முடியும்'' என்கிறார் சட்டத்துறை விரிவுரையாளர் குருபரன்.

சாதாரண கொலை - கிரிமினல் குற்றத்துக்காக எப்படி பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பிரயோகிக்க முடியும் என்று கேட்டதற்கு, பயங்கர வாதம் என்பதனை இதுவரை இலங்கை அரசு வரைவிலக்கணப்படுத்தவில்லை என்கிறார் குருபரன்.

இவ்வாறு ஒரு கொலையை, பயங்கர வாத நடவடிக்கையாக பொலிஸார் பார்ப்பதற்கான பின்னணி என்ன இருக்கிறது என்பதுதான் இங்கே முக்கியமாக எழுகின்ற கேள்வி.

கொலை செய்யப்பட்ட நபர், நந்தாவில் அம்மன் கோவில் பகுதிக்கு அடிக்கடி சென்று வருபவர் என்று கூறப்படுகிறது. சமூகச் சீரழிவுகளில் குறிப்பாக பாலியல் சார் சீரழிவுகளில் இவருக்குப் பெரும் தொடர்புகள் இருந்ததாகவும் அவரது நட்பு வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது. பாலியல் தொழிலுக்குத் துணைபோவதுடன் அதற்கு ஒழுங்குகளைச் செய்து கொடுத்தவர் என்றும்கூட அவர் மீது ஒரு குற்றச்சாட்டு உண்டு. ஆனால் அதனை நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் எவையும் இல்லை.

காதல் விவகாரம் ஒன்றும் இவரது கொலைக்குப் பின்னணியில் இருந்ததாகவும் ஒரு கதை உலாவுகிறது. அதன் உண்மைத் தன்மை குறித்தும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

கொலை செய்யப்பட்ட சிங்கள நபர், படைப்புலனாய்வுப் பிரிவில் முக்கியமான ஒருவர் என்பதால் அவர் திட்டமிட்டே கொலை செய்யப்பட்டார் என்றும் ஒரு கதை இருக்கிறது.

இவை எல்லாவற்றினதும் தொகுப்பாகவே இந்தக் கொலையின் விசாரணைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனாலும் இந்தக் கொலையில் மட்டும் பொலிஸார் காட்டும் மிகத் தீவிரமான அக்கறை, இதில் தனிமனித நடத்தைகளையும் தாண்டிய ஏதோ ஒன்று இருக்கின்றது என்பதை ஆணித்தரமாக நிலைநிறுத்துகின்றது. ★

---

# சர்வதேசம் சரியாக

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லியிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் தமிழ்நாட்டின் போராட்டங்களை புறக்கணிக்கின்றன. மாணவர் போராட்டங்களை ஒடுக்க கடும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

தமது தற்போதைய வெளிவிவகார கொள்கையால் உள் நாட்டில் பிரச்சினை உருவாகக் கூடும் என்பதை இந்திய அரசு உணரும் போது அதன் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டி ஏற்படும்.

**வடமாகாணசபைத் தேர்தலை அரசு இழுத்தடிப்பதையும், இந்தத் தேர்தலில் தான் எப்படியாவது வெற்றி பெறவேண்டும் என்பதற்காக எடுக்கும் கடும் முயற்சிகளையும் நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

மாகாண சபை உருவாக்கப்பட்ட காலம் முதல் தமிழ் மக்கள் இதனைப் புறக்கணித்துள்ளனர். இணைந்த வட - கிழக்கு மாகாண சபைத் தேர்தலைக் கூட தமிழர் தரப்பு - தமிழர் தேசியவாத தரப்பு புறக்கணித்தது. ஈ.பி.ஆர்.எல்.எப். மட்டுதான் அன்று தேர்தலில் போட்டியிட்டது. இதில் வென்றதன் பின்னர் இதில் மாகாண சபையில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று சொல்லித்தான் வரதராஜப்பெருமாள் மாகாண சபையை கலைத்து தனிநாடு பிரகடனம் செய்து இந்தியாவுக்கு ஓடினார்.

சிங்களவன் ஒன்றை கொடுக்க விரும்பாவிட்டால் அதில் ஏதோ ஒன்று இருக்கு என்ற மாயையை தமிழர்களிடத்தில் உருவாக்கவே அரசு, வடமாகாணசபை தேர்தலில் தாங்கள் வெல்ல பகீரதப்பிரயத்தனம் செய்வது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றது.

பின்னர் மாகாணசபையை தமிழர் தரப்பு கைப்பற்றியதும் அதனை நாங்கள் - தமிழர்கள் - விரும்பி ஏற்றதைப் போல் காட்டிக் கொண்டு தமிழர்களுக்கு மிகப் பெரிய தீர்வை வழங்கி விட்டதாக சிங்கள தேசம் காட்டிக்கொள்ளும்.

**வடமாகாணசபையில் தமிழ்த் தேசியத் தரப்புக்கள் போட்டியிடக் கூடாது என்று கருதுகின்றீர்களா? இதனால் மக்களின் ஆதரவு தங்களுக்குத்தான் என்று அரச தரப்பு சொல்லிக் கொள்ளாதா ?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த தேர்தல்களில் மக்கள் மத்தியில் அமோகமாக வெற்றி பெற்றிருக்கின்றது. சர்வதேசமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அங்கீகரித்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடுதான் பேச வேண்டும் என்று அரசுக்கு சர்வதேசம் சொல்கின்றது. டக்ளஸ் தேவானந்தா அல்லது எங்களோடு பேச வேண்டும் என்று சர்வதேசம் சொல்லவில்லையே.

இப்படிப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, 13ஆவது திருத்தம் எங்களுக்குப் பொருத்தமற்றது. இது எங்களது அடிப்படையையே இல்லாமல் செய்யும் விடயம். ஆகவே நாங்கள் இதனை ஏற்க முடியாது என்று சொன்னால் சர்வதேசத்தால் நிராகரிக்க முடியுமா ?

இதே சர்வதேச சமூகம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்த காலத்தில் சமஷ்டியைப் பற்றிக் கதைத்தது. அன்று 13 ஆவது திருத்தத்தைப் பற்றிக் கதைக்கவில்லை.

அன்று இயக்கம் ஆயுதரீதியாக பலமாக இருந்தது. அப்படியிருந்தால் மட்டும்தான் நீங்கள் சமஷ்டியைப் பற்றி கதைப்பீர்களா, இல்லாவிட்டால் அதைப் பற்றிக் கதைக்க மாட்டீர்களா என்று சர்வதேசத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கேட்டால் சர்வதேசம் நிச்சயம் தடுமாறும். எனவே எங்களது அபிலாஷைகளை புதைக்கும் 13 ஆவது திருத்த சட்டத்தின் வடமாகாணசபைக்குள் விழாமல் இருக்க வேண்டும். நாங்களே எங்களுக்கு விருப்பமில்லாத ஒன்றை விரும்பி ஏற்றதாக ஆகக் கூடாது.

**உங்களது கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவதற்கு சாத்தியங்கள் உள்ளனவா?**

தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்க வேண்டும், தமிழ்த் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்க வேண்டும், சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கையில் யார் இருந்தாலும் அவர்களுடன் இணைந்து செல்லத் தயாராக இருக்கின்றோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளண்பன்

# நெருப்பாற்றில் நீந்துவோம்



## ஊடக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்காக ஏமாற்றி அழைத்து வரப்பட்ட பெண் ஒருவரின் ஆதங்கம்

நேற்றுப் பின்னேரம் எங்கட ஊர் (வேணாவில்) ஆர்.டி.எஸ்.தலைவர் வந்து "நாளைக்கு ரவுணுக்கு எம்.பி.வாறார். தேவையான நிவாரணச் சாமான்கள் தாறாராம். அதோட எங்கட ஊருக்கு கரண்ட் வசதி செய்து தரச்சொல்லியும் கேப்பம். எல்லாரும் வரவேணும்" எண்டு சொன்னார். பாவம். அவருக்கும் உண்மை தெரியாதுபோல. அவர் சொன்னதை நம்பி, இண்டைக்கு மத்தியானம் ஊருக்கு அனுப்பின பஸ் ஒண்டில ஏறி, 22 பேர் வந்தம். வந்த பிறகுதான் எம்.பி. வரேல்லை எண்டு தெரிஞ்சுது. நாங்கள் இரண்டு குழந்தைப் பிள்ளையளோடை வந்தம். 12 மணியிலிருந்து இப்பவரைக்கும் (மாலை 6 மணி வரை) ஒரு சொட்டுத் தண்ணிகூட இல்லாமல் நிக்கிறம். எங்கள சாமான் தாரதாக் கூட்டிக்கொண்டு வந்துட்டு, ஏதோ கோஷம் போடச்சொல்லி, பேப்பரை எரிக்கிறாங்கள். இப்பிடித் தெரிஞ்சிருந்தால் வந்திருக்கவே மாட்டம். எங்களை ஏத்த பஸ் அனுப்பினவங்கள் பேப்பரை எரிச்சுப்போட்டு, தங்கடை பாட்டிலை போட்டாங்கள். இப்ப ஊருக்குப்போக பஸ் இல்லாமல் குழந்தை குட்டியளோடை நடுத்தெருவில நிக்கிறம்"

விடிகாலை இருள் இன்னும் கலையவில்லை. அந்தக் கருக்கலில் ஏழு உருவங்கள் தமது முகங்களைக் கறுப்புத் துணியால் கட்டியவாறு, வீதியில் நின்றன. ஏதோ ஓர் அசம்பாவிதம் நிகழப்போவதற்கான கட்டியம் கூறப்பட்டாயிற்று.

மிதிவெடி அகற்றும் பணிக்காக அதிகாலையில் சென்றுகொண்டிருந்த பெண்கள் சிலர் இந்தக் கறுப்பு உருவங்களை எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்தது. தம்மைக் குறிவைத்து வந்த கிறிஸ்பூதங்களோ என்ற பயத்தில் அவர்கள் தலைதெறிக்க ஓடினார்கள். சற்றுத் தூரம் சென்றபின் கறுப்பு உருவங்கள் தம்மை பின்தொடரவில்லை என்று தெரிந்தும் அவர்களுக்கு போன உயிர் திரும்பி வந்தது. 'அப்படியானால் எந்த இரைக்காக இந்த உருவங்கள் காத்திருக்கின்றன?' என்ற கேள்வியோடு, அவர்கள் நகர்ந்து சென்றார்கள்.

நிகழப்போகும் விபரீதத்தை அறியாமல் பத்திரிகைப் பிரதிகளை ஏற்றிக்கொண்டு, விரைந்து சென்ற வாகனம் தமது அலுவலகத்தின் முன்னால் ஓய்ந்தது. வாகனம் சுமந்து வந்த பத்திரிகைப் பிரதிகளை அலுவலகத்துக்குள் கொண்டு செல்ல முயன்றபோது, அருகிலிருந்த ஒழுங்கை தூக்கம் கலைந்து சலசலத்தது. முகத்தை மூடிக் கட்டிய ஏழு உருவங்களும் சிங்களத்தில் உள்ள உச்சபட்ச தூஷணை வார்த்தைகளை ஏக காலத்தில் உச்சரித்துக்கொண்டே வாகனத்தைநோக்கி வெறிகொண்டவர்கள்போல பாய்ந்து வந்தார்கள். அவர்களது கைகளில் விக்கெட் தடிகள்.

வாகனத்தின் கண்ணாடியை முதலில் பந்தாடியவர்கள், பணியாளர்கள்மீதும் பாய்ந்தார்கள். நின்றவர்கள் நான்குபேர். பாய்ந்தவர்களோ ஏழு பேர். ஏவிவிடப்பட்ட பேய்களுக்கு முன்னால் நான்கு பணியாளர்களால் எப்படி எதிர்த்து நிற்க முடியும்? குருதியால் அலுவலகச் சுவர்களுக்கு வர்ணம் பூசப்பட்டுக்கொண்டிருந்தது. விக்கெட் தடிகள் முறிந்தபோதும்கூட ஏவல் பேய்களின் வெறி அடங்க வில்லை. அவர்கள் தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அடித்து முடித்த பின்னே ஓய்ந்தார்கள்.

அலுவலகத்தின் அழகும் அவர்களது கண்ணை உறுத்தியிருக்க வேண்டும். எவற்றையெல்லாம் அடித்து நொருக்க முடியுமோ அவற்றையெல்லாம் அடித்தார்கள், நொறுக்கினார்கள். கணினிகள், போட்டோ பிரதி இயந்திரம், மேசைகள், கதிரைகள் எதுவுமே தப்பவில்லை. ஒரே கணத்தில் யானை புகுந்த வீடுபோல் ஆயிற்று அலுவலகம். இனிஅடித்து நொறுக்குவதற்கு ஆள்களும் இல்லை. பொருள்களும் இல்லை. பேய்களுக்குத் தெம்பும் இல்லை. தளர்வோடு, தம்மை ஏவிவிட்டவர்களின் இருப்பிடம் நோக்கி, விடிகாலைக் கருக்கல் கலைவதற்கிடையில் ஏவல் பேய்கள் விரைந்து மறைந்தன.

★★★

ஊடகம் ஒன்றின் குரல்வளையை நெரிப்பதன்மூலம் தாம் நினைத்தவற்றை மக்களிடம் திணிக்கலாம் என்றே அதிகாரம் எண்ணுகிறது. மக்களின் உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் முற்றாக அழிக்கப்பட்ட பின்னர், அதிகாரத்துக்கு தலையிடி இந்த ஊடகங்கள்தான். ஏனெனில் போராளிகள் எப்படி மக்களை அவர்களின் உரிமைக்கான பாதைநோக்கி வழிகாட்டினார்களோ, அதேபோன்று இத்தகைய ஊடகங்களும் மக்களுக்கான உரிமைப்போராட்ட வழிகாட்டிகள் என்றே அதிகாரம் நம்புகிறது.

எனவே தனக்கு எதிரான கருத்தியல் விதைப்பில் ஈடுபடும் ஊடகங்களின் குரலை அதனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதற்காக சாம, தான, பேத, தண்ட வழிகள் மூலம் அவற்றின் நாக்குகளைத் துண்டிக்க முனைந்துள்ளது. வழமையாகவே அதிகாரத்துக்கு தண்ட வழி வாலாயப்பட்ட ஒன்று. ஆனாலும் அடிமேல் அடி விழுந்தாலும் தம் கருத்தியலிலிருந்து ஊடகங்கள்-குறிப்பாக உதயன்-இம்மியளவும் விலகவில்லை. எனவே ஒரு வித்தியாசத்துக்கு தனது இன்னொரு ஆயுதமான பேத வழியை கையிலெடுத்தது.

பிரித்தாளும் தந்திரமே இப்போதைய ஆட்சியாளர்களின் பிரதான அரசியல் பொறிமுறை. அவர்கள் புலிகளை, தமது எதிர்க்கட்சிகளை, அவ்வளவு ஏன், தமது கட்சியைக்கூட அதிகாரச் சுவைக்காக பிரித்தவர்கள். இறுதிப் போர் மூள்வதற்கு முன்னர், கிழக்கு எதிர் வன்னி என்ற பிரதேசவாத சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதில் வெற்றியும் கண்டவர்கள். அதே பிரதேசவாதம் என்ற நச்சு ஆயுதத்தை ஒரு ஊடகத்துக்கு எதிராக அதிகாரமும் அதன் அடிவருடிகளும் கையிலெடுத்தார்கள்.

ஆனால், மக்கள் விழிப்போடுதான் இருந்தார்கள். தமக்காக, தமது துயர்களுக்காக 25 வருடங்களுக்கு மேலாக ஓங்கிக் குரல் கொடுத்துவரும் ஊடகத்துக்கு எதிரான பிரதேசவாதச் சூழ்ச்சிக்குள் சிக்கிவிட அவர்கள் தயாராக இல்லை. அவர்களுக்கு உண்மை தெரிந்திருந்தது. வேண்டுமென்றே பிரதேசவாதம் என்ற உணர்ச்சித் தீயை பற்ற வைப்பவர்களின் பின்னணியும் புரிந்திருந்ததால், பேதவழி முறை முயற்சி பிசுபிசுத்துப்போனது. எனவே ஊடகத்துக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி என்ற மாயையை ஏற்படுத்த பழைய பாணியில், 'அது தருவோம்; இது தருவோம்' என்று ஆசையூட்டி , பழைய பத்திரிகைக் கடையில், கிலோ கணக்கில் வாங்கி வந்த பிரதிகளுக்குத் தீமூட்டி படமெடுத்து, பெரும் போராட்டமாகக் காட்டவும் விளைந்தார்கள். ஆனால் அவற்றின் உண்மைத் தன்மையும் எல்லோருக்கும் தெரிந்ததால், கேலிப் பார்வைகளே அவர்களுக்குக் கிடைத்தன.

எந்த வழி முறையைக் கையாண்டாலும், மாபெரும் அதிகாரத்தை துணிச்சலோடு, சிறு ஊடகம் ஒன்று எதிர்ப்பதையும் அதன் குரல் வளையை அறுக்க முடியாமல் அடிக்கடி தலைகுனிய வேண்டியிருப்பதையும் எண்ண எண்ண அதிகாரத்தரப்புக்கு கோபம் கொப்பளித்துக்கொண்டு வந்தது. பழைய குருடி கதைவைத் திறக்க துயில் நிலையிலிருந்த ஏழு ஏவல் பேய்களுக்கும் அடித்து நொறுக்கச் சொல்லிக் கட்டளை பறந்தது. அந்தக் கட்டளையையே ஏவல் பேய்கள் கிளிநொச்சி உதயன் அலுவலகத் தில் நிறைவேற்றிப் போயின.

ஆனாலும் சிறு பிசிறும் இல்லாமல், உண்மையின் குரலாய், மக்களின் துயரை எடுத்துரைக்க உதயனுக்கு எத்தனை அடி விழுந்தாலும் நெருப்பாற்றை நீந்திக் கடக்கும் அவனது பயணம் தொடரும்.

> **வாகனத்தின் கண்ணாடியை பந்தாடியவர்கள், பணியாளர்கள்மீதும் பாய்ந்தார்கள். நின்றவர்கள் நான்குபேர். பாய்ந்தவர்களோ ஏழு பேர். ஏவிவிடப்பட்ட பேய்களுக்கு முன்னால் நான்கு பணியாளர்களால் எப்படி எதிர்த்து நிற்க முடியும்? குருதியால் அலுவலகச் சுவர்களுக்கு வர்ணம் பூசப்பட்டுக்கொண்டிருந்தது. விக்கெட் தடிகள் முறிந்தபோதும்கூட, ஏவல் பேய்களின் வெறி அடங்க வில்லை. அவர்கள் தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அடித்து முடித்த பின்னே ஓய்ந்தார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்புவின் பீபிசி ரேடியோ

## (கட்டுரையல்ல; கதையுமல்ல)




■ ஜெரா

அப்பப்பாவ அப்பு எண்டு தான் ஊரில கூப்பிடுவினம். அதால வீட்டில நாங்களும் அப்பு என்டே கூப்பிடத் தொடங்கிட்டம்.

ரெண்டு வேட்டியும், ஒரு பச்சக் கலர் கழுசானும், கொஞ்ச போயிலையும், பலநாள் பத்தின சுருட்டுக் குறையன்களும், ஒரு பீபிசி ரேடியோவும்தான் அவரின் வாழ்நாள் சொத்து. பிறவுன் கலர் றப்பர்கவர்ல ஓட்டி ஓட்டியா போட்டு மறச்சிருக்கும் பனசோனிக் ரேடியோதான் அது. ஆனா அவர் அத பீபிசி ரேடியோ என்டுதான் சொல்லுவார். மற்றாக்களையும் அப்பிடியே சொல்லச் சொல்லுவார். ஏனென்டா அவருக்கு அதில பீபிசி மீட்டர் மட்டும்தான் பிடிக்கத்தெரியும். நான் கம்பசுக்கு வந்த பிறகும் பீபிசி ரேடியோ என்டுதான் எல்லா ரேடியோவையும் சொல்லியிருக்கிறன்னெண்டா பாருங்கோ அப்புவின்ர ரெயினிங் எப்பிடியெண்டு?

காலித் மாஸ்ரர் கூட அப்புட்டத்தான் ரெயினிங் எடுத்தவரோ என்டு பள்ளிக் கூடத்தில எல்லைப் படைகாரருக்கு அவர் ரெயினிங் குடுக்கேக்க யோசிக்கிறனான்.

எட்டுமணி ஆகிற்றென்டால் கிழவன்போடுற சீன் தாங்கேலாம இருக்கும். அப்பத்தான் எனக்கு ஒவ்வொரு நாளும் காச்சல் வரவேணும் எண்டு வேண்டிக்கொள்ளுவன். ஏழு மணிக்கே அப்பரின்ர சாரத்த தலையோட மூடிக்கொண்டு மூலையா படுத்து நித்திர மாதிரி நடிச்சாலும் சரியா கரக்ட் ரைமுக்கு அடிச்செழுப்பிப்போடும் மனுசன்.

துலைஞ்சிபோவாற்ற பீபிசி கேட்டு இவர் என்ன தமிழீழமோ பிடிக்கப்போறார் என்டு அந்த நேரத்தில நினைச்சிக் கொள்ளுவன். அப்பரின்ர சயிக்கிள் தலைகீழா நிப்பாட்டி வச்சி என் வேலைய மரியாதையா ஆரம்பிச்சிருவன்.

9.15 தொடங்குற பீபிசிக்கு 8.30 மணிக்கெல்லாம் கிழவன் சயிக்கிள் சுத்த விட்டுடும். பகல் எல்லாம் ஓடித்திரிஞ்ச, குளத்தில குதிச்ச களைப்பு கண் திறக்கவே விடாது. பலநாள் கண்ண மூடிக்கொண்டுதான் சயிக்கிள் சுத்தியிருக்கிறன். அப்புவிட்ட காசு புழங்கினா பற்றரி வாங்கியிருவார். நான் தப்பியிடுவன். பற்றரி இல்லாத நேரங்களில சயிக்கிள் ரியூப் துண்டுகள், வயறுகள், எல்லாம்வரிஞ்சிகட்டி டைனமோ கரண்டில ரேடியோ வேல செய்யிற மாதிரி செய்துபோடுவார்.

பீபிசி கேக்கிறதெண்டால் எங்கட ஊர்ச்சனங்களுக்கும் சரியான விருப்பம். அந்த நேரத்தில் எல்லாரும் சேந்து அப்புவ ஹீரோவாக்கிருவினம். அவர சுத்தி கூட்டம்குவியும். ஏனெண்டா அவரிட்ட மட்டும்தானே ரேடியோ இருக்கும்.

என்னோட 5 ஆம் ஆண்டில ஒன்றா படிச்ச சாலினியின் குடும்பமும் பீபிசி கேட்க வருவினம். எனக்கு அவளில ஒரு சின்ன விருப்பம். அவையள்எல்லாநாளும் செய்தி கேக்க வரமாட்டினம். இயக்கம் எங்கயாவது அடிபாடு செய்திருந்தா மட்டும் வருவினம்.

சாலினி வந்தா மட்டும் எனக்கு சயிக்கிள் சுத்துறதில உசார் எங்கயிருந்து வருமோ தெரியேல்ல. சயிக்கிள ஸ்ராண்ரில நிப்பாட்டி வச்சிற்று, ரேடியோ இரையத் தொடங்கும்போதே சுத்தத் தொடங்கிருவன். சாலினிய ஏத்திக்கொண்டு போறமாதிரியும், கீழ விழுற மாதிரியும் அவயின்ர அப்பா எனக்கு வெளுக்கிற மாதிரியும் கற்பனை பறக்கும். நல்ல காலம் பீபிசில பாட்டு போடுறதில்ல.

பீபிசி தொடங்கி திருக்குறள் சொன்னதும் யாரும் மூச்சுக்கூட சத்தமா விடமாட்டினம். செய்திக்கான விமர்சனத்தையும், விளக்கத்தையும் காதுக்குள்ளயே கிசுகிசுப்பினம். அப்புவுக்கு கேட்டால் அன்றையோட செய்தி கேட்க வரவேண்டாம் என்டு சொல்லிப்போடுவார்.

கிழவன் காதல் கலியாணத்துக்கு வேணுமெண்டாலும் அனுமதிக்கும், ஆனால் பீபிசி போற நேரத்தில யாரும் கதைக்கிறத அனுமதிக்காது. குறிப்பா இலங்கை செய்திய ஆனந்தி சொல்லும் போது அப்பு சொர்க்கத்தில மிதப்பார். எங்கட ஊர்ச்சனங்களும் அப்பிடித்தான். எல்லாருக்கும்

> “ என்னோடை 5 ஆம் ஆண்டில ஒன்றா படிச்ச சாலினியின் குடும்பமும் பீபிசி கேட்க வருவினம். எனக்கு அவளில ஒரு சின்ன விருப்பம். அவையள் எல்லா நாளும் செய்தி கேக்க வரமாட்டினம். இயக்கம் எங்கயாவது அடிபாடு செய்திருந்தா மட்டும் வருவினம். சாலினி வந்தா மட்டும் எனக்கு சயிக்கிள் சுத்துறதில உசார் எங்கயிருந்து வருமோ தெரியேல்ல. சயிக்கிள ஸ்ராண்ரில நிப்பாட்டி வச்சிற்று. ரேடியோ இரையத் தொடங்கும்போதே சுத்தத் தொடங்கிருவன். சாலினிய ஏத்திக் கொண்டு போறமாதிரியும். கீழ விழுற மாதிரியும் அவயின்ர அப்பா எனக்கு வெளுக்கிற மாதிரியும் கற்பனை பறக்கும். நல்ல காலம் பீபிசில பாட்டு போடுறதில்ல. ”



அவாவ சரியா பிடிச்சிருந்தது. அவா தமிழருக்காக குரல் குடுக்கிறவ என்டு அப்பு செய்தி முடிஞ்ச பிறகு விளக்கமளிப்பார்.

செய்தி முடிஞ்சதும் அப்பு செய்தி விளக்கத்தையும், அரசியல் ஆய்வையும் கலந்து வகுப்பெடுப்பார். செய்தி கேட்க வாற எல்லாருக்கும் பீபிசிக்காரர் சொல்லுற நியமத் தமிழ் விளங்காது. செய்தி போற நேரம் கிழடுகள் சுருட்டுரெயின் விட்டுக்கொண்டோ, எதையாவது சொறிஞ்சிகொண்டோ முழுசிக்கொண்டிருப்பினம். பெரும்பாலும் எல்லாரோட மடியிலும் பிள்ளையள் நித்திரையாயிருப்பினம். பீபிசி முடிய பிள்ளயள தூக்குறதில சின்னச் சண்டையளும் வரும். அதால சிலபேர் எங்கட வீட்டிலயே கிடந்திற்று விடியத்தான் போவினம். எல்லாரிட்டயும் ரோச் லைற் இருக்கேல்ல. யாராவது சில வேட்டக்காரர் மட்டும் வச்சிருப்பினம். இல்லாதவை, துணிவிருக்கிறவை, கொள்ளிக் கட்டய வீசிவீசி அதில வாற வெளிச்சத்தில வீடுஞ்பாய் சேருவினம். பந்தம் பிடிச்சிக்கொண்டு போறாக்களயும் பாத்திருக்கிறன். சாமன் ரின் பேணியில சிமிலிலாம்பு செய்து அந்த வெளிச்சத்தில நடக்குறவையும் இருந்துச்சினம்.

ஜெயசிக்குறு காலத்தில நிறைய ஆக்கள் எங்கட வீட்டுக்கு பீபிசி கேக்கவருவினம். ஏனெண்டா அந்தக் காலத்தில எல்லாரும் இடம் பெயர்ந்திருந்தம். அதோட சாலினிய மிஸ் பண்ணீட்டன். அப்புவுக்கும், எங்களுக்கும் நிறைய கஸ்ரங்கள் வந்தது. ஆனாலும் பீபிசி எங்கட வீட்டில் ஓங்கியே ஒலித்தது.

சந்திரிகா பொருளாதாரத் தடைய போட்ட பிறகு எவரெடி பற்றறி எங்கட இடங்களுக்கு வர சிரமப்பட்டது. பள்ளமடு யாவாரியள் களவா கொண்டு வாறத அப்பு எங்கயாவது மோப்பம் பிடிச்சி, என்ன விலை குடுத்தாவது வாங்கிருவார். அம்புலன்சில வயித்தியம் பாக்க வவுனியா போற ஆக்களும் அப்புவுக்கு பற்றரி சப்ளை செய்தவை. அந்தக்காலத்திலயே 900 ரூபாய்க்கு 1சோடி எவரெடி வாங்கினவர் எண்டு ஊர்ச்சனமெல்லாம் கதைக்கும். ஏனெண்டா, அப்பா டைனமோ பூட்டியிருந்த சயிக்கிள துலைச்சிற்றார். இடம்பெயர்ந்து வரேக்க செல் குத்தினவங்களாம் ஆமிக்காரர். இவர் சயிக்கிள போட்டு விழுந்து படுக்க யாரோ அதை ஓடிக்கொண்டு போயிற்றாங்கள். பற்றரி சார்ஜ் இல்லாம போனா வெயிலில காயவச்சி கரண்ட் ஏத்திக் கொள்ளுவார். அதுவும் நல்லா இறங்கீற்றென்டா பல்லு வளமா இருக்கிற ஆக்களுட்ட குடுத்து கடிச்சி, நசிச்சு ரேடியோக்குள்ள போடுவார். இப்படியாக சமாதானம் வரும் வரைக்கும், விறுவிறுப்பான வெற்றிச் செய்திகள அப்பு பற்றரி போட்டுத்தான் கேட்டவர்.

சுமாதான காலத்தில பீபிசி அவ்வள நல்லாயில்ல என்டு அப்பு அடிக்கடி சொல்லுவார். நிரந்தரமாவே பற்றரிக்கு மாறிட்டார். நான் அதுக்குப் பிறகு சயிக்கிள் சுத்தினதில்ல. அந்த நேரத்தில எங்கயாவது படம், [illegible] சண்ட, ஆகாய கடல்வெளிச்சமர் படம் பாக்கப் பேயிருவன். பீபிசி கேட்க வாற கூட்டமும் குறைஞ்சிற்று. ஏனெண்டா எல்லாரும் ரீவி வாங்கீற்றினம். பீபிசி போற நேரத்திலதான் மானாட மயிலாட புரோகிராம் போகும். அதை விட்டுட்டு யாரும் அப்புவிட்ட பீபிசி கேட்க வாரதில்ல.

இப்பிடியே பீபிசி மங்கிப் போகிக் கொண்டிருந்த காலத்தில திருப்பியும் சண்ட தொடங்கீற்று. கொஞ்சம் கொஞ்சமாக பிபிசி கேட்க வேண்டிய தேவையும் கூடிச்சிது. இருதரப்பு நியாயங்களையும் பீபிசி கேட்டுச் சொன்னதால அதைக் கேட்க விரும்பிச்சினம். அடிக்கடி செத்துப்போனவயின்ர தொகை சொல்லும்போதும், மாவிலாத்தில இருந்து மன்னார் வரைக்கும் ஆமி பிடிச்சிக் கொண்டு வந்த செய்திய பீபிசி சொல்லும்போதும் அப்பு வதங்கிப்போவார். கிளிநொச்சிய ஆமி பிடிச்சிற்றுன் என்ற செய்திய பிபிசி சொன்னதும், அப்பு முதல் தடவையா ரேடியோவ நிப்பாட்டிற்று எழும்பிப் போனத பாத்திருக்கிறன். அப்பா முள்ளிவாய்க்கால் வரைக்கும் தோளில சுமந்து கொண்டு திரிஞ்ச நெல்லு மூட்டைக்குள்ள எப்பவும் ஒரு சோடி பற்றரியமறைச்சிவச்சிருந்தார் அப்பு.

அதுக்குப் பிறகு தேவிபுரத்துக்கும், உடையார்கட்டுக்கும் இடையில அலைஞ்சி கொண்டிருக்கேக்க பீபிசிய அப்பு ஆர்வமா கேட்டவர். அமெரிக்கா, இந்தியா வந்து காப்பாத்தும் என்ற செய்தி வரும், பாதுகாப்பு கிடைக்கும் என்ற செய்தி பீபிசில வரும் என்டு எதிர்பாத்தவர். ஆனா பாதுகாப்பு வலயம்- போர் தவிர்ப்பு பிரதேசம் என்ட செய்தியத்தான் பீபிசி சொன்னது.

சனங்கள் சாகிறத பொறுத்துக் கொள்ளாத அப்பு, பீபிசி சொன்ன போர் தவிர்ப்பு வலய செய்திய எல்லாருக்கும் பறந்து பறந்து சொன்னார். அதோட பீபிசி ரேடியோவகேட்டுக்கொண்டு எல்லாரும் தேவிபுரத்துக்கு ஓடினவே. ஆனா பீபிசி சொன்ன செய்தி பொய்யாயிருக்கும் என்ட அடுத்த நாளே சனங்கள் தெரிஞ்சிகொண்டிச்சினம். அதில இருந்து அப்புவும் உயிரப்பிடிச்சிக்கொண்டு பங்கருக்குள்ள ஓடித்திரிஞ்சவர்.

சனங்கள் சாகுறதயும், மருந்தில்லாம கஷ்ரப்படுறதையும், இயக்கம் செய்யிற பிழையலையும் பீபிசி சொல்லேல்ல எண்டு கவலையோட இருந்தார். மே 17ஆம் திகதி அப்பு பங்கருக்குள்ளால எழும்பி வட்டுவாகல்ல ஆமிற்ற சரணடைஞ்சார். ஒரு வேட்டிய மட்டும் கட்டியிருந்த அப்புவின்ர கையில ரேடியோ மட்டும் இருந்தது.

அப்புவின் வேட்டிய கழற்றி செக் பண்ணின ஆமிக்காரன், ரேடியோவ பறிச்சி எறிஞ்சான். அப்பு முதல் தரமா பீபிசி ரேடியோவக் கைவிட்டார். மானம் போன கவலையும், இதுவும் தன்னைச் செத்துப் போகச் சொல்வதாக எண்ணிடம் கண்கலங்கினார்.

வீட்டுக்காரர் வற்புறுத்தினதால காம்புக்கு வந்தார். பயித்தியம் பிடிச்சித் திரிஞ்சார். இதைப் பாத்த அப்பா வெளிநாட்டுக்காரர் அனுப்பின காசில ஒரு எவ்.எம். ரேடியோ வாங்கிக் குடுத்தார். கிழவனின்ர கையுக்கு திருப்பியும் பீபிசி வந்தது. அன்டைக்கே பெரிய சத்தமா பீபிசி கேட்டார்.

கன நாளைக்கு பிறகு அப்புவின் வாயில சுருட்ட பாத்தன். நல்லா புகைவிட்டார். எல்லாரும் சந்தோசப்பட்டம். அப்புவும் சரியா சந்தோசப்பட்டார். ஏனெண்டா பான் கீ மூன் ஐயா வந்து பாக்கப்போறார் எண்ட செய்திய பீபிசி அண்டைக்கு சொல்லிச்சுது. அவரோட பீபிசிக்கார மாணிக்கவாசகமும் வருவார் எண்ட செய்திய அப்புஉலகத்திலசண்டுபிடிச்சிற்றார் என்று நினைக்கிறன். பெரிய புழுகு புழுகினார்.

சொன்னதுபோலபான்கீமூன்ஐயா வந்தார். அப்பு ஆமிக்காரனிட்ட சண்ட பிடிச்சி கம்பி வேலிக்கு பக்கத்தில நின்டார். பான் கீ மூனப் பாக்க அவர் அங்க போகேல்ல. பீபிசிக்கார மாணிக்கவாசகத்த தேடித்தான் போனார். பக்கத்தில நின்ட எல்லாரிட்டயும் மாணிக்கவாசகத்த காட்டச் சொல்லிக் கேட்டார். யாருக்கும் தெரியேல்ல அந்த மாணிக்கவாசகம் ஐயாவ. கவலையோட வீடு திரும்பினார். ஆனா அன்டைக்கு இரவே பீபிசில மாணிக்கவாசகம் பான் கீ மூன் செய்திய சொன்னார். அப்பூவையக்கு எட்டினது, வாயுக்கு கிட்டேல்ல எண்டு கவலதான் பட்டவர்.

திருப்பியும் ஊருக்கு போனார் அப்பு. பழைய மாதிரி அவரிட்ட எதுவும் இருக்கேல்ல. அவரின்ர காணி பறிக்கப்பட்ட செய்தி பீபிசில சொல்லுவாங்கள் எண்டும், காணாமல்போன பேரனப் பற்றி சொல்லுவாங்கள் எண்டும் எதிர் பாத்தவர். ஐ.நா தீர்மானங்கள் வரும்போதெல்லாம் பெரிய நம்பிக்கையோட பீபிசிய கேப்பார். ஆனாபிறகுகலிப்பாவந்துபடுப்பார்.

கடைசியா தமிழ் நாட்டில பெடியள் போராட்டம் தொடங்கின செய்திய பீபிசி பெரிசா சொல்லும் என்டு எதிர்பாத்தார். ஓரளவுக்கு சந்தோசப்பட்டார். அந்த நேரத்திலதான் இனி எவ். எம். ரேடியோவில பீபிசி கேக்க முடியாதென்ட செய்தி அப்புக்கு கிடச்சது. அவரின்ரை சுருங்கியிருந்த இதயம் அந்தக் கணத்திலயே வெடிச்சி சிதறிட்டு.

இந்த எவ்.எம். ரேடியோவுக்கு பதிலா, பழைய பனசொனிக் ரேடியோ வாங்கிக் குடுத்திருந்தா கிழவன் மண்டையப் போட்டிருக்காதோ எண்டு, அம்மா, அப்பாவ பேசிப் பேசி அழுதா. அப் பாவும் என்ன செய்வார்? சீனாக்காரனின் மலிவு விலை ரேடியோ அவரின் கண்ணை மறைச்சதுக்கு. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# SRI LANKA'S NUMBER ONE BRAND IS COUNTING ON YOU

As the country's strongest brand, Singer resonates in the hearts and minds of millions of Sri Lankans. Singer is by far the number one retailer of consumer durables in Sri Lanka with a portfolio of over 30 global brands, including multibillion dollar brands such as Samsung, Hitachi, Philips, Whirlpool and Kenwood. Our tradition of trusted excellence began with the invention of the very first sewing machine in 1851 and continues today at our state-of-the-art manufacturing facilities. Our subsidiaries include Singer Finance, which has revolutionized the consumer landscape by providing innovative financial products to Sri Lankans from all walks of life. Singer is the global market leader, with an unmatched record of over 160 years.

Are you the next generation of Singer?

## Branch Managers - Singer Plus and SISIL World Showrooms

Ideal candidates must be aged between 30 and 40 years, possess an outgoing personality, and have experience in handling both the sales and administrative functions of a retail store. Knowledge of hire purchasing, consignment inventory, merchandising, and customer care will be advantageous. Multiple language skills would be beneficial, particularly a proficiency of the language required in the locations of the available vacancies.

Selected candidates will undergo an extensive training period where you will be exposed to all sales and administrative functions of a retail shop.

Successful candidates will be required to provide a security deposit of Rs. 150,000/- upon commencement. You can look forward to a six-figure monthly income, inclusive of incentives and commissions.

## Assistant Branch Managers - Singer Plus and SISIL World Showrooms

Applicants for this position must ideally be aged between 23 and 28 years and have achieved very good results in G.C.E. O/L and A/L examinations, including credit passes in English & Mathematics. Fluency in Sinhala, Tamil and English are prerequisites and experience in sales work would be advantageous.

Selected candidates will undergo an extensive training period where you will be exposed to all sales and administrative functions of a retail shop.

Opportunities are available to advanced your career to the position of Branch Manager. A generous allowance will also be paid during the training period.

Vacancies are available for the above positions in the following districts: **Jaffna, Vauniya, Mullaitivu, Triacomalee, Batticaloa, Mannar and Anuradhapura**

Please forward your CV along with the contact details of two non-related referees and two recent passport-sized photos to the address below to reach us within 7 days. Indicate the position that you are applying for on the top left corner of the envelope. You may also apply via our website **www.singersl.com.**

**Assistant Manager - Recruitment & Systems**
**Singer (Sri Lanka) PLC.**
80, Nawam Mawatha,
Colombo 2.

SINGER
Trusted Excellence

(C/8201)

# உயிருடன் இருக்கும்போதே இறுதிச் சடங்கு நடத்தி அனுபவித்த சீன மாணவி

சீனாவைச் சேர்ந்த மாணவி ஒருவர் தான் உயிருடன் இருக்கும்போதே தனக்கான இறுதிச் சடங்கை நடத்தியுள்ளார். 22 வயதான ஸெங் ஜியா எனும் இம்மாணவி உயிருடன் இருக்கும்போதே தனது இறுதிச் சடங்கு நடைபெறுவதை அனுபவிக்க விரும்பியதாகக் கூறியுள்ளார்.

ஹுபே மாகாணத்தின் வூஹான் நகரைச் சேர்ந்த இம்மாணவி சவப்பெட்டி ஒன்றை வாங்கி அதில் படுத்துக் கொண்டார். தனது உடலானது சடலம் போல் காட்சியளிப்பதற்காக அழகுக்கலை நிபுணர்கள் குழு ஒன்றின் மூலம் உடலை சடலம் போன்று மாற்றிக் கொண்டார். முழுமையான இறுதிச்சடங்கு நிகழ்வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை அவர் செய்திருந்தார்.

இந்த முட்டாள்தனமான போலி இறுதிச்சடங்கு நிகழ்வில் ஸெங் ஜியாவின் குடும்பத்தினரும், நண்பர்களும் கலந்துகொண்டனர். சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் சவப்பெட்டியிலிருந்து எழுந்து அங்கிருந்தவர்களுக்கு நன்றி தெரிவித்த ஸெங் ஜியா, அவ்விடத்திலிருந்து நடந்து சென்றார்.

**Aache Hot Food**

மாநகரசபை எல்லைக்குள் வீட்டுக்கு வீடு இலவச விநியோகம்.

திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் மற்றும் அனைத்து வைபவங்களுக்குமான ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புக்கு
0773294341
0212222092

சைவம் மற்றும் அசைவம்

ஆச்சி பூட் சென்ரர்
இல. 117, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**Premier ONE — பிறிமியர் வன்**

பிறிமியர் வன் குடிநீரானது நவீன தொழில்நுட்ப முறைகளின்படி சுத்திகரிக்கப்பட்டு போத்தலில் அடைக்கப்படுகிறது.

இயற்கை எழில் கொஞ்சும் மல்வானை பகுதியிலுள்ள மிக ஆழ் குழாய் கிணறுகள் மூலம் நீர் பெறப்படுகின்றது.

எமது உற்பத்திகள் தரச்சான்றிதழைப் பெற்றுள்ளதுடன் சுகாதார அமைச்சினதும் அங்கிகாரம் பெற்றது.

தாகம் தீர்ப்பதற்கு உங்கள் வீடு தேடி வர எப்பொழுதும் தயாராக இருக்கின்றது பிறிமியர் வன் குடிநீர்.

விலை ரூபா 200/= மட்டும்

Free Office & Home Delivery
(யாழ். மாநகர எல்லைக்குள்)

ஏக விநியோகஸ்தர்கள்: ஆச்சி பூட் சென்ரர்
117, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2092, 0773294341.

# நினைவழியாப் பெருந்துயரில் 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சங்கரப்பிள்ளை பாலசிங்கம் [பாலன்]

திதி:- துவாதசி (07.04.2013)

அன்னை மடியில்
14.11.1961

ஆண்டவன் மடியில்
01.04.2000



வாழ்வுதந்து வாழவைத்த திருமுகமே - உனை
தனிவழியே போகவைத்து சிறையிருப்பேனோ....
அரவணைத்து எம்மை அகிலமதில் வளர்த்த
அன்பு நிறை அப்பாவே அவனிவிட்டு ஏன் சென்றீர்?

நானிலம் போற்ற நாயகனாய் வாழ்ந்து மறைந்து
பதின்மூன்று ஆண்டுகள் கடந்தாலும் எப்பொழுதும்
மறவாத உங்கள் நினைவில் தினமுமே உள்ளுர ஏங்கி நிற்கும்
உன் அரிய பாரியாரும் பாசத்தால் இணைபிரியா வாரிசுகளும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி கிழக்கு, கைதடி.

- குடும்பத்தினர்.

(35703)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. போட்டியில் வெற்றி பெற்றவர்கள் சான்றிதழ் பெற்ற பின்னர் விருந்தினர்களுடன். (ம-9)



யாழ். கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கை வேம்படி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் நிறைவு அண்மையில் இடம்பெற்றது. விநாயகப் பெருமான் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூஞ்சப்பறத்தில் தெருவீதியுலா வருகிறார். (ம)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 360 டிகிரியில் செவ்வாய்க் கிரகத்தை பார்வையிடலாம்

அண்டவெளியிலுள்ள கிரகங்கள் குறித்த ஆராய்ச்சிகளில் செவ்வாய்க் கிரகத்துக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது யாவரும் அறிந்ததே. இதற்காக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம் ரோவர் என்ற செயற்கை விண்கலத்தைச் செவ்வாய்கிரகத்துக்கு அனுப் பியிருந்தது.

இதனூடாக செவ்வாயில் உயிரினங்கள் வாழ்ந்தமைக்கான சுவடுகள் உண்டா, நீர் உண்டா, உயிர்வாயுக்கள் காணப்படுகின்றனவா என்ற ஆராய்ச்சிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் குறித்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்தைப் பல்வேறு கோணங்களிலும் படம்பிடித்து பூமிக்கு அனுப்பியுள்ளது.

அந்தப் புகைப்படங்களை ஒன்றிணைத்து சில போட்டோஷொப் நிபுணர்களைக் கொண்டு செவ்வாய்க் கிரகத்தை பூமியிலுள்ளவர்கள் 360 டிகிரியில் பார்க்கக்கூடியவாறான வசதியை ஏற்படுத் தியுள்ளது நாசா நிறுவனம்.

C u Ø P ō P Spirit Rover Mars Panorama என்ற இணையத்தளம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் விசாலமான பெருநிறுவனத்துடன் இணைந்து பெருநிறுவன துறையின் முன்னேற்ற பாதையில் பயணியுங்கள்

LOLC
imagine the possibilities

**கீழ்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் LOLC குழுமத்தில் காணப்படுகின்றன**

## பதவி வெற்றிடங்கள்

### சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்/ நிறைவேற்று அதிகாரி - நிரந்தர சேமிப்பு வைப்புக்கள்

**யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், சுன்னாகம் மற்றும் சாவகச்சேரி**

உங்கள் பங்கு

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி நிறுவனத்தின் சேமிப்பு மற்றும் வைப்புகளை சிறந்த முறையில் மேம்படுத்தவும் சந்தைப்படுத்தவும் வேண்டும். வாடிக்கையாளர் தொகுப்பினை தொடர்ந்தும் சீரான முறையிலும் அத்துடன் சிறந்த தொடர்பாடலினை மேற்கொள்வதன் மூலம், வாடிக்கையாளருக்கும் நிறுவனத்திற்கும் இடையில் சிறந்த ஒரு உறவை பேணுபவராக இருத்தல் வேண்டும்.

தேவையான தகைமைகள் மற்றும் சிறப்பு நிபுணத்துவம்

- பங்குதாரர்களுடன் சிறந்த உறவை பேணுவதற்கு, இத்தொழிலில் சிறந்த தொடர்பாடல் திறமையும் தனிமனித திறன்களும்.
- வங்கி மற்றும் நிதித்துறையில், விசேடமாக வைப்பு அணித்திரட்டல் துறையில் 1-3 வருட தேர்ச்சிமிகு அனுபவம்.
- உன்னிப்பான கடன் மதிப்பீட்டாக்கங்கள் / மதிப்பீடுகளை மேற்கொள்வதில் நிரூபிக்கப்பட்ட அனுபவம்.
- க.பொ.த உயர்தர பிரிவில் ஒரே தடவையில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
- குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் அல்லது முழு/பகுதி தொழில்சார் தகைமையுடையோரும் விண்ணப்பிக்கலாம்.
- மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம்.

### சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் / நிறைவேற்று அதிகாரி - கடன்கள்

**யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், சுன்னாகம் மற்றும் சாவகச்சேரி**

உங்கள் பங்கு

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, எமது நிறுவனத்தின் முழுமையான நிதிச் சேவைகளை, முக்கியமாக கடன் வசதிகளை சிறப்பான முறையில் சந்தைப்படுத்தல் வேண்டும்.

தேவையான தகைமைகள் மற்றும் சிறப்பு நிபுணத்துவம்

- பங்குதாரர்களுடன் சிறந்த உறவை பேணுவதற்கு, இத்தொழிலில் சிறந்த தொடர்பாடல் திறமையும் தனிமனித திறன்களும்.
- கடன் துறை சார்ந்த துறையில் 1-3 வருட தேர்ச்சிமிகு அனுபவம்.
- உன்னிப்பான கடன் மதிப்பீட்டாக்கங்கள் / மதிப்பீடுகளை மேற்கொள்வதில் நிரூபிக்கப்பட்ட அனுபவம்.
- க.பொ.த உயர்தர பிரிவில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.
- குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் அல்லது முழு/பகுதி தொழில்சார் தகைமையுடையோரும் விண்ணப்பிக்கலாம்.
- மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம்.

### கடன் வசூலித்தல் மற்றும் சேகரித்தல் உதவியாளர்

**யாழ்ப்பாணம்**

உங்கள் பங்கு

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியானவர், அறிவிப்புகள், நினைவுறுத்தல் கடிதங்கள், கோரிக்கை கடிதங்கள் அனுப்புதல், வாடிக்கையாளர்களை வரவழைத்தல், வாடிக்கையாளர்களது நிலுவையில் பணம் மீள் செலுத்தப்படவேண்டியதை நடைமுறைப்படுத்தல் போன்ற பணிகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் செயற்படல் வேண்டும்.

தேவையான தகைமைகள் மற்றும் சிறப்பு நிபுணத்துவம்

- வசூல் நடவடிக்கைகளை தடைகளின்றி சரியான நேரத்தில் உறுதியாகவும் பொறுப்புடனும் செய்யக்கூடியவரும், சுயமாக தனி நபராக செயற்படக்கூடியவருமான 20 - 25 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகள் இப்பதவிக்குப் பொருத்தமானவர்களாகக் கருதப்படுவார்கள்.
- குறைந்தபட்சம் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் திருப்திகரமாக சித்தி பெற்றிருத்தல்.
- கணணி அறிவு, அதிக வேலைப்பளுவின் கீழ் ஓர் திறமையான குழுத் தலைவராக இணைந்து செயலாற்றக்கூடிய வல்லமை படைத்தவராக இருத்தல்.
- கொடுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிறப்பான தகவல் தொடர்பு திறமைகள்.
- இதே துறையில் முன்னைய அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு நீங்கள் தகுதியுடையவர்களாக இருப்பீர்கள் என நம்புவீர்களாயின், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை உறவினர் அல்லாத இரண்டு நடுவர்களின் விபரங்களுடன் இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 7 நாட்களுக்குள் அனுப்பி வைத்தல் வேண்டும்.
ஆட்சேர்ப்பு பிரிவு, எல்.ஓ.எல்.சி குழு, இல 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய. மின்னஞ்சல் - careers@lankaorix.com

(C/7294)

Digitized by Noolaham Foundation.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
உதயன்
☎0215671111
advt@uthayan.com

# பார்வைக் குறைபாட்டை நீக்க மருந்து

வயதானால் ஏற்படும் பார்வைக்குறைபாடுகளைத் தடுக்க, கண்ணில் சேரும் கொழுப்புச் சக்திக்கு பயன்படுத்தப்படும் மருந்துகள் பெரிதும் உதவும் என்று அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விஞ்ஞானி ராஜேந்திர ஆப்தே தனது ஆராய்ச்சியின் மூலம் நிரூபித்துள்ளார்.

வொஷிங்டன் பல்கலைக்கழகத்தில், கண் மருத்துவம் மற்றும் பார்வை குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அவர், எலிகளின் மீது தனது பரிசோதனையை மேற்கொண்டதில் அவற்றின் பார்வைக் குறைபாடு நீங்கியதைக் கண்டறிந்தார். வயது அதிகரிக்கும்போது மனிதனின் குருதி நாளங்களில் கொழுப்புச் சத்து படிவது என்பது இயற்கையாக நடக்கும் ஒரு விடயம். ஆனால், கண்ணில் அமைந்துள்ள குறிப்பிட்ட திசுக்கள், கண்ணில் கொழுப்பு சேரா வண்ணம் பாதுகாக்கின்றன என்பதையும் தனது ஆராய்ச்சின் மூலம் கண்டறிந்துள்ளார். மேலும் அவரது ஆராய்ச்சி பற்றிய குறிப்பு, திசுக்களின் வளர்சிதை மாற்றம் என்ற ஆராய்ச்சி நூலில் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.



அழையுங்கள், வெல்லுங்கள்!
நாட்டார் பாட்டு நட்சத்திரம் ஆகுங்கள்
Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.




இப்புத்தாண்டுக் காலத்தில் மெகாலைன் அல்லது சிட்டிலிங்க் தொலைபேசியில் 1298 ஐ அழைத்து, உங்களது குரலில் நாட்டார் பாடல் ஒன்றைப் பாடுங்கள்.

இம்முறை போட்டி திறந்த மற்றும் பாடசாலை ஆகிய இரு பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

1298 ஐ அழையுங்கள்

| | திறந்த | பாடசாலை |
|---|---|---|
| முதலாம் பரிசு | ரூ. 50,000 | ரூ. 50,000 |
| இரண்டாம் பரிசு | ரூ. 40,000 | ரூ. 40,000 |
| மூன்றாம் பரிசு | ரூ. 30,000 | ரூ. 30,000 |

ரூ. 10,000 பெறுமதியான 14 ஆறுதல் பரிசுகள்

முன்னணி நடுவர் குழாமினால் உங்கள் பாடல்கள் பரிசீலனை செய்யப்படும்.
2013 மார்ச் 15 முதல் ஏப்ரல் 30 வரை மட்டுமே.

CITYLINK www.slt.lk MEGALINE
(C8107)

பஜாஜ்
அசல் உதிரிப்பாகங்களை
SMS மூலம் உடனே கண்டறியுங்கள்!



0777 665577 இற்கு SMS செய்யுங்கள்.
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
(C8102)



இப் புத்தாண்டு காலத்தில்
பரிசுகள் நிறைந்த பொதிகளுடன்
உறவினர், நண்பர்களின் இல்லங்களுக்குச் செல்ல மறந்திடாதீர்கள்
இப் புத்தாண்டு காலத்தில் லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் கிளையொன்றிற்கு வந்து நிலையான வைப்பை ஆரம்பிப்பதன் மூலம் வட்டியில் எவ்வித கழிவும் இல்லாமல் பெறுமதிமிக்க பயணப் பொதிகளை இலவசமாகப் பெற்றுச்செல்லுங்கள்.

ஏப்பிரல் 2ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையே நாட்டிலுள்ள லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் கிளையொன்றிற்கு வாருங்கள்.
ஒரு வருட நிலையான வைப்பிற்கு 14% வட்டியும் சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஒரு வருட நிலையான வைப்பிற்கு 15% வட்டியும் வழங்கப்படும்.

| வைப்புக் காலம் | மாதாந்தம் | | வருடாந்தம் | | முதிர்ச்சியில் | |
|---|---|---|---|---|---|---|
| | வட்டி வீதம் | வ.செ.வ.வீ | வட்டி வீதம் | வ.செ.வ.வீ | வட்டி வீதம் | வ.செ.வ.வீ |
| 12 மாதங்கள் | 13.75% | 14.65% | 14.00% | 14.00% | 14.00% | 14.00% |
| 24 மாதங்கள் | 14.00% | 14.93% | 14.25% | 14.25% | 14.50% | 13.58% |
| 36 மாதங்கள் | 14.25% | 15.22% | 14.50% | 14.50% | 14.75% | 12.99% |
| 48 மாதங்கள் | 14.50% | 15.50% | 14.75% | 14.75% | 14.85% | 12.36% |
| 60 மாதங்கள் | 14.75% | 15.79% | 14.85% | 14.85% | 15.00% | 11.84% |

லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ்
(C7295)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
உதயன்
அரசுக்கு எதிராக நேர்மை
☎ 0215671111
advt@uthayan.com

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
31.08.1947
உதிர்வு
06.03.2013

## அமரர் பொன்னையா உருத்திராங்கதன்
(மாஸ்ரர்)

கண்ணெதிரே கண்டவுயிர் கணப்பொழுதில் காலனொடு
விழியோரம் தொக்கி நிற்கும் விழி நீரும் உணர்த்திச் செல்லும்
வேரினைப் பிடுங்கிச் சென்ற வேதனை உரக்கச் சொல்லும்
நீங்கள் காட்டிய உன்னத வழிகள்
உடனிருந்து வழி நடத்தும் எம்மையெல்லாம்.

அன்பின் திருவுருவாய், அனைவருக்கும்
இனியவனாய்,
அவனியில் தடம்பதித்து, எங்கள்
உணர்வோடு ஒன்றிவிட்ட அன்புத்
தெய்வத்தின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனை இன்று
(07.04.2013) பிரான்ஸில்
உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

"துரை மலர்ப் பொய்கை"
இணுவில் மேற்கு. (C/8110)(2.6.7)

உங்கள் நினைவுடன் வாழும்
-குடும்பத்தினர்.


## LCD Huge Stock

15" - 17"
19" - 20"
20" - 21"
21" - 24"
Rs. 3,500 Up

Intel Pen 4- Whole sale price

HP-Desktop/Towers
HP D530 - 2.6Ghz/512MB/40GB/DVD
DC 7100 - 2.8Ghz/512MB/40GB/DVD
DC 7600 - 3Ghz/1GB/80GB/DVD
DELL - Desktops/Towers
GX 520 - 2.8Ghz/1GB/40GB/DVD
GX 620 - 3Ghz/1GB/40GB/DVD
Dual Core/ Pentium D
PenD - 2.6Ghz/1GB/80GB/DVD Rw
PenD - 3Ghz/2GB/160GB/DVD Rw
Rs. 3,950 Up

## Core 2 Duo Computer - SALE

புத்தாண்டு பரிசு
HP-DC7600 Pen 3Ghz with 17" LCD
1GB/40GB/DVD+Rw/Keyboard/Mouse
Rs. 9,500 only
HP-1.8Ghz Core2Duo with 17" LCD
1GB/80GB/DVD+Rw/Keyboard/Mouse
Rs. 17,500 only

HP-Desktop/Towers
DC 7700 - 1.8Ghz-2.3Ghz/ 1GB/80GB/DVD
DC 7800 - 2.3Ghz-2.8Ghz/ 1GB/80GB/DVD
DC 7900 - 3Ghz-3.3Ghz/2GB/160GB/DVD
DC 8000 - 3Ghz/4GB/320GB/DVD+RW
DELL-Desktop/Towers
GX 745 - 1.6Ghz-2.3Ghz/ 1GB/80GB/DVD
GX 745 - 2.3Ghz-2.5Ghz/ 1GB/80GB/DVD
GX 755 - 2.6Ghz-3Ghz/2GB/160GB/DVD
GX 960 - 3Ghz/4GB/320GB/DVD+RW
Rs.12,990 Up

0777 420-420, 011 5 650- 650


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 04.07.1962
மறைவு: 08.03.2013

## அமரர் இராமச்சந்திரா சுதாகரன்

மாதம் ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயர்
ஆயிரம் உறவுகள் இருந்தும் அப்பா உங்களுக்கு ஈடாகுமா?
எங்கள் ஆயுள் உள்ளவரை உங்கள் நினைவு என்றுமே பிரியாதப்பா
ஒவ்வொரு பொழுதும் கலங்கி வாடுகின்றோம் உங்கள் நினைவாலே!
எங்கு சென்றீர்கள் அப்பா அம்மாவும் எங்களையும் பிரிந்து
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 08.03.2013 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குல விளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சகல உதவிகளையும் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, எமது குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (C/8211)(10.6.7)

மனைவி, பிள்ளைகள்.




LB புது வருட பரிசுக் குவியல்

ரூ 25,000 அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு நிலையான வைப்பிற்கும் எல்.பீ. பினான்ஸ் வழங்கும் கவர்ச்சியான வெகுமதி

அதிக வட்டியுடன் பெறுமதிமிக்க வெகுமதிகள்

| காலம் | மாதாந்தம் | வ.தே.வ.வீ. | முதிர்ச்சியில் | வ.தே.வ.வீ. |
|---|---|---|---|---|
| 6 மாதங்கள் | 13.00% | 13.80% | 13.50% | 13.96% |
| 15 மாதங்கள் | 14.00% | 14.93% | 14.00% | 13.77% |
| 4 ஆண்டுகள் | 14.40% | 15.39% | 14.40% | 12.04% |

1% மேலதிக வட்டி

4 வருட ரூ.50,0000 நிலையான வைப்பிற்கு மல்டி குக்கர்



LED TV

இன்றே அழையுங்கள்!
மட்டக்களப்பு 0773 384981
யாழ்ப்பாணம் 0773 276477
கொழும்பு 0772 518908
திருகோணமலை 0777 593713

L B FINANCE
எல்.பீ. பினான்ஸ் பீ.எல்.சீ.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

நிலையான வைப்பு ஹொட்லைன்
011 4521020

(C7296)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் வருகிறது சிந்திக்கும் திறனுடைய ரோபோ

கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்த டாக்டர் ராம் ராமமூர்த்தி பிரிட்டனில் உள்ள ஈடன்பேர்க் பல்கலைக்கழகத்தில் கணிபொறி அறிவியல் துறையில் பேராசிரியராகப் பணிபுரிகிறார். அவர் தலைமையிலான ஆராய்ச்சிக் குழு புத்தி சாலியான புதிய ரோபோ ஒன்றை உருவாக்கியுள்ளது. அந்த ரோபோ செயற்கை சிந்தனைத் திறன் கொண்டது. இது மனிதர்களுடன் 'ரோச்-சிஸர்-பேப்பர்' என்ற விளையாட்டை விளையாடும். இரண்டு நபர்கள் கைகளை நீட்டி, பாறை, கத்தரிக்கோல், காகிதம் என்ற மூன்று வடிவங்களை கைகளால் காண்பிக்க வேண்டும்.

ஒரே வடிவத்தை இரண்டு பேரும் காண்பித்தால் போட்டி முடிந்து விடும். இந்த விளையாட்டை ரோபோ, மனிதர்களுடன் தொடர்ந்து விளையாட முடியும். 2 அடி உயரம் கொண்ட அந்த ரோபோ, மனிதனின் சைகைகளைப் புரிந்து கொள்கிறது.

இந்த வருடம் நடைபெற உள்ள ஈடன்பேர்க் சர்வதேச அறிவியல் திருவிழாவில் இந்த ரோபோ அறிமுகம் செய்யப்பட உள்ளது. மேலும் இந்த ரோபோ இவ்வருடம் நடைபெற உள்ள ரோபோகால்பந்து போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அடிக்கடி அழுகிறவர்களா நீங்கள்?

உணர்ச்சிகளை அடக்கி வைப்பது என்பது மிகவும் கடினமான ஒன்று. உலகில் அதிகமானோர் உணர்ச்சிவசப்பட்டவர்களாகத் தான் இருக்கின்றனர். அதிலும் சிலருக்கு சந்தோஷத்துடன் இருந்தாலும் சரி, சோகமாக இருந்தாலும் சரி கண்களில் இருந்து கண்ணீர் வரும். அவ்வாறு அழுபவர்கள் அனைவரும் மனதில் குழந்தை போன்றவர்கள், எதையும் மனதில் வைத்துக் கொள்ள தெரியாதவர்கள் என்று சொல்லலாம் மேலும் அத்தகையவர்கள் மனதளவில் மிகவும் ஆரோக்கியமானவர்கள், மேலும் நேரடியாக எந்த ஒரு உணர்ச்சியையும் வெளிப்படுத்தி விடுவார்கள்.

அழுவது என்பது உண்மையான உணர்ச்சியை வெளிப்படுத்தும் விதமான ஒன்று என்று சொல் லலாம். ஆனால் மனதில் இருக்கும் ஏதாவது கஷ்டத்தை வெளிப்படையாக வெளிப்படுத்தாமல் இருந்தால், மனதில் ஒரு வித அழுத்தம் ஏற்பட்டு, உடல் நலத்துக்குபெரும்பாதிப்பை ஏற்படுத்தும். சில சமயங்களில் அவ்வாறு அழுகை வந்தாலும், அதனைச் சரியாக வெளிப்படுத்தாவிட்டால், தலைவலி, மனதில் வலி, இரத்த அழுத்தம் அதிகரிப்பது போன்றவை ஏற்படும். எப்படி ஒரு அறைக்கு காற்றோட்டம் மிகவும் முக்கியமானதோ, அதே போல் உடலுக்கும் உணர்ச்சியை வெளிப்படுத்துவது என்பதும் முக்கியமானது. சொல்லப் போனால், அழுவதால், உணர்ச்சி வெளிப்படுவதோடு, ஒருசில நன்மைகளும் உண்டாகின்றன.

★ அழுவது உடலுக்கு மிகவும் நல்லது. கண்ணீர் ஒரு இயற்கையான அன்டி-பக்ரீரியல் பொருள். இவை வெளிவரும் போது கண்ணீரில் உள்ள லைசோசைம், கண்களில் உள்ள பக்ரீரியாக்களை அழித்துவிடும்.

★ பிரச்சினைகள் ஏற்படும் போது அழுவதால், அந்த பிரச்சினையைச் சமாளிப்பதற்கான தீர்வுகள் அழும் அந்த நேரத்தில் கிடைக்கும். ஏனெனில் பிரச்சினையின் போது மனம் பதற்றத்தில் இருக்கும். எனவே அந்த பதற்றத்தால் அழும் போது, அது மனதை இலேசாகச் செய்து, அதிகம் யோசிக்க வைக்கும்.

★ எப்போதும் கஷ்டத்தை நினைத்துக்கொண்டு, மனதுக்கு அழுத்தம் தருவதைவிட, அழுதுவிடுவதால், மனம் இலேசாகி, மன அழுத்தம் குறைந்து, மனம் அமைதியடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org